
வரு.74 இல. 20 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරී

2022 மே 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
May 15 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-



03
அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவே தீர்வு வேண்டும்!



05
இது கை கொடுத்து மீட்பதற்கான காலம்!



13
மக்கள் மாக்களாவது எப்படி?



24
இலங்கை – பங்களாதேஷ்
டெஸ்ட் தொடர் இன்று சிட்டகொங்கில் ஆரம்பம்

ஆர்ப்பாட்டக்காரர்களது உணர்வுகளுக்கு மதிப்பு, உடன்பாடு

# ஜனாதிபதி பதவி விலகல் ஒரு போதும் நடக்காது



## நாட்டை வழமை நிலைக்கு கொண்டுவருவதே இலக்கு

### BBC க்கு வழங்கிய செவ்வியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**கடந்த அரசின் கொள்கைகளை மாற்றி புதிய உத்வேகத்துடன் பொருளாதார வளர்ச்சிக்கு புத்துயிரளிக்க ஏற்பாடு**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி வரும் அரச எதிர்ப்பாளர்களின் உணர்வுடன் தான் உடன்படுவதாகவும் எனினும், அது ஒருபோதும் நடக்காதென புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பிபிசி செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார். ராஜபக்ஷ அரசின் அனைத்து கொள்கைகளையும் மாற்றப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

நாட்டு மக்களுக்கு மூன்று வேளை உணவு கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

04

## இன்று புனித வெசாக் தினம்





இந்தியா வழங்கிய கடனுதவியின் கீழ்

## 40,000 மெ. தொன் டீசல் நேற்று இலங்கை வந்தது

04

## புதிய அமைச்சர்கள் நால்வர் நேற்று பதவிப் பிரமாணம்



புதிய அமைச்சர்கள் நான்கு பேர் நேற்று, (14) ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். அரச நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக தினேஷ்

04

வஜிர, ருவன், அகில, சாகல தலைமையில்

## மக்களின் பிரச்சினைகளை ஆராய நான்கு குழுக்கள்

பிரதமரிடம் அறிக்கை சமர்ப்பிக்க கோரிக்கை



மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்ந்து யோசனைகளை முன்வைக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

04

## லக்ஷ்மன் ஹூலுகல்ல அவுஸ்திரேலியாவில் நேற்று காலமானார்



அவுஸ்திரேலியாவுக்கான இலங்கையின் துணைத் தூதுவராக கடமையாற்றி வந்த லக்ஷ்மன் ஹூலுகல்ல மரணமடைந்துள்ளார். 66 வயதான அவர் உடல் நல குறைவினால்

04

G.C.E. O/L பரீட்சை மே. 23 இல்

## அனுமதி அட்டைகளை இணையத்திலும் பெறலாம்

2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் முதலாம் திகதி வரை பரீட்சைகள் நடைபெறுமெனவும் அதற்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள்

04

"சம்பிரதாய அரசியலில் இருந்து விலகுவோம்"

## ஆட்சியில் பங்கேற்று நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முன்வாருங்கள்

### சஜித்துக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம்



சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி ஆட்சியில் பங்கேற்று நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முன்வருமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும், எதிர்கால சந்ததியினரின் சுபீட்சமான

04

தேவையான அளவு தொகை கையிருப்பில்

## டீசலுக்கு தட்டுப்பாடு என்பது பரப்பப்படும் பொய் வதந்தி

### டீசல் தாங்கி கப்பல்கள் வருகின்றன – CPC தலைவர்



களஞ்சியசாலையில் போதியளவு டீசல் கையிருப்பில் இருப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

டீசல் தட்டுப்பாடு தொடர்பில் வதந்திகளை மறுத்த அவர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலையிலிருந்து போதுமான அளவு டீசல்

04

சுமந்திரன், சாணக்கியன், கஜேந்திரகுமார் ஆகியோர்

## புதிய அரசில் அமைச்சர்களாக பார்க்க விரும்பும் தமிழ் மக்கள்

### புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள், கலைஞர்கள் கருத்து



வடக்கு கிழக்கில் பெரும்பான்மையான தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், கஜேந்திரகுமார், சாணக்கியன் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில்

04

## நியூசிலாந்து அரசு இலங்கைக்கு நிதியுதவி



05 இலட்சம் நியூசிலாந்து டொலர்களை வழங்கியது

பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் இலங்கை விவசாயிகளுக்கு உதவுவதற்கும், பாதிப்புக்குள்ளாகும் சிறுவர்களுக்கு உணவு வழங்குவதற்குமென 5,00,000 நியூஸிலாந்து டொலர்களை வழங்குவதாக நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

04

## எங்கள் கருத்து...

## கட்சி அரசியலுக்கான காலம் இதுவல்ல

ஒரு வர்த்தக நிறுவனமாகட்டும் அல்லது வாங்கியாகட்டும், அங்கே பணி புரிபவர்கள் அனைவருமே தத்தமது பணிகளில் தேர்ந்தவர்களாக இருந்தாலும் நிர்வாகங்கள் சிலரைத்தான் அடையாளம் கண்டு அவர்களிடம் முக்கிய விடயங்களை பொறுப்புக் கொடுக்கும் அல்லது முடிவெடுக்கச் சொல்லும், ஏனெனில் அவர்கள் தமது துறைகளை மட்டுமன்றி ஏனைய துறைகளின் நெளிவு சுழிவுகளையும் நுணுக்கமாகத் தெரிந்து வைத்திருப்பவர்களாக இருப்பார்கள்.


இத்தகைய ஒரு பண்பை புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அவதானிக்கலாம். அவரது பணியாற்றும் முறை அலாதியானது. வெளிப்பூச்சியின்றி தெளிவாக தன் கருத்தை சொல்லக் கூடியவர். காரியத்தில் கண்ணாக இருப்பவர். மற்றவர்கள் தயங்கும் இடங்களில் இலாவகமாக புகுந்து புறப்படக் கூடியவர். இல்லையேல், தனியாளாக, அதுவும் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் வந்தவரால், சரியான அரசியல் காய்நகர்த்தல்கள் மூலம் பிரதமராகுவது சாத்தியப்பட்டிருக்காது. இதை சூழ்ச்சி என்றும் சிலர் அழைக்கலாம். ஆனால் நன்மை பயக்கக் கூடிய அரசியல் சூழ்ச்சி என்றைக்குமே வரவேற்கத்தக்கதாகவே இருந்திருக்கிறது. தனியொருவராக முன்வந்து நான் இப்பொருளாதாரத்தை தூக்கி நிறுத்திக் காட்டுகிறேன் என்று சவால் விடுவதோடு தான் ஏற்கனவே கூறிவந்த உபாயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு

24 மணித்தியாலங்களுக்குள் தயாராகி விட்டதை சூழ்ச்சி என்றால் அது சூழ்ச்சியாகவே இருந்துவிட்டுப் போகட்டும்!

04

ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதி

## ஷேக் கலீஃபா பின் சயீத் அல் நஹ்யான் காலமானார்



ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதி ஷேக் கலீஃபா பின் சயீத் அல் நஹ்யான் (73) நேற்று காலமானார்.அவர் கடந்த 2004 ஆம் ஆண்டு நவம்பர் 03 ஆம் திகதி முதல் ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதியாகவும் அபுதாபியின் ஆட்சியாளராகவும் இருந்து வந்தார்.

இவரது மறைவு குறித்து அந்நாட்டின் ஜனாதிபதி விவகாரத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

நாட்டு மக்களுக்கும் இஸ்லாமிய தேசத்துக்கும் உலக மக்களுக்கும் இரங்கல் தெரிவிக்கப்படுகிறது.

04

பிரதமர் ரணில் தலைமையிலான அரசில்

## பதவி ஏற்கவும் மாட்டோம் வீழ்த்த உதவவும் மாட்டோம்

### நல்ல விடயங்களுக்கு வெளியிலிருந்து ஆதரவு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் பதவியேற்க மாட்டோம்.அதேபோன்று இந்த அரசை உடனடியாக வீழ்த்துவதற்கு எவருக்கும் உதவி செய்யவும் மாட்டோமென



தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

04

## டெல்லி வணிக வளாகத்தில் பயங்கர தீ விபத்து



27 பேர் பலி,12 பேர் காயம், 50 பேர் மீட்பு

புது டெல்லியின் வெளிமா வட்டத்திலுள்ள முண்ட்கா மெட்ரோ ரயில் நிலையமருகே உள்ள நான்கு மாடி வர்த்தகக் கட்டடத்தில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் இதுவரை 27 பேர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளதாக புதுடில்லி பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிமை மாலை ஏற்பட்ட இத் திடீர் தீ விபத்தில் சிக்கியவர்களுள் இதுவரை 50 பேர்

04

Galle Face போராட்டத்துக்கு தடையில்லை

## அதேபோன்று முள்ளிவாய்க்காலுக்கும் ஜனநாயக ரீதியில் இடமளிக்குமாறு அருட்தந்தை சக்திவேல் வேண்டுகோள்



ஓமந்தை விஷேட நிருபர்

காலிமுகத்திடல் போராட்டத்துக்கு தடை ஏற்படாதென கூறப்பட்டதைப் போன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கும் தடை ஏற்படுத்தாது இடமளிப்பதே ஜனநாயகமாகுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு தொடர்பான விசாரணைகளுக்கு புதிய பிரதமர் இடமளிக்கக் கூடாதென்றும் அவர்கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று (14) அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காலி முகத்திடல் போராட்டத்துக்கு தடை ஏற்படாதென பிரதமர் கூறியதைப் போன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கும் தடைகள் ஏற்படுத்தாது அதனை நடத்துவதற்கு இடமளிப்பது ஜனநாயகமாகும். கடந்து 2015 ஆம்

04

வெலிக்கடை சிறைச்சாலை முன்

## ரஞ்சனுக்கு ஆதரவாக நேற்று போராட்டம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஆதரவாக கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை முன்பாக போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டுமென போராட்டக்காரர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக ரஞ்சன் ராமநாயக்க தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.

# மாஸ்டர் சிவலிங்கம்

## சில மனப்பதிவுகள்



மாஸ்டர் சிவலிங்கம் காலமானார் எனும் செய்தியை முக நூலில் பார்த்தேன், அவசியம் சென்று பிரியாவிடை கூறவேண்டிய மனிதர் அவர், செல்லும் நிலையில் நான் இல்லை, அவரது இறுதி நிகழ்வில் கலந்து கொள்ளாமை மிகுந்த வருத்தமே பழுத்த ஓலைகள் விழுகின்றன, காலத்தின் நியதி அது மாஸ்டர் என்ற சொல் ஒருகாலத்தில் மட்டக்களப்பில் சிவலிங்கத்தையே குறிக்கும் சொல்லாக இருந்தது. இத்தனைக்கும் அவர் ஓர் பாடசாலை மாஸ்டர் அல்ல. பாடசாலையில் படிப்பிக்காத அவருக்கு பலநூற்றுக் கணக்கான மாணவர்கள் இருந்தனர் மாஸட்ராக அல்ல மாமாவாக அவர் குழந்தைகளின் உள்ளத்தில் கொலு வீற்றிருந்தார். அவரது மறைவு இயற்கையானது, அவர் தனது 89 ஆவது முது வயதில் காலமானார். இருந்திருந்தால் அடுத்த ஆண்டில் அவரது 90 வயதைக் கொண்டாடியிருப்போம். மாஸ்டர் சிவலிங்கத்தை அனைவரும் ஒரு கதைசொல்லியாக அதிலும் சிறுவர்களுக்கான கதைசொல்லியாக மாத்திரமே பார்க்கிறார்கள். முக நூலில் அப்படியொரு பிம்பமே உருவாகி இருந்தது. நான் அறிந்த மாஸ்டர் சிவலிங்கம் இன்னும் வித்தியாசமானவர், அவருடனான முதல் சந்திப்பு பசுமையாக ஞாபகம் இருக்கிறது. அப்போது நான் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறேன். காற்சட்டை போடும் வயது 13. எட்டாம் வகுப்பு அன்று. பாடசாலை பாரதி விழா கொண்டாடுகிறது. அதற்கு அவர்கள் அன்றைய மட்டக்களப்பின் பிரபல பேச்சாளர்களான செ, இராசதுரை, கமலநாதன் (அவர் வித்துவான் ஆகாத காலம் அது) எஸ் பொன்னுதுரை ஆகியோரையும் அவர்களுடன் சிவலிங்கத்தையும் அழைத்திருந்தனர், முன்னவர் இருவரும் தமிழரசுக்கட்சி மேடைகளில் விளாசித் தள்ளி மக்கள் மத்தியில் பிரபலமானவர்கள். எஸ் பொன்னுத்துரை இன்னொரு விதத்தில் பிரபலமானவர். அவர்கள் அனைவரும் சிவலிங்கத்திலும் வயது கூடியவர்கள். சிவலிங்கத்தை மட்டக்களப்பு அதிகம் அறியாத காலம் அது. சிவலிங்கம் அப்போதுதான் தமிழ் நாட்டு வாசம் முடித்து, மட்டக்களப்பு திரும்பியிருந்தார். தமிழ்நாடு சென்று வருவது என்பது அன்று பெரிய விடயம். சிவலிங்கம் தனது பேச்சில் தனது தமிழ் நாட்டு அனுபவங்களைச் சுவையாக கூறினார். அவர் அப்போது ஒரு மிமிக்கிறிக் கலைஞராக வளர ஆரம்பித்த காலம் அது, அவர் அன்றைய முதலமைச்சர் காமராஜர்போல திராவிடக் கழக தலைவர் ஈ வே ரா போல திராவிட முன்னேற்றக்கழக தலைவர் அண்ணாதுரைபோல கருணாநிதிபோல சினிமா நடிகர் என் எஸ் கிருஸ்ணன் போல சிவாஜி கணேசன் போல தனது குரலை மாற்றி மாற்றி செய்து அவர்கள் பேசுவதுபோல பேசிக் காட்டினார். சிறுவர்களாகிய எங்களுக்கு ஒரே ஆச்சரியம். குசி சந்தோசம் கைதட்டல் பெரு வியப்பு. "பச்ச எடுத்து முஸ்துல அடிச்சன் ஜஸ்து புடிஸ்து" என்று மெட்ராஸ் தமிழை அப்படியே கூறி அதற்கான அர்த்தத்தையும் விளக்கினார். பச்சத் தண்ணியை எடுத்து முகம் கழுவினேன் ஜலதோசம் பிடித்துகொண்டது என்றது அதன் அர்த்தம். பஸ்து என்றால் பச்சத்தண்ணி என்பது அர்த்தம். முஸ்து என்றால் முகத்தில் என்று அர்த்தம். ஜஸ்து என்றால் ஜலதோசம் என்பது அர்த்தம். புடிஸ்து என்றால் பிடித்துகொண்டது என்பது அர்த்தம்என அவர் விளக்கியபோது எமக்குப் புதிய உலகங்கள் விரிந்தன.கிருஸ்ணா ஒயில் உங்களுக்குத் தெரியுமா? என சிறுவர்களான எங்களிடம் கேட்டார், தெரியாதே என்றோம், ஒயில் என்றால் எண்ணெய் என்பது தெரியும் லாம்பெண்ணெய், தேங்காய் எண்ணெய் தான் நாம் அறிந்த எண்ணெய்கள், ஒயில்கள் இது என்ன கிருஸ்ணா ஒயில்/கிரெசன் ஒயிலை மெட்ராஸ்காரன் கிருஸ்ணா ஒயில் என்று அழைத்ததை "கிருஸ்ணா ஒயில் கிருஸ்ணா ஒயில் வாங்கோ வாங்கோ" என அப்படியே கூவிக் காட்டினார். அவரது உடல் குரல் கண் அனைத்தும் பேசின. கிரசன் ஒயில் தான் நமது லாம்பெண்ணெய் அதாவது மண் எண்ணெய். மிகச் சிறந்த பேசாளர்களான செ.இராசதுரை, கமலநாதன், எஸ் பொன்னுத்துரை ஆகியோரின் பேச்சுகளை விட எம்மை அன்று மிகவும் கவர்ந்தது சிவலிங்கத்தாரின் பேச்சே இந்தச் சிவலிங்கம் இந்தியா சென்றிருக்கிறார், நாம் நூல்களில் படித்த ஈ வே ரா பெரியார். அண்ணதுரை கருணாநிதி போன்றோரைக் கண்டிருக்கிறார். அவர்களோடு பேசியிருக்கிறார், நாம் திரைப்படங்களில் கண்டு பிரமித்த என் எஸ் கிருஸ்ணன், சிவாஜி கணேசன் போன்ற சினிமா நடிகர்களைக் கண்டு உரையாடியுள்ளார் என்ற பிரமிப்பு, அப்பிரமிப்பு சிவலிங்கத்தார் மீதும் ஓர் பிரமிப்பை ஏற்படுத்தியது. அந்தப் பிரமிப்பு தொடர்ச்சியாக அவர் செயல்கள் மூலம் வளர்ந்து வந்தது. இது இன்னொரு அனுபவம். எனது 15 ஆவது வயதில் என நினைக்கிறேன் அப்போது அவருக்கு 25 வயது இரு.க்கும். சங்கிலியன் நாடகம் என நினைவு சிவலிங்கமும் அந்த நாடகத்தில் நடிக்கிறார் . அதில் ஒரு காட்சியில் அவருக்கு அரசன் கோபத்தோடு ஏசசடாரென்று முகத்தை அவர் திருப்பி அஸ்டகோணலாக்கிய காட்சி அப்படியே ஞாபகம் வருகிறது. அது நடந்தது புதிதாகக் கட்டப்பட்ட மட்டக்களப்பு நகர மண்டபத்தில். என் அருகில் உட்கார்ந்திருக்கிறார் பாலு மாஸட்டர், அவர் ஒரு நாடக ஆசிரியர். அத்தோடு அவர் ஒரு பகுத்தறிவுவாதியும் கூட . எல்லாவற்றையும் எல்லாரையும் கிண்டல் பண்ணும் இயல்பினர் அப்படியான அவரே சிவலிங்கத்தாரின் அந்தக் கணநேர நடிப்பில் மயங்கிச் "சபாஸ் சிவலிங்கம்" என்று கூவி விட்டார்.சபையிலிருந்து மாஸ்டர் சிவலிங்கத்திற்குக் கிடைத்த அந்தப் பாராட்டு. இப்போது ஞாபகம் வருகிறது. ஆம் மாஸ்டர் சிவலிங்கம் சிறந்தவோர் நடிகர். பின்னாளில் நகைச்சுவை நடிகர் இந்த நகைசுவையை அவர் வளர்த்தெடுத்து பின்னாளில் குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நகைச்சுவை மாமாவும் ஆனார். மிமிக்கிறி கலைஞனாக, நகைச்சுவைப் பேச்சாளனாக பகுத்தறிவு வாதியாக அரசியல் செயற்பாட்டாளனாக, சத்தியாக்கிரகியாக, நாடக நடிகனாக கூத்துக்கலைஞனாக வில்லுப்பாட்டுக் கலைஞனாக சிறுவர்களுக்கான எழுத்தாளனாக கதை சொல்லியாக கார்ட்டூனிஸ்டாக பன்முகம் காட்டியவர் மாஸ்டர் சிவலிங்கம் அவரது இழப்பு துயரத்திற்குரியதன்று அவர் வாழ்வு கொண்டாட்டத்திற்குரியது.

பேராசிரியர்
**சி.மௌனகுரு**

---

கருணாகரன்

# புதிய மீட்பர்?



நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல், பொருளாதார நெருக்கடிக்களுக்கு மத்தியில் ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார். ரணிலின் பதவியேற்பு அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது. இதனை இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரும் இந்தியத் தூதரும் வெளிப்படுத்தியுள்ளனர். இந்தியத் தூதர் கோபால் பாக்லே ரணிலை நேரில் சந்தித்து வாழ்த்துச் சொல்லியிருக்கிறார். அமெரிக்கத் தூதர் ஜூலி சுங் ட்விற்றரில் உற்சாகமான முறையில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். கூடவே IMF வின் உதவியோடு நீண்டகால அடிப்படையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியும் என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆகவே இந்திய, அமெரிக்க நோக்கு நிலையில் ரணில் விக்கிரமசிங்க மீட்பராகத் தோன்றுகிறார்.

இதேவேளை புதிய பிரதமரை முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் வாழ்த்தியுள்ளனர். இதற்குக் காரணம், இன்றைய நெருக்கடிச் சூழலின் மீட்பராகவும் தம்மைக் காப்பவராகவும் ரணில் விக்கிரமசிங்கவே உள்ளார் என்று இவர்களும் கருதுகின்றனர்.

ஆனால், இவற்றுக்கு அப்பால் ரணிலின் பதவியேற்பை உண்மையான அர்த்தத்தில் பொறுப்புச் சுமத்தல் என்றே சொல்ல வேண்டும். ராஜபக்ஷவினரின் அரசியலுக்கும் ஆட்சிக்கும் ஏற்பட்ட நெருக்கடியைத் தணிப்பதற்கு அவர்கள் மேற்கொண்ட பொறுப்புச் சுமத்தலை ரணில் விக்கிரமசிங்கவின் மீது ஏற்றியுள்ளனர் எனலாம். இது அவர்களுடைய விருப்பத்தின் பாற்பட்ட ஒன்றல்ல. தவிர்க்க முடியாத சூழலில் விளைவாகும்.

ஆகவே யார் யாருக்கெல்லாம் ஒரு தலை இப்பொழுது தேவையோ அவர்கள் அனைவரும் இணைந்து அந்தத் தலையைத் தேர்வு செய்துள்ளனர். அந்தத் தலை பலியிடப்படுமா? வென்று கொடியேற்றுமா என்பதே இப்போதுள்ள கேள்வி. ஆனால், இந்தத் தலையைத் தவிர பொருத்தமான வேறு தலைகள் எதுவும் இந்த அரசியற் கட்டமைப்புச் சுழலுக்குள் இப்பொழுது இல்லை என்பது கசப்பான உண்மை.

சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸநாயக்க இருவரும் இந்தச் சூழலையும் தங்கள் முன்னுள்ள சவாலையையும் எதிர்கொள்ளத் தவறிவிட்டனர். அவர்களுடைய கோரிக்கைகள் என்னதான் வலுவானதாக, நியாயமாக இருந்தாலும் அவற்றைக் கையாளக் கூடிய திறனை இருவரும் தவற விட்டுள்ளனர். அரசியலில் ஒவ்வொரு கணமும் முக்கியமானது. அதுவும் நெருக்கடிச் சூழலில் உள்ள ஒவ்வொரு நொடியும் முடிவெடுப்பதில் முக்கியமானது. இதைப் புரிந்து கொள்ளத் தவறியதால் அந்த வெற்றிடத்தை ரணில் எடுத்திருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்தப் பதவியேற்புத் தொடர்பாக பலவிதமான வாதப்பிரதிவாதங்கள் உண்டு. “ஜனநாயகத்துக்கு விரோதமான முறையிலேயே இந்தப் பதவியேற்பு நடைபெற்றுள்ளது. இதனால்தான் அவரை முந்திய காலத்தில் ஆதரித்து வந்த நாம் இப்பொழுது எதிர்க்கிறோம்” என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். ஏறக்குறைய இதே தொனியில்தான் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான மனோ கணேசனும் கூறியிருக்கிறார். காலிமுகத்திடலில் நிலை கொண்டிருக்கும் போராட்டக்காரர்களின் நிலைப்பாடும் ரணிலுக்கு எதிரானதாகவே உள்ளது. இதைத் தவிர, ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி போன்றனவும் எதிர்க்கின்றன. பொதுஜனபெரமுனவிலும் அதனோடு இணைந்த பங்காளிகளிலும் எத்தனைபேர் ரணிலை ஆதரிப்பர் என்று தெரியவில்லை.

இவ்வளவுக்கு மத்தியிலும் தன்னுடைய ஐ.தே.கவிலிருந்து தனியொரு பிரதிநிதியாக நின்றே புதிய ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார். ஆயிரம் விமர்சனங்களுக்கு அப்பாலும் இந்தத் துணிச்சல் கவனத்திற்குரிய ஒன்று. எதையும் சமாளிக்க முடியும், எதிர்கொள்ள முடியும் என்ற துணிச்சலா? அல்லது ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஆதரவாக நாங்கள் இருக்கிறோம் என்று உற்சாகமூட்டும் அவருடைய உள்நாட்டு வெளிநாட்டு ஆட்களின் தூண்டலா? அல்லது கடந்த ஐம்பது ஆண்டுகால அரசியல் அனுபவமும் ஐந்து தடவைகள் பிரதமராக இருந்ததன் விளைவா என்று தெரியவில்லை.

ஆனால், அடுத்து வரும் நாட்களில் தன்னை அவர் எப்படிப் பலப்படுத்தப்போகிறார்? பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை எப்படி நிரூபிக்கப்போகிறார்? யார் யாரெல்லாம் அவருடைய அமைச்சரவையில் இடம்பெறப்போகின்றனர்? ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் அவருக்கும் இடையில் என்னமாதிரியான உடன்பாடும் (இணக்கமும்) புரிந்துணர்வும் உள்ளன? இது எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்? (இப்படித்தான் தேனிலவாகத் தொடங்கப்பட்ட மைத்திரி – ரணில் நல்லாட்சிக் கால உறவு பின்னர் பாவற்காயாகக் கசப்படைந்தது) என்ற பல பரீட்சைகளை அவர் வெற்றிகரமாகக் கடந்து செல்ல வேண்டும்.

இதேவேளை இங்கே நாம் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவின் பதவியேற்புப் பலரும் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வரும்போது அதை ஜனநாயகத்தை உயர்த்திப்பிடிக்கும் அமெரிக்காவும் இந்தியாவும் பாராட்டியுள்ளன என்பது.

சரி, தன்னைச் சுற்றியுள்ள நெருக்கடிகளைக் கடந்து அல்லது வென்று ஆட்சியமைத்தாலும் நாடு எதிர்நோக்கியுள்ளநெருக்கடிகளைஎப்படி அவர் வெல்லப்போகிறார்?

இரட்டை நெருக்கடியை எதிர்கொள்ளும் ஒரு இக்கட்டான வரலாற்றுச் சூழலில் – அரசியலில் ரணில் இருக்கிறார் என்பதே அவருடைய அரசியல் வெற்றியும் எதிர்காலமுமாகும்.

தன்னைச் சுற்றியுள்ள நெருக்கடிகளை வெற்றி கொள்வதை அடுத்த ஒரு வார காலம் நிரூபித்து விடும். அல்லது அடுத்த சில வாரங்களில் தெரிந்து விடும். ஆனால், நாடு எதிர்நோக்கியிருக்கும் நெருக்கடியை அவர் எப்படி வெற்றி கொள்ளப்போகிறார் என்பதற்கு எவ்வளவு காலம் பொறுத்திருக்க வேண்டும்?

இன்றைய நிலையில் ஒரு நாளைக் கூட பொறுத்துக் கொள்வதற்கு மக்கள் தயாராக இல்லை. அவர்களுடைய வாழ்க்கைச் சுமை குறையும் வரை, பொருளாதார நெருக்கடி தீரும் வரை அவர்கள் பொறுதியடையப்போவதில்லை. ஆகவே சூழல் எப்போதும் கொதிநிலையில்தான் இருக்கப்போகிறது.

இதைத் தணிப்பதற்கு உடனடியான – நீண்டகால அடிப்படையிலான பொருளாதார மறுசீரமைப்புத் திட்டங்களும் நடவடிக்கைகளும் அவசியம். இந்த நடவடிக்கைகள் வழமையைப்போல மந்த கதியிலானவையாக இல்லாமல் துரித கதியிலானதாக இருக்க வேண்டும். இதைக் கண்காணிப்புச் செய்யும் பொறிமுறையும் அவசியம். அப்படிச் செய்தால்தான் நிலைமையை ஓரளவுக்கேனும் சீர் செய்ய முடியும்.

இதற்கெல்லாம் பொருத்தமான விதிமுறைகளும் சட்டங்களும் உருவாக்கப்பட வேண்டும். உதாரணமாக, இலவசங்கள், நிவாரணங்களை மட்டுப்படுத்துவதை எடுத்துக் கொள்ளலாம். பாடசாலை மாணவர்களுக்கான சீருடையும் பாடப்புத்தகங்களும் இப்பொழுது அனைவருக்கும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. இதைக் குறைக்கலாம். வசதியுள்ளோருக்கு வழங்கலை இடை நிறுத்தலாம். அதற்கான விதிமுறை உருவாக்கப்பட வேண்டும். கற்பித்தல் அனைவருக்கும் வழமையைப்போல இருக்கும். சீருடையும் பாடப்புத்தகமும் மட்டும் தரப்படுத்தலின் அடிப்படையில் வழங்கப்படுவதாக அமையும்.

இதைப்போல மதுபோதையில் விபத்துக்குள்ளாவோர், அடிதடி சண்டை வன்முறைகளில் காயமடைவோருக்கெல்லாம் மருத்துவம் அரச மருத்துவமனைகளில் வழமையைப்போல மருத்துவம் செய்யப்படும். ஆனால், அவர்கள் பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் மருத்துவக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும். இவ்வாறே போதை வஸ்துப்பயன்படுத்தலுக்குச் செய்யப்படும் புனர்வாழ்வு மற்றும் சிகிச்சைக்கு கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

இதைப்போல நீதி மன்றத்தினால் சட்டரீதியாக ஏற்கப்படும் உடமைகள் நீண்ட கால தாமதமின்றி ஏலத்தில் விடப்பட வேண்டும். அதற்கிசைவாக நீதி விசாரணைகள் துரிதமாக்கப்படுவது அவசியம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

விதி மீறல்களுக்காக விதிக்கப்படும் பொலிஸ் தண்டப்பணம் உடனடியாகச் செலுத்தப்படத்தக்க மாற்றம் செய்யப்பட வேண்டும். குற்றம் மற்றும் தண்டப்பணத்தைச் செலுத்துவதற்காக நீதி மன்றத்துக்குச் செல்லுதல் அல்லது பொலிஸ் மற்றும் தபால் நிலையத்துக்குச் செல்ல வேண்டியிருத்தலின் சிரமங்களால் பொலிஸூக்குக் கையூட்டுக் கொடுத்துத் தப்பி விடுவதே வழமையாக உள்ளது. இது ஊழலை வளர்ப்பதோடு அரசுக்குச் சேரவேண்டிய வருமானத்தையும் இழக்க வைக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் என மக்கள் பிரதிநிதிகள் தமது பிரதேசங்களில் மக்களோடு இணைந்து பணியாற்ற வேண்டும். அந்தப் பணிகளின் விவரம் பகிரங்கப்படுத்தப்படுதல் அவசியம். அதாவது, அந்தப் பணிகளின் அடைவுமட்டம் குறித்த விவரம். இல்லையெனில் அதற்கான பொறுப்புச் சொல்லுதல் – காரணமுரைத்தல் வேண்டும்.

இப்படி ஒவ்வொரு விடயங்களிலும் மாற்றங்களைச் செய்ய வேண்டும். அதற்கான விதிமுறைகளையும் சட்டங்களையும் உருவாக்குவது அவசியம். ஒட்டுமொத்த நிர்வாக முறைமைகளில் திருத்தங்களும் மாற்றங்களும் செய்யப்பட வேண்டும்.

பலரும் சொல்லது அல்லது கருதுவது அரசியலமைப்பில் திருத்தங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என. அதுவும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து, பாராளுமன்றத்துக்கு அதிகாரமுள்ள வகையிலான திருத்தம் தேவை என. அதோடு வங்கிச் சட்டங்கள் தொடக்கம் நிதி நிறுவனங்கள், நிர்வாக முறைமைகள், பிற அமைப்புகள், துறைகள் போன்றவற்றில் எல்லாம் புதிய திருத்தங்களும் மாற்றங்களும் தேவை.

இதைப்போல முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் விதமாக இலகு நிர்வாக நடைமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். கூடவே இதற்கென தனியான ஒரு அமைப்பும் தேவை. அதோடு முதலீட்டாளர்களை ஈர்க்கத்தக்க வகையிலான நிபுணத்துவத்தையுடைய குழுவின் அறிமுக ஊடாட்டமும் வேண்டும்.

ஒட்டு மொத்தத்தில் நாட்டு மக்கள் அனைவரிடத்திலும் நெருக்கடிகளிலிருந்து மீள வேண்டும் என்ற எண்ணமும் தேசத்துக்காக உழைக்க வேண்டும் என்ற சிரத்தையும் ஒரு நிகழ் பண்பாடாக உருவாக்கப்படுவது அவசியம். ஒரு நிமிடத்தைக் கூட பயனற்றதாகச் செலவழிக்கக் கூடாது, செலவழிக்க முடியாது என்ற வகையில் வாழ்க்கை முறையில் மாற்றம் வேண்டும்.

இப்பொழுது அரசு வேறு. மக்கள் வேறு. அதாவது நாம் வேறு என்ற வகையிலான சிந்தனை முறையே பலரிடத்திலும் உள்ளது. இதனால்தான் தாம் என்னவும் செய்யலாம் என்ற எண்ணத்தோடு பொறுப்பற்ற விதமாகப் பலரும் நடக்கின்றனர்.

அப்படியல்ல. நாம் செய்கின்ற ஒவ்வொரு தவறும், ஒவ்வொரு பொறுப்பின்மைகளும் தேசத்தையே பாதிக்கிறது. தேசத்தின் பாதிப்பு மறுவளமாக நம்மையே தாக்குகின்றது என்ற புரிதலை – என்ற உண்மையை உணர்த்த வேண்டும்.

இவ்வாறு செய்யப்படும்போது கிட்டத்தட்ட அடிப்படை மாற்றம் ஒன்று நிகழும். அது தற்போது கோரப்படும் கட்டமைப்பு மாற்றத்துக் (System change) கிட்டவாகச் செல்லக் கூடியதாக இருக்கும். இதுவே நெருக்கடிகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியை ஏற்படுத்தும்.

இவ்வாறு பலவற்றைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். ஆனால், இவற்றைக் குறித்துச் சிந்திக்காமல் தனியே ஒற்றைப் பரிமாணத்தில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

இனவாத அடிப்படையில் செயற்படும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினர் எப்படிச் சிந்திப்பர், செயற்படுவர் என்பதை இவர்களிற் பலரும் சிந்திப்பதில்லை. நிறைவேற்று அதிகாரமுறை அறிமுகமாகுவதற்கு முன்பு இருந்த பாராளுமன்றத்தில் என்ன வகையான நடைமுறைகளும் நல்விளைவுகளும் இருந்தன? இனப்பிரச்சினை கூட எப்படிக் கையாளப்பட்டது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

இது ஒரு புறமிருக்க, விரும்பும் மாற்றங்கள் அனைத்தும் நடக்கின்றனவோ இல்லையோ நாம் சாத்தியமாகும் மாற்றங்களைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். ரணில் என்பது எதன் குறியீடு என்று இன்னும் சில நாளில் புரிந்து விடும்.



## அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவே நாட்டின் அனைத்து சிக்கல்களும் தீர்க்கப்பட வேண்டும்!

## முன்னாள் அமைச்சரும், காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரமேஷ் பத்திரண பேட்டி

**மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரப் பிரச்சினை மற்றும் அரசியல் குழப்பம் என்பன அரசியலமைப்புக்கு கட்டுப்பட்டு பாராளுமன்றத்தின் ஊடாக தீர்க்கப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சரும், காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார். அரசாங்கம் எடுத்த சில தவறான கொள்கைத் திட்டங்கள், கொவிட் தொற்றுநோய் மற்றும் ரஷ்ய – உக்ரைன் மோதல் போன்ற காரணிகள் நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள மோசமான நிலைக்கு வலுச் சேர்த்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து அவர் எமக்குப் பேட்டியளித்தார்.**

**கே: இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதன் ஊடாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பில் காண வேண்டிய தீர்வுகள் எதுவாக இருந்தாலும் அது பாராளுமன்றத்தின் ஊடாகவே முன்வைக்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ அல்லது வேறுவிதமாகவோ அந்தத் தீர்வுகள் காணப்பட வேண்டுமானால், நாட்டின் அரசியலமைப்பிற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் என்று வரும் போது, பெரும்பாலான விடயங்கள் பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்பானவை, எனவே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முடிவெடுக்க உரிமை உண்டு.

**கே: மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் எனக் கோரி, ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் கொழும்பில் அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன? இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்காத நிலையில் டீசல், பெட்ரோல், எரிவாயு மற்றும் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவும் பின்னணியில் அழுத்தம் கொடுக்கும் குழுக்களின் கோரிக்கை நியாயமானது. அரசுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்துவது இயற்கையானது. எவ்வாறாயினும், நான் முன்னர் குறிப்பிட்டது போல், தற்போதுள்ள அரசியலமைப்பிற்குள் நாம் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்.

எனவே, இந்த நாட்டில் நிலையான பொருளாதார நிலைமையை உருவாக்குவதற்கு நாம் கடமைப்பட்டவர்களாகவும் பொறுப்பாகவும் இருக்கிறோம். அரசாங்கம் அந்த இலக்கை நோக்கிச் செயற்பட்டு வருகின்றது. எனவே அனைத்து அரசியல் கட்சிகளின் உதவியும் எமக்குத் தேவை.

**கே: தற்போதைய அரசியல் நெருக்கடியை தீர்க்காமல் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது என்று சிலர் கூறுகின்றனர். இது பற்றி?**

பதில்: முதலில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இரண்டாவதாக, அரசியல் நெருக்கடி தலைதூக்குவதைக் கண்டோம். இப்போது அதற்கு நேர்மாறாக இருக்கிறது. அரசியல் ஸ்திரத்தன்மை ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதால் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பெறுவது அவசியம். சமூக எழுச்சியும் இந்த முழு சம்பவங்களின் ஒரு பகுதியாகும்.

மக்களுக்குப் பொருளாதார நிவாரணம் வழங்குவதற்கு தேவையான அரசியல் ஸ்திரத்தன்மையை வழங்க வேண்டியது கட்டாயமான தேவையாகும்.

**கே: இதுவரை போராட்டங்களில் கலந்து கொள்ளாத இளைஞர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர், தங்களின் அடிப்படைத் தேவைகளை அரசு உறுதி செய்யத் தவறி விட்டதாகக் குற்றஞ்சாட்டி, முதன்முறையாக வீதிக்கு வந்துள்ளனர். இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: சில கொள்கை ரீதியான தவறுகளுக்கு உண்மையில் நாங்களும் பொறுப்புக் கூற வேண்டும். நிதியமைச்சர் அலி சப்ரி அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அந்த உண்மையை ஒப்புக் கொண்டார். முக்கியமாக மூன்று விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். வரலாற்று ரீதியாக, நாம் 1977 ஆம் ஆண்டு தொடங்கி கடனில் மூழ்கியிருக்கும் நாடு மற்றும் நமது கடன் சுமை தாங்க முடியாத அளவிற்கு உயர்ந்துள்ளது. அதனால்தான் 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும், இனி கடன் வாங்குவதில்லை, திட்டக் கடன்களை கூட பெறுவதில்லை என்ற கொள்கை முடிவை எடுத்தோம்.

அதனால்தான் ஜப்பானில் இருந்து வந்த முன்மொழியப்பட்ட மோனோ ரயில் திட்டத்தை ரத்து செய்தோம். எனவே, நாங்கள் கடன் வாங்கவில்லை. கடன் சுமை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மிகவும் சிக்கலானதாகவும் அதிகமாகவும் இருந்தது. இரண்டாவது விடயம், தனியார் துறையினர் அதிக வணிகத்தில் ஈடுபடுவதை உறுதி செய்வதற்காக, அவர்களின் திரட்டப்பட்ட நிதி முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் திருப்பி விடப்பட வேண்டும் என்பதற்காக, வரிகளைக் குறைப்பதற்கு கொள்கை ரீதியாக அரசாங்கம் எடுத்த முடிவு தவறானது.

உலகம் முழுவதும் கொரோனா அச்சம் காரணமாக முடக்கப்பட்டமையால் வணிக செயற்பாடுகள் மோசமாகப் பாதிக்கப்பட்டு, மக்கள் இயல்பான திறனைக் கொண்டு முன்னேறும் வாய்ப்பை இழந்தமை மூன்றாவது காரணியாகும்.

இருப்பினும், நாங்கள் அவர்களுக்குச் சில உதவிகளை வழங்கியதால் ஓரளவு பாதுகாக்கப்பட்டனர். மறுபுறம், நாங்கள் எதிர்பார்த்த முடிவைக் கொண்டிருக்கவில்லை.

கொவிட்19 தொற்றுநோயால் உலகம் முழுவதும் பாதிக்கப்பட்டது. நாங்கள் மீண்டும் எழத் தொடங்கியதும் உக்ரைன் ரஷ்யப் போர் தொடங்கியது. இதனால் எண்ணெய், எரிவாயு மற்றும் கோதுமை மாவின் விலைகள் உச்சவரம்புக்கு மேலே நகர்ந்தன. அந்த சூழ்நிலைகள் அனைத்தும் படிப்படியாக கடன்களை எடுப்பதை பாதித்தன. மேலும், வரி வருமானம், கொவிட் 19 தொற்று மற்றும் உக்ரைன்ரஷ்ய யுத்தம் தொடர்பான சில தவறான கணிப்புகள் இலங்கையின் பொருளாதாரத்தை பாதித்துள்ளன.

**சில கொள்கை ரீதியான தவறுகளுக்கு உண்மையில் நாங்களும் பொறுப்புக்கூற வேண்டியுள்ளது. நிதியமைச்சர் அலி சப்ரி அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது அந்த உண்மையை ஒப்புக் கொண்டார்.**

**கே: நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குமாறு எதிர்க்கட்சிகள் மற்றும் பல்வேறு குழுக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: உண்மையில், இது விவாதத்திற்குரிய தலைப்பாகும். 1978 ஆம் ஆண்டு, மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன சில முற்போக்கான நகர்வுகளை எதிர்பார்த்து நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்தினார். இருப்பினும், காலங்காலமாக, நாங்கள் அதை அகற்ற முயற்சித்து வருகிறோம். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் எனக் கூறி பல அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் ஆட்சிக்கு வந்த போதிலும் எவரும் இதனை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் இது இன்றும் ஒரு விவாதப் பொருளாகவே உள்ளது. அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு பல அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த மாகாணங்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு அந்த மாகாணங்களை ஆளும் ஜனாதிபதியின் பிரதிநிதியால் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நாம் நீக்கினால், மாகாணங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான வேறு வழிகளையும் அதிகாரங்களையும் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கும். அவைகள் மிகவும் கடினமான விடயங்களாகும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டுமாயின், சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. அந்தப் பிரச்சினைகளை உடனடியாகத் தீர்க்க முடியாது, ஆனால் நாம் விவாதித்து முன்னோக்கிச் செல்லக் கூடிய பல பிரச்சினைகள் உள்ளன.

**கே: அரசியல்வாதிகள் கணக்காய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களின் கணக்கில் வராத சொத்துக்கள் அனைத்தும் அரசால் பறிமுதல் செய்யப்பட வேண்டும் என்ற கருத்துப் பரவலாக முன்வைக்கப்படுகிறது. இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: வெளிப்படைத்தன்மையே சிறந்த கொள்கை என்று நான் நினைக்கிறேன். பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் என்ற வகையில், ஒவ்வொரு வருடமும், சபாநாயகர் அல்லது ஜனாதிபதியிடம் எங்களது சொத்துப் பிரகடனப் படிவங்களை சமர்ப்பிக்கிறோம். அது ஒரு பொது நடைமுறையாகும். யார் வேண்டுமானாலும் விபரங்களை எடுக்கலாம். இது ஒரு நல்ல நடவடிக்கை மற்றும் இது ஒரு இரகசிய ஆவணம் அல்ல.

**“செல்வத்தைக் குவிப்பதற்கான தேவையற்ற வழிகளில் வரிசையாக நிற்கிறார்கள். அவர்கள் வருமான வரி செலுத்துவதில்லை.”**

(15ஆம் பக்கம் பார்க்க)




# ஆக்ரோஷத்துக்குப் பதிலாக புத்திசாலித்தனமே அவசியம்!

பாரிய பொருளாதாரப் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ள இலங்கை மீண்டுமொரு துயரத்தின் முன்னால் உள்ளது. மீண்டும் ஒருமுறை என குறிப்பிடுவதற்கு நடந்தது என்ன? இலங்கை நாட்டின் வரலாற்றில் இரத்த ஆறு ஓடிய பல சந்தர்ப்பங்கள் உள்ளன. பீதி நிறைந்த இருண்ட இரவுகள் பலவற்றை நாம் கடந்து வந்துள்ளோம். இன, மத ,அரசியல் ரீதியாக பிரிந்து மோதி அழிவுக்கு உட்பட்ட காலங்களை மறக்க முடியாது.

வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டிய போராட்டத்தை குரோதம் இன்றி அமைதியாக கொண்டு செல்ல வேண்டிய தீர்மானம் மிக்க சந்தர்ப்பம் தோன்றியுள்ளது. புத்தர் பெருமானின் வாழ்க்கையின் மூன்று சந்தர்ப்பங்களைக் கொண்டாடும் வெசாக் காலத்தில் புத்தரின் போதனைகளில் அடங்கியுள்ள உன்னதமான கருத்துகளின்படி செயற்படுவதற்கு நாம் உறுதி கொள்ள வேண்டும்.

பெரும் சிரமத்தை சந்திக்கும் பாதையில், நேருக்கு நேர் சந்திக்கும் நன்கு அறிமுகமான மக்கள் மோதலுக்குள் தள்ளப்பட்டது எவ்வாறு?

உருவாகியுள்ள மோதலின் தன்மையை ஆரம்பம், மத்தி, இறுதி என அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. நடுத்தர வருமானத்தை உடைய அனைவரும் பொருளாதார வீழ்ச்சியுடன் வறியவர்களாகி உள்ளார்கள். வறியவர்கள் மேலும் ஏழ்மைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். தொடர்ச்சியாக மின்சாரத்தை பெறத் தவறிய, எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டால் பாதிப்படைந்த மக்கள் உடனடியாக தங்களுடைய தேவைகளை நிறைவேற்றக் கோரினார்கள்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரித்ததால் அவற்றை தங்களால் வாங்கக் கூடிய விலைக்கு பெற்றுத் தருமாறு அழுத்தம் அளித்தார்கள். நிர்வாகத்தை சரியான முறையில் நடத்திச் செல்ல, தேவைகளை நிறைவேற்ற தகுந்தவர்களுக்கு அதிகாரத்தை அளிக்குமாறு மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். சம்பிரதாய விதிகளை உடைத்து மக்களை தூண்டுவதில் சமூக ஊடகங்கள் வெற்றி பெற்றுள்ளதுடன், வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை நிராகரிப்பது இந்தப் போராட்டத்தில் அடங்கியுள்ள பிரதான அம்சமாகும்.

இனிமேல் புதிய ஆரம்பம் ஒன்று அவசியம். மக்களின் இறைமை மற்றும் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பது முக்கியமாகும். உரிமையைப் பெற்றுக் கொள்ளும் போராட்டத்தில் ஒருபோதும் எதிர்பாராத முனையை நோக்கி செல்வதற்கும் இடமுண்டு. உலகில் நடைபெற்ற மக்கள் போராட்டங்களின் இறுதியில் எஞ்சிய சாட்சியங்களை புரிந்து கொள்வது நல்லது.

நீதி மற்றும் நியாயங்களுக்கான சந்தர்ப்பங்களை மறந்து போவது இலங்கை தவறிழைத்த இடமாகும். 1983 இனங்களுக்கிடையேயான குரோதம் அழிவிலேயே முடிவடைந்தது. 1987 இந்திய எதிர்ப்பு செய்த பாதிப்பு மோசமானதாகும். தெற்கில் நடந்த போராட்டத்தின் பின்னர் இளைஞர்களின் விரக்திக்கான காரணத்தை அறிய ஜனாதிபதி குழு ஒன்றை நியமித்தார். வடக்கு, கிழக்கு பயங்கரவாதத்தை ஒழித்த பின்னர் கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டு விடயங்கள் ஆராயப்பட்டன. இவற்றால் கற்றவை உண்டா?

தற்போது ஏற்பட்டுள்ள எழுச்சி பற்றிய விடயங்களை புதிதாக ஆராய வேண்டுமா? சம்பிரதாய அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் இடையே ஒரு பிரிவினர் மக்களிடமிருந்து எழும் குரலை புரிந்து கொள்ளவில்லை. முறைகளை மாற்றும் முயற்சியை வேண்டுமென்றே தவிர்த்தார்கள். அதன் முடிவு இன்று ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளது.

ஜனநாயகத்தை விட சிறந்த நிர்வாக முறை உலகில் இல்லை. திறந்த பொருளாதார முறையில் நியாயமான சந்தர்ப்பங்களுடன் கூடிய சமூகத்தை உருவாக்க முடியும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜனநாயகத்தை மீண்டும் உருவாக்க அரசியலமைப்பு ரீதியாக நடவடிக்கையை பின்பற்ற வேண்டும். அரசியலமைப்பில் உள்ள பலவீனங்களை கலந்துரையாடி தீர்த்துக் கொள்வதே நல்லது.

அரசியலமைப்பு பற்றி பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பாகவும் நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது. ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் தங்களுக்குப் பொருத்தமான தங்களுடைய அதிகாரத்தை பாதுகாக்கக் கூடிய கட்டமைப்மைப்புடன் கூடிய அரசியலமைப்புக்கு பதிலாக மக்களிடமிருந்து முன்வைக்கப்படும் புதிய கருத்துகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

தேர்தல் நடவடிக்கைகளை செலவு குறைந்த மற்றும் ஊழலை கட்டுப்படுத்தக் கூடிய ஒன்றாக மாற்றுவது அவசியம். விகிதாசாரம் போன்ற சிக்கலான முறைகளைத் தவிர்த்து நேரடியான பொதுமக்களின் பிரதிநிதித்துவ செயல்பாடுகளை அந்த அரசியலமைப்பு யோசனைகளில் முன்வைத்தல் நல்லது. இவை பல வருட காலமாக தொடர்ந்தும் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் என்பதை ஞாபகப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

விரைவான மாற்றம் சமூகத்துக்குத் தேவையாக உள்ளது. ஆத்திரத்துக்குப் பதிலாக புத்திசாலித்தனம் அவசியமான சந்தர்ப்பமாகும். அண்மைக் காலமாக கஷ்டமான நிலைமைக்கு ஆளாகியுள்ள மக்கள் தொடர்ந்தும் பொறுமையுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படத் தயாராயில்லை. அவசரமாக செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் மூலம் அரசாங்கத்தை நியமிப்பதோடு நம்பிக்கையான கொள்கை, கலந்துரையாடல் மூலம் நிலையான திட்டத்தை தயாரிக்க வேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும். அமைதியான, குரோதமற்ற போராட்டத்துக்காக ஒன்றிணைவது இன்று அளிக்கப்பட்டுள்ள கடமை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

இலங்கை சிறையில் இருந்த மீனவர்கள் விடுதலை;

# இந்திய அரசின் வெளியுறவு கொள்கைக்கு கிடைத்த வெற்றி


திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

'இலங்கை சிறையில் இருந்து மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளது, இந்திய அரசின் வெளியுறவு கொள்கைக்கு கிடைத்த வெற்றி' என தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பா.ஜ.க. அரசியல் பயணத்தில் மிக முக்கியமான ஒரு நிகழ்வு என்னுடைய இலங்கை பயணம். தமிழக அரசு சார்பில் இல்லாமலும், மத்திய அரசு சார்பு இல்லாமல் தனிப்பட்ட முறையில் சில முக்கிய விஷயங்களுக்காக நான் மேற்கொண்ட இந்த பயணம், உண்மையிலேயே மிக வெற்றிகரமாக அமைந்தது.

இலங்கை பயணம் குறித்த என்னுடைய விரிவான அறிக்கையை கட்சியின் உயர்மட்ட தலைவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

அதில் விடுதலை கிடைக்காமல் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த மீனவர்களின் விடுதலை குறித்தும் விரிவாக கூறியிருந்தேன். மத்திய அரசும் துரிதமாக செயல்பட்டு உடனடியாக அந்த மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுத்தது மகிழ்ச்சி அளிக்கிறது.



இலங்கையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிக்கலான சூழலிலும் மீனவர்களுக்கு கிடைத்திருக்கும் இந்த விடுதலை நமது வெளியுறவு கொள்கைக்கு கிடைத்த வெற்றி.

இலங்கையில் சிக்கியிருந்த தமிழக மீனவர்களை சட்ட சிக்கல் இல்லாமல் முயற்சி எடுப்பதில் தீவிர முனைப்பு காட்டி வெற்றிகரமான விடுதலைக்கு வழிவகை செய்த மத்திய மீன் வளத்துறை இணை அமைச்சர் முருகன், உடனடியாக மீட்பு நடவடிக்கைகளை அரசு ரீதியாக முன்னெடுக்கும் மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சர் முரளிதரன், சட்டரீதியான மீட்பு நடவடிக்கைக்கு வித்திட்ட மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கர், நாட்டின் கடைக்கோடி குடிமகனின் நலத்துக்காக நாளெல்லாம் திட்டமிட்டு ஓயாது உழைக்கும் பிரதமர் நரேந்திரமோடி ஆகியோருக்கு மீனவர்களின் விடுதலைக்காக தமிழக மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## சமாதானம், சகவாழ்வின் ஒளியின் ஊடாக புனித வெசாக் தினத்தை மெருகூட்டுவோம்

இ.தொ.கா தலைவர் செந்தில் வெசாக் தின வாழ்த்து



புத்தபெருமானின் வாழ்க்கைப் பயணத்தில் மிக முக்கியத்துவமிக்க மூன்று நிகழ்வுகள் இடம்பெற்ற வெசாக் தினத்தை கொண்டாடும் பௌத்த மக்கள் அனைவருக்கும் வெசாக் தின வாழ்த்துக்களை இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டாமான் தெரிவித்துள்ளார்.

எவரும் பிறப்பிலே உயர்ந்தவராகவோ தாழ்ந்தவராகவோ காணப்படுவதில்லை என்பதனை உறுதி செய்து மனித வர்க்கத்தினர் அனைவரையும் சமமாக மதித்து சமூகங்களுக்கிடையே காணப்பட்ட பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பிரிவினைகள் என்பவற்றினை அகற்றி பாரிய சமூக மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு புத்தபிரானால் முடிந்துள்ளது.

புத்தபிரான் புனித காலடி எடுத்து வைத்த இப்பூமியில் இன்னல்கள் மற்றும் துயர்கள் அற்ற வகையில் அனைத்தின சமூகங்களுக்கும் சமமான உரிமைகள் மற்றும் நீதி, நியாயம் என்பன கிடைக்கப் பெறுகின்ற நிலையான சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு நாம் அனைவரும் ஒன்றுப்பட வேண்டும்.

சமாதானம் மற்றும் ஒத்துழைப்புடன் கூடிய சகவாழ்வின் ஒளியின் ஊடாக இப்புனித வெசாக் தினத்தில் எமது தேசத்தை மெருகூட்டுவோம். பௌத்த மக்கள் அனைவருக்கும் புனித வெசாக் தின வாழ்த்துக்கள் என தெரிவித்துள்ளார்.

## மன்னார் கடலில் மீன் பிடிக்க சென்ற மீனவன் கடலில் விழுந்து பலி

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் சௌத்பார் பகுதியில் நேற்று முந்தினம் மீன் பிடிப்பதற்காக வலை பாய்ச்ச சென்ற இளம் குடும்பஸ்தரான மீனவர் ஒருவர் எதிர்பாராத விதமாக மன்னார் புகையிரத பாலத்திற்கு அருகாமையில் உள்ள பள்ளத்தில் விழுந்து காணாமல் போன நிலையில் நேற்று சனிக்கிழமை(14) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.உயிரிழந்தவர் மன்னார் எமில் நகர் பகுதியை சேர்ந்த கிரிஸ்தோபர் ஜாக்லின் வயது29 என அடையாளம் காணப்பட்டுள்ளார். நேற்று முந்தினம் (13) மதியம் கடலுக்குள் விழுந்த நிலையில் உள்ளூர் மீனவர்கள் மற்றும் கடற்படையினர் இணைந்து குறித்த நபரை தேடும் பணியில் ஈடுபட்டனர்.இருப்பினும் குறித்த நபர் மீட்கப்படாத நிலையில் நேற்று சனிக்கிழமை காலை தொழிலுக்குச் சென்ற மீனவர்களினால் குறித்த மீனவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் பொலிஸார் மரணம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.பின்னர்சடலம்மன்னார்மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### அனுமதி அட்டைகளை...

ஆணையாளர் நாயகமான எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்தி ஒருவர் தனக்குரிய அனுமதி அட்டையை இதுவரை பெறவில்லையென்றால், www.doenets.lk தளத்தினூடாக பார்வையிடலாம், G. C. E. O/L 2021 எனக் கிளிக் செய்து, அனுமதி எண்ணைச் சேர்த்து உள்ளடக்கத்தைப் பதிவிறக்கம் செய்யலாம்.

பெயர் மாற்றங்கள், தலைப்பு மாற்றங்கள் மற்றும் ஊடகத் திருத்தங்கள் இருந்தால், www.onlineexams.gov.lk/cec என்ற இணைப்புக்குச் சென்று அந்தத் திருத்தங்களை ஒன்லைனில் செய்வதற்கும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### நியூசிலாந்து அரசு...

உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற்றினூடாக இலங்கைக்கு இந்த நிதியுதவி வழங்கப்படுமென நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் நனையா மஹுடா (Nanaia Mahuta) டுவிட்டர் செய்தி ஊடாக தெரிவித்துள்ளார்.

இது இலங்கைக்கும் நியூசிலாந்துக்குமிடையிலான 30 வருட கால ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துமென்றும், இந்த 30 வருட காலத்திற்குள் நியூசிலாந்து இலங்கைக்கு 25.07 மில்லியன் நியூஸிலாந்து டொலர்களை அபிவிருத்தி திட்டங்களுக்காக உதவியாக வழங்கியதாகவும் அவர் கூறினார்.

### புதிய அமைச்சர்கள் நால்வர் ...

குணவர்த்தனவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக பேராசியரியர் ஜீ.எல்.பீரிஸ், நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சராக பிரசன்ன ரணதுங்கவும், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சராக கஞ்சன விஜேசேக்கரவும் நேற்று ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

### டெல்லி வணிக வளாகத்தில்...

மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கட்டடத்தில் பல நிறுவனங்களுக்கான அலுவலகங்கள் இருந்தன. முதல் தளத்தில் தீ விபத்து ஏற்பட்டது, அதில் சிசிடிவி கேமராக்கள் மற்றும் ரவுட்டர்கள் தயாரிக்கும் நிறுவனம் இருந்துள்ளது. நிறுவன உரிமையாளர்கள் ஹரிஷ் கோயல் மற்றும் வருண் கோயல் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். மக்களை மீட்க கட்டடத்தின் ஜன்னல்களை உடைக்க வேண்டமென்றும் இன்னும் சிலர் கட்டடத்துள் சிக்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

தீ விபத்து குறித்து இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி,

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 02 இலட்சமும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரமும், பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 02 இலட்சமும் வழங்கப்படமென அறிவித்துள்ளார்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் உதவி செய்தரென மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறினார்.

## எங்கள் கருத்து...

### கட்சி அரசியலுக்கான காலம் இதுவல்ல

இலங்கையின் கடந்த நூறாண்டு காலப்பகுதியில் இவ்வாறான ஒரு பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்ததே இல்லை. இதற்கு கொவிட் தொற்று மட்டும் காரணமல்ல. நீண்டகாலமாக கைகொள்ளப்பட்டு வந்த கட்சி அரசியல் மற்றும் தேர்தல் அரசியலால் விளைந்த சேதங்களின், அரசியலை ஒரு வர்த்தகமாகப் பார்த்ததன் விளைவுகளின் மொத்த உருவமாகவே இப் பொருளாதார நெருக்கடியை கருத வேண்டும். தற்போது மீளாய்வு செய்வதால் எந்தப் பயனும் விளையப்போவதில்லை. இந்த ஆபத்தில் இருந்து விடுபடுவதே முதலும் முக்கியமுமாகும்.அதற்கு அனைவரும் தயாரா? என்பதே கேள்வியாகும்.

ஒரு நாள் வாழ்க்கையை முன்னெடுப்பதே பெரும் பிரச்சினையாகியுள்ள இச் சமயத்தில் நாட்டைத் தூக்கி நிறுத்துவோம் என்ற கோஷத்துடன் முன்வந்திருப்போருக்கு கைகொடுப்பதா அல்லது அவர் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தியபடி அதில் குளிர்காய்ந்து மகிழ்வதா என்பதை அனைத்து பொறுப்புணர்வு கொண்ட மனிதர்களும், அரசியல்வாதிகளும் தீர்மானிக்க வேண்டிய நேரம் இது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பொறுப்பேற்ற பின்னர் அயல்நாட்டு தூதுவர்கள் அவரைச் சந்தித்து நிலைமைகள் குறித்து விரிவாக பேசியுள்ளனர். பிரதமரின் செய்தியை எடுத்துக் கொண்டு ஜப்பானுக்கு அந்நாட்டுத் தூதுவர் சென்றுள்ளார். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜே. ஆர். காலத்தில் பாரிஸ் நகரில் நடைபெற்று வந்தது. அதேபோன்ற ஒரு உதவி வழங்கும் நாடுகளின் சம்மேளனத்தைக் கூட்டும் முயற்சியில் பிரதமர் ஈடுபட்டுள்ளார். அடுத்தடுத்து எடுக்கப்பட்டு வரும் இந் நடவடிக்கைகளின் விளைவாக டொலர் ஒரு ஸ்திரத்தையும், பங்கு சந்தை ஒரு ஸ்திர நிலையையும் உடனடி பச்சை

சமிக்ஞைகளாக வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு தற்காலிக சமிக்ஞை என்றாலும் கூட, புதிய அரசின் மீதான உலகளாவிய நம்பிக்கையை மற்றும் வர்த்தக உலகின் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருப்பதாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

இச் சந்தர்ப்பத்தில் புதிய அரசின் செயற்பாடுகளுக்கு உதவும், ஊக்கமளிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் உள்ள தகுதிவாய்ந்த மற்றும் துறைசார் நிபுணத்துவம் வாய்ந்த உறுப்பினர்கள் பிரதமருடன் அணிசேர வேண்டியது அவசியம். ஏனெனில் இது கட்சி அரசியல் பேசுவதற்கான நேரம் அல்ல. பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கு கைகொடுக்க வேண்டிய காலம். பிரதமர் ரணில் எதைச் செய்வதில் ஈடுபட்டுள்ளாரோ அதற்கு கரம் கொடுப்பதே உண்மையான தேசப்பற்றாகும்.

### புதிய அரசில் அமைச்சர்களாக ...

நிச்சயம் இம்முறை அமைச்சு பதவி எடுக்க வேண்டுமென தமிழ்ச் சமூகத்திலிருந்து குரல் எழுப்பப்பட்டுள்ளது. தமிழ் புத்திஜீவிகள், கலைஞர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் என்பன இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். அத்துடன் புலம்பெயர் சமூகத்திலிருந்தும் இந்த விடயம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் தமிழ்ப் பிரதிநிதிகள், தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டு உதவிபுரிய வேண்டுமெனவும் பல தரப்பிலிருந்தும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

அரசுக்கு வெளிய இருந்து ஆதரவு தருவதிலும் பார்க்க அரசுக்குள்ளே இருந்து அரசில் அங்கம் வகித்து தமிழ் மக்கள் மற்றும் முழு நாடு சம்பந்தமான விடயங்களுக்கு ஆதரவளிக்க இவர்கள் முன்வர வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது .

### டீசலுக்கு தட்டுப்பாடு என்பது...

வெளியிடப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொலிஸ் ஊரடங்கு உத்தரவு காரணமாக எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருந்த போதிலும் அத்தியாவசிய சேவைகளுக்காக எரிபொருள் விடுவிக்கப்பட்டது.

நாளை திங்கட்கிழமை (16) மற்றுமொரு டீசல் தாங்கி கப்பல் வரவுள்ளது. அதுவரை நாட்டை சீராக நடத்துவதற்கு போதுமான டீசல் கையிருப்பிலுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அத்தியாவசிய சேவைகளைத் தவிர விநியோகிப்பதற்கு டீசல் வழங்கப்படவில்லையென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்த எரிபொருள் பௌசர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பௌசர்களை இயக்குவதற்கு டீசல் வழங்கப்படுவதில்லையென சங்கத்தின் அதிகாரி ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளதையடுத்து, அவர்களுக்கு வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட டீசல் கையிருப்பு பெற்றோல் கொண்டு செல்ல மட்டுமே பயன்படுத்த முடியுமென்று தெரிவித்துள்ளார்.

### பதவி ஏற்கவும் மாட்டோம்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி பங்கேற்காது. ஆனால், அந்த அரசை உடனடியாக காலில் இழுத்து வீழ்த்தும் எந்தவொரு முயற்சிக்கும் ஆதரவளிக்கவும் மாட்டோம். பொது மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு குறைந்தபட்ச தீர்வுகளைக் காண புதிய அரசுக்கு அவகாசம் தேவை என்பதை நாம் ஏற்கிறோம்.

தமது அரசில் பங்கேற்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமக்கு அழைப்பு விடுத்தார். அவரது அழைப்புக்கு நன்றி கூறி, கொள்கை அடிப்படையில் அதை நாம் நாகரிகமாக மறுத்து விட்டோம். ஆனால் அதற்காக நாம் கட்சி அரசியல் செய்து கூச்சல், குழப்பம் விளைவிக்க விரும்பவில்லை. வாழ்வாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் மக்களை மீட்க அவரால் இயன்றதை பிரதமர் செய்யட்டும்.

ரணில் விக்கிரமசிங்க, எமது முன்னாள் பிரதமர். அவரது பலமும், பலவீனமும் எமக்கு நன்கு தெரியும். பலவீனம் பற்றி இப்போது பேசி ஜனரஞ்சக அரசியல் செய்ய தமிழ் முற்போக்குகூட்டணியில்எவரும்விரும்பவில்லை. சர்வதேச தொடர்பாடல் தொடர்பான ரணிலின் பலம் மூலம் நாட்டுக்கு நன்மை நடக்குமாயின் அதை நான் முழு மனதுடன் வரவேற்கிறோம்.

இன்று நாட்டில் உணவு இல்லை, மருந்து இல்லை,எரிவாயு இல்லை,எரிபொருள் இல்லை, உரம் இல்லை, மின்சாரம் இல்லை. இவற்றுக்கு குறைந்தபட்ச தீர்வுகளையாவது அவர் தரவேண்டும்.

பிரதமர் அதை செய்யட்டும். அதற்கு பொறுப்புள்ள கட்சியாக நாம் இடம் கொடுப்போம். ஆகவே இன்றைய சூழலில் பாராளுமன்றத்தில் அவரது அரசின் காலை இழுத்து விடும் எந்தவொரு முயற்சியையும் நாம் செய்ய மாட்டோம்.

அத்தியாவசிய தேவைகளை பெற அமெரிக்க டொலர் இல்லாமல் உள்ளது. இதற்காக நட்பு நாடுகளிடம் கடன்வழி உதவிகளை, நாணய மாற்று உதவிகளை பெற வேண்டும். இந்தியா இவற்றை ஏற்கனவே வழங்கி வருகிறது. இவை இன்னமும் அதிகரிக்க வேண்டும். ஏற்கனவே உதவி தரும் நட்பு நாட்டு குழுமம் (Consortium) ஒன்றை ஏற்படுத்த பிரதமர் முயற்சி செய்கிறார். இது நல்லது. வரி கொள்கை சீரமைக்கப்பட வேண்டும்.

நாட்டு மக்களின் குரலுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக ஒரு கால அட்டவணை தயாராக வேண்டும் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்தியா வழங்கிய கடனுதவியின் கீழ்

## 40,000 மெ. தொன் டீசல் நேற்று இலங்கை வந்தது

40,000 மெற்றிக் தொன் டீசலுடன் மற்றுமொரு கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்ததாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவின் கடனுதவியின் கீழ் இந்த எரிபொருள் இலங்கைக்கு வருவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகம் குறைக்கப்பட்டுள்ளதாக எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்படுவதாக அகில இலங்கை எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

## சிவனொளிபாதமலை யாத்திரியை காலம் திங்கட்கிழமையுடன் நிறைவடைகிறது

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

சிவனொளிபாதமலை யாத்திரியை காலம் திங்கட்கிழமை வைகாசி விசாகம் பௌர்ணமி தினத்துடன் நிறைவடைகிறது. அன்றைய தினம் சிவனொளிபாதமலை உச்சியில் பிரித் ஓதப்பட்டு சமய நிகழ்வுகளும் நடைபெறும். அதன் பின்னர் நல்லதண்ணி வழியாக சிவனொளிபாதமலையில் வைக்கப்பட்டுள்ள பௌத்த பொருட்கள் பொகவந்தலாவ மற்றும் நோட்டன் வழியாகவும் மலை உச்சியில் இருந்து குருவிற்ற வழியாக இரத்தினபுரி கல்பொத்தாவல ரஜமகா விகாரைக்கு கொண்டு வரப்பட்டு வைக்கப்படும்.இம் முறை ஏரிபொருள் தட்டுப்பாடு காரணமாக யாத்திரிகர்களின் வருகையில் பெரும் வீழ்ச்சி காணப்பட்டதாக விடுதி முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### லக்ஷ்மன் ஹுலுகல்ல ...

அவுஸ்திரேலியாவில் நேற்றுக் காலை மரணமடைந்ததாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில், விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இலங்கை படையினருக்குமிடையிலான யுத்தம் தொடர்பான செய்திகளை ஊடகங்களுக்கு வழங்கி வந்த, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளராக லக்ஷ்மன் ஹுலுகல்ல கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆட்சியில் பங்கேற்று நாட்டின்...

எதிர்காலத்துக்காகவும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் இந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு, இந்தத் தருணத்தில் கட்சி பேதமின்றி தாய்நாட்டுக்காக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டுமெனவும், அதற்காக ஐக்கிய மக்கள் சக்திக்கு அழைப்பு விடுப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

### ஷேக் கலீஃபா பின் சயீத் ...

ஜனாதிபதியின் மறைவுக்காக 40 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும். கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும். அமைச்சுகள், துறைகள், மத்திய அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு முதல் ஷேக் கலீஃபாவின் தந்தை ஷேக் சயீத் பின் சுல்தான் அல் நஹ்யான் அரபு நாட்டின் முதல் ஜனாதிபதியாக இருந்து வந்தார். இவரது மறைவுக்கு பின்னர் ஷேக் கலீஃபா இரண்டாவது ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்டார்.

1948 ஆம் ஆண்டில் பிறந்த ஷேக் கலீஃபா, ஐக்கிய அரபு அமீரகத்தின் இரண்டாவது ஜனாதிபதியாகவும், அபுதாபி அரசாங்கத்தின் ஆட்சியாளராகவும் இருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

### மக்களின் பிரச்சினைகளை...

நான்கு குழுக்களை நியமித்துள்ளார். அத்தியாவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடின்றி விநியோகிப்பதற்காக வஜிர அபேவர்த்தன மற்றும் பாலித்த ரங்கே பண்டார ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மருந்துத் தட்டுப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக ருவன் விஜேவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் உரப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக அகில விராஜ் காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

எரிபொருள் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக சாகல காரியவசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த குழுக்கள் தொடர்பில் அந்தந்த தரப்பினருடன் கலந்துரையாடி பிரச்சினைகளை தீர்ப்பதற்காக யோசனைகளை முன்வைக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார கூறினார்.

### ஜனாதிபதி பதவி விலகல்...

நாட்டின் பொருளாதாரம் சிதைந்துவிட்டது. இந்நிலையில், மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

இந்த விடயங்களை சரிசெய்து மீண்டும் நாட்டை வழமைக்கு கொண்டு வருவேன் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

ஐதே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். எனினும், அவரது நியமனம் பெரும் ஏமாற்றத்தை சந்தித்துள்ளதாகவும் அவர் அரசியல் ரீதியாக ஆதிக்கம் செலுத்தும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமானவராக செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோரி வரும் அரசாங்க எதிர்ப்பாளர்களின் உணர்வுடன் தான் உடன்படுவதாக குறிப்பிட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பதவி விலகல் ஒருபோதும் நடக்காதென்றும் கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்க்க சர்வதேச நாடுகள் உதவ முன்வர வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

1948 இல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பிறகு இலங்கை எதிர்கொண்டுள்ள மிக மோசமான பொருளாதார நெருக்கடி இதுவாகும். உணவு, மருந்து மற்றும் எரிபொருள் கட்டுப்படியாகாததாகி விட்டன. சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருந்து உயிரிழந்துள்ளனர். இதன் காரணமாக அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் போராட்டம் வெடித்தது.

இதனை தொடர்ந்து கடந்த 09ஆம் திகதி பிரதமர் பதவியில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ விலகினார். இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மற்றும் மக்கள் எதிர்ப்புகளை தணிக்கும் முயற்சியாக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை புதிய பிரதமராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

### அதேபோன்று முள்ளிவாய்க்காலுக்கும்...

ஆண்டைத் தொடர்ந்து மைத்திரி மற்றும் தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சிக் காலத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு பாரியதடைகள் இருக்கவில்லை.

இது போரில் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்டவர்களை கூட்டாக நினைவு கூறுவதையும் வலி சுமக்கும் மக்கள் ஆறுதல் அடைவதையும் தடுக்கும் அநாகரிக செயலாகவும் அமைந்தது. இது இனியும் நடக்கக் கூடாதென்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

இதனைவிட தற்போதைய புதிய பிரதமர் "காலி முகத்திடல் போராட்டத்தின் மீது கை வைக்க மாட்டேன்" என பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இது அவரின் அடுத்த கட்ட அரசியல் இராஜதந்திர செயற்பாடாக இருக்கலாம். எனினும் இக் கூற்று போராட்டக்காரர்களுக்கு பாதுகாப்பு கவசமாக அமைந்துள்ளது. போராட்ட சுதந்திரத்தையும் அளித்துள்ளது. இது வரவேற்கத்தக்கதே.

காலிமுகத்திடல் நடக்கும் போராட்டமும் அதனையொட்டி நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நடக்கும் போராட்டம் வயிறு மற்றும் பொருளாதாரம் சார்ந்தது. மக்களின் அன்றாட தேவைகளை நிறைவேற்றிவிட்டால் போராட்டம் நகரும், அதற்கு ஆயுள் இல்லையென பிரதமர் நினைத்திருக்கலாம்.ஆதலால் போராட்டத்துக்கு அனுமதி அளித்திருக்கலாம்.

ஆனால் வடக்கு, கிழக்கு மக்களின் போராட்டம் தமிழர்களின் வாழ்வோடும், உயிரோடும், இரத்தத்தோடும் கலந்த நீண்டகால அரசியல் போராட்டமாகும்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் தம்முடைய துயர் போக்கவும் வலிகளை ஆற்றிக் கொள்வதற்கும் துணை நிற்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# புதிய பிரதமராக ரணில்



# இது கை கொடுத்து மீட்பதற்கான காலம்!

ஆங்கிலத்தில் *expect the unexpected* என்று சொல்வார்கள். இதைத்தான் கமல்ஹாசன் தன் பிக்பொஸ் நிகழ்ச்சியில் எதிர்பாராததை எதிர்பாருங்கள் என்று கூறுவார். எதிர்பாராதவற்றை எதிர்பார்க்கக் கூடிய ஒரு களம்தான் அரசியல். மேலும், மனிதன் தீர்மானிப்பான் கடவுள் நிராகரிப்பார் என்ற வசனமும் இக்கருத்துடன் இணைந்து போகக் கூடியதுதான்.

வெற்றிமீது வெற்றி பெற்றுச் சென்ற நெப்போலியனுக்கு வோட்டர்லூ யுத்தம் முடிவுரை எழுதியது. வெற்றியைத் தவிர வேறொன்றுமில்லை என்றிருந்த ஹிட்லருக்கு ரஷ்ய மீதான படையெடுப்பு படுதோல்வியையும் பெரும் பின்னடைவையும் தந்தது. கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு எதிரிகளே இல்லை என ஜெயலலிதா மார்தட்டிய சில மாதங்களில் அவர் காலமாகிப் போனார். அரசியலில் எதுவும் நடக்கலாம்!

இந்தப் பீடிகைகள் எல்லாம் ஏன் என்று உங்களுக்குத் தெரியும். குழப்பங்களுக்கு மேல் குழப்பங்களாக நீடித்துக் கொண்டிருக்கும் இலங்கை அரசியலில் ஒரு ஒளிக்கீற்று தென்பட்டிருப்பதாகவே கருத வேண்டியிருக்கிறது. அலரி மாளிகையில் சந்தர்ப்பம் அறியாமல் ஒரு கூட்டம். அதன்பின் சத்தியக்கிராகிகளான இளைஞர் மீது தாக்குதல் இதைக் கண்டிக்கும் வகையில் நாடெங்கும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் வன்முறைச் சம்பவங்களும் என்று வேகமாகக் காட்சிகள் மாறிக் கொண்டிருந்தன. இறுதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தன் பதவியை இராஜிநாமா செய்துவிட்டு திருகோணமலை கடற்படைத் தளத்தில் தஞ்சம் புக, அரசாங்கமற்ற நாடாகிப் போனது இலங்கை. ஒரு புறம் அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் சடுதியாக அதிரித்துச் செல்ல, அந்த விலைகளிலும் கூட அவை கிடைக்காத நிலை என்றால் மறுபுறம் ஊடரங்கும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற நிலையும் நீடித்துச் சென்ற போதுதான் எதிர்பாராதது நடந்தேறியிருக்கின்றது.

ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசாநாயக்க, அரசை நான் ஏற்று நடத்துகிறேன் என்று சொல்லக் கூடியவர் அல்ல. ஆனால் வியாழனன்று அவர் பிரதமர் பதவியை ஏற்க முன்வந்தார். நான்கு நிபந்தனைகளை முன்வைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் பிரதமர் பதவியை ஏற்று இடைக்கால அரசொன்றை அமைக்க முன்வந்தார். இவ்விருவருமே, ஜனாதிபதி முறைமையை நீக்குவோம். அதற்கு முன் ஜனாதிபதியின் அதிகாரங்களை கத்தரிப்போம் என்பதாக கூறியிருந்தார்கள். எனினும் அன்றைய காலைப் பத்திரிகைகளில் அடுத்த பிரதமர் ரணிலா? என்ற கேள்வியுடன் முன்பக்கச் செய்திகள் வெளியாகி இருந்ததே இவ்விருவரும் இடைக்கால அரசை அமைப்பதற்கு முன்வந்தமைக்கான காரணம் என்றொரு தகவலும் விமர்சகர் வட்டாரத்தில் கிளம்பியிருந்தது.

முதல்நாள் ரணிலுடன் ஜனாதிபதி நீண்ட நேர பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தார். ரணில் விக்கிரமசிங்க எவ்வாறான நிபந்தனைகளை விதித்திருந்தார் என்பது தெரியவரவில்லை. குழப்பத்திலும் ஊரடங்கிலும் சிக்கிக் கிடக்கும் நாட்டை மீட்டெடுத்தால்தான் மறுபடியும் நாடு இயங்கும். அயல் நாடுகளின் நம்பிக்கையைப் பெறும். தொடர்ச்சியான இயக்கத்துக்கும் ஒரு பொது இலக்கை நோக்கி நகர்வதற்கும் வழி கிடைக்கும் என்ற எண்ணத்திலேயே, அதற்கு பொருத்தமானவராக இருப்பார் என்ற நம்பிக்கையில் ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியிருக்கக் கூடும்.

இதேசமயம் பிரதமர் ரணில் அமைக்கவுள்ள அரசு இடைக்கால அரசா அல்லது பொதுஜன பெரமுன அரசின் தொடர்ச்சியா என்பதை அவர் தான் தெளிவுபடுத்த வேண்டும். எவ்வாறாயினும், பாராளுமன்றத்தில் அங்கும் வகிக்கும் திறமைசாலிகளான உறுப்பினர்களை அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களை அமைச்சர்களாக நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. அவ்வாறு நியமனம் செய்வதை பெரும்பாலும் கட்சிகள், இத் தருணத்தில் ஆட்சேபிக்கவும் போவதில்லை. இங்கே சுமந்திரன் அமைச்சராவாரா? என்றொரு கேள்வி இருக்கிறது. அவ்வாறு நிகழ்ந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. அது நியாயமான தெரிவாகவும் இருக்கும்.

இன்று நமக்குத் தேவை ஒரு தேர்தல் அல்ல. அது 25 முதல் 30 பில்லியன் ரூபா செலவை ஏற்படுத்தக் கூடியது. இரண்டு தின தொடர் ஊடரங்கின் பின்னர் நாடு திறக்கப் பட்டதும் வீதிகளில் பொருட்களை வாங்க மக்கள் முண்டியடிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட போதும் வீதிகள் வெறிச்சோடியே காணப்பட்டன. எரிவாயு விநியோக நிலையங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும்தான் கூட்டம் கூடி நின்றது. எனவே இன்றைய உடனடித்தேவை ஒரு மக்கள் அரசை நிறுவுவதே. அப்படி ஒரு அரசை நிறுவுவதற்கு பொருத்தமான ஒரு தலைவராகத்தான் ரணில் விக்கிரமசிங்க திகழ்கிறார்.



**தமிழர் தரப்பு பச்சை விளக்கைக் காட்ட வேண்டிய தருணம் இது, நாங்கள் பூட்சுகளால் மிதிக்கப்பட்டபோது நீங்கள் இசை நிகழ்ச்சிகளில் மூழ்கிக் கிடந்தீர்களே, இப்போது படுங்கள் பாடு என்ற பழி தீர்க்கும் எண்ணத்துக்கு இது நேரமல்ல.**

ஐ.தே.க. வின் ஒரே பிரதிநிதி அவர். அவருடன் வேறு யாருமில்லை. தனியொரு நபராக, தேசிய பட்டியல் ஊடாக உள்ளே வந்து அவரால் பிரதமராகவும் முடிந்திருக்கிறது என்பதே இந்த நாடு இதற்கு முன் கண்டிராத ஒரு சாதனைதானே! அவரது பொருளாதார அறிவு, அரசியல் அனுபவம், உலக நாடுகளுடனான அவரது மேம்பட்ட தொடர்புகள் என்பன, அவர் மீதான விமர்சனங்களுக்கு அப்பால், அவரை நேரத்துக்கு பொருத்தமான பிரதமர் என்பதையே அழுத்தமாக சுட்டி நிற்கின்றன.

எந்த நேரத்தில் எது பொருத்தமோ அந்த நேரத்தில் அதை செய்து முடிப்பதுதான் அரசியல் இராஜதந்திரம். செய்து முடிப்பவராகவும் இருக்க வேண்டும் தன் மார்பில்; பாயாதவராகவும் இருக்க வேண்டும் என்பது ஒரு அரசியல் கணக்கு.

போர்த் தந்திரங்களில் சிறந்த மோஷேதயான் எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தபோது இஸ்ரேலில் யுத்த மேகங்கள் சூழ்ந்தன. எகிப்திய அதிபர் கமால் அப்துல் நாஸர் தலைமையில் அரபு நாடுகள் இஸ்ரேலை உலக வரைபடத்தில் இருந்தே அழிக்கப் போவதாக சூளுரைத்து நின்றபோது இஸ்ரேலின் அன்றைய ஆளும் கட்சி, பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்குமாறு மோஷேதயானை அழைத்தது. அவர் ஒப்புக் கொண்டார், கட்சி அரசியல் பேதங்களை ஒதுக்கி ஒருபுறம் வைத்து விட்டு இப்போது முக்கியம் தேசிய நலன். முதலில் நாடொன்றிருக்க வேண்டாமா அரசியல் செய்தற்கு!

மோஷேதயான் பாதுகாப்பு அமைச்சரானார். புகழ்பெற்ற ஆறுநாள் அரபு இஸ்ரேல் யுத்தம் 1966 இல் வெடித்தது. ஆறாவது நாள் முடிந்தபோது தன்னிலும் பார்க்க இரண்டு மடங்கு பிரதேசத்தை இஸ்ரவேல் கைப்பற்றி சுயஸ்கால்வாய்க் கரையை தொட்டிருந்தது!

**தனியொரு நபராக, தேசிய பட்டியல் ஊடாக உள்ளே வந்து அவரால் பிரதமராகவும் முடிந்திருக்கிறது என்பதே இந்த நாடு இதற்கு முன் கண்டிராத ஒரு சாதனைதானே! அவரது பொருளாதார அறிவு, அரசியல் அனுபவம், உலக நாடுகளுடனான அவரது மேம்பட்ட தொடர்புகள் என்பன, அவர் மீதான விமர்சனங்களுக்கு அப்பால், அவரை நேரத்துக்கு பொருத்தமான பிரதமர் என்பதையே அழுத்தமாக சுட்டி நிற்கின்றன.**

இலங்கையைச் சுற்றி எந்த போர் மேகமும் இல்லை. ஆனால் அதற்கு ஒப்பான பொருளாதார சீரழிவில் நாம் நிற்கிறோம். நமக்கு இப்போது தேவை மோஷேதயானைப் போன்ற ஒருவர், இலங்கையை இச் சீரழிவில் இருந்து மீட்பதற்கு. ரணில் விக்கிரமசிங்கவை பல்வேறு காரணங்களுக்காக தூற்றுவோர், பரிகசிப்போரும் கூட, அவர் செய்து முடிக்கக் கூடியவர் என்ற கருத்தில் உடன்படவே செய்வார்கள்.

எந்தவொரு கட்சி ஆதரவுக்கான வாய்ப்புமின்றி தனி மனிதராக பாராளுமன்றத்தில் வீற்றிருப்பவரைத்தான் அவரை எதிர்ப்போரும் எதிர்பார்த்திருக்கிறார்கள், செய்து முடிப்பாரென்று. கடந்த ஒரு மாத காலமாக தள்ளி நின்று வேடிக்கை பார்த்துவந்த தமிழர் தரப்பும், ரணில் தலைமையிலான புதிய அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என அறிவித்திருப்பது ஒரு மாற்றுச் சிந்தனையாகவே கருதப்பட வேண்டும். டி.எஸ்.சேனநாயக்க அரசில் ஜி.ஜி.பொன்னம்பலமும், அறுபதுகளில் டட்லி சேனநாயக்க அரசில் தமிழரசு கட்சியும் இணைந்து அமைச்சுப் பொறுப்புகளை ஏற்றதன் பின்னர் தேசிய அரசொன்றில் தமிழர் தரப்பு இணைந்து பொறுப்புகளை ஏற்றதேயில்லை.

சுமந்திரன் எம்.பி. ரணில் அரசியல் அமைச்சுப் பொறுப்பொன்றை ஏற்கலாம் என அரசல் புரசலாக பேச்சுகள் அரசியல் அரங்கில் அடிபடுகின்றன. தமிழ் தேசிய தரப்பு இதை அவசர அவசரமாக மறுக்க வேண்டியதில்லை. தேசிய நெருக்கடி நேரமொன்றில் எமது உரிமைப் பிரச்சினை விவகாரங்களையும் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. என்ன வியாக்கியானம் செய்வாரோ என்ற கவலையும் ஒரு புறம் வைத்துவிட்டு சிங்கள மக்களுக்கு ஒரு பச்சை விளக்கைக் காட்டுவதே பொருத்தமானதாக இருக்கும். பாராளுமன்ற சந்தி ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்வழியாக வந்த 'சமகி பலவேகய' உறுப்பினர்களான ஹரீன் பெர்ணான்டோ உட்பட சிலரை திருப்பி அனுப்பினார்கள். ஆனால் அவ்வழியாக வந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரை போகச் சொல்லி விட்டார்கள் என்ற ஒரு செய்தியைப் பார்த்தோம். தமிழர் பிரச்சினை அல்லது உரிமைகளை இனவெறிக் கண்ணோட்டத்துடன் பார்க்கும், அணுகும் நிலை, சிங்கள இளைஞர்கள் மத்தியில் பெருமளவில் மரபணு மாற்றம் பெற்றிருப்பதாக நிச்சயமாகவே கருதலாம்.

எனவே தமிழர் தரப்பு பச்சை விளக்கைக் காட்ட வேண்டிய தருணம் இது, நாங்கள் பூட்சுகளால் மிதிக்கப்பட்டபோது நீங்கள் இசை நிகழ்ச்சிகளில் மூழ்கிக் கிடந்தீர்களே, இப்போது படுங்கள் பாடு என்ற பழி தீர்க்கும் எண்ணத்துக்கு இது நேரமல்ல.

எந்த நிபந்தனையுமின்றி தனியாளாக, இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன்; அது என்னால் ஆகும் என்று ஒருவர் தன் அரசியல் எதிர்காலம் என்னவாகுமோ என்ற அச்சமின்றி முன்வந்திருக்கிறார். இது ஒரு சதி; ராஜபக்ஷமார்களைக் காப்பாற்றும் ஒரு முயற்சி என்பதெல்லாம் கட்சி அரசியல் பார்வைகள். நம்முடைய பிரச்சினை பொருளாதார சீர்குலைவு. கையில் பணமில்லாமை. நமக்கு பிராணனைப் போன்ற பொருட்களைக் கொள்வனவு செய்ய பணமில்லை. வீதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. பலரது பணப் பைகளும் அப்படித்தான். எதுவும் செய்யாவிட்டால் நாம் பட்டினி நிலை நோக்கியும் நகரலாம்.

எனவே புதிய பிரதமரின் பொருளாதார மீட்பு முயற்சிகளில் அனைத்து கட்சிகளும் பொது இலக்கு அடிப்படையில் ஒன்றிணைய வேண்டியது அவசியம். இது 'போஸ்மோர்டம்' செய்வதற்கான சந்தர்ப்பமல்ல. இவ் வகையில் வடக்கு கிழக்கு தமிழ்த் தரப்பு கட்சிகள் எத்தகைய சமிக்ஞைகளை விடுக்கவுள்ளன என்பது முக்கியம். இச் சமிக்ஞைகள் புரையோடிப்போன தமிழர் பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல முடிவு கிடைப்பதற்கான ஆதாரத் தளமாகவும் அமையலாம்.

இதேசமயம் முஸ்லிம் கட்சிகளும் ரணில் அரசின் நியாயமான திட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்க முடியும். இ.தொ.கா. புதிய அரசுக்கும் தன் ஆதரவை வழங்கியிருக்கிறது. எதிர்க்கட்சியில் இருந்து ஆதரவு வழங்குவதாக தமிழ் முற்போக்கு அணி தெரிவித்துள்ளது. பல கட்சிகளையும் சேர்ந்தவர்கள் பொது இலக்கின் – பொருளாதார சீரமைப்பு – அடிப்படையில் அமைச்சர் பொறுப்பேற்பது, புதிய சிந்தனை எமது அரசியலில் பிறந்திருக்கிறது என்பதற்கு கட்டியம் கூறுவதாக அமையும்.

ஈழத் தமிழர்களின் பணம் வெளிநாடுகளில் பில்லியன் பில்லியன்களாகக் கொட்டிக் கிடக்கின்றன. இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிடைக்குமானால் இப்பணத்தை இலங்கையில் முதலீடு செய்ய இவர்கள் தயாராகவே இருக்கிறார்கள். தேவை பச்சை விளக்கு சமிக்ஞைதான் என்றொரு கருத்து புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தினர் மத்தியில் உள்ளது.

புதிய பிரதமர் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஜி.எஸ்.டி. பிளஸ் சலுகைக்கு ஆபத்து வரலாம் என்ற நிலை காணப்படுவதால் ஜெனீவாவில் இருக்கும் நம்மவர்கள் வாயைப் பொத்திக் கொண்டிருக்க வேண்டும் என்றொரு கருத்தை புதிய பிரதமர் வெளியிட்டிருந்தார். அவரே பொறுப்புக்கு வந்திருப்பதால் பயப்படத்தேவையில்லை.

இது கை கொடுக்கும் நேரம்.

அருள் சத்தியநாதன் ...





ரொறன்ரொ நகர மேயர் மற்றும் நகர சபை அங்கத்தவர் ஆகியோர் ஸ்காபுறோவில் உள்ள சில தமிழர் வர்த்தக நிறுவனங்களுக்கு விஜயம் செய்தனர் . ரொறன்ரோ மாநகர மேயர் ஜோன் ரோரி மற்றும் ஸ்காபுறோ பார்க் வட்டாரத்தின் மாநகர அங்கத்தவர் திருமதி ஜெனிபர் ஆகியோர் ஸ்காபுறோவில் அமைந்துள்ள இரா சுப்பர் மார்க்கட், ரூஜ் பேக்கரி, ஏர்பன் சில்க்ஸ் அக்ஸயாஸ் புடவை மாளிகை ஆகியவற்றுக்கு நட்பான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். அவர்களை வரவேற்கும் வகையில் ' உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் பாரியார் சகிதம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.தொடர்ந்து வீடு விற்பனைத்துறை காப்புறுதித் துறை வர்த்தகப் பிரமுகர் ஜெயா நடராஜா மற்றும் யுகம் வானொலி அதிபர் கணபதி ரவீந்திரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்து வரவேற்றனர். தொடர்ந்து இந்தக் குழுவினர் மேற்படி நான்கு வர்த்தக நிறுவனங்களுக்கும் விஜயம் செய்தனர். அன்றைய தினம் ரொறன்ரோ மாநகர மேயர் ஜோன் ரோரி மற்றும் ஸ்காபுறொ பார்க் வட்டாரத்தின் மாநகர அங்கத்தவர் திருமதி ஜெனிபர் ஆகியோர் மிகவும் உற்சாகமாக அனைத்து தமிழ் பேசும் மக்களோடும் நேசத்துடன் உரையாடி மகிழ்ந்தனர்.

# நாட்டின் நெருக்கடி வேளையில் நம்பிக்கை மிகுந்த ஒரேயொரு எதிர்பார்ப்பு பிரதமர் ரணில்!

**இலங்கை பொருளாதார நெருக்கடி மற்றும் ஸ்திரமற்ற அரசியல் நிலைமைகளால் பல்வேறு சவால்களை எதிர்கொண்டிருக்கும் சூழ்நிலையில், புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார். இவர் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றதைத் தொடர்ந்து ஆறாவது தடவையாகவும் பிரதமர் பதவியை ஏற்ற அரசியல் தலைவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.**

கடந்த திங்கட்கிழமை முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து ஒட்டுமொத்த அமைச்சரவையும் விலகியது. இவ்வாறான நிலையில் சுமார் 72 மணித்தியாலங்கள் இலங்கையில் எந்தவொரு அரசாங்கமும் இல்லாது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவருடன் மாத்திரம் காணப்பட்டது.

நாட்டின் அரசியல் நெருக்கடியைத் தீர்க்கும் பொருட்டு பிரதமர் பதவியை ஏற்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சித் தரப்பினருக்கு ஜனாதிபதி பல தடவை அழைப்பு விடுத்திருந்தார். இருந்தபோதும் எதிர்க்கட்சித் தலைவரிடமிருந்து உரிய பதில் வழங்கப்படவில்லை. மாறாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகிச் சென்ற பின்னரே பிரதமர் பதவியை ஏற்க முடியும் என்ற கடுமையான நிபந்தனை விதிக்கப்பட்டது.

மறுபக்கத்தில், மற்றுமொரு எதிர்க்கட்சியான தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும், ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்கவும் பிரதமர் பதவியை ஏற்பதற்கு ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தார்.

எனினும், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அரசாங்கத்திலிருந்து விலகிய 11 கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட சுயாதீனக் குழு டலஸ் அழகப்பெரும, நிமல் சிறிபால.டி.சில்வா, விஜயதாச ராஜபக்ஷ ஆகிய மூவரில் ஒருவரைப் பிரதமராக நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தது. இருந்தபோதும் கடந்த புதன்கிழமை மாலை ரணில் விக்கிரமசிங்கவை அழைத்திருந்த ஜனாதிபதி, அவரைப் பிரதமர் பதவியை ஏற்குமாறு கோரிக்கை விடுத்தார்.



இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க கடந்த வியாழக்கிழமை பிரதமராகப் பதவியேற்றார். ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்பதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்ததுடன், குறுகிய காலத்தின் பின்னர் ஜனாதிபதி பதவி விலகுவார் என்ற அடிப்படையில் பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளத் தயார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இருந்தபோதும் பிரதமராக ரணிலை நியமிக்க முடிவு எடுத்த பின்னர் காலதாமதாகவே அக்கடிதம் கிடைத்ததாகவும், வேண்டுமாயின் அமைச்சரவைக்குப் பிரதிநிதிகளை முன்மொழியுமாறும் ஜனாதிபதியிடமிருந்து எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க சில மாதங்களுக்கு முன்னரே தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வந்தார். உடனடியாக சர்வதேச நாணய நிதியத்திடம் சென்று தீர்வொன்றைப் பெறாவிட்டால் மோசமான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும் என்பதையும் அவர் கணித்திருந்தார்.

இருந்தபோதும் முன்னைய அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்காமையால் தற்பொழுது மோசமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பாரிய சவால்கள் காணப்படுகின்றன. நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே தான் இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



ரணில் விக்கிரமசிங்கவுக்கு சர்வதேச நாடுகளுடன் காணப்படும் தொடர்புகள் குறித்து நாம் அனைவரும் அறிவோம். நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பி நிலையான ஸ்தானத்துக்குக் கொண்டுவர அவருடைய ஒத்துழைப்பு நிச்சயம் அவசியம் என்பது கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

குறிப்பாக மக்கள் எதிர்கொள்ளும் எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு, மின்சாரத் தடை போன்ற உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இதற்குத் தேவையான அந்நியச் செலாவணியைப் பெறுவதற்கான வழிகள் குறித்து ரணில் விக்கிரமசிங்க மீது மக்களுக்கு நம்பிக்கை காணப்படுகிறது.

**சர்வதேசத்துடன் நெருங்கிய நட்புறவு கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க என்பதால், அவரது தலைமையின் கீழ் இலங்கையின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை விரைவில் மீளக்கட்டியெழுப்ப முடியும் என்பதே பல தரப்பினரதும் உறுதியான நம்பிக்கை**

பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ரணில் விக்கிரமசிங்க இந்திய உயர்ஸ்தானிகர், சீனத் தூதுவர் மற்றும் ஜப்பான் தூதுவர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார். இலங்கைக்குத் தொடர்ந்தும் உதவிகளை வழங்குவதற்கு அந்நாடுகள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இது மாத்திரமன்றி பிரதமர் பதவியேற்று ஒரு சில நிமிடங்களில் டுவிட்டர் மூலம் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்திருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், புதிய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படத் தயார் என்ற செய்தியையும் தெரிவித்திருந்தார். இவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்துடன் கொண்டிருக்கும் நல்லுறவுகளின் அடிப்படையில் நாட்டிற்குப் பல்வேறு உதவிகளைக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை பரவலாகக் காணப்படுகிறது.

இருந்தபோதும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்து கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் எதுவும் இணக்கம் தெரிவிக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சுயாதீனக் குழு உள்ளிட்ட கட்சிகள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கப் போவதில்லையென்று தெரிவித்துள்ளன.

மறுபக்கத்தில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்குமாறு பிரதான எதிர்க்கட்சி பிரதமருக்கு சவால் விடுத்துள்ளது. எனினும், அரசாங்கத்தில் பங்கெடுக்காவிட்டாலும் கொண்டு வரப்படும் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு வழங்கப்படும் என சுயாதீனக் குழு குறிப்பிட்டுள்ளது.



இந்த அடிப்படையில் பார்க்கும் போது ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தாலும் பொதுஜன பெரமுன உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையுடனேயே செயற்பட வேண்டிய நிலை அவருக்குக் காணப்படும்.

இது இவ்விதமிருக்க, கடந்த திங்கட்கிழமை அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர், யுவதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாறான சவால்களுக்கு முகக்கொடுத்து உடனடியான தீர்வுகளை முன்வைக்க வேண்டிய பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமையும் அரசாங்கத்துக்குக் காணப்படுகிறது.

**பி.ஹர்ஷன்...**

---

# இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவின் தேசியக் கொள்கையில் மாற்றமில்லை!

**அயல்நாட்டுடன் எக்காலமும் இராஜதந்திர உறவு நெருக்கமாகப் பேணப்பட வேண்டுமென்பதற்கு இலங்கை–இந்திய நாடுகளுக்கிடையிலான நல்லுறவு நல்லதொரு முன்னுதாரணமாகும். இலங்கையும் இந்தியாவும் தங்களுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளை நெருக்கமாகப் பேணி வந்ததன் காரணமாகவே எமது நாட்டின் இன்றைய நெருக்கடி வேளையில் இந்தியா உடனடியாக உதவிக்கரம் நீட்டியது.**

இலங்கையில் எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் இலங்கை தொடர்பாக இந்தியாவின் தேசியக் கொள்கையில் மாற்றம் இருந்ததில்லை. இலங்கை தனது அயல்நாடு என்பது மட்டுமே இந்தியாவின் அசைக்க முடியாத கொள்கையாக இருந்து வருகின்றது. இலங்கையின் அரசியல் நெருக்கடி பற்றியோ அரசியல் மாற்றங்கள் பற்றியோ சிந்திக்காமல் இந்தியா தனது உதவிகளை இலங்கைக்கு தொடர்ந்தும் வழங்கி வருகின்றது.

இந்நிலையில் இலங்கையின் இன்றைய நிலைமை தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் சில முக்கிய கருத்துகளை சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தது. பிரதமராகப் பதவி வகித்த மஹிந்த ராஜபக்ஷவின் பதவி விலகல் குறித்தும், இலங்கையில் நிலவிய வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் இந்திய மத்திய அரசு முதன் முறையாக இக்கருத்துகளைப் பகிர்ந்து கொண்டுள்ளது.

'இலங்கை மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்தியா முடிவு எடுக்கும்' என்று இந்தியா கூறியுள்ளது. இது தொடர்பாக இந்திய மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கைக்கு இந்தியா தொடர்ந்து பொருளாதார உதவிகளைச் செய்யும் என்றும் அதேநேரம் அரசியல் ரீதியிலான ஆதரவை வழங்காது என்றும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறுகையில், "அண்டை நாடான இலங்கையுடன் இந்தியா நெருக்கமான வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளது. இலங்கையின் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார ரீதியிலான மீட்டெடுப்புக்கு இந்தியா முழுமையாக ஆதரவளிக்கிறது. இலங்கை மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி தற்போது நிலவுகின்றது. இலங்கையின் வரலாற்றில் முன்னொரு போதுமில்லாதவாறு தற்போது பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது. கொவிட் தொற்று காரணமாக நாட்டின் வருமான மூலங்கள் யாவும் முடங்கிப் போயிருந்ததன் காரணமாக ஏற்பட்டுள்ளதே இந்த நிலைமையாகும். இந்த நிலைமையில் இருந்து நாடு மீண்டெழ வேண்டியது அவசியம்.

ஆனால் அதற்கு சில காலம் தேவை. அதுவரை ஏனைய நாடுகளிடம் பொருளாதார மீட்சிக்கான உதவி கோருவதில் தவறில்லை. இந்தியாவிடம் மாத்திரம் இலங்கை உதவி கோரவில்லை. சீனா உட்பட பல நாடுகளிடமும் இலங்கை உதவி கோரியிருந்தது. ஆனாலும் பிரதிபலன் கருதாது உடனடியாக உதவிக்கரம் நீட்டிய நாடு இந்தியா ஆகும். இந்த உதவியானது உண்மையிலேயே பாராட்டத்தக்கது. இந்தியாவின் உதவி குறித்து இலங்கையின் பிரபலங்கள் பலரும் தங்களது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்திருந்தனர்.

**பொருளாதார ரீதியில் உதவிகள் தொடரும்; அரசியல் விடயங்களில் தலையீடுகள் இல்லை**

இலங்கைக்கு நேரடியாக உதவிகள் வழங்குவதுடன் மாத்திரம் இந்தியா நின்றுவிடவில்லை. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைப் பெற்றுக் கொடுப்பதிலும் இந்தியா விசேட கவனம் செலுத்தியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் இன்றைய துன்பத்தை எவ்வாறாயினும் நீக்கிவிட வேண்டுமென்பது மாத்திரமே இந்தியாவின் எண்ணமாக இருந்து வருகின்றது.

டொலர் பற்றாக்குறை காரணமாக இலங்கையில் தற்போது மருந்துப் பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. தனியார் வைத்தியசாலைகளில் மருந்துகள் பலவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன. இலங்கையில் மருந்துப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையைத் தீர்த்து வைப்பதிலும் இந்தியா சமீபத்தில் உதவி வழங்கியிருந்தது. இந்தியாவிடமிருந்து இது போன்ற உதவிகள் எதிர்காலத்திலும் தொடருமென்று தெரிகின்றது.

ஆசிய பிராந்தியத்தில் இந்தியா மாபெரும் தேசம் ஆகும். இந்தியா பொருளாதார வல்லரசாகவும், ஆயுதபலத்தில் வல்லரசாகவும் திகழ்கின்றது.

(15ஆம் பக்கம் பார்க்க)

**சாரங்கன்...**





**இலங்கையில் அரசியல் நெருக்கடி நிலவுகின்ற போதிலும், அயல் தேசத்தின் மனிதநேய உதவிகள் என்றும் தொடரும்**

# கலவர பூமியாக மாறிய கொழும்பு!

**வார இறுதி அரசியல் குறிப்பேடு**

சம்யுக்தன்

**இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் ஸ்திரமற்ற அரசியல் சூழல் என்பவற்றால் நாடு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பதுடன், நாட்டின் அபிவிருத்தியானது பல வருடங்கள் பின்னோக்கித் தள்ளிச் செல்லப்பட்டுள்ளது. அரசியல் நோக்கத்தைக் கருத்திற் கொண்டு எடுக்கப்பட்ட சில தீர்மானங்களும், அரசியல் சக்திகள் தமது பலத்தை நிரூபிக்கின்றோம் என்ற போர்வையில் மக்களை உசுப்பேற்றும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளும் இந்தக் குழப்பகரமான சூழ்நிலைக்கு எண்ணெய் ஊற்றுவதாக அமைந்து விட்டன.**



கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அரசியல் அரசியல் கூட்டம் நாட்டின் பதற்றமான நிலைமையை மோசமடையச் செய்ததுடன், நிச்சயமற்ற சூழலொன்றுக்கு வழிவகுத்திருந்தது என்பதே உண்மை. புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ள போதிலும், நாட்டில் நிலவி வருகின்ற அரசியல் நெருக்கடியானது இன்னும் முடிவுக்கு வரவில்லையென்பதை மறுக்க முடியாதுள்ளது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு பல்வேறு தரப்புகளிலிருந்தும் கோரிக்கை விடுக்கப்பட்டு வந்த நிலையில், அவர் கடந்த திங்கட்கிழமை காலை தனது பதவி விலகல் முடிவை அறிவிப்பார் என அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். இது தொடர்பான ஊகங்கள் நாடெங்கும் பரவியிருந்தன. ஆனால் அவர் பதவி விலகலை அறிவித்தாலும், அது பாரிய வன்முறையொன்றுக்குப் பின்னரான அறிவிப்பாக அமைந்தமை துரதிர்ஷ்டமானதாகும்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இருந்த அரசியல்வாதிகள் தமக்கு ஆதரவாகவும் மக்கள் இருக்கின்றார்கள் என்பதைக் காண்பிப்பதற்காக கையாண்ட முறையானது நிலைமைகளைச் சிக்கலாக்கி விட்டது என்றே கூற வேண்டும்.

கடந்த திங்கட்கிழமை மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறி அவருக்கு விசுவாசமான அரசியல்வாதிகள் மேற்கொண்ட முயற்சியே பெரும் களேபரத்தில் முடிந்தது. அந்த அரசியல்வாதிகளில் முன்னாள் அமைச்சர்கள் மாத்திரமன்றி உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உட்படப் பலரும் அடங்கியிருந்தனர்.

அவர்கள் தமது பகுதிகளிலிருந்து ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு கொழும்புக்கு வந்திருந்தனர். தனியார் பஸ்கள், இலங்கை போக்குவரத்துக்குச் சொந்தமான பஸ்கள் எனப் பல வாகனங்களில் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டிருந்த நூற்றுக்கணக்கானவர்கள் முதலில் அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



**இரு தரப்பு குழுவினர் ஆக்ரோஷமான மோதல்; பேருந்துகள், வீடுகள் தீக்கிரை; கங்காராம பேர வாவிக்குள் தள்ளிவிடப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள்; ஆர்ப்பாட்டக்காரர்களால் பஸ்கள் வழிமறிக்கப்பட்டு மஹிந்த ஆதரவு தரப்பினர் மீது தாக்குதல்கள்!**

## அலரி மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தையடுத்து உருவெடுத்த கட்டுப்படுத்த முடியாத உச்சக்கட்ட கலவரங்கள்!



அதேசமயம் அமைதியான முறையில் நடத்தப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களைக் குழப்பும் நோக்கில் குண்டர்களும், பாதாள உலகக் குழுவினரும் கொழும்புக்கு அழைத்து வரப்படவிருப்பதாக முன்னைய தினமே ஊடகவியலாளர்கள் சிலர் எச்சரித்திருந்தனர். இவ்வாறான பின்னணியில் கடந்த திங்கட்கிழமை காலை கொழும்புக்கு அழைத்து வரப்பட்ட மஹிந்த ஆதரவாளர்கள் ஆரம்பம் முதலே ஆக்ரோஷமாக மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருந்தனர்.

அலரி மாளிகையில் அரங்கம் நிறைந்த கூட்டத்தின் மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினர். அங்கு உரையாற்றிய ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ போன்றவர்கள் அங்கிருந்த கூட்டத்தவர்களை உசுப்பேற்றும் வகையில் உரையாற்றியதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. அதுவே அன்றைய தினம் வன்முறைக்கு வழிவகுத்து விட்டதாக தகவல்கள் வந்துள்ளன.

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முகாமிட்டிருந்த இடத்தை நோக்கிச் செல்வதற்கான நேரம் இதுவே என்று ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ அங்கு கூறியிருந்ததாக தெரியவந்துள்ளது.

இதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ அங்கு உரையாற்றுகையில், எவ்வாறான சவால்களையும் தான் எதிர்கொள்ளத் தயார் என்றும், மக்களுக்காக எந்த விட்டுக்கொடுப்புக்களையும் செய்ய முடியும் என்றும் கூறியிருந்தார்.

இவர்கள் மாத்திரமன்றி இங்கு உரையாற்றிய பவித்ரா வன்னியாராச்சி போன்றவர்களும் தமது ஆதரவாளர்களை உசுப்பேற்றும் விதத்தில் பேசியதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

கூட்டம் முடிவடைந்ததும் ஆக்ரோஷமாக வெளிக்கிளம்பிய மஹிந்த ஆதரவார்கள், அலரிமாளிகைக்கு முன்னால் கூடாரம் அமைத்து அமைதியான முறையில் போராடி வந்தவர்கள் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தினர். இரும்புக் கம்பிகள், மரக்கட்டைகளால் அங்கிருந்தவர்களைத் தாக்கியதுடன், கூடாரங்கள் உள்ளிட்ட அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

இவற்றை அடித்து நொருக்கி விட்டு காலி முகத்திடல் நோக்கி அந்தக் குழு முன்னேறியது. இவர்களைத் தடுப்பதற்குப் பொலிஸார் கடுமையான முயற்சிகள் எதனையும் முன்னெடுக்கவில்லையென்பது தான் அங்கு பலராலும் அவதானிக்கப்பட்ட விடயமாகும்.

போராட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்களைத் தடுக்க பொலிஸார் எடுத்த நடவடிக்கைகளுக்கும், வன்முறைக் கும்பலைத் தடுப்பதற்குப் பொலிஸார் மேற்கொண்டு முயற்சிகளுக்கும் இடையில் பாரிய வித்தியாசத்தைக் காண முடிந்ததாக சம்பவத்தை நேரில் கண்டோர் கூறுகின்றனர்.

ஆக்ரோஷமாக முன்னேறிச் சென்ற அவர்கள், காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களையும், அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களையும் சரிமாரியாகத் தாக்கினர். சில நிமிட நேரங்களில் காலிமுகத்திடல் கலவர பூமியாக மாறியது. பொலிஸார் மிகவும் தாமதாக நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டதுடன், ஒருசில கண்ணீர் புகைக்குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர். இந்தத் தாக்குதல்களால் எதிர்ப்பை வெளியிட்டு வந்த இளைஞர், யுவதிகள் காயமடைந்தனர். போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து கேள்வியுற்ற ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அக்கட்சியின் பிரமுகர்கள் உடனடியாக காலிமுகத்திடலுக்குச் சென்றனர். சிறிது நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அங்கு வந்தார். இருந்த போதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சஜித்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அவரைத் தடிகளால் தாக்குவதற்கு முயற்சித்தனர். இதனையடுத்து பாதுகாப்பு அதிகாரிகள் அவரைப் பாதுகாப்பாக அங்கிருந்த வெளியேற்றினர்.



இதற்கிடையில் தாக்குதல்கள் குறித்து கேள்வியுற்று புறக்கோட்டை, கம்பனிவீதி மற்றும் கொள்ளுப்பிட்டி பகுதிகளில் பணியாற்றிக் கொண்டிருந்த இளைஞர்கள் உள்ளிட்ட பலர் காலிமுகத்திடலுக்கு ஓடி வந்ததுடன், தாக்குதல் நடத்திய மஹிந்த ஆதரவாளர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தினர். தப்பியோடிய மஹிந்த ஆதரவாளர்கள் இடைவழியில் ஆங்காங்கே மறித்து தாக்கப்பட்டனர்.

பெரும் எண்ணிக்கையானவர்கள் கங்காராமவில் அமைந்துள்ள பேரை வாவிக்குள் தள்ளி விடப்பட்டனர். 'நிராயுதபாணிகளாக அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்த எமது இளைஞர்கள் மீது ஏன் தாக்குதல் நடத்தினீர்கள்' எனக் கேட்டு அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதுடன், அவர்கள் வாவியிலிருந்து வெளியேறுவதற்கும் இடமளிக்கப்படவில்லை. அன்று இரவு 9 மணிக்கு மேலாகவும் அவர்கள் வாவிக்குள்ளேயே தவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மறுபக்கத்தில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவிக்கும் தரப்பினரை ஏற்றி வந்த பேருந்துகள் பல கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் தாக்குதல்களுக்கு உள்ளாகின. இரண்டு பேருந்துகளும், மஹிந்த தரப்பினருக்கு ஆதரவான அரசியல்வாதிகள் சிலரின் வாகனங்களும் பேரை வாவிக்குள் தள்ளி விடப்பட்டன. 20 இற்கும் அதிகமான பேருந்துகள் அடித்து நொருக்கப்பட்டு சில தீயிடப்பட்டிருந்தன.

போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின் பிரதிபலனாகவே பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன. அது மாத்திரமன்றி கொழும்பிலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் சென்ற பேருந்துகள் மற்றும் வாகனங்கள் வீதிகளில் மறிக்கப்பட்டு சாதாரண பொதுமக்களால் சோதனையிடப்பட்டிருந்தன.

நிட்டம்புவ பிரதேசத்தில் இவ்வாறு சோதனையிடப்பட்ட வாகனமொன்றில் பொலனறுவை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரல காணப்பட்டார். இவருடைய வாகனத்தின் மீது மக்கள் தாக்குதல் நடத்தியிருந்தனர். இவர்களிடமிருந்து தப்பிச் செல்வதற்காக பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு அதிகாரி துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தார். இதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினரும் அவருடைய பாதுகாப்பு அதிகாரியும் உயிரிழந்திருந்தனர்.

இது இவ்விதமிருக்க, அன்றைய தினம் மாலையும், இரவும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான மற்றும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருடைய வீடுகளை கும்பல்கள் தீயிட்டுக் கொழுத்தியிருந்தன. பல வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலாகியிருந்தன. ஒரு சில மணி நேரத்தில் நடத்தப்பட்ட இந்த வன்முறைச் சம்பவங்கள் ஏற்கனவே திட்டமிட்டப்பட்டவையா என்ற சந்தேகம் வலுவாகக் காணப்படுகிறது.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலினால் ஆத்திரமடைந்தவர்கள் தாக்குதல் நடத்தியவர்கள் மீது பதில் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)



**வன்முறைக்கு வழிவகுத்த காரணிகள் எவை? அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தோரை ஆத்திரமூட்டிய சம்பவங்கள் எவை?**

# ரணில் நிறுவும் புதிய அரசு

## இவர்கள் என்ன சொல்கிறார்கள்?



நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு அதனை மையப்படுத்தியதாக அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு. மக்கள் அன்றாடம் தங்களுடைய தேவைகளுக்காக பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக நீண்ட வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை. நாடு முழுவதும் போராட்டங்கள். இந்த போராட்டத்தின் ஒரு கட்டமாக கடந்த திங்கட்கிழமை பிரதமர் மகிந்த ராஜபக்ச பதவிவிலகல். அதன் பின்னர் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகள். தொடரும் போராட்டங்கள். இப்படி பல பிரச்சினைகளுக்கு மத்தியில் மீண்டும் இலங்கையின் 26வது பிரதமராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க , ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவினால் கடந்த வியாழக்கிழமை (12) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான ஒரு நிலைமையில் மலையகக் கட்சிகள் தங்களுடைய அரசியல் நிலைப்பாடுகளை எவ்வாறு கையாளப்போகின்றார்கள். புதிய பிரதமரின் சாதக பாதக தன்மைகள் என்ன? இந்த நியமனத்தை மலையக அரசியல் தலைவர்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள்? இதனை அறிந்து கொள்ளும் முகமாக அவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது வழங்கிய கருத்துக்கள்.

### இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தன்னுடைய டுவிட்டர் பதிவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தன்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதுடன் எது எப்படியாக இருந்தாலும் மிகவும் அவசரமாக தீர்த்து வைக்க வேண்டிய முக்கிய பிரச்சினைகளை தாமதமின்றி தீர்க்கவும் தாங்கள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற வகையில் தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பை பிரதமருக்கு வழங்குவதாகவும் பிரதமருடைய முயற்சிகளுக்கு ஒத்துழைத்து இந்நாட்டை கட்டியெழுப்புவதற்கு தங்களுடைய முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.



ஜீவன் தொண்டமான்

### இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி

இன்றைய நிலையில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மக்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே அவர்களுடைய பிரச்சினைக்கு உடனடியாக ஒரு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். மக்கள் வரிசைகளில் நிற்பதை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அவர்களுடைய பசி பட்டினியை இல்லாமல் செய்த ஒரளவிற்கு நிம்மதியாக வாழ்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலாளருமான சுப்பையா சதாசிவம் குறிப்பிடுகின்றார்.



எஸ்.சதாசிவம்

மேலும் இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் எங்களுடைய நாட்டு பொருளாதாரத்தின் மூலமாக அதனை செய்ய முடியாது. வெளிநாட்டு உதவிகளை பெறவேண்டும். அந்த உதவிகளை பெற்றுக் கொள்ளக்கூடிய அனுபவம் மிக்கவர் தான் இந்த பிரதமர். பலர் பல குற்றச்சாட்டுகளை முன்வைக்கலாம். அதற்கு ஒரு கமிசன் அமைத்து அதனை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கலாம். ஆனால் மக்களுடைய பசியைத் தீர்க்க வேண்டும். எனவே இந்த நேரத்தில் அனுபவமும் வெளிநாட்டு தொடர்புகளை கொண்ட ஒருவரை நியமிப்பதே சிறந்தது. அந்த வகையில் இந்த நியமனம் பொறுத்தமானது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் தீரமானங்களை எடுக்க வேண்டும்.

### வடிவேல் புத்திரசிகாமணி
### முன்னாள் அமைச்சர்

நாடு எதிர்நோக்கியுள்ள இக்கட்டான நிலையில் இது ஒரு சரியான தெரிவு. மேலும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் சாணக்கியம் வெளிப்படுகின்றது. தனி ஒரு மனிதனாக பாராளுமன்றத்திற்கு வருகை தந்து பிரதமராகியிருக்கிறார். மேலும் கடந்த காலங்களில் இந்த பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்பட்டவுடன் அவர் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் அனைத்தும் சிந்தித்துப் பார்க்க வேண்டியவைகளாகவே இருக்கின்றது.நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினை உட்பட ஏனைய பிரச்சினைகளுக்கு அவரால் மாத்திரமே தீர்வை பெற்றுக் கொடுக்க முடியும்.

பிரதமர் பதவியேற்ற சில நிமிடங்களில் அவருக்கு சர்வதேச ரீதியாக பல தரப்பினரிடம் இருந்தும் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் சர்வதேசத்துடன் இவர் கொண்டுள்ள தொடர்புகளை தெளிவாக நாம் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளை குறிப்பிடலாம். அதற்கு காரணம் அவர் ஜனநாயக நாடுகளுடன் கொண்டுள்ள மிகவும் நெருக்கமான உறவு. இந்த நாடுகளின் ஜனநாயகத்தை நிலைநாட்டும் அமைப்புகளின் தலைவராகவும் பிரதித் தலைவராகவும் அவர் செயற்பட்டுள்ளார். இதன் காரணமாக சர்வதேசம் அவரை மதிக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் அனைவரும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமே தவிர. அவரை விமர்சனம் செய்வதால் எதுவும் நடக்காது. எனவே அடுத்து வருகின்ற ஆறு மாதத்தில் பிரச்சினைகளுக்கு ஒரளவு தீர்வுகண்டு ஒரு தேர்தலை நோக்கி செல்லலாம்.

### மலையக மக்கள் முன்னணி

எங்களை பொறுத்தளவில் நாங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணியாக தொடர்ந்தும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் செயற்படுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். ஜனாதிபதி இவரை எவ்வாறு பிரதமராக தெரிவு செய்தார் என்பது ஒரு பெரும் கேள்விக்குறியே? காரணம் பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தை கொண்டவர். மக்களால் கடந்த தேர்தலில் நிராகரிக்கப்பட்டவர். அவருடைய கட்சியும் நிராகரிக்கப்பட்டது.

எனவே இவரை எவ்வாறு பிரதமராக தெரிவு செய்ய முடியும்? ஜனாதிபதி அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பாராளுமன்றத்தில் செல்வாக்கு பெற்ற ஒருவரை பிரதமராக தான் நியமிக்கவுள்ளதாக குறிப்பிடுகின்றார். அதற்கு முன்பு ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றார். ரணில் பிரதமராக தெரிவு செய்யப்பட்டு ஒரு சில நிமிடங்களில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ச தனது டிவிட்டரில் வாழ்த்து தெரிவிக்கின்றார். எனவே இதனை எல்லாம் பார்க்கின்ற பொழுது ஏதோ ஒரு இடத்தில் ஒன்றுக்கொன்று தொடர்பு இருப்பதை காண முடிகின்றது.



வே.இராதாகிருஷ்ணன்

எனவே இவருடைய தெரிவானது நாட்டு மக்களுக்கு நன்மைபயக்காது. ராஜபக்ச குடும்பத்திற்கு நன்மை பயக்கும். அதில் எந்த சந்தேகமும் இல்லை. அதன் காரணமாகவே இவரை ஜனாதிபதி நியமித்திருக்கின்றார். கடந்த அரசாங்கம் தேர்தலின் பொழுது மத்திய வங்கியை உடைத்தவர்களை தாங்கள் வெற்றி பெற்றவுடன் எங்கிருந்தாலும் காதை பிடித்து இழுத்துக் கொண்டு வந்து கைது செய்வதாக கூறினார்கள் நடந்ததா? ஏனென்றால் அவர்கள் ரணிலை காப்பாற்றுவார்கள். ரணில் இவர்களை காப்பாற்றுவார். இதுதான் அவர்களுக்குள் இருக்கின்ற ஒற்றுமை. எனவே இதுவும் ஒரு ராஜபக்சக்களை பாதுகாக்கின்ற இன்னும் ஒரு சித்த விளையாட்டு. நாங்கள் முழுமையான இந்த மக்களுடனேயே இருக்கின்றோம்.

### பழனி திகாம்பரம்
### தொழிலாளர் தேசிய சங்கம்

தமிழ் முற்போக்கு கூட்டணியை பொறுத்தளவில் நாங்கள் அனைவரும் கோட்ட கோ என்ற மக்களின் எண்ணங்களுடனேயே இருக்கின்றோம். அதற்கு மாறாக நாங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் செயற்பட மாட்டோம். எனவே எங்களுடைய எதிர் பார்ப்பு மக்கள் எதனை எதிர்பார்க்கின்றார்களோ அதனை நோக்கி பயணிப்பதே. நாங்கள் எக்காரணம் கொண்டும் அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்க மாட்டோம். அது மட்டுமல்ல, நாளை சஜித் பிரேமதாச இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைத்தாலும் நான் அந்த இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சராக பதவியேற்க மாட்டேன். ஆனால் நான் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவேன். தேர்தலில் வெற்றி பெற்று அமைக்கப்படுகின்ற அரசாங்கத்தில் மாத்திரமே நான் அமைச்சு பொறுப்புகளை எற்றுக் கொள்வேன். இது என்னுடைய தனிப்பட்ட கருத்து.



பழனி திகாம்பரம்

இன்று நாட்டில் மக்களுடைய எதிர்பார்ப்பு ராஜபக்ச குடும்பத்தை அகற்ற வேண்டும் என்பதே. ஏனென்றால் நாட்டை சீரழித்தவர்கள் அவர்களே. எனவே அந்த அரசாங்கத்தில் நாங்கள் பதவி வகிக்க முடியாது. அப்படி செய்தால் மக்கள் எங்களை தூக்கி எறிந்துவிடுவார்கள். எனவே நாங்கள் மக்களுடன் இருந்து கொண்டு கோட்டா வீட்டிற்கு போக வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றோம்.

### மயில்வாகனம் உதயகுமார்
### பாராளுமன்ற உறுப்பினர்

மக்களுடைய முக்கியமான கோரிக்கை கோட்டா வெளியேற வேண்டும் என்பதே. அடுத்து ராஜபக்ச குடும்பம் வெளியேற வேண்டும். இந்த ஆட்சி கலைக்கப்பட வேண்டும். இதுவே மக்களுடைய முக்கிய கோரிக்கைகள். இதன் ஒரு கட்டமாக மக்களின் அழுத்தம் காரணமாக பிரதமரும் அமைச்சரவையும் பதவி விலகியது. ஆனால் மீண்டும் ஒரு பித்தலாட்டத்தை ஆரம்பித்து ராஜபக்சக்களை காப்பாற்றுவதற்காக ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்திருக்கின்றார்கள்.



மயில்லவாகனம் உதயகுமார்

இது பிரச்சினைக்கு தீர்வல்ல. இது ஒரு சமாளிப்பு.ஆகவே உண்மையாலுமே பாராளுமன்றத்தின் முக்கிய எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கே அந்த சந்தர்ப்பத்தை கொடுத்திருக்க வேண்டும். நாங்கள் மிகவும் தெளிவாக இருக்கின்றோம் இந்த ஜனாதிபதியின் கீழ் ஒரு அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று.

அதற்காகவே நாங்கள் நான்கு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தோம். அந்த கோரிக்கைகள் அனைத்தும் எங்களுடையது மட்டுமல்ல. அது இந்நாட்டு மக்களுடையது. மதத்தலைவர்களுடையது. சட்டத்தரணிகள் கொடுத்த கோரிக்கைகள். எனவே அதற்கு சம்மதம் தெரிவித்தால் மாத்திரமே பிரதமராக பதவியேற்கலாம். ஆனால் நாங்கள் இந்த இக்கட்டான நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள தயாராகவே இருக்கிறோம்.

அது ஒரு நிபந்தனையின் அடிப்படையில் ஒரு கட்டமைப்போடு செல்ல வேண்டும். ஆனால் ஜனாதிபதியோ அதனை தாண்டி பாராளுமன்றத்தில் பலம் இல்லாத ஒருவரை நியமிக்கின்றார் என்றால் அதில் ஒரு உள்நோக்கம் இருக்கின்றது என்பதை அனைவராலும் புரிந்து கொள்ள முடியும். எனவே இதனை நாங்கள் ஒரு ஜனநாயக விரோத செயலாகவே பார்க்கின்றேன்.

### ஜனநாயக மக்கள் முன்னணி

நாங்கள் யாரும் அழைத்தவுடன் சென்று அரசாங்கத்தை அமைக்க முடியாது. நாங்கள் நான்கு கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றோம். எனவே அதனை ஜனாதிபதி எற்றுக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் இப்பொழுது யாரும் இல்லாத நிலையில் ரணில் பிரதமாகியுள்ளார். அவருக்கு வாழ்த்துக்கள்! ஆனால் நாங்கள் அந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்க மாட்டோம். எமது ஐக்கிய மக்கள் கூட்டணி ஆட்சிப் பொறுப்பை ஏற்காமைக்கு காரணம் பிரதான எதிரணியான எமது கொள்கை கோட்பாடுகள். நாம் எமது தமிழ் மக்களின் தனித்துவமான அரசியல் அணி. எமது மக்களை நாம் நேரடியாக பிரதிநிதித்துவம் செய்கிறோம்.

இந்த நிமிடத்தில்கூட எமது அரசியல் குழு முடிவு செய்தால் மிக பிரபலமான அமைச்சு பதவிகளை பெற்று ஆட்சியில் நாம் பங்கு பெறலாம். இதற்கான அழைப்பு எமக்கு எப்போதும் இருக்கின்றது. இதை அனைத்து தரப்பினரும் மனதில் கொள்ள வேண்டும். ஆனால் அதை நாம் செய்ய வில்லை. மாறாக வெளியிலிருந்து எமது முன்னாள் பிரதமரை வாழ்த்துகின்றோம். தற்சமயம் நாம் தமிழ் முற்போக்கு கூட்டணியாக எதிரணியில் இருக்கின்றோம். நடப்புகளை அவதானித்து பொறுப்புடன் கடசியாக பயணிக்கின்றோம். அதே நேரத்தில் எதிர்வரும் தினங்களில் அவர் ஆட்சியமைத்து அமைச்சரவையை அமைத்தால் அவருக்கு 113க்கும் அதிகமாகவும் கிடைக்கலாம். அப்போது அவர் தனிநபர் அல்ல. ஆகவே ஆளட்டும்.



மனோ கணேசன்

தொகுப்பு:
நுவரெலியா எஸ். தியாகு ...

# கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் மலையக தொழிற்சங்கங்கள்

நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகளின் பின்னணியில் சகல அரசியல் கட்சிகளும் பொதுமக்களின் சக்தியை உள்வாங்கிக் கொண்டிருக்கும் என்று நம்புகிறோம். குறிப்பாக இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டத்தின் விளைவுகள் பாடம் கற்பித்திருக்க வேண்டும். இதனால் மலையக கட்சிகளும் கலக்கம் அடைந்துள்ளன. 74 வருடகால அரசியல் ஏமாற்றங்கள் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. 200 வருடகால ஏமாற்றங்ககளின் உணர்வுகள் மலையகக் கட்சிகளை அச்சுறுத்தவே செய்யும். வயிற்றுப் பிழைப்புக்காகவும் வரப்பிரசாதங்களுக்காகவும் அரசியல் செய்ய வருவோர் இனி எச்சரிக்கையாக இருக்க வேண்டியது கட்டாயம்.

அரசியல் ஆடுகளம் தடுமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதால் மலையகத்தின் தொழிற்சங்கங்களின் தேவை மீண்டும் அவசியமாகியுள்ளது. தொழிற்சங்கங்கள் மூலம் பெருந்தோட்ட மக்களோடு நேரடியாக தொடர்புகளை வளர்த்துக் கொள்ள முடிவதால் அரசியல் ரீதியிலான உள்வாங்கல்களை மேற்கொள்வது இலகுவாகி விடுகின்றது. அரசியலுக்கென்று தனியாக பணிமனைகளும் தேவையில்லை. செயற்பாட்டாளர்களும் தேவையில்லை.

மலையகத்தில் 70 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் காணப்படுகின்றன. இவற்றில் இயங்குதன்மை கொண்டவை. இதனை என ஆராய்வது வீண் வேலை. ஏழு பேரை வைத்துக்கொண்டு ஒரு தொழிற்சங்கத்தை ஆரம்பித்து விடலாம் என்றால் எண்ணிக்கைக்கு ஏது அளவு.

சிவில் அமைப்புகள் மலையகத்தில் புதிதாக தொழிற்சங்கங்களை ஆரம்பிப்பதில் நெடுநாட்களாகவே நாட்டம் காட்டி வந்துள்ளன. இவற்றுள் சில மலையக தேசிய கட்சிகளின் முகவர் அமைப்புகளாகவே குப்பை கொட்டுகின்றன.

மலையகத்தில் கழுதைத் தேய்ந்து கட்டெறும்பு ஆன நிலைமையிலேயே பெரிய தொழிற்சங்கங்களும் இருக்கின்றன. இதையெல்லாம் தெரிந்து கொண்டும் புரிந்துகொண்டும் அவர்களை விமா்சனம் செய்து கொண்டுமே இந்த சிவில் அமைப்புகள் தாமும் தொழிற்சங்கங்களை அமைக்க தலைப்படுவதன் மர்மம் இதுதான்.

உண்மையில் மலையகத்தில் தொழிற்சங்க அமைப்புகள் பலவீனப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமல்ல. ஏனெனில் தொழிற்சங்க முறைமையானது இம்மக்களின் தொழில்சார் உரிமைகளோடு மட்டும் சம்பந்தப்பட்டு வளரவில்லை. வாழ்வியல் அம்சங்களோடும் இரண்டற கலந்து விட்டவை. இணையாகி வளர்ந்தவை.

1931களில் இவ்வாறானதொரு பின்புலத்துடன்தான் கோ. நடேசய்யர் முதன்முறையாக பெருந்தோட்ட மக்களுக்கான தொழிற்சங்க அமைப்பை உருவாக்கினார். பிந்திய தொழிற்சங்க பிறப்புகளுக்கெல்லாம் கருவாக அமைந்தது இவரது முயற்சி.

1939களில் இலங்கை இந்திய காங்கிரஸின் தோற்றம் 1950களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றம் பெற்றதன் தேவை எல்லாமே கோ. நடேசய்யரின் முன்மாதிரியை அடிப்படையாகக் கொண்டவையே. இ.தொ.கா.வின் தலைவராக இருந்த அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் ஆளுமைமிக்க தலைமைத்துவத்தால் ஆலவிருட்சம் என அமோக வளர்ச்சி கண்டது. இன்று மலையகத்தில் காணப்படும் தொழிற்சங்கங்களின் வரலாறு இ.தொ.காவை பற்றிப்படர்ந்து நிற்பதாகவே அமைகின்றது. இந்த தொழிற்சங்கத்திலிருந்து பிளவுண்டதே பின்னால் புதியபுதிய தொழிற்சங்கங்களைப் படைத்தனர்.

பன். பாலா ...

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், மலையக தொழிலாளர் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் எல்லாமே இ.தொ.காவில் இருந்து வெளியேறியோர் உருவாக்கிய தொழிற்சங்கங்களேயாகும். ஒரு காலக்கட்டத்தில் பொருளாதார ரீதியில் நாட்டை தாங்கிநின்ற பலமிக்க ஆளணி வளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது பெருமைக்குரியவையாகவே இந்த மலையக தொழிற்சங்கங்கள் விளங்கின.

தொழிற்சங்கங்கங்களின் ஆதிக்கமானது 1978களின் பின்னரே சிறுகச் சிறுக வலுகுன்றி வரலானது. இக்காலக்கட்டத்தில் நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அரசியல் அமைப்பு, 1978களில் கொண்டுவரப்பட்ட மாகாண சபைகள் அறிமுகம் எல்லாமே மலையக தொழிற்சங்கங்களின் ஆதிக்கத்தினை ஆட்டம் காண வைத்தது.

இக்காலங்களில் அரசியல் ரீதியாக பெறப்பட்ட உரிமைகளின் பலனாக தொழிற்சங்க செயற்பாடுகள் அருகி அரசியல் வழிமுறைகளை மேற்கொள்வதற்கான ஊடகமாக இவை மாற்றம் பெறலாயின. ஆனால் தொழிற்சங்கங்களாக அராசோச்சிய நிலையில் அதன் சேவைகள் பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை நிலைமையை உயர்தன்மைக்கு இட்டுச் செல்வதற்கான அத்திவாரம் எதனையுமே இடவில்லை என்பதே பலரதும் அபிப்பிராயமாகும். கவனம் செலுத்தப்படவேண்டிய பல அடிப்படை அம்சங்கள் கண்டுக்கொள்ளப்படாமலே விடப்பட்டன. எனவே தான் அச்சமூகம் இற்றை வரை முழுமை பெறாத வாழ்வியல் இயங்கு நிலைக்கு ஆளாக நேர்ந்துள்ளது.

இதேநேரம் தொழிற்சங்கங்கள் அரசியல் பாசறைகளாக ஆக்கப்பட்ட நிலையிலும் அதன் முனைப்புகள் சமூக மாற்றத்துக்கான விதிமுறைகளை இனம்காண தவறிவிட்டன என்றால் பொருந்தும்.

இதனால் தொழிற்சங்க முயற்சிகளும் முடக்கம் கண்டன. அரசியல் அணுகு முறைகளும் ஆக்கம் இழந்தன. இதனாலேயே வாக்குரிமையின் பெறுபேறுகள் வரையறைக்குள்ளாகி காணப்படுகின்றன. எந்த வாக்குரிமை தொழிற்சங்க சக்தியை தோற்கடிக்க உதவியதோ அதே வாக்குரிமை அவர்களை தேசிய ரீதியில் பேசப்படும் நிலையை தோற்றுவிக்க உதவ முடியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

புதிய அரசியல் கலாசாரம் உருவாகுமா?

வெறும் வாக்களிக்கும் இயந்திரங்களாகவே இம்மக்களின் பலம் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதே இதற்கு காரணம்.

மக்களிடம் பழையபடி நேரடி தொடர்பாடலை மேம்படுத்தக்கூடிய தொழிற்சங்க முறைமையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகினறது. இதற்காக கண்டறியப்பட்ட காரணமாக மலையகம் எனும் அடையாளம் காக்கப்பட அரசியல் கட்சிகளை விட தொழிற்சங்க அமைப்புகளே காக்கப்பட வேண்டும் என்பது நிறுவப்படுகின்றது.

ஏனெனில் மலையக மக்களின் வரலாற்றுக் குறிப்புகளை வரைவிலக்கணம் செய்ய தொழிற்சங்க பாரம்பரியங்கள் நிறையவே உதவுகின்றன. எனினும் இன்று நடைமுறையில் காணப்படுவது என்னவோ பலவீனமான நகர்வுத் தன்மைகளே. இதற்குக் காரணம் தொழிற்சங்கங்கள் மூலம் ஆள்பிடிக்கும் அரசியல் கட்சிகள் அவர்களை வைத்து அரசியல் சதுரங்கம் ஆட முற்படுகின்றன. இதன்மூலம் ஆட்சியதிகாரத்தில் பங்கேற்கவும் முடிகின்றது.

எனினும் ஏகப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதித்துவங்களின் காரணமாக தொழிலாளர்கள் கூறுபோடப்படுகிறா்கள். இன்று பிரதேச ரீதியாக மட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சங்க இயக்கங்கள் ஏராளம். அவதானிகளின் கணிப்பின்படி இவ்வாறு இயங்கும் தொழிற்சங்கங்களின் நிர்வாகிகளாக மலையகத்தைச் சாராதவர்களே இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னணியில் சந்தா அறவிட சாதகமாக தொழிற்சங்க முறைமை கைகொடுப்பதால் இது சிலருக்கு வயிறு வளர்க்கும் தொழிலாக மாற்றம் கண்டுள்ளது. பெரிய தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க இலக்கணங்களை மூட்டைக் கட்டிவிட்டு அரசியல் செயற்பாடுகளில் மட்டுமே அக்கறை கொள்கின்றன. இதற்காக அறவிடப்படும் சந்தாப்பணம் பயன்படுத்தப்படுவும் நடக்கின்றது. இதனால் தொழிலாளர்களரது தொழில்சார் நலன்புரி நடவடிக்கைகள் கைவிடப்படுகின்றன. சந்தாப்பணம் மூலம் சாதகமான ஏது நிலைகள் எதுவுமே தொழிலாளர்களை எட்டுவதாக இல்லை. இதனால் விரக்தியடைந்து போகும் தொழிலாளர் சமூகம் அடிக்கடி தொழிற்சங்கங்களை மாற்றிக்கொள்ள தலைப்படுகின்றன.

நாட்டில் ஆகக்கூடிய தொழிற்சங்கங்களை உள்வாங்கிக் கொண்டுள்ள தொழிற்துறையாக பெருந்தோட்ட கட்டமைப்பு விளங்குகிறது. தொழிற்சங்கங்களாலோ அதனையொட்டி அரசியல் நடத்தும் கட்சிகளாலோ ஆகக்கூடிய பயன்கள் எதனையும் அடையாத சமூகம் வாழும் இடமாக மலைத்தேசமாக காணப்படுகின்றது. அரசியல், தொழிற்சங்க, வர்த்தகப் பண்டமாக இச்சமூகம் பாவிக்கப்படக்கூடாது. தொழிற்சங்க பலம் பழையபடி பெறுகுவதோடு அரசியல் ரீதியில் ஆக்கம்பெற அது உதவுமாறு பார்த்துக் கொள்வது நல்லது.

# ரணில்: சர்வதேச ஆதரவு பெற்ற ஜனநாயகவாதி



**அரச இயந்திரத்தின் இரட்டைச் சக்கரங்களாக கடந்த இரு தசாப்தங்களாக மஹிந்த ராஜபக்ஷவும், ரணிலும்தான் சுழல்கின்றனர். அரசாங்கத்தின் அச்சாணியாகக் கருதப்படும் உயர் பதவிக்குரிய பிதாமகன்களும் இவ்விருவரும்தான். 2004 முதல் இன்று வரைக்கும் வேறு எவரும் இப்பதவிக்கு எதிரும் புதிருமாக போட்டியிடவில்லை. இதுதான், இவர்களை அங்கீகரிக்கப்பட்ட அடையாளமாக்கி உள்ளது. நாட்டு அரசியலில் கடந்த இரு தசாப்தங்களாக ஏற்பட்ட மாற்றங்கள் (2004-2022) அரசியலில் நிரந்தர எதிரியுமில்லை, நண்பரும் இல்லை என்பதை நிரூபித்திருக்கிறது.**

இவ்விருவரும் இப்பதவிக்காக இக்காலப் பகுதியில் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களும், வியூகங்களும்தான் தேசிய அரசியலைச் சூடாக்கி சர்வதேசத்தின் பார்வையை திருப்பியிருந்தது. அலரி மாளிகைக்குள் வருவதும் அங்கிருந்து வெளியேறுவதுமான அரசியல் களங்கள், ஆதரவாளர்களின் அபிமானங்களை ஆற்றுப்படுத்தின. இந்நகர்வுகள் சுழன்று இன்று ரணிலின் கரங்களில் வந்துள்ளது. 'இப் பதவியை அரசாங்கத்தரப்பு விரும்பித்தானே வழங்கியது, இதிலென்ன வியூகம்' என்கலாம் சிலர். வழங்குமளவுக்கு நிலவரங்களை இறுக்கிய பின்னணி ரணிலிடம் இருப்பது எவருக்கும் தெரியாமலா போகும்.

பதவியேற்ற கணமே வந்த வாழ்த்துக்களும், டொலரின் பெறுமதி வீழ்ந்ததும் இறுக்கிய பின்னணிக்குள் இருப்பவைதானே. தன்னிடமிருந்த வியூகப்பலமும் சர்வதேசப் பலமும்தான், வியர்வை சிந்தாமல் ரணிலைப் பிரதமராக்கியது. இது சிலரை வியர்வை வராமலும் ஆக்கியிருக்கிறது. ஜனநாயகம் பற்றிப்பேசும் சர்வதேசம் இவரின் தெரிவிலிருந்தவை குறித்து வாய் திறக்காததும், ரணிலுக்கு அடித்த அதிஷ்டம்தான். மிதவாதத் தலைவராக தன்னை அடையாளம் காட்டிய இவர், தேவையான நேரம் நாட்டுக்கு தேவைப்பட்டிருக்கிறார். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பதும் இதைத்தான்.

1970 இல் அரசியலை ஆரம்பித்த இவர்,1977 முதல் நடைபெற்ற சகல தேர்தலிலும் பாராளுமன்றம் நுழைந்தார். எப்படியோ இம்முறையும் 23.06.2021 பாராளுமன்றத்துக்குள் நுழைந்தவர் என்பதால், தோற்றவர் என்ற கருத்து வலுவிழக்கிறது தானே!1993 இல் அதிஷ்டமாகப் பற்றிக்கொண்ட பிரதமர் பதவி, அடிக்கடி இவரிடம் வந்தே செல்கிறது. பின்னர் 2001, 2014, 2015, 2018 இன்னும், இப்போது 2022.05.12 லும் வந்திருக்கிறது.



ஜனநாயகத்தை உச்சளவில் பேணும் ஒரு அரசியல்வாதி இந்தப் பிரதமர். இதனால், சர்வதேசத்தில் இவருக்குப் பெரும் பிரபலம். இவ்வாறான இவர், இப்படியா பிரதமராவது என்ற விமர்சனம் இருக்கவே செய்கிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆசீர்வாதம் இருப்பதால், 113 ஆசனத்தை எளிதாகக் காண்பிக்கலாம் புதிய பிரதமர். இது ராஜதந்திர நெருக்கடிக்கு மட்டுமல்ல ராஜ்யத்தின் பூஜ்ய நிலைமைக்கும் தீர்வாகலாம் என்பதே அரசியல் விவேகிகளின் ஆருடம். மாறாக ஏனைய எல்லாம் எழுமாந்த விமர்சனங்கள்தான். எதுவரைக்கும் தெரியுமா? மக்களைப் பீடித்துள்ள நெருக்கடிகள் நீங்கும்வரை.

**சுஐப் எம்.காசிம்...**



# அமைதியான போராட்டத்தை திசைதிருப்பிய வன்முறைகள்

**தீப்பற்றி எரியும் இலங்கை தேசம், வரலாறுகள் பல கண்டும் கற்றுக்கொண்டு மாற்றமுறா சமூகமாக இன்னும் நாம். 22 மில்லியன் மக்களைக் கொண்ட இத்தீவு தேசம் நீடித்த மின்வெட்டு, எரிபொருள் மற்றும் மருந்துகள் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையுடன் போராடி வருகின்றது. இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடி முன்னெப்போதும் இல்லாத வகையில் தன்னெழுச்சியான எதிர்ப்பு அலையைத் தூண்டியுள்ளது.**

கைமீறிப் போன வன்முறைகள், கட்டவிழ்த்து விடப்ப ட்ட அழிவிற்கு யார் பொறுப்பு. நாட்டில் திங்கட் கிழமை (09) ஏற்பட்ட பதற்ற நிலைக்கு மத்தியில் பிரதமர் பதவியை மஹிந்த ராஜபக்ஷ இராஜினாமா செய்திருந்தார்.

அன்று இரவு நடந்த வன்முறைகளுக்கு எந்த விதத்திலும் எதிர்வினையாற்றாமல், இராணுவத்தினரும் பொலிசாரும் அமைதியாக இருந்ததும், தற்போது இருப்பதும் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.சிந்தித்து செயற்பட வேண்டிய தருணம் இது. பாராளுமன்ற அமர்வுகள் பிற்போடப்பட்டமை, அவசரகால சட்டம் பிரகடனப்பட்டமை, இவற்றின் மத்தியிலும், அரளிமாளிகையில் பிரதமர் குண்டர்களை கூட்டி அமைதிப் போராட்டத்தின் மீது ஏவி விட்டு தாக்கியமை, காவல்துறையினரின் குறைவான பிரசன்னம், தலைநகரில் குண்டர்களின் வெறியாட்டம், நாட்டின் பாதுகாப்பிற்கு சவால்விட்ட அரச பயங்கர




வாதம் என திட்டமிட்ட செயல்கள் நடந்தேறின.

அனைவரையும் உள்ளடக்கிய, அமைதியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் அரசாங்க ஆதரவு வன்முறையால் முடிவுக்குக் கொண்டு வர முயற்சிக்கப்பட்டது. இலங்கையில் மக்களால் ஒரே இரவிலேயே அரச பயங்கரவாதம் உடைத்தெறியப்பட்டுள்ளதென்றால், இந்த ஜனநாயக புரட்சிக்காரர்களை மிகக்கச்சிதமாக ஒன்றிணைத்து, உயர்தொழிநுட்பம், தொடர்பாடல் மூலம் உடனுக்குடன் நடந்தேறியுள்ளது. ஒரே நேரத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட ரீதியில் நாடு முழுவதும், நடாத்தப்படும் இவ்வன்முறைகள் சாதாரண பொது மக்களால் செய்யப்பட்டதாக தெரியவில்லை, இதன் பின்புலத்தை ஆராயவேண்டியுள்ளது. சிந்திக்கத் தோன்றுகிறது. எது எப்படி இருப்பினும் பயங்கரவாதம் ஒழிந்து ஜனநாயகம் / சட்டவாட்சி திரும்புவது மிகச் சிறந்ததே, அதுவே அமைதியான போராட்டக்காரர்களினதும், பொதுமக்களினதும் பேரவா.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஊரடங்குச் சட்டம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இக்காலப்பகுதிக்குள் சட்டத்தை மதித்து செயற்பட வேண்டியது நாட்டு மக்களின் பொறுப்பு. முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கி, நாட்டில் அமைதியை ஏற்படுத்த உதவி செய்ய வேண்டுமென இராணுவத் தளபதி சவேந்திர சில்வா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குண்டர்களின் வன்முறையைத் தொடர்ந்து பொது மக்களால் அரசியல்வாதிகளின் சொத்துக்களும் உடமைகளும் தீ வைத்து எரிப்பு, 55க்கு மேற்பட்ட வீடுகளுக்குத் தீ வைப்பு,200க்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு சேதம்,9பேர் மரணம், 260க்கு மேற்பட்டோர் வைத்திய சாலையில்.

பாராளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அவசர கோரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியும் இந்த கிழமைக்குள் புதிய பிரதமரையும், எல்லோரும் விரும்பிய படி இடைக்கால அரசாங்கத்தையும் நிறுவுவதாக உறுதியளித்துள்ளார்.

ஓரிரு வாரங்களில் அரசியல் ஸ்திரத்தன்மையை உருவாக்காவிட்டால் தான் பதவி விலகுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார். இலங்கையை மீட்பது பாரிய சவாலாக மாறியுள்ளது.

இலங்கையில் இனிமேல் பணபலம், குடும்ப கௌரவம், மிரட்டல் என்பனவற்றையெல்லாம் மூலதனமாக வைத்து தேர்தல்களில் ஜெயிக்க முடியாது. இனி இளைஞர்கள் தலைமை ஏற்கும் காலம்தான்.

அதிகாரம் நிலையில்லாதது. காலையில் ஒருவனிடம் இருந்தால் மாலையில் அது வேறொருவன் கையில் இருக்கும். இது காலி முகத்திடல் தந்த மிகச் சிறந்த உதாரணம். உயர்ந்தவன் தாழ்ந்தவன் ஏழை பணக்காரன் ஆண்டான் அடிமை என்பன காலத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை.

காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகை முன்பான அமைதிவழிப் போராட்டங்களை மக்கள் எந்தளவு நேசித்திருக்கிறார்கள் என்பதற்கு மக்கள் கொடுத்த பதிலடி தக்கசான்று. சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதை ஆட்சியாளர்கள் கண்டார்கள். திங்கட்கிழமை போராட்ட முன்றலுக்குள் குண்டர்கள் நுழைந்தார்கள் என்பதை மொத்த இலங்கையர்களும் மிகுந்த அதிர்ச்சியுடனேயே எதிர்கொண்டார்கள்.

மிரிஹான போராட்டம் தொடங்கி 41 நாட்களும், கோல்பேஸ் போராட்டம் தொடங்கி 31நாட்களும் அடையும் நாளில்... அமைதி போராட்டக்காரர்களுக்கு எதிராக அரசியல் குண்டர்களால் மிகக் கொடூரமான வன்முறைகள் கட்டவிழத்துவிடப்பட்டன.

இவற்றிக்கிடையில் மத்தியவங்கி ஆளுநர் மாற்றம், பலமுறை அமைச்சரவை கலைப்பு, அமைச்சரவை விலகல், ராஜபக்ஷக்கள் அற்ற புதிய அமைச்சரவை, நாட்டை எரித்து பிரதமர் ராஜபக்ஷ பதவி விலகி ஓட்டம் என்பனவற்றால் போராட்ட களத்தில் முன்வைக்கப்படும் பிரதான கோரிக்கையான 'கோட்டா கோ ஹோம்' மாத்திரமே எஞ்சி நிற்கிறது.

அதுவும் பிரதமர் பதவி விலகலின் பின்னர் வேறு ஒரு பரிமாணத்தில் வெளிக்கிளம்பியுள்ளது. இனி, சவாலாக அமையப்போவது... அடுத்து அமையப் போகும் ஆட்சி எத்தகையது ? யார் அந்தப் பொறுப்பினை வகிக்கப் போகிறார்கள்? என்பதில் தான் தங்கி இருக்கிறது. இன்னும் பாராளுமன்றத்தில் தீர்க்கமான முடிவுகள் எடுக்காது தங்களது அரசியல் தேவைகளுக்காக இழுத்தடிப்புக்கள் இன்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்கள் விருப்பத்தை கேட்க முன்வர வேண்டும். இல்லாவிட்டால் மக்களால் வீதிக்கு விரட்டியடிக்கப் படுவார்கள் என்ற செய்தி கொடுக்கப்பட்டுள்ளது.

மேலே பட்டியலிடப்பட்ட 41 நாள் அடைவுகளுக்கும் சொந்தக்காரர்கள் இந்த நாட்டின் இளைய சமுதாயத்தினர் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

அதே நேரம் அந்த இளைய சமுதாயத்தில் இருந்து அரசியல்வாதிகள் வெளிப்படாதபோது, வெளிவராதபோது, வெளிக் கொண்டு வரப்படாதபோது

இன்னும் சில வருடங்களில் '.......... கோ ஹோம்' என சத்தம் மீண்டும் கேட்கத் தொடங்கும்.

அழகான இந்த இலங்கை பூமி எத்தனை முறை எரிவது இராணவன் காலம் தொட்டு இன்றுவரை எரிந்துகொண்டே இருக்கிறது, இன்று கலவர பூமியாக மாறியதும் அநாகரிகமான அரசியலால். இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற கலவரங்கள். மக்கள் இந்தக் கலவரங்களால் தூண்டப்பட்டு மொழிகளால், மதங்களால், இனத்தால், இன்ன பிற பாகுபாடுகளால் துண்டாடப்பட்டுப் பிரித்தாளுகைசெய்யப்பட்டமையானது அரசியல்வாதிகளுக்கு கொண்டாட்டமே...

அரசாங்கம் பொருளாதாரத்தை தவறாகக் கையாண்டதற்காக அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. இலங்கை அண்டை நாடான இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட பிற நாடுகளின் உதவியை நாடும் அதே வேளையில், கடன் திட்டத்திற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) பேச்சுக்களை ஆரம்பித்திருக்கிறது.



**பேராசிரியர் வ.சிவலோகதாசன்...**

அடுத்தடுத்த அரசாங்கங்களின் தவறான பொருளாதார நிர்வாகமானது இலங்கையின் பொது நிதியை பலவீனப்படுத்தியது,

கொவிட்19 நெருக்கடிக்கு சில மாதங்களுக்கு முன்பு வந்த, அரசாங்கம் இயற்றிய வரிக் குறைப்புகளால் நிலைமை மோசமாகியது.

தொற்றுநோய் பொருளாதாரத்தின் சில பகுதிகளை அழித்துவிட்டது முக்கியமாக இலாபகரமான சுற்றுலாத் தொழில், அதே நேரத்தில் நெகிழ்வற்ற அந்நிய செலாவணி விகிதம் வெளிநாட்டு ஊழியர்கள் பணம் அனுப்புவதைக் குறைத்தது.

இலங்கையின் கையிருப்பு போதுமானதாக இல்லை, டீசல் முதல் சில உணவுப் பொருட்கள் வரை அனைத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. வேகமாக மோசமடைந்து வரும் பொருளாதாரச் சூழலை எதிர்கொண்ட அரசாங்கம், விரைவாக நகர்வதற்குப் பதிலாக, சர்வதேச நாணய நிதியம் மற்றும் பிற ஆதாரங்களின் உதவியைப் பெறுவதற்குப் பதிலாக காத்திருந்தது.

சுதந்திரத்திற்குப் பின்னர் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையின் பொருளாதாரம், விவேகமற்ற கொள்கை வகுப்பின் விளைவுகளை இப்போதுதான் அனுபவிக்கத் தொடங்கியுள்ளது.

பொதுவாக கடனளிப்பவர்களுடனான பேச்சுவார்த்தைகளின் பின்னரே கடனைத் திருப்பிச் செலுத்த முடியாது, ஆனால் இலங்கையின் ஒரு தலைப்பட்சமான இயல்புநிலை கடனளிப்பவரின் நம்பிக்கையை பாதித்தது மற்றும் நாட்டிற்கு அந்நிய செலாவணி வரவில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையைத் தீர்க்க தன்னிடம் ஒரு திட்டம் உள்ளது என்று அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தை நம்ப வைக்க வேண்டும். இது புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நம்பிக்கையை மீண்டும் நிலைநிறுத்தும். மற்றும் பணம் அனுப்பும் பாய்ச்சலை மீண்டும் தூண்டும் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை சார்ந்து இருக்கும் சுற்றுலாத்துறையின் மறுமலர்ச்சிக்கு உதவும் இவை இரண்டும் இலங்கைக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தரும். விலைக் கட்டுப்பாடுகளை நீக்கி, உணவு மற்றும் எரிசக்தி விலைகளை சந்தை சக்திகளை நிர்ணயிக்க அனுமதிக்குமாறு இலங்கையிடம் சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது.

இது செலவுமிகுதி பணவீக்கத்தை ஏற்படுத்தும் மற்றும் நெருக்கடியில் மிகவும் பாதிப்புக்குள்ளான குடிமக்களின் நிலையை மேலும் மோசமாக்கும். பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அதிகரிக்கும்.எனவே இலங்கையின் மிகக் குறைந்த வருமானம் ஈட்டுபவர்கள் மீதான பாதிப்பை தணிக்க சமூக பாதுகாப்பு திட்டம் ஒரு முக்கியமான காரணியாக இருக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் கொடுப்பனவுகள் பொதுவாக 36 மாதங்கள் நீடிக்கும். ஆனால் இலங்கையின் அரசியல் ஸ்திரத்தன்மை, எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்பதைப் பொறுத்து, ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக்கான சாத்தியம் உள்ளது. சாத்தியமான சர்வதேச நாணய நிதியத்தின் உதவிக்கு மேலதிகமாக இந்தியா மற்றும் சீனாவுடன் பிற நாடுகளுடன் தொடரப்பட்ட இருதரப்பு தலையீடுகளை இலங்கை எதிர்பார்க்க வேண்டும்.

இந்த நெருக்கடி மனிதனால் உருவாக்கப்பட்டதாகும். 2018ஆம் ஆண்டில் நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு 6.9 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. கடன் சுமை காரணமாக இவை கடுமையாக வீழ்ச்சியடைந்து போயுள்ளது.

இருந்தபோதிலும், மத்திய வங்கியின் முன்னாள் அதிகாரிகள் உட்பட பல பல்கலைக்கழக கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார வல்லுனர்கள் கடந்த இரண்டு வருடங்களாக எச்சரிக்கை விடுத்து, நாடு சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லாவிட்டால் அல்லது வரவில்லை என்றால் நாடு எதிர்கொள்ள வேண்டிய கடுமையான பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்தை எச்சரித்தனர். சாத்தியமான மாற்று திட்டத்துடன். சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தாமதமானால், அதன் நிபந்தனைகள் மிகவும் கடுமையானதாகிவிடும் என்பதை அவர்கள் சுட்டிக் காட்டி நிலைமையின் தீவிரத்தை வலியுறுத்தினர்.

ஆனால் அவர்கள் தொடர்ந்து ஓரங்கட்டப்பட்டனர். அவர்களின் அறிவுரைகளுக்கு செவிசாய்க்கப்பட்டிருந்தால், அவர்கள் பரிந்துரைத்த நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டிருந்தால், பொருளாதாரம் இந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்காது.

மாறாக இரசாயன உரத்தடை போன்ற பல தவறான முடிவுகளால் நாட்டின் பொருளாதாரத் திறனில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. இதற்கிடையில், மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவற்றால் தொழில்துறைக்கு பின் தொழில் தொடர்ந்து முடங்கியுள்ளது, இது பொருளாதார சுருக்கத்திற்கும் சாத்தியமான பொருளாதார மந்தநிலைக்கும் பங்களிக்கிறது.

எரிபொருள் கப்பல்கள் வந்து செல்கின்றன, அவற்றில் பலவற்றிற்கான கொடுப்பனவுகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. ஒவ்வொரு டொலரும் கவனமாக நிர்வகிக்கப்பட வேண்டிய சூழலில், நாம் மோசமான நிலையை எதிர்கொள்கிறோம்.

இயற்கை பேரழிவுகள், சுகாதார அவசரநிலைகள் மற்றும் சர்வதேச மோதல்கள் நாட்டின் நிலைமைக்கு தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளன. COVID19 நிச்சயமாக பொருளாதாரத்தில் பேரழிவு தரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, இதனால் நாட்டின் மீட்சிக்கான சாத்தியக்கூறுகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.

பணம் அனுப்புதல் மற்றும் பொருட்கள் ஏற்றுமதி, இலங்கையின் இரண்டு வருமான ஆதாரங்கள் குறைந்துவிட்ட நிலையில், 2022 ஜனவரியில் சுற்றுலா ஓரளவுக்கு முன்னேறியது. ஆயினும், ரஷ்யாஉக்ரைன் போருக்குபின், சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பின் பலன்கள் சிதைந்தன. ஒருபுறம், ரஷ்ய மற்றும் உக்ரேனிய சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க பகுதியை உருவாக்கினர்; மறுபுறம், போர் எரிபொருள் விலையை அதிகரித்தது, அந்நிய செலாவணி இருப்புகளில் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தியது.

பணவீக்கம் மார்ச் மாதத்தில் 30 சதவீதமாக உயர்ந்தது. ரூபாய் மதிப்பு சரிவு பணவீக்கத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியது, குறிப்பாக இறக்குமதி மூலம். சாமானியர்களின் வாழ்க்கைச் செலவு தாவிச் சென்று, எல்லாவற்றிலும் அழுத்தத்தை ஏற்படுத்தி, வாழ்க்கையை முற்றிலும் தாங்க முடியாததாக ஆக்கியுள்ளது. பணவீக்கம், இடையிடையே ஏற்படும் மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவற்றுடன் இன்று நாட்டில் வெகுஜன கிளர்ச்சியைத் தூண்டியுள்ளது.

இருப்பினும் எதிர்காலம் முன்னெப்போதையும் விட நிச்சயமற்றதாகத் தெரிகிறது. பொருளாதார மீட்பு என்பது ஒரு நீண்ட மற்றும் மிகைப்படுத்தப்பட்ட செயல்முறையாகும், அரசியல் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, தீவு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை கட்டவிழ்த்துவிட்டதால், எமது நாடு செயலற்ற அரச இயந்திரத்தில் பயணிக்க வேண்டியிருக்கிறது.

இதற்கிடையில், தற்போதைய குழப்பத்தில் இருந்து விடுபடுவதற்கு இலங்கை என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து IMF கருத்து தெரிவித்தது. குறிப்பாக, அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைக்கும் அதே வேளையில், அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்கவும் பரிந்துரைக்கிறது. நஷ்டத்தை ஏற்படுத்தும் அரச நிறுவனங்களுக்குகான ஆதரவைக் குறைப்பதன் மூலம் இவை பெரும்பாலும் மேற்கொள்ளப்படும். இத்தகைய நடவடிக்கைகள் குறுகிய காலத்தில் பிரபலமாகாது, அதே சமயம் மானியங்கள் மற்றும் பிற நலத் திட்டங்களில் குறைப்பு ஏழை மக்களை பாதிக்கும், இது அரசாங்கத்திற்கு இன்னும் பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தும். மறுபுறம், சமூக பாதுகாப்பு திட்டங்களின் மூலம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குழுக்களை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பிட்டு, IMF பொதுநல குறைப்புக்களுக்கு எதிராக எச்சரித்துள்ளது.

பாரிய பொருளாதாரச் சீர்குலைவில் இருந்து இலங்கை மண்ணை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

முன்னோக்கி நீண்ட பயணத்தை எதிர்கொண்டால், அது கடந்த காலத்தை கடந்து, இதே போன்ற நெருக்கடிகளை கடந்து, மேலும் வலுவாக வெளிப்பட்ட அண்டை நாடான இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ளலாம்.

1991ல் இந்தியா, அதிகரித்து வரும் வேலையில்லா திண்டாட்டம், குறைந்துவரும் அந்நிய கையிருப்பு மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவற்றால், இன்று நாம் இங்கு காணும் எதிர்ப்புகளுக்கு மாறாக பாரிய எதிர்ப்புகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் வெளிப்பாட்டை எதிர்கொண்டது.முழு நாட்டினதும் வெளிநாட்டு கையிருப்பு ஒரு பதினைந்து நாட்களுக்கு மேல் இறக்குமதி செய்ய போதுமானதாக இல்லை.

இந்தப் பின்னணியில்தான் பிரதமர் நரசிம்ம ராவ் நாட்டின் நிதி அமைச்சராக பொருளாதார நிபுணர் டாக்டர் மன்மோகன் சிங்கை நியமித்தார். சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்வது மற்றும் அதன் நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பது உட்பட அவர் எடுத்த நடவடிக்கைகள், நீண்ட காலத்திற்கு பொருளாதாரத்தை உறுதிப்படுத்த அவருக்கும் அவரது அரசாங்கத்திற்கும் உதவியது. வரி, அந்நியச் செலாவணி, வர்த்தகம் மற்றும் முதலீட்டுக் கொள்கை உட்பட அனைத்துத் துறைகளிலும் அவரது முன்மொழிவுகளில் சீர்திருத்தங்கள் அடங்கும்.

திறமையான நபர்களையும் நிபுணர்களையும் உயர் பதவிகளில் நியமிப்பதன் மூலம் மட்டுமே இவற்றைச் செயல்படுத்தவும், நிர்வகிக்கவும் முடியும்.

நிலைமையை மட்டும் மாற்றினால் போதாது....!!! நீங்களும் மாற வேண்டும்.. எல்லோரும் மாற வேண்டும், அவ்வாறான மாற்றமே புதிய இலங்கைக்கான மாற்றமாக அமையும்.




# வரலாற்று முக்கியத்துவமுள்ள கதைகளை தேக்கி வைத்திருக்கும் அலரி மாளிகை

"அலரி மாளிகை" என்கிற அதே அர்த்தத்தில் தான் சிங்களத்திலும் "அரலிய கஹா மந்திரய" (அலரி மர மாளிகை) என்று அழைக்கப்படுகிறது. ஆனால் ஆங்கிலத்தில் இதனை "டெம்பில் ட்ரீ" (Temple Trees) என்கிற பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. இலங்கையில் அலரி எங்கெங்கும் காணப்படும் மரம். எப்போதும் பூத்துக் குலுங்கும் மரமாக இருப்பதால் அதனை பௌத்த விகாரைகளில் வணங்குவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே பல பௌத்த விகாரைகளில் நிச்சயம் காணப்படும் மரமாகப் பேர் பெற்றது. அதற்கு ஒரு தெய்வீக மரியாதை இலங்கையில் இருக்கிறது. எனவே ஆங்கிலத்தில் இதனை கோவில் மரங்கள் (Temple Trees) என்கிற பெயர் கொண்டு அழைப்பதில் ஆச்சரியமில்லை.[1]

கொழும்பு 3 கொள்ளுப்பிட்டி காலி வீதியில், அமெரிக்க தூதுவராலயத்துக்கு முன்னால் கடும் பாதுகாப்புடன் இருக்கிறது இந்த மாளிகை. இலங்கையில் அதிக பாதுகாப்புடன் இருக்கும் இல்லம் இது தான் என்றும் கூற முடியும்.

ஆயிரக்கணக்கானோர் கூடக்கூடிய மண்டபமும், பல சந்திப்பு அறைகளையும், அமைச்சரவைக் கூட்ட அறை, வசிப்பிடத்தையும், மேலும் பல நிலக்கீழ் அலுவலகங்களையும் கொண்ட மாளிகை அது.




இன்றைய அலரி மாளிகை பிரதமரின் உத்தியோகபூர்வமான வாசஸ்தலமாக இருக்கிறது. ஜே.ஆர்.ஜெயவர்தனாவைத் தவிர சுதந்திரத்திற்குப் பின்னர் பிரதமர்களாக பதவி வகித்த அனைத்து தலைவர்களும் தமது பதவிக் காலத்தில் இங்கே வசித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி பல அரசாங்க கவிழ்ப்புக் கதைகளின் புகலிடமாக இது இருக்கிறது. பல கிளர்ச்சிகளின் கதைகளையும் பரகசியமாகக் கொண்டிருக்கும் மாளிகை.

ஜே.ஆர்.ஜெயவர்தன ஒரு சில நாட்களே இங்கு வாழ்ந்தார். அவரின் சொந்த சொகுசு பங்களாவிலேயே (Braemar) அவர் 1977 இல் பிரதமராக பதவியேற்ற சில நாட்களின் பின்னர் வாழ்ந்தார். 1978இல் 2வது குடியரசு அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டு பிரதமரின் உரிமைகள் குறைக்கப்பட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை கொண்டுவரப்பட்ட பின்னர் பிரேமதாச அலரி மாளிகையை உத்தியோகபூர்வமான இல்லமாக ஆக்கிக்கொண்டபோதும், அதிகமான காலத்தை அவர் தனது சொந்த இல்லமான வாழைத்தோட்டத்தில் இருந்த "சுச்சரித்த" இல்லத்தை பயன்படுத்தினார். ஜனாதிபதியான பின்னரும் பிரேமதாச அதே சுச்சரித்த இல்லத்தைத் தான் பெரும்பாலும் பயன்படுத்தினார்.

ஒல்லாந்தர் காலத்தில் கறுவா உற்பத்திக்கு அடுத்ததாக வருமானம் ஈட்டக்கூடிய பெரிய லாபகர தொழிலாக இருந்தது சாராய உற்பத்தித் தொழிலே. இலங்கையில் இருந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட சாராயத்துக்கு பெரும் மவுசு இருந்தது.

கிழக்கத்தேய நாடுகளில் பரவிய மலேரியா போன்ற தொற்று நோய்களுக்கு தெய்வீக மருந்தாக அதனைப் பயன்படுத்த முயன்றனர். அவர்களின் படையெடுப்பு ராணுவத்தின் நாளாந்த பாவனைக்காக அனுப்பிவைத்தார்கள்.

இந்த சாராய உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட தென்னை நிறைந்த கடற்கரை பிரதேசங்களில் பதப்படுத்தும் குளிர் களஞ்சியங்களையும் (De Brandery) கட்டினார்கள். அவ்வாறு கொழும்பு நகரில் பிரதான "பிறன்டரி" அலரி மாளிகைக்கு சொந்தமான கட்டிடத் தொகுதியில் தான் இருந்தது. கொள்ளுபிட்டியில் இருந்த விசாலமான தென்னந்தோப்புக்கு அருகாமையில் இப்படி சாராயம் வடிகட்டுவதற்கு இலகுவாக இந்த "பிறன்டரி" இருந்தது. அதற்கும் முன்னர் அங்கே ஒரு சிறுவர்களுக்கான அநாதை இல்லமும், இராணுவ அலுவலகமும் இருந்ததாக அறியப்படுகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் கொள்ளுப்பிட்டி குடியிருப்புகள் உள்ள பகுதியாக காணப்படவில்லை. கொழும்பு கோட்டைக்கு அப்பாலுள்ள ஹல்ஸ்டாப், புளுமெண்டல், வுல்பெண்டல், புனித செபஸ்தியன் போன்ற தேவாலயங்களை அமைத்து அதை அண்டிய குடியிருப்புகளை பேணி வந்தார்கள். இன்றைய கொழும்பு 7 கூட கறுவாத் தோட்டப் பகுதியாகத் தான் இருந்தது.

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின்னர் அவர்களுக்கு முன்னர் ஆட்சியாளர்களாக வாழ்ந்த ஒல்லாந்தர்களில் நிரந்தரக் குடியிருப்பாளர்களாக ஆகியிருந்த ஒல்லாந்தர்களை தமது நிர்வாகத்தில் இணைத்துக்கொண்டார்கள். அப்படி இணைக்கப்பட்ட ஒருவர் தான் பிரெடிரிக் பெரன் மைலியஸ் (Frederick Baron Mylius). அவர் ஒரு காலி மாத்தறை மாவட்டத்தின் நீதவானாக கடமையாற்றினார். இந்த மாளிகையை அவர் தான் முதற் தடைவையாக (1805) வாசஸ்தலமாக ஆக்கிக்கொண்டார். அதுவரை அங்கு இயங்கிய சாராய "பிறன்டரி" யையும் அவர் அகற்றினார். முன்னாள் ஒல்லாந்து ஆளுநரான வில்லம் யாகோப்பின் (Willem Jacob van de Graaf) புதல்வியைத் தான் மைலியஸ் திருமணம் முடித்திருந்தார். அதனால் தனது புதல்வியின் திருமணத்தை இந்த மாளிகையில் தான் நடத்தினார் வில்லம் யாகோப். அந்த திருமண வைபவத்துக்கு இலங்கையின் முதலாவது ஆங்கிலேய தேசாதிபதியான பிரெடெரிக் நோர்த்தும் (Frederick North) கலந்து கொண்டார். வில்லம் யாகோப்பின் மனைவியின் தந்தை தான் இலங்கையின் இறுதி ஒல்லாந்து ஆளுநர் யொகான் வான் எங்கெல்பீக் (Johan van Angelbeek).



மைலியஸ் ஒரு சமூக சீர்திருத்தவாதியாக இயங்கி வந்தார். இலங்கையில் அப்போது நிலவிய அடிமை முறையை ஒழிப்பதற்காக தொடர்ந்து அவர் குரல் கொடுத்தார். இது பிரித்தானிய அரசாங்கத்துக்கு நெருக்கடியாக இருந்தது. இறுதியில் 14 ஒகஸ்ட் 1807 இல் தனது 45வது வயதில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். ஆனால் அவர் திடீர் மரணமுற்றார் என்று வர்த்தமானி பத்திரிகையில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. மைலியஸ் இந்த மாளிகையில் இரண்டு ஆண்டுகள் தான் வாழ்ந்தார்.

அவருக்குப் பின்னர் இந்த மாளிகையின் உரிமை, சிவில் உத்தியோகத்தர்களான லெயார்ட் சகோதர்களிடம் இருந்தது. சுமார் 30 ஆண்டுகளாக மேல்மாகாண அரசாங்க அதிபராக பிரபலமாக இருந்த இருந்த பீட்டர் லெயர்ட் அவர்களில் ஒருவர். கொழும்பு கிராண்ட் பாஸ்ஸிலுள்ள லெயார்ட் ப்ரோட்வே வீதி அவரின் நினைவாக வைக்கப்பட்ட பெயர். அவருக்குப் பின்னர் ஜோன் வால்பேப் (John Walbeoff) என்கிற கறுவா திணைக்களத்தின் தலைவர் 1830குப் பின் இதனை சொந்தமாக்கி இருந்தார். எப்போதும் நண்பர்களைக் கூட்டி களியாட்டம் செய்யும் வழக்கமுள்ளவராக இருந்தார் அவர். அப்படி வருகை தந்த ஒரு இளைஞர் ஜோன் வால்பேப்பின் மனைவியுடன் காதல் கொண்டுவிட்டார். இது சர்ச்சையாகிவிட்டது. இதனை முடிவுக்கு கொண்டு வருவதற்காக வால்பேப் தனது நண்பரை வாள் சண்டைக்கு அழைத்தார். அலரி மாளிகையின் தோட்டத்தில் சண்டை ஏற்பாடானது. இருவரும் கடுமையாக மோதிக்கொண்டதில் வால்பேப் கொல்லப்பட்டார்.

வால்பேப்புக்குப் பின்னர் மேல் மாகாண அரசாங்க அதிபராக இருந்த சீ.ஆர். புல்லர் (C.R. Buller) 1840 இல் இருந்து வாழ்ந்து வந்தார். இன்றும் பொரல்லையிலிருந்து பம்பலப்பிட்டி வரையான வீதிக்கு வைக்கப்பட்டிருக்கிற "புல்லர் வீதி" இவரின் நினைவாக வைக்கப்பட்டது தான்.

அதன் பின்னர் இலங்கையின் முதலாவது சுதந்திரப் பத்திரிகையான "சிலோன் ஒப்சேர்வர்"(1835 இல் இது Colombo Observer ஆனது) பத்திரிகையின் ஆசிரியரும், இலங்கை பிரதான மருத்துவ அதிகாரியுமான கிறிஸ்தோப்பர் எலியட் (Dr, Christopher Elliot) 1848ஆம் ஆண்டு இதனை வாங்கினார். தனது பத்திரிகையின் மூலம் ஆங்கிலேய அரசை கடுமையாக விமர்சித்தவர் அவர். 1848 இல் மாத்தளை கிளர்ச்சியை ஆங்கிலேய அரசு அடக்கிய விதத்தை எதிர்த்து கடுமையாக சாடியது இந்த அலரி மாளிகையில் வசித்து வந்த போது தான். அன்றைய ஆளுநர் டொரிங்டனுக்கு எதிராக இதே அலரி மாளிகையில் பெரும் எதிர்ப்புக் கூட்டத்தை ஒழுங்கு செய்தார் எலியட். ஆளுநர் பொலிசாரை அலரி மாளிகைக்கு அனுப்பி கூட்டத்தைக் கலைத்தார். இறுதியில் எலியட் வென்றார். ஆளுநர் டொரிங்டனும் காலனித்துவ செயலாளர் எமர்சன் டெனண்டும் பதவி விலக்கப்பட்டு இங்கிலாந்துக்கு திருப்பி அழைக்கப்பட்டார்கள்.

காலி வீதி அமைக்கப்படுவதற்கு முன்னர் விசாலமான நிலமாக இருந்த இந்த காணி பின்னர் பாதைக்காகவும், கொள்ளுப்பிட்டி பொலிஸ் போன்றவற்றுக்காகவும் குறுகி சிறியதாக ஆனாலும் இன்றும் அது ஒரு அழகான பசுமைப் பகுதி தான்.

1856ஆம் ஆண்டு ஜோன் பிலிப் கிரீன் (John Philip Green) இதனை 2300 பவுண்களுக்கு வாங்கினார். சூழலியலாளரான அவருக்கு கோப்பித் தோட்டங்கள் உரிமையாக இருந்தன. தாவரவியல் அறிவியலில் நிபுணராக இருந்தார். அவர் தான் இந்தக் காணியை பசுமையாக மாற்றியவர். அவர் வைத்த மரங்கள் தான் அலரி மரங்கள். அவர் சூட்டிய பெயர் தான் "Temple Tree". அங்கே அவர் மயில்களையும், பல்வேறு பறவை, விலங்குகளையும் வளர்த்தார். 1881ல் பிரபல தாவரவியலாளர் ஏர்னஸ்ட் ஹெக்கில் அப்போது இலங்கை வந்திருந்த போது அலரி மாளிகையில் அவர் கண்ட இத்தகைய காட்சிகளைப் பற்றி தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜோன் பிலிப்புக்குப் பின்னர் இது அவரின் சகோதரர் ஸ்டேனிஸ்பெத்துக்கு சொந்தமானது. அவர் தான் இலங்கையின் ஐஸ் தொழிற்துறையின் முன்னோடியாக கருதப்படுபவர். அவர் அலரி மாளிகைக்குப் பின்னால் ஒரு ஐஸ் உற்பத்திச்சாலையை உருவாக்கினார். பேரை வாவி அதன் எல்லையாக இருந்தது. அவரின் மரணத்துக்குப் பின்னர் அலரி மாளிகை 1899 இல் ஏலத்துக்கு விடப்பட்டது. ஏலத்துக்கான அன்றைய விளம்பரத்தில் ""இந்த கட்டிடத்தை வாங்குபவர் கொல்லுபிட்டியில் உள்ள மிக இனிமையான நிலத்தின் உரிமையாளராக மட்டுமன்றி நகரத்தில் உள்ள பல வரலாற்று நிறுவனங்களின் உரிமையாளராகவும் ஆவார்". என்று குறிப்படப்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் பிரதான அதிகாரிகளின் வசிப்பிடமாக ஆக்குவதற்காக அரசாங்கம் 1903 ஆம் ஆண்டு இதனை 99,000 ரூபாவுக்கு கொள்வனது செய்தபோது இந்த காணி ஏக்கர்களையும், 8 பேச்சர்ஸ்களையும் மட்டுமே கொண்டிருந்தது. அதன் பிரகாரம் அங்கே முதலாவது குடியேறிய ஆளுநர் ஹியூஜ் கிலிபோர்ட் (Hugh Clifford 1907/13). ஆளுநருக்கு தனிக்குடியிருப்பு ஒதுக்கப்பட்ட நிலையில், பிரித்தானிய காலனித்துவ செயலாளரின் வசிப்பிடமாக இது ஆக்கப்பட்டது. சர்சார்ல்ஸ் கொலின்ஸ் அங்கே குடியேறினார்.

டொனமூர் அரசியல் திட்டத்தின்படி உருவாக்கப்பட்ட நான்கு பிரதான செயலாளர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக மாறியது.

1948 பிப்ரவரியில்ஆங்கிலேயர்கள் சுதந்திரம் வழங்கியதும் "சுதந்திர" இலங்கையின் பிரதமரின் வாசஸ்தலமாக ஆக்கப்பட்டது. அதன்படி இலங்கையின் முதலாவது பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்க இங்கே குடியேறினார். அவர்க்குப் பின்னர் எஸ்.டபிள்யு ஆர் டி பண்டாரநாயக்க இங்கு வசிக்க வரவில்லை. அதற்குப் பதிலாக அவரின் ரோஸ்மீட் பிளேஸ் இல்லத்திலேயே வசித்தார். அவர் கொல்லப்பட்டதும் அவரது அந்த இல்லத்தில் வைத்துத் தான். அலரி மாளிகையை அவர் சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளுக்கு மட்டும் பயன்படுத்திக்கொண்டார். பண்டாரநாயக்கவின் காலத்தில் வாராந்தம் திங்கள் தோறும் நடத்தும் ஊடக மாநாட்டை "கிரிபத்" (பாற்சோறு) ஊடக சந்திப்பு என்றே அழைத்தார்கள். பத்திரிகையாளர்களுக்கு அங்கே பாற்சோறு வழங்கப்பட்டது.

1978 ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட போது அதுவரை ஆளுநரின் வாசஸ்தலமாக இருந்த இராணி மாளிகை ஜனாதிபதி இல்லமாக ஆனது. ஆனால் அதை சம்பிரதாய நிகழ்வுக்கு மட்டும் தான் ஜே.ஆர். பயன்படுத்தினார். வாசஸ்தலமாக அலரி மாளிகையைத் தான் பயன்படுத்தினார். எனவே பிரதமரின் இருப்பிடத்துக்கு வேறு இடத்தை ஒழுங்கு செய்ய நேரிட்டது.

பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த அனைவரும் அப்படித்தான் பயன்படுத்தினார்கள். 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் போது ரணில் விக்கிரமசிங்க அலரி மாளிகையை வாசஸ்தலமாக அல்லாமல் அலுவலகமாக மட்டும் பயன்படுத்தினார். ஆனால் மீண்டும் மகிந்த ராஜபக்ச 2019 இல் பிரதமராக ஆனதும் தனது வாசஸ்தலமாக பயன்படுத்தத் தொடங்கினார்.

மூன்று நூற்றாண்டுகளாக வரலாற்று முக்கியத்துவமுள்ள கதைகளை தேக்கி வைத்திருகிறது அலரி மாளிகை.

**அலரி மாளிகையில் வசித்த தலைவர்கள்**

1948 – 1952 டி.எஸ்.சேனநாயக்க
1952 –1956 டட்லி சேனநாயக்க
1956 –1959 எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா
1959 –1960 விஜேயானந்த தஹநாயக்க
1960 –1960 டட்லி சேனநாயக்க
1960 –1965 சிறிமாவோ பண்டாரநாயக்கா
1965 – 1970 டட்லி சேனநாயக்க
1970 –1977 சிறிமாவோ பண்டாரநாயக்கா
1977 –1978 ஜே. ஆர். ஜெயவர்த்தனே (அவரது தனிப்பட்ட இல்லமான பிரேமரில் வாழ்ந்தார்)
1978 – 1989 ரணசிங்க பிரேமதாச
1989 – 1993 டிங்கிரி பண்டா விஜேதுங்க
1993 – 1994 ரணில் விக்கிரமசிங்க
1994 – 2001 சந்திரிகா குமாரதுங்க (ஜனாதிபதியாக வாழ்ந்தார்), பிரதமர் ஹொரகொல்ல வளவ்வயில் உள்ள அவரது தனிப்பட்ட இல்லத்தில் தங்கியிருந்தார்.
2001 – 2004 ரணில் விக்கிரமசிங்க
2004 – 2015 மகிந்த ராஜபக்ச (ஜனாதிபதியாக வாழ்ந்தவர்), பிரதமர் விசும்பயாவைப் பயன்படுத்தினார்
2015 – 2019 ரணில் விக்கிரமசிங்க
2019 – 2022 மகிந்த ராஜபக்ச

[1]*Ernst Haeckel, A Visit to Ceylon, Boston, S.E.Cassono and company 1883.*

# பொருளாதார மேம்பாட்டில் தாக்கம் செலுத்தும் தொற்றா நோய்கள்

தொற்றா நோய்கள் மக்களின் வாழ்வாதாரத்திலும் அதனுடன் தொடர்புபட்டதாக பொருளாதார மேம்பாட்டிலும் தாக்கம் செலுத்துகின்றன. எனவே, தொற்றா நோய்களைத் தடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சின் தொற்றா நோய்க்கான பணியகத்தின் சமுதாய மருத்துவ நிபுணர் விந்தியா குமாரபேலி தெரிவித்தார்.

தொற்றா நோய்களின் தாக்கத்தைக் குறைக்கும் நோக்கில், சமூக மட்டத்தில் மக்களுக்கு விழிப்புணர்வூட்ட, சைல்ட்ஃபன்ட் இலங்கை அமைப்பு, சுகாதார அமைச்சுடன் இணைந்து 2021ஆம் ஆண்டில் "உலகளாவிய மீள்பார்வை (குளோபல் ரீகப்): ஆரோக்கியமான உணவு முறைகள் மற்றும் உடல் செயல்பாடுகளை இலங்கையில் ஊக்குவித்தல்" திட்டத்தை ஆரம்பித்திருந்தது. இத்திட்டமானது சர்வதேச அபிவிருத்தி சட்ட நிறுவனம் (IDLO), கனடாவின் சர்வதேச அபிவிருத்தி ஆய்வு நிலையம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டமே உலகளாவிய மீள்பார்வை (குளோபல் ரீகப்) திட்டமாகும். இதன் ஒரு அங்கமாக தொற்றா நோய்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நோக்கில் மருத்துவ நிபுணர் விந்தியா குமாரபேலி பகிர்ந்துகொண்ட விடயங்கள் வருமாறு,

**கேள்வி : இலங்கையில் பொதுவாகக் காணப்படும் தொற்றா நோய்கள் பற்றியும், அவற்றின் தற்போதைய நிலைமைகள் பற்றியும் கூற முடியுமா?**

**பதில் :** தொற்றா நோய்களில் இருதய நோய்கள் (மாரடைப்பு, பக்கவாதம்), நீரிழிவு, நாள்பட்ட நுரையீரல் நோய்கள் (அஸ்துமா, மூச்சுக்குழாய் அழற்சி, நாள்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் [COPD]), புற்றுநோய்கள், நாள்பட்ட சிறுநீரக நோய் ஆகியவை அடங்கும்.

2016 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட மொத்த இறப்புகளில் 83% ஆனவை தொற்றா நோய்களினால் ஏற்பட்டவையாகும்.

வருடாந்த சுகாதார அறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டு, அரசாங்க மருத்துவமனைகளில் 50.7% ஆன இறப்புகள் தொற்றா நோய்களினால் ஏற்பட்டவை எனப் பதிவாகியுள்ளது. கடந்த தசாப்தத்தில், அரசாங்க மருத்துவமனை இறப்புக்களுக்கான முக்கிய காரணமாக இருதய நோய் விளங்குகிறது.

தொற்றா நோய் ஆபத்துக் காரணி கணக்கெடுப்பான STEPS 2015ற்கு அமைய, 7.4% பேர் (1869 வயது) உயர் இரத்த சீனியளவைக் கொண்டிருந்தனர். வயது வந்தவர்களில் 9% ஆனோர், அதிக இருதய நோய் அபாயத்தைக் கொண்டிருந்தனர் அல்லது இருதய நோய்களைக் கொண்டிருந்தனர். மக்கள் தொகையில், நான்கில் ஒரு பங்கானவர்களுக்கு சாதாரண மொத்த கொலஸ்ட்ரோல் ஆனது குறிப்பிட்ட அளவை விட அதிகமாக இருந்தது. 26% பேருக்கு உயர் குருதி அழுத்தம் இருந்தது.

2016 ஆம் ஆண்டில், மொத்த 464 பில்லியன் தற்போதைய சுகாதார செலவீனத்தில் பெரும்பகுதி (36%) தொற்றா நோய்களை முகாமைத்துவம் செய்வதற்கு செலவிடப்பட்டது.

**கேள்வி : இலங்கையில் ஏற்படுகின்ற அதிக திடீர் மரணங்களுக்கு காரணமாக தொற்றா நோய்கள் விளங்குகின்றன. இலங்கையில் தொற்றா நோய் ஆபத்திற்கான காரணிகள் யாவை? இதில் அதிகம் பாதிக்கப்படும் குழுவினர் யார்? இளையோர் மற்றும் குழந்தைகளுக்கு காணப்படும் பாதிப்பு எவ்வாறானது?**

**பதில் :** தொற்றா நோய்கள் ஆனவை, ஆரோக்கியமற்ற வாழ்க்கைமுறையுடன் தொடர்புபட்டவை (புகையிலை, மதுபான பாவனை, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம், உடற்செயற்பாடின்மை). தொற்றாநோய் ஆபத்துக் காரணி கணக்கெடுப்பான STEPS 2015 இன் படி, இலங்கையில் 30.4% வயது வந்தோர் போதிய உடற்செயற்பாட்டைக் கொண்டிராதவர்கள். 73% பேர் ஒரு நாளைக்கு பரிந்துரைக்கப்பட்ட பழங்கள் அல்லது காய்கறிகளை உட்கொள்வதில்லை. ஆண்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியினர் புகையிலையை புகைக்கிறார்கள், அதே சமயம் 20% பேர் தினசரி புகைப்பிடிப்பவர்களாக உள்ளனர். 18% வயதுவந்தவர்கள் தற்போது மதுபானம் அருந்துகின்றனர்.

இலங்கையில் ஏற்படுகின்ற தொற்றா நோய் இறப்புக்களில், ஏறத்தாழ அரைப்பகுதி (45%) 70 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர் (தொற்றா நோய்களினால் ஆண்களின் இறப்பு 54% மற்றும் பெண்களின் இறப்பு 36%).

**கேள்வி : தொற்றக்கூடிய நோய்களுடன் ஒப்பிடுகையில் தொற்றா நோய்களைத் தடுப்பதும், கட்டுப்படுத்துவதும் ஏன் சிக்கலான பணியாகக் காணப்படுகிறது?**

**பதில் :** தொற்றக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்துவதுடன் ஒப்பிடுகையில் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிக்கலான பணியாகும். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. தொற்றா நோய்களைத் தடுப்பது, தொற்றா நோய்களுக்கான ஆபத்துக் காரணிகளின் வெளிப்பாட்டை குறைப்பது வாழ் நாள் முழுவதும் காணப்படுவதாகும். அதாவது கொள்கை மற்றும் ஒழுங்குமுறை நடவடிக்கைகள்/மக்கள் தொகை அடிப்படையிலான உத்திகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைபிடிப்பது, அதாவது தனிப்பட்ட நடவடிக்கைகள் என்பன இதில் இன்றியமையாதவையாகும்.

**கேள்வி : உடல்நலம் மற்றும் முன்னேற்றத்தில் தொற்றா நோய்களின் அழிவுகரமான தாக்கம் உணரப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் தொற்றா நோய்களின் தீவிரம் எந்தளவு காணப்படுகிறது?**

**பதில் :** தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் பொருளாதார மேம்பாட்டில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்துவதால், தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு உத்திகள் என்பன தொற்றா நோய்களினால் முன்கூட்டிய இறப்பு ஏற்படுவதைக் குறைக்க முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். உயிர்கள் மற்றும் வாழ்வாதார இழப்பு ஆகியவற்றுடன் இணைந்த பொருளாதாரத் தாக்கம் என்பன தொற்றா நோய்களினால் ஏற்படுவதால் இவை சுகாதாரச் செலவு மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றில் எதிர்மறையான தாக்கத்தை உருவாக்குகின்றன.

வறுமை தொற்றா நோய்களுடன் நெருங்கிய தொடர்புடையது. தொற்றா நோய்களின் விரைவான அதிகரிப்பு வறுமைக் குறைப்பு முயற்சிகளைத் தடுக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது, குறிப்பாக சுகாதாரப் பாதுகாப்புடன் தொடர்புடைய வீட்டுச் செலவுகளை அதிகரிக்கிறது. பாதிக்கப்படக்கூடிய மற்றும் சமூக ரீதியாகப் பின்தங்கிய மக்கள், உயர் சமூக நிலைகளில் இருப்பவர்களை விட விரைவில் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுகிறார்கள், குறிப்பாக புகையிலை, ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் சுகாதார சேவைகளுக்குக் காணப்படும் குறைந்த அணுகல் போன்றவற்றால் அவர்கள் அதிக ஆபத்தை எதிர்கொள்கின்றனர்.


மருத்துவ நிபுணர்
விந்தியா குமாரபேலி

பி.வீரசிங்கம்

(22 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட்டிருந்தால் பொருளாதார சிக்கல் ஏற்பட்டிருக்காது!

## இன்றைய நெருக்கடி தொடர்பாக தமிழ்த் தலைவர்களின் கருத்துகள்

**நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பங்கள் தொடர்பில், தமிழ் அரசியல் பிரமுகர்களான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரிடம் கேட்டோம்.**

### புதிய பிரதமரின் வருகை ஒரு நல்ல வாய்ப்பு

*முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா*

**கே: நாட்டின் தற்கால நிலைமைகள் தொடர்பில் உங்கள் பார்வை என்ன?**



பதில்: திறந்த பொருளாதார கொள்கையைக் கடைப்பிடித்ததனால் ஏற்பட்ட பிரச்சினைதான் இது. நாடு பொருளாதார ரீதியாக பாதாளத்திற்குள் விழுந்து கிடக்கின்றது. மாறிமாறி வந்த அரசுகள் தங்களைப் பாதுகாப்பதற்கும், மக்களுக்கு யதார்த்தமான விடயங்களைச் சொல்லாமலும், தமது நலனிற்காக கற்பனையான கதைகளைப் புனைந்ததுமே மக்களின் இன்றைய பிரச்சினைக்கு காரணமாகின. இதில் இருந்து மீளும் பொருட்டு அரசாங்கத்தைப் பொறுப்பெடுக்கும் நபர்களுடன் தான் நாங்கள் வேலைசெய்யமுடியும். தற்போது புதிய பிரதமர் வந்திருக்கின்றார். அது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும். அந்த வாய்ப்பை பயன்படுத்த வேண்டும்.

புதிய பிரதமர் பதவியேற்ற பின்னர் பல வெளிநாட்டு அரசாங்கங்கள் அவருக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்திருக்கின்றன.

**கே: இடைக்கால அரசாங்கம் அமைப்பது தொடர்பாகவும், தமிழ் மக்கள் சார்பாகவும் உங்களின் நிலைப்பாடு எவ்வாறு அமையும்?**

பதில்: இலங்கை இந்திய ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட காலத்தில் இருந்து 13ம் திருத்தத்தை பயன்படுத்தியிருந்தால், இந்த நிலைமை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்காது. காலங் கடந்த ஞானம் போன்று, தமிழ் தேசியபரப்பில் உள்ள கட்சிகள் அன்று எதிர்த்துவிட்டு, இன்று கடிதம் அனுப்பியுள்ளார்கள். அன்று வாய்ப்பை பயன்படுத்தாது, இன்று இந்த நிலைமையில் இருக்கின்றோம். அரசியல் தீர்வொன்றைப் பெறவேண்டுமென்றால், நாங்கள் சரியாக செயற்பட வேண்டும். பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினையாக வைத்திருந்தால், தமது சுயலாப அரசியலுக்காக, போலித் தமிழ் தேசியம் கதைப்பவர்கள் இவற்றைச் செய்யப் பார்க்கின்றார்கள்.

இனியும் தமிழ் கட்சிகள் பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினையாக வைத்திருப்பதைவிட்டு, பிரச்சினைகளை தீர்க்கின்றவகையில் அணுக வேண்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மைத்திரிபாலசிறிசேனவைக் கொண்டுவந்தார்கள். எங்களுடைய ஆட்சிஎன்றவர்கள். அதைக்கூட சரியாகச் செய்யவில்லை. ஆகையினால், அந்த சந்தர்ப்பத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பயன்படுத்தவேண்டும். அவர்கள் எந்தளவிற்குப் பயன்படுத்துவார்கள் என்பது கேள்விக்குறி. ஆனாலும், அழைப்பு விடுத்திருக்கின்றேன்.

**கே: இளைஞர்கள் தமது கையில் ஆட்சியைத் தருமாறு கேட்கின்றார்களே!**

பதில்: இளைஞர்கள் நடத்துவதென்றாலும், தலைமைத்துவம் இருக்கவேண்டும். தேர்தல் ஒன்றை நடத்தி,கடலில் உப்புபோடுவதைப் போன்றுபோட முடியாது. தலைமை ஒன்று வந்து ஆட்சியாளர்களுடன், இருக்க கூடியவர்களுடன் கலந்துரையாடி, ஜனநாயக வழிமுறைகள் ஊடாகவந்தால் மாத்திரமே அது சாத்தியம்.

**கே: பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து செயற்படநீங்கள் தயாரா?**

பதில்: யார் ஆட்சிக்கு வந்தாலும், அவர்கள் ஊடாக எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பதுதான் எமது நிலைப்பாடு. ஜனநாயகத்தின் ஊடாகவும், தேசிய நல்லிணக்கத்தின் ஊடாகவும், பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்ற சிந்தனையில் செயற்பட்டு வந்திருக்கிறோம். கிடைக்கின்ற வாய்ப்பை பயன்படுத்திச் செல்லவேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணவில்லை. வாய்ப்பு ஒன்று வந்துள்ளது. அந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்த வேண்டும். நான் அன்று சொன்னது இன்று நடைபெற்றுள்ளது.

### பிரதமர் முன்னரேயே இராஜிநாமா செய்திருக்கலாம்

*அங்கஜன் இராமநாதன்*
*ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்*

**கே: நாட்டின் தற்போதைய நெருக்கடி சூழ்நிலைகள் தொடர்பில் உங்களின் கருத்து என்ன?**

பதில்: மக்கள் மிகப்பெரிய கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அரசியல் பிரதிநிதிகள் எல்லோரும் செவிசாய்க்க வேண்டும். உடனடியாக அரசாங்கம் உருவாகவேண்டும். அரசாங்கத்தில் மக்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். நாட்டிற்கு ஒரு ஸ்திர தன்மையைக் கொடுக்கவேண்டும். அதனூடாக எமது பொருளாதாரத்தை மீளவும் கட்டியெழுப்ப வேண்டும். குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மக்களிடம் தேர்தல் ஊடாகமக்களின் ஆணையைப் பெறலாம்.



**கே: நீங்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டவர் என்றரீதியில், நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: நாங்கள் மக்கள் சார்பாக அரசுக்கு ஆதரவைக் கொடுத்து, மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துவந்தோம். ஒருமாதத்திற்கு முன்னரே அரசாங்கத்திடம் இருந்து விலகி எதிர்க்கட்சியில் அமர்ந்தோம். அன்றைய சம்பவம் ஒருதுயரமான சம்பவம். பிரதமர் அன்றைய தினம் பதவியை ராஜினாமா செய்யாது முதலிலேயே செய்திருக்கலாம். சாத்விகமான போராட்டத்தில் இருந்தவர்களை குழப்பியிருக்கக் கூடாது. அது உண்மையில் கண்டிக்கத்தக்க விடயம். அது மன்னிக்க முடியாத பிழை. நாடு முழுவதும் நிகழ்ந்த இக் கலவரம் ஜுலை கலவரத்தை ஞாபகமூட்டக் கூடியதாக இருந்தது. வெளிநாடுகளில் தவறான ஒரு கருத்தைக் ஏற்படுத்தக் கூடியதாக அமைத்துவிட்டது. சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கான பின்னடைவை சந்திக்கும் சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இப்போது நேர்மையான பொலிஸ் விசாரணைகளை நடாத்தி, சம்பந்தப்பட்டவர்கள், தூண்டிவர்கள்,தாக்குதலில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டு தண்டிக்க வேண்டும்.

**கே: இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்படவுள்ளார். இடைக்கால அரசாங்கம் தொடர்பாக உங்களின் நிலைப்பாடு என்ன?**

பதில்: அரசு நாட்டிற்கு முக்கியம். மக்களுக்குப் பொறுப்பு கூறக் கூடிய பிரதமர் முக்கியம். இந்தப் பிரச்சினைகளைத் தாண்டிபோவதற்கு மக்களின் நம்பிக்கைக்குரிய அரசாங்கம் தேவை. அதற்கு இடைக்கால அரசுதான் சரி. சர்வகட்சிகளின் பங்களிப்புடன் கூடிய அரசாக இருந்தால் மக்கள் வரவேற்பார்கள். இங்கிருந்து புதிய நாடு புதிய முறைமையைக் கொண்டுவருவதற்கான வாய்ப்பு உள்ளது. இடைக்கால அரசிற்கு எனது முழு ஆதரவு நிச்சயமாக இருக்கும்.

*தர்மலிங்கம் சித்தார்த்தன்*
*புளொட் அமைப்பின் தலைவர்*

**கே: தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாக உங்களின் கருத்தைப் பகிர்ந்து கொள்வீர்களா?**



பதில்: இது மிகப் பெரிய பிரச்சினை. சாதாரண மக்கள் அனைவருமே பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். நாளாந்த வாழ்க்கையை நடாத்த கஷ்டப்படும் மக்களுக்கு உடனடியான தீர்வு கிடைக்க வேண்டும். இந்தப் பொருளாதார பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் மக்கள் சுமூகமாக வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும். அதன் பிறகுதான் ஏனையவற்றை தீர்மானிக்கலாம். எங்களுடைய தமிழ் மக்களுடைய தேசிய இனப்பிரச்சினை மிக முக்கியமாக இருந்தாலும், இன்றைய நிலையில் மக்களின் பொருளாதார பிரச்சினையை தீர்க்கவேண்டும் என்பதில் நாங்கள் மிக அக்கறையுடன் இருக்கின்றோம்.

**கே: பிரதமராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் இணைந்து செயற்படுவீர்களா?**

பதில்: பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பது தொடர்பில் எமது கட்சியும், தமிழ் தேசிய கூட்டமைப்புடனும் கலந்துரையாடிய பின்னர் தான் எமது நிலைப்பாடுபற்றி அறிவிப்போம். அதன் பின்னர் தான் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதா? சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதா என்பது பற்றி முடிவெடுக்கப்படும்.

**கே: நடைபெற்ற பிரச்சினைகள் மற்றும் போராட்டங்களில் தமிழ் மக்கள் இணைந்து கொள்ளாது ஒதுங்கி நிற்கின்றார்கள். தமிழ் மக்களின் நலன் சார்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன நிலைப்பாட்டில் உள்ளது?**

பதில்: எமது மக்கள் மிகப் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாட்டில் உள்ள அனைத்து மக்களும் பொருளாதார பிரச்சினையால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எமதுமக்கள் கடந்த காலங்களில் இதைவிடமிகப் பெரிய கஷ்டங்களை அனுபவித்தபோது, பெரியளவில் தென்னிலங்கையில் இருந்து ஆதரவான குரல்கள் எழுப்பப்படவில்லை. அது எமது மக்களின் அடிமனதில் படிந்திருக்கிறது. நாங்கள் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதனால், இந்தப் பொருளாதார பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகிடைக்க வேண்டுமென்றுதான் விரும்புகின்றோம். ஏனெனில் இந்தப் பிரச்சினை எமது மக்களையும் தான் பாதிக்கும். இந்தப் பிரச்சினைகள் எழுவதற்கு முன்னர் தமிழ் தேசிய இனப் பிரச்சினை என்பது அடிப்படையாக இருந்துவந்துள்ளது. எமது இனப் பிரச்சினைக்கான தீர்வுகள் ஏற்கனவே காணப்பட்டிருந்தால், இரண்டு இனமுமாக இணைந்து அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தால், இப்படியான பிரச்சினைக்கு எமது நாடு முகங் கொடுத்திருக்கமாட்டாது.

**சுமித்தி தங்கராசா...**

---

# அரசியல்–பொருளாதார நெருக்கடிக்கெதிரான போராட்டங்கள் புதிய இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்ப உதவுமா?

## சில அவதானிப்புகள்

**காலி முகத்திடலில் ஒரு மாதத்திற்கு மேலாக இடம்பெற்றுவரும் 'கோடா கோகம' தன்னெழுச்சி போராட்டம் இலங்கையின் சமூக–அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வாகக் காணப்படுகிறது. சுதந்திரத்திற்கு முன்னரும், பின்னரும் இத்தகையதொரு மக்கள் எழுச்சி இடம்பெற்றதாக ஆதாரங்கள் இல்லை. இப்போராட்டங்கள் இலங்கையின் ஆட்சிக் கட்டமைப்பில் அடிப்படை மாற்றங்களை கோரி நிற்கின்றன. தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு ஆளுகை கட்டமைப்பில் தொடர்ச்சியாக நிலவிவந்த குறைபாடுகள் மற்றும் பலவீனமான ஆளுமை மிக முக்கிய காரணமாக அமைந்திருப்பதனை போராட்டக்காரர்கள் தொடர்ச்சியாக முழக்கமிட்டு வருகின்றனர்.**



ஜனநாயகம் என்பது உயர்குழாம் அரசியலை அல்லது அரசியல் கட்சிகளை அடியொட்டியே இதுவரை காலமும் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக மேல்தட்டு வர்க்கத்தின் விருப்பங்களையே வெளிப்படுத்தியுள்ளது என்ற விமர்சனம் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டது.

இதற்கு இலங்கையின் பிரதிநிதித்துவ ஜனநாயகமும் முக்கிய காரணமாகும். ஆனால் இன்றைய போராட்டங்கள் ஊடாக ஜனநாயகம் மக்கள் மயப்படுத்தப்பட்டிருப்பதனையும், தன்னார்வ மக்கள் போராட்டங்கள் மற்றும் சமூக இயக்கங்கள் இன்று ஜனநாயகத்திற்குப் புதிய வடிவத்தை வழங்கி இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இது நாம் இதுவரை காலமும் கோட்பாட்டு ரீதியாக நோக்கிய ஜனநாயகத்தில் இருந்து முற்றாக வேறுபட்டுள்ளது.

ஆகவே, இப்புதிய கோலங்களை எதிர்காலத்தில் ஆய்வுக்குட்படுத்துவது ஜனநாயகம் தொடர்பான அறிவுத்தொகுதிக்கு பங்களிப்பு செய்வதாக அமையும். காலிமுகத்திடலில் இடம்பெறும் போராட்டங்களின் நடைமுறைகள், ஒழுங்குகள், அதில் காணப்படும் ஒழுக்கம் அல்லது கட்டுப்பாடு அல்லது பரஸ்பர மரியாதை, பன்மைத்துவத்துக்கு மதிப்பளித்தல், பெண்களுக்கான பாதுகாப்பு போன்ற காரணிகள் ஜனநாயக சித்தாந்தத்தினை மீள்கற்பனை செய்வதற்கும், புதிய சட்டகத்துக்குள் இருந்து ஜனநாயகத்தினை நோக்குவதற்குமான ஒரு பரந்த வாய்ப்பினை வழங்கியுள்ளது.

கோட்டாபாய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஜனநாயகத்தின் மீது பெரும் தாக்குதல் இடம்பெற்று விட்டது போன்ற பெரும் அச்சம் எம்மத்தியில் ஏற்பட்டது. ஆயினும் அவை இன்று தலைகீழாக மாறியுள்ளதுடன், உண்மையான ஜனநாயகத்தினை, ஜனநாயக எழுச்சியினை, குறிப்பாக அடிமட்டத்தில் ஜனநாயகம் எழுச்சி பெற்று வருவதனை இந்த ஆட்சியின் கீழேயே நாம் காணுகின்றோம். இந்நிலை முன்னர் ஒருபோதும் இடம்பெற்றதற்கு ஆதாரங்கள் இல்லை. அந்தவகையில் இக்கட்டுரையானது காலிமுகத்திடல் உட்பட நாட்டின் ஏனைய பாகங்களில் இடம்பெற்றுவரும் மக்கள் போராட்டங்கள் மூலம் இலங்கைப் பிரஜைகள் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகள் என்ன, இலங்கை தேசத்தினை மற்றும் அரசினைக் கட்டியெழுப்புவதில் கடந்த காலங்களில் விடப்பட்ட தவறுகளை எவ்வாறு சரிசெய்வது மற்றும் இப்படிப்பினைகளை புதிய இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்புவதற்கு எவ்வாறு பயன்படுத்த முடியும் அகிய விடயங்களை ஆராய முற்படுகின்றது.

இக்கட்டுரையானது ஒரு பக்கம், நாட்டில் அரசாங்கமில்லாத, மிகவும் பலவீனமான, ஆளுகை செய்வதற்கான இயலுமையினை முற்றாக இழந்துள்ள, தோல்வியடைந்த அரசொன்று உருவாகியுள்ள சூழ்நிலையிலும், மறபுறமாக, இலங்கை சமூகம் மிகத் தீவிர பாதுகாப்புமயமாக்கம் மற்றும் இராணுவமயமாக்கத்திற்கு உள்ளாகி வரும் பின்புலத்திலேயே எழுதப்படுகின்றது.

### போராட்டங்களின் பின்புலம்

இலங்கையர்கள் சுமார் 90 ஆண்டுகாலம் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை அனுபவித்து வந்தாலும், மக்கள் இன்னும் ஜனநாயகத்தின் பெறுமதியினை உள்ளுர உணரவில்லை என்ற விமர்சனம் தொடர்ச்சியாகவே முன்வைக்கப்பட்டு வந்துள்ளது. இதற்கு சுதந்திரத்திற்குப் பின்னர் இடம்பெற்று வந்துள்ள ஜனநாயகத்துக்கு எதிரான சம்பவங்கள் முக்கிய பங்களிப்பினை செலுத்துகின்றன. முக்கியமாக, இலங்கையர்கள் போராட்டம் செய்து சுதந்திரத்தினைப் பெற்றுக் கொள்ளவில்லை, அதனால் ஜனநாயக விழுமியங்களின் பெறுமதிகளை அலட்சியம் செய்து சர்வாதிகார ஆட்சியாளர்களை, குடும்ப ஆட்சியினை ஊக்குவிக்கிறார்கள் என்ற விமர்சனம் ஜனநாயகத்தை நேசிக்கும் தரப்பினரால் தொடர்ச்சியாகவே முன்வைக்கப்பட்டது.

இன்றைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்கு வினைத்திறனற்ற கடன் முகாமைத்துவம், தவறான பொருளாதார கொள்கைகள் மற்றும் நிதி கொள்கைகள், ஊழல் மோசடிகள் மற்றும் பலவீனமாக ஆளுமை என்பவற்றிற்கு அப்பால், பெரும்பான்மை மக்கள் தொடர்ச்சியாக சர்வாதிகார மற்றும் குடும்ப ஆட்சியினை விரும்பி ஏற்றுக்கொண்டமை மற்றும் அவர்கள் பின்பற்றிய தீவிர தமிழ் முஸ்லிம் எதிர்ப்புக் கொள்கையினை நிபந்தனையற்று ஏற்றுக்கொண்டமை என்பன மிக முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன என சுவிடன் நாட்டில் அமைந்துள்ள உப்சலா பல்கலைக் கழகத்தில் சமாதானம் மற்றும் மோதல் கற்கைகள் துறையின் பேராசிரியர் அசோக் ஸ்வைன் தமது டுவிட்டர் பதிவில் அண்மையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே, ராஜபக்ஷ குடும்பத்தினர் மகா சங்கத்தினருடன் இணைந்து கையாண்டு வந்த தீவிர 'சிங்கள பௌத்த தேசியவாதமும்' நாட்டின் இன்றைய வங்குரோத்து நிலைக்குக் காரணமென வாதிட முடியும். ஆனால் இன்று நடைபெறுகின்ற போராட்டங்கள் இளைஞர்களை மையப்படுத்தியதாக, குறிப்பாக கோட்டாபாயவுக்கு வாக்களித்த இலட்சக்கணக்கான இளைஞர் யுவதிகள் ஜனநாயகத்திற்காக குரல் கொடுப்பதும், அதன் பெறுமதியைப் புரிந்து கொண்டு செயற்படுவதும் புதிய இலங்கை தேசத்தினை நோக்கிய பயணத்தின் ஆரம்பமாக தென்படுகின்றது. இப்போராட்டங்களில் பல வகுப்பினரை நாம் அவதானிக்க முடியும். படித்த மத்தியதர வர்க்கம், நகர்ப்புற இளைஞர் யுவதிகள், கிராமிய இளைஞர் யுவதிகள் விவசாயிகள், தொழில் வல்லுனர்கள், ஆசிரியர் சமூகம், தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்ககள், அரச அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் என பல்வேறு தரப்பினரும் பங்கெடுத்து வருகின்றனர். யாவரையும் உள்வாங்கும் வகையிலான இத்தகைய போராட்டங்கள் இலங்கை வரலாற்றில் இதுவரை இடம்பெறவில்லை எனக் குறிப்பிட முடியும். ஆயினும் கடந்தகால போராட்டங்களான 1970, 1987 மற்றும் 1989 களில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் போராட்டங்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் போராட்டம் என்பவற்றில் இளைஞர்களே தலைமைத்துவத்தை வழங்கினார்கள். ஆயினும் அவை ஒரு குறிப்பிட்ட இனத்தினை மற்றும் வகுப்பினரை மையப்படுத்தியதாகவே காணப்பட்டன. அவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக இந்தப் போராட்டம் காணப்படுகின்றமை இலங்கை வரலாற்றில் ஒரு சிறப்பம்சமாகும்.

### போராட்டங்கள் வெளிப்படுத்தும் முக்கிய பண்புகள்

இன்றைய போராட்டங்கள் பல முக்கிய விடயங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. அந்தவகையில், மரபு ரீதியான அரசியல் தலைமைத்துவம் மீதான அவநம்பிக்கை, பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீதான அதிருப்தி, ஊழல் மோசடிகள் நிறைந்த அரசியல் கலாசாரம் மீதான விரக்தி போன்ற பல விடயங்களை அவதானிக்க முடியும். இன்று அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் முற்றாகவே நம்பிக்கையை இழந்துள்ளன. ஆகவேதான் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வீடு செல்ல வேண்டும் என்ற கோஷம் எழுச்சி பெற்றுள்ளது. அரசாட்சியில் பொதுமக்களின் நம்பிக்கை என்பது அடிப்படையானதாகும். அந்த நம்பிக்கையே ஆட்சியாளர்கள் தமது கொள்கைகளை, சட்டங்களை மற்றும் ஏனைய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான சட்ட தன்மையினை (டநபவை¡அயஉல) வழங்குகின்றது என்பதனை மனம்கொள்ள வேண்டும். சுமார் 85 சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஜனாதிபதி பிரதமர் மற்றும் ஒட்டுமொத்த அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என்ற விடயத்தை அண்மையில் கொழும்பில் அமைந்துள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கொண்ட ஆய்வில் குறிப்பிட்டிருந்தனர். இது மரபு ரீதியான அரசியல் தலைமைகள் மீதான இன்றைய தலைமுறையினரின் உச்சகட்ட அவநம்பிக்கையினையும், புதிய அரசியல் கலாசாரம் ஒன்றிற்கான தேவையினையும் குறித்து நிற்கின்றது.

(தொடரும்)

கலாநிதி இரா. ரமேஷ்...
சிரேஸ்ட விரிவுரையாளர்,
அரசியல் விஞ்ஞானத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

---

## பாரம்பரியம் நிகழ்ச்சியில் மீண்டும் இஸட்.எல்.எம். முஹம்மத் நினைவலைகள்



17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8. 15க்கு ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் மீண்டும் முஸ்லிம் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மர்ஹூம் இஸட். எல். எம். முஹம்மத்தின் நினைவுகள் நினைவுக்கூரப்படவிருக்கின்றன. அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் முன்னாள் தலைவரும் செயலாளருமான மர்ஹூம் மௌலவி அஷ்ஷேக் எம். எம். ஏ. முபாரக்கோடு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவையின் முன்னாள் பணிப்பாளரும், முன்னாள் பிரதிப் பணிப்பாளர் நாயகமுமான புகழ்பூத்த சிரேஷ்ட ஒலிபரப்பாளர் வி. என். மதியழகனும் (கனடா) கலந்துகொண்டு மர்ஹூம் இஸட். எல். எம். முஹம்மத் நினைவுகளை சிறப்பாக பகிர்ந்து கொள்கின்றனர். அத்துடன் முஸ்லிம் சேவையுடனான தமிழ்ச் சேவையின் அந்நாட்களின் நேசமிகு கைகோர்ப்பு குறித்தும் முன்னாள் தமிழ்ச் சேவை பணிப்பாளர் நாயகம் வீ. என். மதியழகன் மனநிறைவோடு பகிர்ந்துகொள்வது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுக்க முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம்ஜி பாத்திமா ரினூஸியா தயாரித்திருக்கிறார்.

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கும் ரணிலின் வருகை



**இலங்கையின் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றிருக்கிறார். நொந்து நூலாகிப் போயுள்ள இலங்கைப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தவே தான் பிரதமாரகப் பதவியேற்றதாகக் கூறியிருக்கிறார். அவரது பதவியேற்பின் ஏற்புடைத்தன்மை தொடர்பில் கடும் விமர்சனங்கள் நிலவுகின்ற போதிலும் இப்போது ஆட்சியிலிருப்போருக்கு இவரைவிட நம்பகரமான தெரிவு இருந்திருக்க வாய்ப்பில்லை.**

முன்னரும் பொருளாதார நிலைமைகள் சீர்கெட்டுப்போன பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர் தலையிட்டு நிலைமைகளை சீர்செய்து எதிரணியினருக்கு ஆடுகளத்தை சாதகமாக்கி விட்டு காணாமல் போயிருக்கிறார்.

சுதந்திர இலங்கையில் ஆட்சியமைத்த முதலாவது கட்சியின் தலைவராக கடந்த பொதுத்தேர்தலில் தனது ஆசனத்தையும் இழந்து தேசியப்பட்டியல் மூலம் தன்னைப் பாராளுமன்றில் உள்வாங்கிக் கொண்டவரென்று கடுமையான விமர்சனம் முன்வைக்கப்பட்ட போதிலும் பிரித்தானியாவின் வின்ஸ்டன் சேர்ச்சில் எவ்வாறு போர்க்காலப் பிரதமராகப் பதவியேற்றாரோ அதே பாணியில் தானும் சீரழிந்து போயுள்ள இலங்கைப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் சவாலான பணியை எற்று பதவியேற்றதாக ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும் போது கூறினார்.

பதவியேற்பின் பின்னர் கொள்ளுப்பிட்டி வாலுகாராமயவில் வழிபாடுகளை முடித்த பின்னர் அங்கிருந்த மதகுரு ஒருவர் முன்னைய அரசாங்கம் விட்ட பிழைகளை விடவேண்டாமென்றும் அவ்வாறு செய்தால் யானைகளும் பேரை வாவியில் குளிக்க வேண்டியேற்படுமென்ற நையாண்டி கலந்த எச்சரிக்கையையும் விடுத்தார். கங்காராமயவின் குருவொருவரும் இதே கருத்துப்பட ஆசி வழங்கியமையையும் காணமுடிந்தது. இரு பிரதான பௌத்த மதபீடங்களின் குருமாரும் எச்சரிக்கை கலந்த ஆசீர்வாதங்களை புதிய பிரதமருக்கு வழங்கினர். ஆகவே புதிய பிரதமரின் வருகையை இலங்கையின் பௌத்த குருமார் எச்சரிக்கை கலந்த விடயமாகவே பார்க்கின்றமை தெளிவாகத் தெரிகிறது.

ஒரு மாதத்திற்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டுவரும் 'கோட்டா கோ கம' வழங்கியுள்ள அனுபவங்கள் இதற்கு பங்களித்துள்ளன என்பது இரகசியமான ஒரு விடயமல்ல. ஒரு முழுமையான முறைமை மாற்றத்தைக் கோரி நிற்கும் இளைய சமுதாயத்தை இந்த ஆட்சி மாற்றம் எவ்விதத்திலும் திருப்திப்படுத்தாது என்பதை மதகுருமார் நன்கு அவதானித்த பின்னரே இவ்வாறான ஒரு எச்சரிக்கையை விடுத்திருக்கின்றனர்.

ஆனால் தனது பணி சிதைந்துபோயுள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதே என்று புதிய பிரதம மந்திரி மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். இவர் பதவியேற்ற மறுநாள் வெள்ளிக்கிழமை இலங்கையின் பங்குச் சந்தைச் சுட்டெண்கள் சடுதியான முன்னேற்றத்தைக் காட்டின. அத்துடன் நீண்ட நாட்களுக்குப்பிறகு இலங்கை ரூபாவிற்கு எதிராக டொலரின் பெறுமதியில் ஒரு வீழ்ச்சியையும் அவதானிக்க முடிந்தது. டொலர் ஒன்றிற்கு 390 ஆகக் காணப்பட்ட நாணயமாற்று வீதம் வெள்ளியன்று 365 ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.

இவ்விரு விளைவுகளும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றதனால் ஏற்பட்ட வர்த்தக நம்பகத்தன்மை மேம்பாட்டின் விளைவு என ஒரு சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். ஆனால் மத்தியவங்கி நாணயமாற்றுவீத வீச்செல்லை ஒன்றை அறிமுகப்படுத்தி வெளியிட்ட சுற்று நிருபம் ஒன்றின் விளைவினால் டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்ப்பட்டதாகக் குறிப்பிடுகின்றனர்.

ஆனால் இலங்கைப் பங்குச் சந்தை அரசியல் மாற்றங்களுக்கு உயர் உணர்திறன் கொண்டதாக இருப்பது தெரிகிறது. ஆகவே இவை இரண்டையும் நல்ல சமிக்ஞைகளாகக் கருதினாலும் எதிர்காலத்தில் டொலர் உள்வருகைகள் முறைசார்ந்த வழிகள் ஊடாக நாட்டுக்குள் அதிகரிப்பதன் மூலமே இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிக்க முடியும்.

புதிய பிரதமர் பதவியேற்ற உடனேயே இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் சீன ராஜதந்திரிமார் சந்தித்து வாழ்த்துக்களைக் கூறி இலங்கைக்கு தங்களது ஒத்துழைப்புகள் வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ளனர். இங்கிலாந்து அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன. மகிந்த ராஜபக்ஷ பிரதமராக தெரிவு செய்யப்பட்டவேளை மேலே குறிப்பிட்ட நாடுகளின் பெரும்பாலானவை மௌனம் காத்தமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பொன்றை தாபிக்க உதவி வழங்குமாறு இந்நாடுகளிடம் புதிய பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார். இது சாதகமாகப் பரிசீலிக்கப்படுமெனவும் தெரிகிறது. பாராளுமன்றத்திலும் கூட ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த செய்ய வேண்டியவற்றை விரிவாகப் பேசியிருக்கிறார்.

அப்போதெல்லாம் அதற்கு எதிராகப் பேசிய பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் அதே கட்சி அரசாங்கத்தின் பிரதமராக ரணில் முன்வைக்கும் பொருளாதார திட்டங்களுக்கு எவ்வாறு ஆதரவு வழங்கப் போகின்றனர் எனத் தெரியவில்லை.

பிரதான எதிர்க்கட்சியும் சுதந்திரக்கட்சியும் ஏனைய கட்சிகளும் புதிய அரசாங்கத்தில் பங்கு பற்றப் போவதில்லை எனவும் ஆனால் பொருளாதாரத்தை சீர்படுத்த புதிய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைக் குழப்பப்போவதில்லை எனவும் தெரிவித்துள்ளன. ஆனால் இலங்கை அரசியலில் கட்சித்தாவலைத் தடைசெய்யும் சட்ட ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் குரங்குச் சேட்டை காட்டுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாகவே தென்படுகின்றன.

> **'இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் அமைப்பொன்றை தாபிக்க உதவி வழங்குமாறு இந்நாடுகளிடம் புதிய பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார். இது சாதகமாகப் பரிசீலிக்கப் படுமெனவும் தெரிகிறது. பாராளுமன்றத்திலும் கூட ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த செய்ய வேண்டியவற்றை விரிவாகப் பேசியிருக்கிறார்'**

புதிய ஆட்சி மாற்றம் போத்தலின் மூடியை மட்டுமே மாற்றியுள்ளது. உள்ளடக்கம் உட்பட மற்றையவை யாவும் அப்படியே நலமாக உள்ளன. குறைந்தபட்சம் மக்கள் அன்றாடம் எதிர்நோக்கும் விலை அதிகரிப்பு பற்றாக்குறை நீண்டவரிசை, நீண்ட மின்வெட்டு போன்ற வாழ்வா சாவா என்ற போராட்டத்திற்கு முடிவுகாண ரணில் விக்கிரமசிங்க முயற்சிப்பார். அதற்கு மேற்குலக நாடுகளின் உதவியும் அனுசரணையும் கிட்டும். ஆனால் உடனடியாக எல்லாம் சரியாகி நிலைமைகள் வழமைக்குத் திரும்பிவிடும் என எதிர்பார்க்க முடியாது.

ஆயினும் ரணிலின் வருகை ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. இது நிச்சயமற்ற தன்மையைக் குறைக்கும். வர்த்தக நம்பகத்தன்மையை மேம்படுத்த உதவும். ஆனால் சர்வதேச ரீதியில் உலகப்பொருளாதார நிலைமைகள் இலங்கைக்கு இப்போது சாதகமானதாக இல்லை. குறிப்பாக நீண்டுசெல்லும் ரஷ்ய உக்ரைன் யுத்தம், எரிபொருள் விலை அதிகரிப்பு, மேற்குலக நாடுகளில் சடுதியாக அதிகரித்துச் செல்லும் பணவீக்கம், உலகப் பொருளாதாரத்தில் இப்போது அவதானிக்கப்படும் மெதுவடைதல் (slowdown) என்பன இலங்கைப் பொருளாதாரத்தின் மீட்சியை தாமதப் படுத்தலாம்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க புதிய அரசாங்கத்தின் முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் இப்போது மக்களால் வெறுக்கப்படும் பொதுஜன முன்னணி பொருளாதார வெற்றியைக் காரணம் காட்டி மீள மக்கள் மத்தியில் ஆதரவு தேடலாம். ஒருவேளை அம்முயற்சி தோற்றுப் போனால் அதற்குரிய பழியை தற்போதைய பிரதமர் கடைப்பிடித்த கொள்கைகளின் மீது போட்டு தப்பியும் விடலாம். போராட்டக்களக்காரர்கள் என்ன செய்வார்கள் என்பதைப் பொருத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ஜூனியர் மார்க்கோஸின் புதிய ஆட்சி மீண்டும் சர்வாதிகாரத்திற்கு வழிவகுக்குமா?

**பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற ஜனாதிபதி உப ஜனாதிபதிக்கான தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. முன்னாள் சர்வாதிகாரி பேடினன் மார்க்கோஸின் மகனான போங்பாங் மாக்கோஸ் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பிலிப்பைன்ஸ் தென்கிழக்காசியாவில் அமைந்துள்ள ஒரு தீவு. ஏறக்குறைய ஏழாயிரம் தீவுகளைக் கொண்ட நாடு. மேற்கு பசுபிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள பிலிப்பைன்ஸ் தென்சீனக் கடலாலும் பிலிப்பைன்ஸ் கடலாலும் அரணமைக்கப்பட்டுள்ள நாடாகும். சீனா, லாவோஸ், தாய்லாந்து, வியட்னாம், கம்போடியா, மலேசியா, இந்தோனேசியா, போன்ற நாடுகளை அயல்நாடாகக் கொண்ட தீவாகும். பிலிப்பைன்ஸ்ன் இரண்டாவது மிகப் பெரிய (லுசான்) தீவான மின்டானே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து நீண்டகாலமாக போராடியது. இக்கட்டுரையும் 36 ஆண்டுகளுக்குப் பின்னர் மார்க்கோஸின் மகனது தெரிவு பிலிப்பைன்ஸின் குடும்ப அரசியலையும் சர்வாதிகார அரசியலையும் கடந்து பயணிக்குமா என்பதை தேடுவதாக அமையவுள்ளது.**

மே 09 (2022) அன்று நடைபெற்ற தேர்தலின் முடிபுகள் மே11 இல் வெளியாகின அதன் பிரகாரம் பாங்பாங் மார்க்கோஸ் ஏறக்குறைய 31 மில்லியன் வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தனது வெற்றியின் பின்னரான உரையாடலில் ஊடகங்களுக்கு வெளியிட்ட செய்தியில் தனது குடும்பத்தின் கடந்த காலத்தை வைத்து தன்னை மதிப்பிட வேண்டாம் என உலகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளார். 1965 முதல் 1986ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த மார்க்கோஸ் மக்களது புரட்சியினூடாக ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டார். மார்க்கோஸ் குடும்பம் மீது பாரிய ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்ததுடன் ஏறக்குறைய 10 பில்லியன் அமெரிக்க டொலர் அரசாங்கத்தின் நிதியை மோசடி செய்ததாக குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருந்தது. இக்காலத்தில் பிலிப்பைன்ஸின் பொருளாதாரம் மிக மோசமான நிலையை அடைந்திருந்தது. ஏறக்குறைய இலங்கையின் இன்றைய நிலை போன்று காணப்பட்டது. அத்தகைய குடும்பத்திலிருந்து மீளவும் ஒருவர் ஆட்சியை பிலிப்பைன்ஸில் அமைத்துள்ளமை கவனத்திற்குரியதாகும். உலக வரலாற்றிலேயே அதிக மோசடி செய்த குடும்ப அரசியலாக அன்றைய காலப்பகுதியில் மார்க்கோஸ் குடும்பம் விமர்சிக்கப்பட்டது. இத்தகைய குற்றச்சாட்டை போங்பாங் மீட்பரா என்பதே இன்றைய கேள்வியாகும். அது மட்டுமல்ல சர்வாதிகார குடும்பங்களுக்கு மக்கள் ஆதரவு சாத்தியமாவது எவ்வாறு என்பதும் முக்கியமான கேள்வியாகும். இதனை சற்று விரிவாக நோக்குவது அவசியமானது.



முதலாவது ஜீனியர் மார்க்கோஸ் தந்தையார் விட்ட தவறை நிரப்பீடு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை அவ்வப்போது வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக தனது ஜனாதிபதி பிரச்சாரத்தின் போதும் வெற்றியின் பின்பும் அத்தகைய எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். சமூக வலைத்தளங்களில் அதிக பிரச்சாரங்களை நிகழ்த்தியுள்ளார். ஏறக்குறைய அவரது வெற்றிக்கு அடிப்படை சமூக வலைத்தளங்களாகவே விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். தனது குடும்பத்தை வைத்துக் கொண்டு தன்னை மதிப்பீடு செய்ய வேண்டாம் என்பதில் அதிக கவனம் கொள்ள முயன்றதனால் மாற்றங்களை பிலிப்பைன்ஸில் ஏற்படுத்தக் கூடியவராக ஆட்சி செய்யலாம் என்ற எதிர்பார்க்கை காணப்படுகிறது.

இரண்டாவது, அவரது ஆதரவாளர்கள் மார்க்கோஸின் ஆட்சிக்காலம் பெற்காலம் எனும் பிரச்சாரம் ஒன்றினை முன்னெடுத்தார்கள். அதனையும் சமூக வலைத்தளங்களிலேயே அதிகம் முதன்மைப்படுத்தினர். அதற்கான ஆதாரங்களை காட்சிப்படுத்தினார்கள். குறிப்பாக மார்க்கோஸின் முதல் ஆட்சிக்காலப்பகுதி வீதி அபிவிருத்தி உட்கட்டமைப்பு விருத்தி நெடுஞ்சாலைகள் விருத்தி என்பவற்றுடன் தொழில் துறையிலும் பொருளாதார அடிக்கட்டுமானத்திலும் அதிக கவனம் செலுத்தினார். வடக்கு லுசான் விரைவுப்பாதைத் திட்டம் மஹர்லிகா நெடுஞ்சாலைத் திட்டம் நாடு முழுவதையும் ஒரு தேசிய கட்டமைப்பாக மாற்றியது. தீவுகளை இணைப்பதிலும் மனிலா நகரத்துடன் பிராந்தியங்களை கட்டமைப்பதிலும் அதிக அக்கறை செலுத்தினார். வெளிநாட்டுக் கடனைக் கொண்டு உட்கட்டமைப்புத் திட்டங்களை வெற்றிகரமாக உருவாக்கிய போதும் அதனால் பணவீக்கம் அதிகரித்ததுடன் உள்நாட்டு உற்பத்திக்கான எந்தவித முகாந்திரமும் இல்லாத நிலை ஏற்பட்டது. இது அவரது இரண்டாவது காலத்தை அமைதியற்றதாக்கியது. இரண்டாவது ஆட்சிக்காலம் முடிவடைவதற்குள் 1972(9/23) இல் முறையற்ற விதத்தில் இராணுவச் சட்டத்தை கொண்டுவந்து ஆட்சியை நீடித்துக் கொண்டார். இதில் ஜீனியரின் ஆதரவாளர்கள் சீனியரின் பொருளாதாரத் திட்டங்களையும் அவர் ஏற்படுத்திய உட்கட்டமைப்பு வசதிகளையும் முதன்மைப்படுத்தினார்களே அன்றி அவரது தவறான ஆட்சி முறைகளையோ குடும்பத்தின் மோசடியையோ முதன்மைப்படுத்தவில்லை. அதனால் பிலிப்பைன்ஸ் மக்கள் வழித்துக் கொள்ள வேண்டியது அவசியமானது.

மூன்றாவது, மார்க்கோஸ் குடும்பம் நாடுகடத்தப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் பிலிப்பைன்ஸுக்கு திரும்பியதுடன் அரசியலில் தமது ஈடுபாட்டைக் வெளிப்படுத்த ஆரம்பித்தனர். 1992 இல் மார்க்கோஸின் மனைவி இமெல்டா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டார். போங்பாங் தொடர்ச்சியாக அரசியலில் ஈடுபட்டதுடன் ஏதோ ஒரு பதவியில் தொடர்ந்து காணப்பட்டார். ஏறக்குறைய 23 வது வயதிலிருந்து அவர் அரசியலில் ஈடுபாடு காட்டியதைக் காணக் கூடியதாக உள்ளது. குறிப்பாக, ஆளுனர் துணை ஆளுனர் பதவிகளை பெற்றதோடு கிலூங் பாகோங் லிபூனான் கட்சியின் உறுப்பினராகவும் முக்கிய பதவிகளிலும் காணப்பட்டார். ஜனாதிபதி கொரசான் அகினோஸ் காலத்தில் நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்ட ஜீனியர் மார்க்கோஸ் 1992 முதல் 1995 வரை மீளவும் இலோகோஸ் நோர்ட்டின் மாவட்டப் பிரதிநிதியாக இரண்டாவது காங்கிரஸில் தெரிவானார். இதே பிராந்தியத்தில் 1998 இல் ஆளுநராக தேர்ந்தெடுக்கப்பட்டார் 2010 முதல் 2016 வரை தேசியவாதக் கட்சியிலிருந்து செனட்டராக தெரிவானார். 2016 இல் துணை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்டார். அத்தேர்தலில் 0.64 சதவீத வாக்குகளால் தோல்வியடைந்ததனால் தேர்தல் தொடர்பில் தீர்ப்பாயத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். அதனால் மீள எண்ணப்பட்ட போது எதிர்த்து போட்டியிட்ட துணை ஜனாதிபதி ராப்ரெட்டோ அதிக வாக்குகளால் முன்னிலை பெற்றார். . (15.93) 2021 இலேயே ஜுனியர் மார்க்கோஸ் ஜனாதிபதி தோர்தலில் போட்டியிடப் போவதாக அறிவித்தார்.


நான்காவது பிலிப்பைன்ஸின் இயல்பான அரசியல் கலாசாரம் அதிக வன்முறையைக் கொண்டது. குறிப்பாக மார்க்கோஸ் மட்டுமல்ல பிலிப்பைன்ஸ்ஸை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் அனைவரும் வன்முறையை அதிகமாக பிரயோகித்தவர்கள். குறிப்பாக மின்டானே விடுதலைப் போராட்டத்தை இராணுவ அடக்குமுறையினாலேயே முடிவுக்கு கொண்டுவந்தனர். அதன் பின்னர் மேற்கு கலாசாரத்தினால் ஏற்பட்ட போதைப் பொருள் பிரயோகத்தால் பிலிப்பைன்ஸின் இருப்பே காணாமல் போயுள்ளது. அதனை தடுக்க கடந்த கால ஆட்சியாளர்களில் ரெட்றிகோ இராணுவச் சட்டத்திற்கு நிகரான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார். அச்சத்தையும் கொலைக்கலாசாரத்தையும் சட்டரீதியாக அரங்கேற்றியதுடன் சர்வதேச நாடுகளின் ஒப்புதலையும் பெற்றிருந்தார். அதனால் பிலிப்பைன்ஸ் எப்போது வன்முறையை தொடர்ச்சியாக கொண்டிருக்கும் நாடாகவே தெரிகிறது.

ஐந்தாவது, பிலிப்பைன்ஸின் அமைவிடம் தீவாகவும் அரசியல் கேந்திரமாகவும் சீனா இந்தோனேசியா வியட்நாம் போன்ற நாடுகளது அரசியலாலும் அதிகம் பாதிக்கப்படும் நாடாகவுள்ளது. அது மட்டுமன்றி மேற்கு நாடுகளுக்கும் சீனாவுக்கும் உள்ள போட்டித்தன்மையும் தென் சீனக்கடலைப் பொறுத்த பிராந்திய நாடுகளுக்கான இழுபறியும் அதிக அரசியல் நெருக்கடியை பிலிப்பைன்ஸுக்கு ஏற்படுத்திவருகிறது. அதனால் பிலிப்பைன்ஸின் சட்ட ஒழுங்கும் இராணுவவாதங்களும் பலமான ஆட்சியும் அவசியமானதாக அமைவதுடன் அதன் புவிசார் அரசியலை கையாளும் திறனும் உத்திகளும் தவறும் பட்சத்தில் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு ஆட்சியாளரால் இயல்பாகவே அரங்கேற்றப்படுகிறதைக் காணமுடிகிறது. மொத்தத்தில் இலங்கைத் தீவுக்குரிய அதேயளவான ஆனால் வேறுபட்ட புவிசார் அரசியல் நியமங்கள் பிலிப்பைன்ஸுக்கு உண்டு. மார்க்கோஸ் பாணியில் இலங்கை ஆட்சியாளர்கள் செயல்படுவதையும் நினைவு கொள்வது பொருத்தமானதாக அமையும்.

எனவே பிலிப்பைன்ஸின் புதிய ஜனாதிபதி வோங்வாங் மார்க்கோஸ் மீளவும் மார்க்கோஸ் பாணியில் ஆட்சியை தொடருவரா அல்லது தனித்துவமாக மாற்றங்களை ஏற்படுத்துவரா என்தே முக்கியமானது. அவர் தந்தையின் செயல்களுக்கு மன்னிப்போ அரசாங்கத்திற்கு இழைத்த மோசடிக்கு பதிலீடோ செய்யாத வரை அவரது ஆட்சியின் எதிர்காலத்தை பற்றிய எச்சரிக்கைகளே மிச்சமாகவுள்ளது. மீண்டும் மார்க்கோஸ் பாணியில் பிலிப்பைன்ஸ் ஆளப்படும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை என்றே தோன்றுகிறது. இதற்கு வலுவான காரணம் ஒன்று காணப்படுகிறது. அதாவது சீனியர் மார்க்கோஸின் ஆட்சிக்காலம் பொற்காலம் என அடையாளப்படுத்திய வீடியோக்கள் அனைத்துமே திரிபுகளைக் கொண்டதென பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழக தகவல் தொடபாடல் துறையைச் சேர்ந்த பாத்திமா ஹான் எனும் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார் ஜுனியரது வெளியுறவுக் கொள்கையும் உள்நாட்டுக் கொள்கைகளையும் பொறுத்தே அதில் ஏற்படவுள்ள மாற்றத்தை காணமுடியும்.



# மஞ்சரி களஞ்சியம்



## வாழ்வாதாரமா சேதாரமா 223



தமிழ்க் கவி பேசுகின்றார்

# மக்கள் மாக்களாவது எப்படி?

மக்கள் மாக்களாக மாறிவருகின்றனர். தம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற நினைவு அநேகருக்கு இருப்பதில்லை. ஆனால் மந்தைகளாக மக்கள் மாறிவிட்டால் எல்லாமே நாம்தான் என்ற எண்ணம் வந்துவிடுகிறது. வாழ்க்கையை வாழத் தகுதியற்றவர்களாக சிறீமான் பொதுசனம் மாறிக் கொண்டிருக்கிறார்.

இப்போது சிறீலங்காவில் எரிபொருள் தட்டுப்பாடா? இல்லவே இல்லை மக்கள் தமது சொந்த சொத்துகளை தீவைத்துக் கொளுத்தும் அளவுக்கு எரிபொருள் நிறைந்திருந்திருக்கிறது. ஆனால் பொதுமக்கள் கொளுத்தும் வெய்யிலில் எண்ணைக்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்திருக்கிறார்கள். என்ன ஒரு முரண்பாடு. மனிதவளம் தேவையற்ற வழிகளில் செலவாகிக் கொண்டிருக்கிறது. ஒரு குடும்பத்தில் ஒருவருடைய உழைப்பு இரண்டொருநாள் நின்றுவிட்டாலே அந்த வீட்டில் பல கஸ்ட நட்டங்கள் வருவதுண்டு. பொருளாதாரம் சிக்கலாக உள்ள இந்த நேரத்தில் உழைப்பும் நின்றால் அந்தக் குடும்பம் என்னவாகும். கணவன் மனைவியரிடையே விவாகரத்தாகுமளவுக்கு பிரச்சினைகள் வரத்தான் செய்யும்.

ஒரு தனிமனிதன் தனது தொழிலுக்காக குடும்பத்தை விட்டு வெளியூரில் வேலைசெய்தால் அவன் தனது உணவுத் தேவையை நிரவல் செய்யபெரும் கஸ்டத்தை எதிர் நோக்குகிறான். பெரும்பாலும் அநேக உணவு விடுதிகள் பூட்டப்பட்டு விட்டன. இதனால் ஏராளமானோர் தொழிலை இழந்துள்ளனர். எதிர்பாராமல் நடக்கும் அசம்பாவிதங்களும் ஊரடங்கும் மக்களின் வாழ்க்கையை கேள்விக்குள்ளாக்கிவிட்டது. எப்படியாவது இந்த மண்ணைவிட்டு ஓடித் தப்பிவிட வேண்டும் என்று பேசினார் ஒருவர்.

அகதி வாழ்க்கை உலகம் முழுவதற்குமே சர்வ சாதாரணமாகி விட்டது. இது எனது காணி. இந்த ஊர் எனது ஊர் என்ற கதையை இன்னும் மிகச்சிலரே வைத்திருக்கின்றனர். 'ஒ அந்த ஊரா அதுதான் எங்கட பூர்வீகம் எண்டு அம்மா சொல்லியிருக்கிறா நான் அங்க போனதில்லை'என்று பெருமை பேசுவொரே இப்போது அதிகம்

அண்மையில் வவுனியாவை விட்டு அருகில் மன்னாரில் தொழில் செய்யும் ஒருவர் தனது சம்பளப் பணத்தில் வீட்டுக்காக இருபதாயிரம் மட்டுமே கொடுத்துள்ளார். அவரது சம்பளம் எண்பதாயிரமாம். அவரது மனைவிவேலைக்குப் போகிறாள் ஆனால் அதற்கும் பெருமளவு செலவுகள் காத்திருக்கிறது. எனவே சண்டையாகிவிட்டது. 'நீ எனக்குவேண்டாம். நானே பார்த்துக் கொள்கிறேன் எனக்குவிவாகரத்து வேண்டும்'என்று கூறிவிட்டாள். இது ஒருதடவையல்ல என்றாலும் அவன் அழுகிறான். 'நான் என்ன செய்யலாம் நான் மூன்றுவேளைகூட சாப்பிடவில்லை. இரண்டு வேளைதான் சாப்பிடுகிறேன். ஒரு தேநீரின் விலையே நூறு ரூபாவாகிவிட்டது. இதில் காலை உணவை உண்ணவே இருநூற்றுக்குமேலாகிறது. அவன் புகைபிடிக்கும் பழக்கமற்றவன். ஆனால் அவன் தங்கியிருக்கும் அறைக்கு வாடகை செலுத்தவேண்டும். அன்றாடம் தொலைபேசியிலேயே செய்திகள் கடிதங்கள் இன்னும் பல்சுவைவிடயங்களையும் பார்த்துவிடுவதால் அதற்கும் இருநூறு ரூபாதேவை. மாதமுடிவில் என்னிடம் இவ்வளவு இருப்பதே அதிகம் என்கிறான். ஒரு தனிமனிதன் வாழ அதுவும் சாதாரணமாக வாழ அறுபதாயிரம் ரூபாக்கள் தேவை. அன்றாடம் கூலிசெய்பவனுக்கும் இன்றைய நிலையில் கூலி இரண்டாயிரம் முதல் இரண்டாயிரத்து ஐநூறு என்றாகிறது. அவனுக்கு மனைவி பிள்ளைகளும் இருப்பதால் அவனது வாழ்க்கை திட்டமிடப்பட்டு நடத்தப்படுகிறது. அப்படியும் அவனுக்கும் பாடசாலை வைத்தியம் என செலவுகள் மேலதிகமாக வந்து விடும். வீட்டில் ஒரு வயோதிபரும் இருந்துவிட்டால்...அதையும் கணக்கில் சேர்த்தால் இன்னும் அதிகமாகிவிடும்.சிற்றுண்டிச்சாலைகளும் லாபம் கருதி நடத்தப்படுபவைதான்.

போர் நடந்த காலத்தில் சுமைதூக்கிக் கொண்டு காலையிலிருந்து காடுகள் நீர் மோட்டைகள் சேற்றுநிலங்கள் என நடந்து களைத்து வழியில் இளைப்பாறும் போது ஒருதேநீர் குடித்தால் நல்லது என நினைத்தபோது,தேநீர்க்கடை இருந்தது. ஆனால் சிற்றுண்டி எதுவுமில்லை. அதன்பின் அடுத்த இடப்பெயர்வுக்காக வேறிடம் போனபோது உணவு விடுதியில் கறிமட்டும் வாங்கிவீட்டில் ரொட்டி சுட்டு சாப்பிட்டோம். ஏனெனில் கறிக்கான மூலப்பொருட்கள் தனியாரிடம் இல்லை. அந்தக் கடைகளும் பொக்கணையோடு மூடப்பட்டுவிட்டன. அதுவும் நின்றுபோய் களைத்துவிழும் வழியில் குடிதண்ணீர்கூட கிடைக்காமல் அல்லாடியிருக்கிறோம். உணவுவிடுகள் முக்கியமானவைதான். அத்தியாவசியமானவைதான். ஆனால் அதை இப்படியான சூழலில் நடத்த தனித் துணிவுவேண்டும். அவர்களும்தான் என்னசெய்வார்கள். வழிதெரியாமல் கொழும்பில் சென்று மாட்டிக் கொண்ட தொழிலாளர்கள் பல மைல்களை கடந்து சிறிதளவு உணவைப் பெற்றதாக இணையதளங்களில் பகிர்ந்துகொள்கிறார்கள்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டுபின் செல்பவர்.' என்ற மொழி எனக்கு நினைவுக்கு வந்தது. அவர்களுக்கும் போதிய நிலமிருந்தது. ஆனால் சட்டைக் கொலரில் அழுக்குப்படாமல் கழுத்துப்பட்டியும் கட்டிக்கொண்டு பார்க்கும் வேலைக்குஆசைப்பட்டால் இப்படித்தான். பெரும்பாலான இளைஞர்களை பெற்றோரே நிலத்தில் இறங்கிவேலை செய்ய அனுமதிப்பதில்லை. 'மண்டணைக் கிண்டி சீவியம் நடத்திறது எங்களோடபோகட்டும் நீயும் ஏன் இதுக்க வாறாய் நீயெண்டாலும் ஒரு உத்தியோகம் பாக்கபடி. இல்லை வெளிநாட்டுக்குப் போமகனே' என்பவர்களைத்தான் காண்கிறோம்.

இரண்டு ஏக்கர் நிலமிருக்கும் ஒருவர் சொன்னார் 'எனக்கு அரிசி இருக்கிறது. மரக்கறிகளை நட்டிருக்கிறேன். அயலவர்களுக்கும் கொடுக்கிறேன். கோழிமுட்டையிடுகிறது மாடுதான் வளர்க்கவில்லை. அதுவும் அயலில் சிலரிடம் இருப்பதால் முட்டையைக் கொடுத்து பசுப்பாலை வாங்கமுடிகிறது.'என்று.இம்முறை மழையும் விடாமல் பெய்து வளம் சேர்க்கிறது. விவசாயத்துக்கு தேவையான பசளையும் கிடைத்திருந்தால் இந்த அரிசிப் பஞ்சம் கூட வந்திருக்காது.

இலங்கையின் இன்றைய தேவைபணம் பணம் பணந்தான். அதை எவ்வளவு குவித்து வைத்திருந்தாலும் திருப்தியாக வாழமுடிவதில்லை. அநேகமான உற்பத்திகள் ஸ்தம்பிதமடைந்து போய்விட்டன. நாட்டுப்புற மக்கள் தமதுகோழி ஆடு போன்ற கால்நடைகளை கொண்டுவந்து அறாவிலைக்கு விற்றுவிட்டுப் போகிறார்கள்.இதற்கு பணத்தேவை மட்டுமல்ல காரணம். அவற்றுக்கு தீவனம் வைத்துக் கட்டுப்படியாகாது. என்பதும்தான். முட்டைக் கோழிகளை நான்கு மாதம் வளர்த்தவர் அது முட்டைபோடும் தருணத்தில் விற்கிறார். தீவனம் அந்தளவுக்கு விலையாகிவிட்டது.

உண்மையில் நாம் பொருளாதாரக் கஸ்டத்தில் இருப்பதாகத்தான் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.ஆனால் நாமாக எவ்வளவு விடயங்களை விரயம் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உணரவில்லை. ஒருவருக்கு நோய் வந்துவிட்டது என்பதற்காக அவரை வீட்டிலிருந்து துரத்திவிட்டால். அந்த நோய் நாடுமுழுதும் பரவத்தான் செய்யும். அதுபோல வறுமை இயலாமை என்பவையும் நமக்குள் வைத்துப் போக்காமல் வெளியே பரவ அனுமதிக்கக் கூடாது. ஆனானப்பட்ட கொரனாவையே தனிமைப்படுத்தித்தான் அழித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் மனிதமனங்களில் விழுந்த பெருவிரிசலால் அப்பாவிமக்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தனிமனிதனால் சிந்தித்துசெயலாற்ற முடியும் அவனே குவியலாகிவிட்டால் மந்தைதான். மக்கள் மாக்களாவது இப்படித்தான்.

## லண்டனில் மலையக இலக்கிய மாநாடு



லண்டனில் மலையக இலக்கிய மாநாடு நடத்துவதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. மலையகத் தமிழர்களின் வாழ்வு, கலாசாரம், கலைகள் சார்ந்து பல நிகழ்ச்சிகள் இதில் அரங்கேறவிருக்கின்றன.

இம்மாநாட்டின் ஒரு பகுதியாக கோகிலம் சுப்பையா அரங்கு, இர.சிவலிங்கம் அரங்கு, சோ.சந்திரசேகரம் அரங்கு, சி.வி.வேலுப்பிள்ளை அரங்கு, தமிழோவியன் அரங்கு, சாரல் நாடன் அரங்கு, காத்தாயி அரங்கு என ஏழு அரங்குகளில் 23 மலையக நூல்கள் அறிமுகமாக இருக்கின்றன.

புனைவு இலக்கியத்தைப் பொறுத்தமட்டில் அல்அஸூமத், மாத்தளை சோமு, ஆகியோரின் நாவல்களும் மு.சிவலிங்கம், பிரமீளா பிரதீபன், பதுளை சேனாதிராஜா, தங்கவேல் ஆகியோரின் சிறுகதைகளும் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அமரர் உபாலி லீலாரட்னா எழுதிய சிங்கள நாவலின் தமிழாக்கமான இரா.சடகோபனின் 'தேத்தண்ணி' முக்கிய மொழிபெயர்ப்பு நாவலாக ஆய்விற்குத் தேர்வு பெற்றிருக்கிறது. எஸ்தர், வண்ணச்சிறகு (அரு.சிவானந்தன்) ஆகியோரின் கவிதைத் தொகுப்புகளும் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

பி.ஆர்.பெரியசாமி, ச.கீதப்பொன்கலம், ந.சரவணன், மல்லியப்பு சந்தி திலகர், வரதன் கிருஷ்ணா, எம்.வாமதேவன், கந்தப்பளை தாமரை யு.யோகா ஆகியோரின் சமூக, அரசியல் நூல்களும் இம்மாநாட்டில் முக்கிய கவனம் பெறவிருக்கின்றன. சோ. சந்திரசேகரம் , மு. நித்தியானந்தன், பொன். பிரபாகரன் ஆகியோரின் ஆய்வுநூல்கள் மீதான விமர்சனங்களும் உள்ளன.

மைத்ரி ஜெகதீசனின் தேநீரும் புரிந்துணர்வும் (*Tea and Solidarity*), யோகேஸ்வரி விஜயபாலனின் முடிவில்லா சமத்துவமின்மை (*Endless Inequality*) ஆகிய இரு ஆங்கில ஆய்வு நூல்கள் மீதான விமர்சனங்களும் இந்நிகழ்வில் இடம்பெறவுள்ளன. மெய்வெளி நாடக அரங்கிற்காக சாம் பிரதீபன் தயாரித்தளிக்கும் 'காத்தாயி காதை' என்ற நாடகம் இம்மாநாட்டில் அரங்கேறுகிறது.

முக்கிய நிகழ்வாக மு.நித்தியானந்தன், ஹெச்.ஹெச்.விக்ரமசிங்க தொகுத்து வழங்கும் சி.வி.வேலுப்பிள்ளையின் 'மலையக அரசியல் தலைவர்களும் தளபதிகளும்' என்ற நூல் இம்மாநாட்டில் வெளியிடப்படவிருக்கிறது. பிரிட்டன், ஜெர்மனி, நோர்வே, டென்மார்க், பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து 25 உரைஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். விம்பம் அமைப்பின் சார்பில், ஓவியர் கே.கிருஷ்ணராஜா மலையக இலக்கிய மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்பை மேற்கொள்கிறார்.



# சமரசமற்ற விமர்சனத்தை முன்வைக்கும் எழுத்தாளர் மணா!

## மணாவின் பத்து நூல்கள் சென்னையில் வெளியீட்டு விழா!

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர் – ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பத்திரிகையாளர் மணா எழுதிய பத்து நூல்கள் மே 5ஆம் திகதியன்று வெளியிடப்பட்டன.

டாக்டர் எம்.ஜி.ஆர் – ஜானகி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தலைவரான முனைவர் குமார் ராஜேந்திரன் தலைமையில் நடந்த விழாவில், வழக்கறிஞர் கே.எஸ்.இராதாகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவனும், இந்தியப் பொதுவுடமைக் கட்சியின் மாநிலத் தலைவர்களில் ஒருவரான சி.மகேந்திரனும் கலந்து கொண்டார்கள்.

மணா பதிப்பாசிரியராகப் பதிப்பித்த ‘முள்ளிவாய்க்கால் – குருதி தோய்ந்த குறிப்புகள்’ என்ற நூலை தொல். திருமாவளவனும்,







‘உயிருக்கு நேர்’ என்கிற மொழிப்போராட்ட வரலாற்று நூலை சி.மகேந்திரனும் வெளியிட்டுப் பேசினார்கள்.



தொடர்ந்து தமிழகத்தில் உள்ள முன்னணி ஊடகவியலாளர்களான சன் நியூஸ் செய்தியாசிரியர் குணசேகரன், புதிய தலைமுறை கார்த்திகேயன், கல்கி ப்ரியன், அருஞ்சொல் ஆசிரியர் சமஸ், வழக்கறிஞர் சுமதி,

சுந்தரபுத்தன், சத்தியம் டிவி அரவிந்தாக்சன், அறம் ஆசிரியர் சாவித்திரி கண்ணன், இயக்குநர் ராசி அழகப்பன், ஜீவா டுடே ஜீவசகாப்தன், மக்கள்தொடர்பாளர் ராம்குமார் சிங்காரம், நியூ புக்லேண்ட்ஸ் சீனிவாசன், டிபிஜி பாலாஜி போன்றவர்கள் நூல்களை வெளியிட்டும், பெற்றுக் கொண்டும் பேசினார்கள்.

தொடர் 15ஆம் பக்கம்...

தொகுப்பு
எச்.எச்.விக்ரமசிங்க












## அம்மாவுக்கான வாழ்த்து!

பொத்துவில்
அஜ்மல்கான்

புன்னகையினால் மிதக்க
வைத்து, கண்ணீரினால்
வாழ்ந்து போனவளுக்கான
வரிகள் இது...

அழகு முகம்
காண ஆசையாய்
உள்ளது அகிலம்
இதுவென காண்பித்து
சென்றவள் என்பதனால்...

உரக்கத்தினை ஓரந்தள்ளி
ஓராயிரம் சுமைகளையும்
எனக்காக ஒதிக்கி
வைத்துப் போன
தேவதை அவளே.

அரவணைத்து போனதால்
அகம் மகிழ்ந்து
போனது யுகம்
கடந்து போனாலும்
மறந்தும் இழந்தும்
போக முடியாத
சொந்தம் நீ
என்பதால்.

வரிகளுக்காய் வர்ணித்துப்
போகவில்லை நீ
மரணித்துப் போனாலும்
இழந்து போகாத
பந்தமாய் நீ
இருக்கையில்...

அகிலங்களை காண்பித்து
அன்பினை என்னுல்
விதைத்து விட்டவளுக்கு
என் அன்பான
வாழ்த்து!

## தடம் மாறிய உள்ளங்கள்...

நுஸ்ரத் மஹ்ரூப்f
மாதம்பை

தடம் மாறிய உள்ளங்கள்
தம் தவறை உணர்வது
தாமதித்துத்தான்...

தங்கு தடையின்றிக் கிடைத்த
அன்பை விட ...
தவறாய் கிடைத்த
அன்பால் வந்த வினை
தன்னைக் கொல்லுமே...

ஆயிரம் காரணங்கள் கூறி
அசிங்கங்களை அரங்கேற்றிவிடலாம்....
அழகு மங்கி..
அங்கம் தொய்யும் நேரம்
அரவணைத்த கரங்கள்
தூரம் போயிருக்கலாம்...

நீரோடையாய் போன வாழ்வு
நீண்டு போயிருக்கனுமே...
நின்று நிதானித்து
நீ போயிருந்தால்..
நின்ற பந்தம்
நீண்டு போயிருக்குமே...

சிக்கலின்றிய சிலரைத்தான்
காட்டமுடியுமா...
சில்லறை முடிவுகளால்
சிக்கல்களை சீராக்கிடலாமா...

பூரணத்துவம் இறை பண்பு...
அதை
உன் சரிபாதியாய் வாய்த்தவனி(ளி) டம்
எதிர்பார்ப்பதில் யாது நியாயம்...
அங்கங்கே குறைகள் இருக்கத்தான்
செய்யும்...

இந்த வாழ்வில்
இறுதித்தவணை
இயல்பாகவே உண்டு...
இன்பம் முற்றி
இனிமை காண்பது
இல்லற வாழ்வில்
இறுதிப்பாகத்தில் தான்...

ஆதலால்.....

இறுகப்பற்றிக் கொள்வோம்
இணையவனி(ளி)ன்
இரு கரங்களையும்
இறுதிவரை...

ஏனைனில்....

தடம் மாறிய உள்ளங்கள்
தம் தவறை உணர்வது
தாமதித்துத் தான்...

## யாரும் வரவேண்டாம்

இணுவில் வாகீசன்

பெற்றோல்வரிசையிலோ
சமையல் வாயு வரிசையிலோ
நிற்கக்கூடும்

குழந்தையின் மருந்துக்காகவோ
வைத்தியசாலை விடுதிகளிலோ
மருத்துவ சேவைக்காக
காத்திருக்கலாம்

அலுவலக கடமையில்
லீவு கிடைக்காமல் இருக்கலாம்

போக்குவரத்து வசதிகளும்
இல்லாமலிருக்கலாம்

நான் வரவில்லை என்பதற்காகவும்
நீங்கள் வராமல் இருக்கலாம்
நீங்கள் வந்தது வராதை
நான் ஒருபோதும்
அறியப்போவதில்லை

எனக்கு யாரும்
சொல்லப்போவதும் இல்லை

ஆதலால்
இதுவரை என்னிடம் வராதவர்கள்
இனியும் வரவேண்டாம்

இது என் மரண ஊர்வலம்

## புதிய திருப்பம்!

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்.

தூங்கச் செல்
நாளை விடியும் என்று
கனவு கொள்
ஓர்நாள் நடக்கும் என்று
துணிந்து செல்
உன்னால் முடியும் என்று
போட்டியிடு வெற்றி
உனதே என்று
நேர்மை கொள்
அவணி பிறக்கும் என்று
நீதி செய்
அநீதி அழியும் என்று
உவலை களை
வரிய உயிர் வாழும் என்று
இறைத்து கொடு
யாசககை உயரும் போது
திருத்திக்கொடு

தவறு தழைக்கும் போது
தட்டிக்கேள்
உரிமை மீறும் போது
வலிமை கொள்
வன்மை சுடும் போது
சிந்தைக் கொள்
சுழிபேதம் சுழலும் போது
உறுதி கொள்
உபாதை தீண்டும் போது
எதிர்த்து நில்
எதிரி விழிக்கும் போது
எழுந்து நில்
தோல்வி துரத்தும் போது
நம்பிக்கை வை
வாழ்வில் வெற்றி உண்டு
முழுமனதாய் முயற்சி செய்
இறைவன் உதவி உண்டு

## சித்தன் புலம்பல்

ரதிதேவி, மானிப்பாய்

இரவின் மேகங்களுக்குள்ளிருந்து
கசிகிறது நிலவொளி
கண் இமைகள் மூடித்திறக்கும் ஒரு கணத்தில்
மறைகிறது பறவைக்கூட்டம்

இந்த பூமியின் சோகங்கள் துயரங்கள் யாவும்
ஒரு புள்ளியில் குவிகின்றன
அப்புள்ளி கொடூர வெப்பநிலையில் கொதிக்கிறது
அப்படி ஆயிரம் பிரபஞ்சங்களின்
அத்தனை துயர்களும்
இன்று இரவு வானின் ஆபரணமாய் மிளிர்கின்றன

யார் அறிந்தார்
இந்தத் துயரங்களே விதைகள் என்று

ஒளியின் நடனத்தில் பார்வையும்
காற்றின் நடனத்தில் மொழியும்
மொழியில் நின்று மனமும்
மனத்தில் நின்று அர்த்தமும் உணர்ச்சிகளும் தோன்றின

ஆனால் சிசு கருவறையை உதறி விட்டுக்
குதிக்கவேண்டியது எவ்வாறு நியதியோ
என் பூமித்தாயின் வயிற்றில்
ஓங்கி உதைத்துவிட்டே
நான் முக்தி அடைகிறேன்
எனவே மோட்சத்தைப்போல்
கொடூர பாவச்செயல்
இல்லை எனலாம்

அன்பே வேராக
என்னை இன்னும் இப்பூமியோடு
இழுத்துவைத்துள்ளது
உண்மையான புவியீர்ப்பு

என் கிளைகள்
பெரும் பருந்தின் இறக்கைகளாக விரிகின்றன
என் இலைகள்
சூரியனைக் குடித்துக் குடித்து எரிகின்றன
அலைகள் என் காலடியை ஈரம் செய்கின்றன
மௌனம் என் மனதை மூழ்கடிக்கின்றது
மரணம் என் வாசலில் காத்து நிற்கின்றது
முடிவின்றி இப்பிரியாவிடை தொடர்கின்றது
ஓம் நமசிவாய



## என் விழிகள்

என். பாரத்,
மானிப்பாய்

விழிகளே
அவளது விழிகளில்
விழித்துக் கொள்ளாதீர்கள்
விழித்தாள்
விழித்ததும்
கண்ணீர் துளிகளை
பரிசளிப்பாய்
நித்தமும்
விழிகளே
விழித்துக் கொள்ளாதீர்கள்

## மஞ்சள் புஷ்பம்

எம்.எஸ்.முஹம்மது ஸனீஜ்
மருதமுனை

காலை வேளையிலே
கருமுகில் நிழலிலே
கறுப்பின் நடுவே
கடைக்கு முன்னே
கடைசியில் வந்தாய்
என்னைக் கவனி என்று
மஞ்சள் புஷ்பமே.....

## சுகமோ சுகம்

என்.கே. வேணி,
பலாங்கொடை.

மயக்கும் மாலை
நேரம் இளம்
தென்றல் இதமாய்
வீச மாலை
மஞ்சள் வெயில்
மனதை மயக்க
அந்தி மலர்கள்
எழிலால் இதழ்
விரித்து
நறுமணம்
பரப்ப மனதில்
இனிமையான
காதல் நினைவுகளுடன்
காத்திருப்பதும் சுகமே

நீலவானில் பவனி
வரும் பொன்
நிலாவை மல்லாந்து
படுத்து பார்த்து
ரசித்து மனதுக்கு
பிடித்த இனிய
நினைவுகளை நெஞ்சினிலே
மீட்டிப் பார்ப்பதும்
இதமான சுகமோ
சுகம்

கார் முகிலுக்குள்
ஒழிந்து விளையாடும்
வெண்நிலா வெளியில்
வரும்வரை கண்களை
மூடி காதல்
எண்ணங்களை களிப்புடன்

நினைந்து நினைந்து
காத்திருப்பதும்
சுகமோ சுகம்

ஈரமான காதல்
நினைவுகளை இதயத்தில்
பூட்டி வைத்து
நினைவலைகளில்
மூழ்கி நீந்துவதும்
சுகமே

கனியாத காதலை
எண்ணி எண்ணி
இதயச் சுமைவுடன்
காதலில் கசிந்துருகி
காத்திருப்பதும்
சுகமோ சுகம்



## தாயவளின் தியாகங்கள்

அறூபா அஹ்லா
கல்முனை

தாயவளின்
தியாகங்களுக்கு
எது இங்கு ஈடு?

ஈன்றெடுக்க முன்
சுமைதாங்கியது
அவள் வயிறு...
ஈன்றெடுத்த பின்
ஈன்றவளே சுமை
தாங்கியாகிப்
போனாளே...

வாயும் வயிறுமாய்
வலிகளைத்
தாங்கினாள் அன்று...
கரைசேர்த்திட
கரையானாய்
உழைக்கிறாள் இன்று...

அரச குலத்திலா
பிறந்தது அவள் மகவு?
ஆனால்
அரச குழந்தையாய்
வளர்த்தெடுத்தாளே தாயவள்...

மகவின் மகிழ்வில்
மனம் மகிழ்ந்தாளே...
குழவியின் குறும்பினில்
கவலைகள் களைந்தாளே!

அகவைகள் அறுபது
அவளுக்கு ஆனாலும்
குழந்தைகள் குமரிகளாய்
வளர்ந்தாலும்
ஈன்றவளின் பார்வையில்
மகவுகள் தானே அவளுக்கு...

தெவிட்டாத பாசத்தை
தொடரிலியாய் கொடுப்பாளே...

குமரியாய் இருக்கையில்
குதூகலமாய் மகிழ்ந்தவள்
தாயான பின்னே
தாரை வார்த்தாளே
அவள் வாழ்க்கை முழுதையும்
ஈன்றெடுத்த தன் மகவுகளுக்காய்...

தாயவளின் தியாகங்களை
ஒற்றைச் சொல்லுக்குள்
சுருக்கிடத்தான் முடியுமா???



## எழுதுகோலின் உணர்வு

அ. ஜெகன்
சுவிஸ்

உன் மீதான
காதல் காலத்து
நினைவுகளை
நான் எழுதும்
போதெல்லாம்
மகிழ்வு கொள்ளும்
என் எழுதுகோலில்
இருந்து வரும்
எழுத்துக்கள்
அழகாகவும்

நீ விடை பெற்றுச்
சென்ற பின்பான
வலிகளைச் சுமந்த
என் இதயத்தின்
நினைவுகளை
எழுதும் போதெல்லாம்
கண்ணீரை மையாக்கிய
பேனாவின் எழுத்துக்கள்
தன் அழகை இழந்தும்
வெளி வருகிறது

என் உணர்வுகளை
வெளிக் கொண்டு
வரும்
எழுதுகோலின்
வெளிப்பாடே
நடந்த கதைகளையும்
அதை கடந்த
கதைகளையும்
காட்டி நிற்கிறது

நான் என்னுள்
கொண்டிருக்கும்
மௌனங்களையும்
தாண்டி
என் கதைகளை
வெளிக் கொண்டுவரும்
எழுதுகோல்
வலிமையானதாக
எப்பவுமே எனக்கு

நான் சொல்ல
மறந்த கதைகளையும்
மறைத்த கதைகளையும்
சில பக்கங்களில்
பதிவு செய்து விடுகிறது
காலம் அதனை
வெளிக் கொண்டு
வரும் என்ற
நம்பிக்கையில்

யாருடனாவது நான்
கோபங்களைத்
தவிர்ப்பதற்காக
நேரிடையாக சொல்லத்
தவிர்ப்பதை
எழுதி வைத்து
என்னை அமைதிப்
படுத்துகிறது

என் உணர்வுகள்
சுமந்திருக்கும்
சுமைகளை
தான் சுமந்திருந்து
வெளியில் தரும்
எழுதுகோலின்
உணர்வும்
என் நம்பிக்கையே

## போரை நிறுத்தி பொது நலன் காப்போம்!

கலாபூஷணம் கீழ்கரவை
குலசேகரன் அப்புத்தளை

அதிகார வெறியாலே
அகிலம் எங்கும்,
அனுதினமும் போராட்டம்
நடப்பதனைப் பாரீர்!
உதிரத்தைச் சிந்தியுமே
மக்கள் தங்கள்,
உயிர்களினை இழப்பதும்
முறையோ சொல்வீர்!

உரிமைகளை, உடைமைகளை
இழந்தே மக்கள்
உலகெங்கும்
அகதிகளாய் அலைகின்றாரே!
அரிதான மானிடப்
பிறப்பை எடுத்தும்
அமைதி இன்றியே
வாழ்வைக் கழிக்கின்றாரே!

அறிவியலால் ஆயுத
கலாசாரத்தை வளர்த்து
அழிவுகளை ஏற்படுத்தும்
போரை நிறுத்தி,
அறிவியலின் வழியினிலே
அன்பால் இணைந்து,
அனைவரதும் பொது
நலன்களைக் காப்போமே!

## சமரசமற்ற விமர்சனத்தை முன்வைக்கும்... 13ஆம் பக்க தொடர்...

'பரிதி' பதிப்பகம் எட்டு நூல்களும், டிஸ்கவரி புக் பேலஸ் இரண்டு நூல்களும் நேர்த்தியாக பதிப்பித்திருந்தன.

தொல். திருமாவளவனும், சி.மகேந்திரன் இருவரும், ஒரு பத்திரிகையாளராக மணாவின் நேர்மையான அணுகுமுறை, தொடர் முயற்சி, கடும் உழைப்பு மற்றும் அவரது நேர்மையான எழுத்தின் சாத்தியங்களைப் பற்றி மனந்திறந்து பாராட்டினார்கள்.

அவர்களைத் தொடர்ந்து பேசிய சாவித்திரி கண்ணனின் வார்த்தைகளிலிருது சில...

"மணாவை எழுத்து ராட்சஷன் என்றால், மிகையல்ல! அவரைப் போல எழுதிக் குவித்தவர்கள் இதழியலில் சம காலத்தில் வேறு யாரும் எனக்கு தெரிந்த வரை இல்லை.

ஓய்வு, ஒழிச்சலற்ற உழைப்பாளி. தன் சமகால முக்கிய ஆளுமைகள் அனைவரையும் அவர் நேர்காணல் செய்துள்ளார்.

எனக்கும், அவருக்கும் பெரிய முரண் என்னவென்றால், அவர் எல்லா விஷயங்களையும் பாசிட்டிவ்வாக மட்டுமே பார்ப்பார்! நான் இரு பக்கங்களையும் விமர்சனக் கண்ணோட்டத்தில் பார்ப்பேன். அதுவும் தவறுகள் கண்டால், அதை சுட்டிக் காட்டாமல் எனக்கு நிம்மதி ஏற்படாது!

பொது சமூகத்திற்கே எதிரி என்று மனதில் பட்டுவிட்டால் அப்படிப் பட்ட அந்தச் சிலரிடம் இருந்து நான் வலிந்து விலகி நிற்பேன். ஆனால், அவர் அனைவரையும் அரவணைத்து செல்பவர். அதன் வெளிப்பாடு தான் அவர் பலராலும் விரும்பப்படுகிறார்.

அசாதாரண சகிப்புத் தன்மை மணாவிற்கு உண்டு. அது அளவுக்கு மீறியது. மனதிற்குள்ளே போட்டு மருகிக் கொள்வார்.

ஆனால், பிறர் மனம் புண்பட பேச மாட்டார்! இந்த சுபாவம் தான் அவரது ப்ளஸ் பாயிண்ட் மற்றும் மைனஸ் பாயிண்டும் கூட!

இந்த நிகழ்வை மிகச் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த கே.எஸ்.இராதாகிருஷ்ணன், குமார் ராஜேந்திரன் ஆகியோரையும், நிகழ்ச்சியை தொகுத்து அளித்த பேராசிரியர் அபிதா சபாபதியையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

நீண்ட நாள் நண்பர்கள் ராசி அழகப்பன், சுந்தர புத்தன், பிரியன், பரிசல் செந்தில் நாதன், புதிய தலைமுறை கார்த்திகேயன், சன் தொலைக்காட்சி குணசேகரன், தம்பி ஜீவ சகாப்தன், ஹமீது, புதிய நண்பர்கள் அரவிந்தாக்ஷன், பதிப்பாளர் பரிதி,ஓவியர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட பலரிடம் பேசி அளவளாவியது மன நிறைவை தந்தது! மணாவின் குடும்பத்தாரையும் பார்த்து பேசியது மேலும் மகிழ்ச்சியாக இருந்தது" என்று தனது பேச்சை நிறைவு செய்தார்.

இந்த விழாவை எம்.ஜி.ஆர் – ஜானகி கல்லூரியின் தமிழ்த்துறை தலைவர் முனைவர் அபிதா சபாபதி தொகுத்து வழங்க, பதிப்பாளரான இளம்பரிதி நன்றியுரைக் கூறினார்.

நூலாசியர் மணா ஏற்புரை வழங்கினார்.

விழாவில் வெளியிடப்பட்ட நூல்களின் பட்டியலும், அந்த நூல்களின் சாரம்சமும்முள்ளிவாய்க்கால் குருதி தோய்ந்த குறிப்புகள்: – இலங்கையில் தமிழ்ச் சமூகத்திற்கு எதிராக பெரும் இன அழிப்பை இலங்கை அரசு அந்நாட்டு ராணுவத்துணையோடு 12 ஆண்டுகளுக்கு முன்பு நடத்தியபோது உருவான வலியை, ஈழத்தமிழர்களும் சரி உலகளாவிய தமிழர்களும் சரி எளிதில் மறந்து விட முடியாது.

அப்போதைய இன அழிப்பிற்கான ஒரு வரலாற்று ரீதியான சாட்சியங்களை முன் வைக்கின்ற இந்த நூலின் தலைப்பில் குருதி தோய்ந்த குறிப்புகள் என்கின்ற சொற்கள் இடம்பெற்றிருப்பதே இந்த நூலின் வீரியத்தை எடுத்துக் காட்டுகிறது.

உயிருக்கு நேர்: – கீழடி அகழாய்வில் மட்டுமல்ல, தொன்மத்திலும் மூத்த மொழியான தமிழை தங்கள் உயிருக்கு நிகராக நேசித்தவர்கள் இந்த மண்ணில் இருந்திருக்கிறார்கள். வெவ்வெறு கட்டங்களாக தமிழ் மொழியைக் காப்பதற்கான தீவிரமான போராட்டங்கள் 1930 லிருந்தே நடந்திருக்கின்றன. இந்த எழுச்சியான போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தியிருக்கிறது இந்த நூல்.

### ஊடகம் யாருக்கானது

?: – தமிழ் ஊடகங்களில் சுமார் 43 ஆண்டுகால அனுபவம் கொண்ட பத்திரிகையாளர் மற்றும் எழுத்தாளரான மணாவின் சொந்த ஊடக அனுபவங்கள் இந்த நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. அண்மையில் இன்றைக்கு ஊடகத்தில் பங்கேற்க விரும்புபவர்களுக்கான ஒரு முன் மாதிரியான நூலாகவும் இந்த நூல் இருக்கும்.

### சாதி என்பது குரூரமான யதார்த்தம்:

– தமிழக பண்பாட்டு அசைவுகள் உட்பட பல்வேறு முக்கியமான நூல்களை எழுதியிருக்கும் ஆய்வாளரான தொ.பரமசிவனுடனான நேர்காணலும், தொ.பரமசிவன் எழுதிய சில கட்டுரைகளும் அடங்கிய இந்த நூல் எளிய மொழியில் தமிழகத்தின் ஏற்றமும் இறக்கமுமான சமூக அவலங்களைச் சொல்கிறது.

ஓவிய நிழல்கள்: – இலங்கையில் பெரும் இன அழிப்பு நடந்தபோது தமிழகத்திலுள்ள முக்கியமான நவீன ஓவியர்கள் கோடுகளாலும் வர்ணங்களாலும் நிகழ்த்திய எதிர்வினையே இந்த ஓவியத் தொகுப்பு.

ஆளுமைகள் சந்திப்புகள் உரையாடல்கள்: – தமிழக அரசியல் பண்பாடு மற்றும் கள ஆய்வில் முன்னணியில் உள்ள 30 ஆளுமைகளுடனான விரிவான உரையாடல்களின் தொகுப்பே இந்த நூல். பல இதழ்களில் பத்திரிகையாளர் மணா எடுத்து பதிவு செய்த இந்த நூல் ஒரு கால கட்டத்தின் சாட்சியம்.

தமிழர்கள் எதில் குறைந்து போய் விட்டார்கள்: – தமிழர்களுக்கு என்று நீண்ட நெடிய பண்பாட்டு ரீதியான தொல் மரபும் வாழ்வியலும் நிறைந்திருந்தாலும் இன்றைக்கு அதே தமிழர்கள் எப்படிப்பட்ட சரிவை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்? ஏன் இத்தகைய அந்நியமாதல் நிகழ்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது இந்த நூல்.

மிருதுவாய்ச் சில அஞ்சலிகள்: – இலக்கியம், அரசியல், ஊடகத்துறை மற்றும் பண்பாடு சார்ந்த பல ஆளுமைகள் மறைந்தபோது எழுதப்பட்ட அஞ்சலிக் கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல். இப்படி 30 ஆளுமைகளைப் பற்றிய கட்டுரைகள் தொகுக்கப்பட்டிருப்பது இந்த நூலின் தனிச்சிறப்பு.

ஓசாம அசா: – பத்திரிகை, நாடகம், திரைப்படம், அரசியல் என்று பல்வேறு தளங்களில் தான் சந்தித்த அனுபவங்களை சோ சொல்ல, அதைப் பதிவு செய்திருக்கிறார் பத்திரிகையாளரான மணா.

பிரபல வார இதழில் வெளிவந்தபோது பெரும் பாராட்டைப் பெற்றது இந்த சோவின் விரிவான அனுபவங்கள். தமிழக அரசியல் குறித்த விருப்பம் உள்ளவர்களுக்கு தேவையான பாடம்.

10.ஜெயகாந்தன் – ஒரு மனிதன் ஒரு உலகம்: – தமிழ் இலக்கிய உலகில் தனக்கான தனித்தன்மையுடன் சிறுகதை, நாவல், திரைப்படம், பயணக்கட்டுரை என்று பல்வேறு தளங்களில் இயங்கிய ஜெயகாந்தன் என்கிற எழுத்தாளரைப் பற்றியும் சக மனிதராக அவருடன் பல எழுத்தாளர்கள் வெளிப்படுத்திய அனுபவங்களையும் அவருடைய மிக அபூர்வமான புகைப்படங்களையும் ஒரு சேர தொகுத்திருக்கிறது இந்த நூல்.

## பொருளாதார மேம்பாட்டில்... (10 ஆம் பக்கத் தொடர்)

**கேள்வி : தொற்றா நோய்கள் குறித்த கொள்கைகளை இயற்றுவதற்கும் செயல்படுத்துவதற்கும் ஏதேனும் தேசிய திட்டங்கள் அல்லது ஏற்கனவே தயாரிக்கப்பட்ட அரசாங்கத்தின் முயற்சிகள் உள்ளனவா?**

**பதில் :** சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் 2025 ஆம் ஆண்டுக்குள் அடையப்பட வேண்டிய உலகளாவிய தொற்றா நோய் இலக்குகளுடன் ஒத்துப்போகும் தேசிய இலக்குகளின் தொகுப்பின் அடிப்படையில், 2016 2020 தொற்றாத நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தேசிய பல்துறை செயல் திட்டத்தை உருவாக்கியது. இதில்,

1. இருதய நோய்கள், புற்றுநோய், நீரிழிவு, அல்லது நாட்பட்ட சுவாச நோய்களால் ஏற்படும் ஒட்டுமொத்த இறப்புக்களை 25% ஆல் குறைத்தல்
2. தீங்கிளைக்கும் மதுப்பாவனையை ஒப்பீட்டளவில் 10% ஆகக் குறைத்தல்
3. உடற்செயற்பாடின்மை பரவலில் 10% குறைத்தல்
4. உப்பு/சோடியம் அதிகம் உட்கொள்ளும் சராசரி மக்கள் தொகையை ஒப்பீட்டளவில் 30% குறைத்தல்.
5. 15 வயதுக்கு மேற்பட்டவர்களில் தற்போதைய புகையிலை உபயோகத்தை ஒப்பீட்டளவில் 30% குறைத்தல்
6. அதிகரித்த இரத்த அழுத்தத்தின் பரவலை ஒப்பீட்டளவில் 25% குறைத்தல்
7. நீரிழிவு மற்றும் உடல் பருமன் அதிகரிப்பதை நிறுத்தல்
8. மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுவதைத் தடுக்க, குறைந்தபட்சம் 50% தகுதியுள்ள நபர்கள் மருந்து சிகிச்சை மற்றும் ஆலோசனை (குருதியிலுள்ள சீனியளவின் கட்டுப்பாடு உட்பட) பெறுதல்.
9. அரச மற்றும் தனியார் மருத்துவ நிறுவனங்களில், முக்கிய தொற்றா நோய்களுக்குச் சிகிச்சையளிக்க தேவையான, பொதுவான அடிப்படை தொழில்நுட்பங்கள் மற்றும் அத்தியாவசிய மருந்துகள் 80% ஆனளவு கிடைத்தல்.

கேள்வி : தொற்றா நோய், சமூக ரீதியில் அதிகரிப்பதைத் தடுப்பதற்கு சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தலையீடுகள் யாவை? குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் குறித்த திட்டங்கள் யாவை?

பதில் : தொற்றா நோய் பணியகம், ஏனைய சுகாதார மற்றும் சுகாதாரம் சாரா துறைகளின் கூட்டாண்மையுடன் பல்வேறு அமைப்புக்களின் ஊடாக சமூக மட்டத்தில் புகையிலைப் பயன்பாட்டைத் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆரோக்கியமான வாழ்க்கை முறை மையங்கள் (HLCs) நாடு முழுவதும் பொது மக்களிடையே காணப்படும் தொற்றா நோய்களின் ஆபத்து காரணிகளைக் கண்டறியவும், வாழ்க்கை முறை மாற்றங்களை ஊக்குவிக்கவும் நிறுவப்பட்டன. ஆரோக்கியமான வாழ்க்கை முறை மையங்களில் பரிசோதனைக்குட்படுத்துவதன் முக்கிய நோக்கம், நடத்தை மற்றும் இடைநிலை ஆபத்து காரணிகளைக் கண்டறிவதும், ஆரம்பத்திலேயே அவற்றுக்கான தலையீட்டை மேற்கொண்டு கட்டுப்படுத்துவதுமாகும். 35 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய மக்கள் தொகையினராகக் கருதப்படுகின்றனர். இவர்கள் 40% நடுத்தர வயதுடைய சனத்தொகையாகும். 2034 வயதுடைய நபர்களும் இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். வாடிக்கையாளர்கள், நடத்தை, ஆபத்து காரணிகள் மற்றும் இடைநிலை ஆபத்து காரணிகள் (இரத்த சீனி மற்றும் கொழுப்பு அளவுகள், இரத்த அழுத்தம், உடல் பருமன்) தொற்றா நோய்கள் குறித்துப் பரிசோதிக்கப்படுகின்றனர்.

கேள்வி : ஆரோக்கியத்தின் முக்கியத்துவம் மற்றும் சவாலான காலகட்டத்தில் நோய்களை அறிதல், அவற்றைத் தடுப்பது எவ்வாறு என்பது தொடர்பில் சற்றுப் பேசுவோமா?

பதில் : தொற்றா நோய்கள் மற்றும் அவற்றின் ஆபத்து காரணிகள் மீது செயற்படத் தவறியதால் மக்கள் தொகை, சுகாதாரஅமைப்புகள்மற்றும் பொருளாதாரம் ஆகியவை கொவிட் 19 போன்ற தொற்று நோய்கள் ஏற்படும்போது, பெரிய தாக்கங்களின் அபாயத்தை எதிர்கொள்கின்றன. தொற்றா நோய்களுடன் தொடர்புடைய வாழ்க்கைமுறை ஆபத்துக்களுக்கான காரணிகளை முகாமைத்துவம் செய்வது இவற்றின் வளர்ச்சியைத் தடுப்பதற்கான திறவுகோலாகும். உதாரணமாக, அதிக மாச்சத்து, சீனி, உப்பு, கொழுப்பு, எண்ணெய், குறைவான பழங்கள் மற்றும் காய்கறிகள் என்பவை தொற்றா நோய்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். ஆரோக்கியமான உணவுப்பழக்கம், உடற்பயிற்சிகள், புகைபிடித்தல் மற்றும் மதுபாவனை என்பவற்றை நிறுத்தல் போன்ற வாழ்க்கை முறை மாற்றங்கள், தொற்றா நோய்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை ஊக்குவிக்கும்.


# இலங்கை நூலக சங்கம்
## ஆண்டு பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

இலங்கையின் தற்போதைய சூழ்நிலை காரணமாக இலங்கை நூலக சங்கத்தின் 62வது பொதுக்கூட்டம் திட்டமிட்ட திகதியில் (24.06.2022) நடத்தப்படாது என 2021/22 ஆளுனர்கள் சபை தீர்மானித்துள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**தில்ஹானி முனசிங்க**
**பொது செயலாளர்**
**இலங்கை நூலக சங்கம் 2021/22**
**275/75, OPA மையம்.**
**பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை,**
**கொழும்பு 07**

**2022.05.12**


## கலவர பூமியாக மாறிய... (07ஆம் பக்கத் தொடர்)

இருந்தபோதும் திட்டமிட்ட வகையில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதே மக்களின் கருத்தாக உள்ளது.

இவ்வாறான வன்முறைகளைத் தொடர்ந்தே திங்கட்கிழமை பிற்பகல் பிரதமர் பதவியிலிருந்து விலகுவதாக மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார். இருந்த போதும் மறுநாள் அதிகாலையிலேயே மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல்வாதிகளால் அலரி மாளிகையிலிருந்து வெளியேறிச் செல்ல முடிந்தது. அதேநேரம், திங்கட்கிழமை பிற்பகல் ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. முதலில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

ஊடரங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போதும் ஒரு சில இடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளின் சொத்துக்களுக்கு சேதங்கள் விளைவிக்கப்பட்டன. இருந்தபோதும் இந்த நிலைமைகள் தற்பொழுது ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க கடந்த வியாழக்கிழமை புதிய பிரதமராகப் பதவியேற்றார். நாடு எதிர்கொண்டுள்ளசவால்களுக்குமத்தியில் பிரதமர் பதவியை அவர் ஏற்றுள்ளார். எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடவுள்ளது. இந்த நிலைமையில் பிரதமர் தலைமையிலான அரசாங்கம் எவ்வாறு நிலைமைகளைச் சரிசெய்யப் போகிறது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## இலங்கைக்கு உதவுவதில் இந்தியாவின்... (06ஆம் பக்கத் தொடர்)

அயல்நாடுகளில் இருந்து சவால்களை எதிர்கொள்கின்ற போதிலும், அத்தனையையும் சமாளித்தபடி இந்தியா வெற்றியுடன் முன்னேற்றமடைந்து வருகின்றது. தனது முன்னேற்றத்தில் மாத்திரம் கவனம் செலுத்தாமல் அயல்நாடுகளின் நெருக்கடிகளைத் தணிப்பதிலும் இந்தியா கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

இலங்கையின் நெருக்கடியைத் தணிப்பதிலும் இந்தியா அவ்வாறுதான் உதவிகள் வழங்கி வருகின்றது. இலங்கையில் கொவிட் தொற்று உச்சகட்டத்திற்குச் சென்றிருந்த வேளையில் இந்தியா வழங்கிய உதவியை ஒருபோதுமே மறந்து விட முடியாது.

அன்றைய காலப்பகுதி மிகவும் பயங்கரம் நிறைந்ததாக இருந்தது. உலக நாடுகள் கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கையில் இறங்கியிருந்த காலப் பகுதி அது. உலகின் அத்தனை நாடுகளும் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்திருந்த வேளை அது. கொவிட் தடுப்பூசியை கொள்வனவு செய்து கொள்வதே மிகவும் சிரமமானதாக அவ்வேளையில் இருந்தது.

இலங்கையும் கொவிட் தடுப்பூசியை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் எண்ணத்தில் இருந்தது. அவ்வேளையில் இந்தியா வழங்கிய உதவி அளப்பரியதாகும். முதல் கட்டமாக இலங்கைக்கு அன்பளிப்பாகவே தடுப்பூசிகளை இந்தியா வழங்கியிருந்தது. அயல்தேசத்தின் நலனுக்கே முன்னுரிமை என்பதே இந்தியாவின் உறுதியான குறிக்கோளாக இருந்து வருகின்றது.

கொவிட் தடுப்பூசிகளை ஏற்றியபடி இந்தியாவின் முதலாவது விமானம் இலங்கையில் தரையிறங்கிய போது அது உணர்ச்சிபூர்வமான தருணமாக இருந்தது. இலங்கை மக்களின் உயிர்காக்க வந்த முதலாவது நாடான இந்தியாவின் அர்ப்பணிப்பை அன்று இலங்கை மக்கள் நன்றியுடன் நோக்கினார்கள். கொவிட் தடுப்பூசி வழங்கும் விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் தனது உதவிகளை இலங்கைக்கு வழங்கி வந்திருக்கின்றது.

இவ்வாறுதான் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு, இந்திய மத்திய அரசு சார்பில் ஏராளமான மருந்துப் பொருட்கள், இந்திய கடற்படை கப்பலில் அண்மையில் அனுப்பப்பட்டிருந்தன.

இலங்கையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், மருந்துப் பொருட்களை அனுப்பி உதவும்படியும், இலங்கை அரசு மருத்துவர் சங்கம், சமீபத்தில் இந்தியாவுக்கு கோரிக்கை விடுத்திருந்தது. இதையேற்று ஏராளமான மருந்து பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.இவற்றை இந்திய தூதர் கோபால் பக்லே, இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார். இந்த மருந்துகள் இலங்கையில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு பிரித்து அனுப்பி வைக்கப்பட்டன.

இலங்கையில் தற்போது பொருளாதார நெருக்கடிக்கு அப்பால் அரசியல் நெருக்கடியும் நிலவுகின்றது. இந்நிலையில் அரசியல் நெருக்கடிகளுக்கு அப்பால் இந்தியாவின் உதவிகள் தொடருமென்பதே நம்பிக்கையாக இருக்கின்றது.

## அரசியலமைப்புக்கு உட்பட்டதாகவே நாட்டின்... (03ஆம் பக்கத் தொடர்)

இறைவரித் திணைக்கள அதிகாரிகள்தான் விசாரணை நடத்த வேண்டும், மற்ற நபர்களின் சொத்து குறித்தும் விசாரிக்க வேண்டும். அவர்கள் தேவையற்ற வகையில் சொத்து சேர்த்திருந்தால் அவ்வாறானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, அந்தச் சட்டங்கள் இந்த நாட்டில் மிகவும் பலவீனமாக உள்ளன.

**கே: இலங்கையில் ஊழல் ஏன் நடக்கிறது என நீங்கள் நினைக்கின்றீர்கள்?**

### மோசமான ஆட்சிதான் இதற்கு முக்கிய காரணமா?

பதில்: இது மோசமான நிர்வாகத்தின் ஒரு பகுதியாகும். ஓரளவுக்கு முறையான சட்டங்கள் இயற்றப்படவில்லை. இலஞ்ச ஊழல் ஆணைக்குழு போன்ற பெரும்பாலான நிறுவனங்கள் மிகவும் பலவீனமாக உள்ளன, அவை பெரிய நபர்களின் பின்னால் செல்லவில்லை, சிறிய நபர்களே பிடிபடுகிறார்கள். அரசியல்வாதிகள் மட்டுமல்லாது சட்டத்தரணிகளும் சட்டத்தை வலுப்படுத்துவது மற்றும் ஊழல்வாதிகளை சட்டத்தின் முன் கொண்டுவருவது அவசியம். அக்கடமை அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் உரியதல்ல, சட்டத்தரணிகளுக்கும் இதில் பங்கு உள்ளது.

ஒவ்வொரு சமூகமும் உயர்மட்ட, நடுத்தர மற்றும் மிகக் கீழ்மட்டத்தில் இருந்து, அவர்கள் அனைவரும் செல்வத்தைக் குவிப்பதற்கான தேவையற்ற வழிகளில் வரிசையாக நிற்கிறார்கள். அவர்கள் வருமான வரி செலுத்துவதில்லை மற்றும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலானவர்கள் மட்டுமே அவ்வாறு செய்கிறார்கள்.


# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஜின்னாஹ் புலமைப்பரிசில் திட்டம் – 2022

"ஜின்னாஹ் புலமைப்பரிசில்" வடிவத்தில் ஒரு முறை வழங்கப்படும் பண உதவிக்காக விண்ணப்பிப்பதற்கு 2020 இல் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் மூன்று பிரதான பாடங்களில் "A" தர சித்தியை பெற்ற தகுதியுடைய இலங்கையின் அனைத்து இனங்களையும் சேர்ந்த அரச கல்வி நிறுவனங்களின் மாணவர்களிடம் இருந்து கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம் விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

விண்ணப்பப் படிவங்களை இல. 42, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு–7 என்ற முகவரியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களை http://www.pakistanhc.lk என்ற எமது உத்தியோகபூர்வ இணையதளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்ய முடியும்.

புலமைப்பரிசிலுக்காக முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பின்வரும் மின்னஞ்சல்/ தபால் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**மின்னஞ்சல் முகவரி** : pahiccolombo@mofa.gov.pk

**தபால் முகவரி** : பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம்,
இல. 42–44, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு–7

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :**
2022 மே 30

**தூதரகத் தலைவர்**
**பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயம்**
**42-44, புல்லர்ஸ் ஒழுங்கை, கொழும்பு,**
**தொலைபேசி : 011-2055681-2**

தினகரன் வாரமஞ்சரி
# சிறு விளம்பரங்கள்
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை
Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வேலைவாய்ப்பு

**318**

## வெற்றிடங்கள்
### டிரைவர்கள்

நெஸ்கோ என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு கனரக வாகன சாரதியர் தேவை. சம்பளம் ரூபா 45,000/ இற்கு மேல் இரத்மலான, களுத்துறை, நீர்கொழும்பு பிரதேச சாரதியர்களிற்கு முன்னுரிமை முகவரி. இல. 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலான. அழைக்கவும். 0777263954, 0767639155
026229

**319**

## வெற்றிடங்கள்
### வீட்டு வேலையாளர்கள்

கம்பஹா வீடொன்றில் ஜப்பான் நாட்டு இரு பிள்ளைகளுடன் (வயது 10 மற்றும் 14) விளையாடிக் கொண்டு இருவரையும் பார்த்துக்கொள்வதற்கு சிங்கள மொழி பேசக்கூடிய 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட பெண்ணொருவர் தேவை. தங்கியிருந்தல் மற்றும் உணவு வீட்டிலுள்ளவர்களுடன், துணி துவைத்தல் மற்றும் உணவு சமைக்கும் எந்த வேலையும் இல்லை. குடும்பத்தில் ஒருவர் போல் இருக்கலாம். 0777888623.
030540

**321**

## வெற்றிடங்கள்
### தோட்டத்துறை

ஹெட்டிபொல பிரதேசத்தில் கோழிப் பண்ணைக்கு அனுபவமுள்ள ஊழியர் குடும்பமொன்று தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம். தங்குமிட வசதிகள் உள்ளன. 0706951079, 0706951080.
030539

## காணி/தோட்டம்

**616**

## வீடு சொத்து
### கொழும்பு மாவட்டம்
### விற்பனைக்கு

கொழும்பு 03இல் பேர்ச் 3.5 மற்றும் மூன்று மாடி வீடொன்றும் 60 பேர்ச் காணியொன்றும். விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம். 0 3 32288303, 0 7 73810404
030396

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

---

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
## STHRD செயற்றிட்டம்
### கல்வி அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | STHRD/SB/-E40: இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்தின் மருந்தாக்கல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.06.07ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

## விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி மாற்றம்

01 மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் அழைப்பின் (IFB) விலைமனுக்கள் முடிவுறுத்தல் மற்றும் திறக்கப்படும் திகதிகளில் பின்வருமாறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

- ➢ விலைக்கோரல் காலம் - 2022 ஏப்ரல் 03 முதல் 2022 ஜூன் 07ஆம் திகதி வரை (பி.ப. 1.30 மணி)
- ➢ விலைமனுக்கள் முடிவுறுத்தப்படுதல்/ திறக்கப்படுதல் - 2022 ஜூன் 07ஆம் திகதி (பி.ப. 1.30 மணி)
- ➢ விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் - 2022 செப்டெம்பர் 04ஆம் திகதி வரை - 90 நாட்கள் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் உட்பட)
- ➢ விலைமனு பிணை முறியின் செல்லுபடிக் காலம் - 2022 டிசம்பர் 02ஆம் திகதி வரை - 180 நாட்கள் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் உட்பட)

02. விலைக்கோரல் முன்னோடி கூட்டத்தின் பின் இணைப்பொன்று வழங்கப்படும் என்பதுடன் அது விலைமனுக்களைக் கொள்வனவு செய்த விலைமனுதாரர்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**
**2022-05-15ஆம் திகதி**

---

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
## STHRD செயற்றிட்டம்
### கல்வி அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | STHRD/SB/-E41: இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்தின் நுண்ணுயிரியல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.06.07ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

## விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி மாற்றம்

01 மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் அழைப்பின் (IFB) விலைமனுக்கள் முடிவுறுத்தல் மற்றும் திறக்கப்படும் திகதிகளில் பின்வருமாறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

- ➢ விலைக்கோரல் காலம் - 2022 ஏப்ரல் 03 முதல் 2022 ஜூன் 07ஆம் திகதி வரை (பி.ப. 1.30 மணி)
- ➢ விலைமனுக்கள் முடிவுறுத்தப்படுதல்/ திறக்கப்படுதல் - 2022 ஜூன் 07ஆம் திகதி (பி.ப. 1.30 மணி)
- ➢ விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் - 2022 செப்டெம்பர் 04ஆம் திகதி வரை - 90 நாட்கள் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் உட்பட)
- ➢ விலைமனு பிணை முறியின் செல்லுபடிக் காலம் - 2022 டிசம்பர் 02ஆம் திகதி வரை - 180 நாட்கள் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் உட்பட)

02. விலைக்கோரல் முன்னோடி கூட்டத்தின் பின் இணைப்பொன்று வழங்கப்படும் என்பதுடன் அது விலைமனுக்களைக் கொள்வனவு செய்த விலைமனுதாரர்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**
**2022-05-15ஆம் திகதி**

---

## ஔடத உற்பத்திகள், வழங்குநர்கள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு
## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

# விலைமனுக்களுக்கான அழைப்பு – IFB

**01 எண்ணிக்கையில் புத்தம்புதிய வர்த்தக தரத்திலான மருந்தாக்கல் லீப்லெட் போல்டிங் மெசீனை வழங்குதல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல் அத்துடன் பயிற்சியை வழங்குதல்**

விலைமனு குறிப்பு : SPMC/PD/07/2022 மூடப்படல் 2022.06.17ஆம் திகதி 14.00 மணிக்கு

01. 01 எண்ணிக்கையிலான புத்தம்புதிய வர்த்தக தரத்திலான மருந்தாக்கல் லீப்லெட் போல்டிங் மெசீனை வழங்குதல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல் அத்துடன் பயிற்சியை வழங்குவதற்கான பொறியிடப்பட்ட விலைமனுக்களை 2022 ஜூன் 17ஆம் திகதி 14.00 மணி வரை இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல.11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், பெறுகைக்குழுவின் தலைவர் பெற்றுக்கொள்வார்.

| உருப்படி | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் |
|---|---|
| 01 எண்ணிக்கையில் புத்தம்புதிய வர்த்தக தரத்திலான மருந்தாக்கல் லீப்லெட் போல்டிங் மெசீனை வழங்குதல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல் அத்துடன் பயிற்சியை வழங்குதல் | ரூ.3500.00 |

03. அசல் மற்றும் நகல்களுடனான ஓர் முழுமையான தொகுதியிலான பொறியிடப்பட்ட விலைமனுக்களை வெவ்வேறாக இலங்கை , இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர்.ஜோன்.கொத்தலாவல மாவத்த, இல-11, அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக்குழுத் தலைவருக்கு முகவரியிடப்பட்ட பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்த, இல.11, அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரைமாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடல் வேண்டும்.

04. வேலை நாட்களில் 2022.05.17அம் திகதி ஆரம்பித்து 2022.06.15 9.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் விலைமனு ஆவணங்களை கீழ்க்காணும் விடயங்களை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர்ஜோன் கொத்தலாவல மாவத்த, இல.11, அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பம்
- இ.அ.ம.கூ இன் கணக்காளர் திணைக்களத்திற்கு காசாக மேலே குறிப்பிடப்படும் மீளளிக்கப்படாத விலைமனுக்கட்டணத்தை செலுத்துவதன் பேரில்.

05. 1987 ஆம் ஆண்டின் 3ஆம் இல பொது ஒப்பந்தச் சட்டத்தின் விதிகளினால் விலைமனுக்கள் நிர்வாகப்படுத்தப்படும். விலைமனுதாரர், முகவர், உதவி முகவர், பிரதிநிதி, பெயர் குறிப்பிடப்படுபவர், விலைமனுதாரரின் சார்பாக பதிவாளராகும் பொது ஒப்பந்தச் சட்டம் (PCA) இன் பிரிவு 10இன் பிரகாரம் பொது ஒப்பந்தக்காரராக தாமாக பதிவு செய்து கொள்ளல் வேண்டும். அத்துடன் ஏதாவது விலைமனுவுடன் சார்ந்த கொடுக்கல் வாங்கல்கள் அல்லது விலைமனு காலப்பகுதியின் எந்தக் கட்டத்திலும் சம்பந்தப்பட்ட செல்லுபடியாகும் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. ஓர் விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2022 மே 31ம் திகதி 10.00 மணிக்கு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. எல்லா விலைமனுதாரர்களும் கட்டாயமாக கலந்துகொள்ளல் வேண்டும். அத்துடன் விலைமனு சமர்ப்பிப்பதற்கு முன் அதே தினம் புத்தம் புதிய வர்த்தக தரத்திலான மருந்தாக்கல் லீப்லெட் மோல்டிவ் மெசீன்களின் ஓர் அறிமுகத்திற்காக அமைவிடங்களை விஜயம் செய்து பரிசீலித்தல் வேண்டும்.

07. விலைமனுக்கள் இரத்மலானை அ.ம.உ கூட்டுத்தாபனத்தில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம்பெற்ற முகவர்கள் விலைமனுக்கள் திறக்கப்படும் போது சமுகமளிக்க அனுமதிக்கப்படுவர்

08. விலைமனு ஆவணங்களை அ.ம.உ. கூட்டுத்தாபனத்தில் இலவசமாக பரிசீலிக்கலாம்.

09. மேலதிக தகவல்களை பிரதிப் பொது முகாமையாளர் - தயாரிப்பு, அ.ம.உ.கூ (தொ.பே-011263754) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். "விலைமனு தகவல்களின்" விபரங்களை எமது இணையதளத்தில் பார்வையிடலாம்.

**தலைவர் - பெறுகைக்குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்**
**இல-11, சேர்.ஜோன் கொத்தலாவல மாவத்த,**
**கந்தவல எஸ்டேட் இரத்மலானை, இலங்கை**

**தொலைபேசி - (00)94-11-2635353/ (00)94-11-2637574/(00)94-11-2623298**
**மின்னஞ்சல் - spmclanka@sltnet.lk**
**இணையத்தளம் - www.spmclanka.lk**

---

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்
## STHRD செயற்றிட்டம்
### கல்வி அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

| | |
|---|---|
| **கடனிலக்கம் மற்றும் தலைப்பு** | 3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| **ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு** | STHRD/SB/-E39: இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பப் பீடத்தின் மருந்தியல் ஆய்வுகூடத்திற்கான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகை |
| **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி** | 2022.06.07ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு (உள்ளூர் நேரம்) |

## விலைக்கோரல் முடிவுறுத்தல் திகதி மாற்றம்

01 மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரல் அழைப்பின் (IFB) விலைமனுக்கள் முடிவுறத்தல் மற்றும் திறக்கப்படும் திகதிகளில் பின்வருமாறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

- ➢ விலைக்கோரல் காலம் - 2022 ஏப்ரல் 03 முதல் 2022 ஜூன் 07ஆம் திகதி வரை (பி.ப. 1.30 மணி)
- ➢ விலைமனுக்கள் முடிவுறுத்தப்படுதல்/ திறக்கப்படுதல் - 2022 ஜூன் 07ஆம் திகதி (பி.ப. 1.30 மணி)
- ➢ விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் - 2022 செப்டெம்பர் 04ஆம் திகதி வரை - 90 நாட்கள் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் உட்பட)
- ➢ விலைமனு பிணை முறியின் செல்லுபடிக் காலம் - 2022 டிசம்பர் 02ஆம் திகதி வரை - 180 நாட்கள் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் உட்பட)

02. விலைக்கோரல் முன்னோடி கூட்டத்தின் பின் இணைப்பொன்று வழங்கப்படும் என்பதுடன் அது விலைமனுக்களைக் கொள்வனவு செய்த விலைமனுதாரர்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய, இலங்கை.**
**ZIP code: 70140**
**தொலைபேசி: 045-2280081**
**மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk**
**2022-05-15ஆம் திகதி**

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adZ it's what you want Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adZ it's what you want




- Auto Focus

Sunday Observer adZ Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com





# கருப்பை நீர்க்கட்டிகள்

## அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவரை நாடவும்

கருப்பை நீர்க்கட்டிகள் உங்களுக்கு இருந்தால் உடனடியாக மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ளவும். அநேகமான கருப்பை நீர்க்கட்டிகள் உங்கள் மாதவிடாய் சுழற்சியோடு வருவதும் போவதும் உண்டு. இதனை தனிப்பட்ட முறையில் நிர்வகிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் 20% பெண்களுக்கு உண்டாகும் இத்தகைய நீர்க்கட்டிகள் தானாக மறைவதில்லை. இவற்றைப் போக்க அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. அல்லது புற்று நோய்க்கான அறிகுறிகளாக இவை மாறுகிறது. அல்லது உடல் நலத்தில் பாதிப்பை உண்டாக்குகிறது. சில நேரங்களில் இந்த நீர்க்கட்டிகள், கருப்பை பைப்ரொய்ட் அல்லது மாதவிடாய்க்கு முந்தைய பாதிப்பு (வயிறு மந்தம் மற்றும் இடுப்பு வலி) ஆகியவற்றுடன் இணைந்து கொண்டு பாதிப்பைத் தருகிறது.

மாதவிடாய் வருவதும் போவதும் இயல்பு என்பது போல் இந்த கட்டியும் அதனால் உண்டாகும் வலியும் மறைய வேண்டும். ஒருவேளை இந்த வலி மறையாமல் இருந்தால் குறைந்த பட்சம் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் செய்து பார்ப்பது நல்லது.






**நீர்க்கட்டிகள் இருப்பதற்கான அறிகுறிகள்**

இடுப்பு பகுதிக்கு கீழே, வலது அல்லது இடது புறத்தில் வலி இருப்பது கருப்பை நீர்க்கட்டி இருப்பதற்கான பொதுவான அறிகுறியாகும். இந்த இடத்தில் தான் கருப்பை உள்ளது. மாதவிடாய் முடிந்த பின்னும் அந்த வலி நீடித்து இருக்கும். இந்த வலி மிகவும் அதிகமாகும்போது நீங்கள் கருப்பை முறுக்கத்தால் பாதிக்கப்படுவீர்கள்.

அடிவயிற்று வலி மற்றும் வீக்கம் என்பது வயிற்றில் வேறு ஏதோ ஒன்று உருவாவதன் காரணமாக இருக்கலாம். வயிற்று பகுதியில் மட்டும் எடை அதிகரித்து காணப்பட்டால் அல்லது உங்கள் எடை அதிகரிப்பிற்கு காரணம் தெரியாமல் இருந்தால் அது எச்சரிக்கை மணி அடிப்பது போன்றதாகும்.

கருப்பை பைப்ரொய்ட் கட்டியைப் போன்று கருப்பை நீர்க்கட்டியும் வயிற்றில் கனமான உணர்வைத் தரும். சிறுநீர் கழிப்பதில் அல்லது மற்ற செயற்பாடுகளில் வேறு எந்த பிரச்சினையும் இல்லாமல், ஆனால் வயிறு கனத்த உணர்வு மட்டும் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு நீடித்தால் கருப்பையில் நீர்க்கட்டிகள் இருப்பதை உறுதி செய்து கொள்வது நல்லது.

அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றுவது. உங்கள் சிறுநீர்ப்பையை ஒட்டி கட்டி தோன்றியிருந்தால், உங்களுக்கு சிறுநீர் கழிக்கும் உணர்வு தோன்றும். சில பெண்கள் அடிக்கடி சிறுநீர் கழித்தாலும், ஒவ்வொரு முறை சிறுநீர் வெளியேறுவதில் சிரமம் இருக்கும். நீர்க்கட்டி சிறுநீர் பாதையை தடுப்பதால் இந்த பாதிப்பு உண்டாகும்.

கருப்பையில் நீர்க்கட்டிகள் பெரிதாக வளரும் போது, கருப்பைக்கு பின், சரியாக கருப்பை வாய் அருகே வளர்ந்து இருந்தால் உறவின் போது வலி தோன்றலாம்.

ஆகவே உடனடியாக பெண் மருத்துவரை அணுகி, உங்கள் பிரச்சினைக்கு தீர்வு பெறலாம்.

உங்கள் இடுப்பு பகுதியில் அதிக இடமில்லாத காரணத்தால், கட்டி வளர்ந்து பெரிதாகும்போது, இடுப்பில் கட்டி இருக்கும் இடத்தைப் பொறுத்து முதுகு அல்லது கால் வலி உண்டாகலாம்.

உங்கள் இடுப்பு வலிக்கான காரணத்தை மருத்துவரால் அறிய முடியாவிட்டால், அது நீர்கட்டியின் ஆதாரமாக இருப்பதற்கான வாய்ப்புகளாக இருக்கலாம்.




குக்கரில் ஒரு கப் தூள் உப்பைப் பரப்பவும். உப்பின் மீது ஒரு தட்டு வைத்து குக்கரை மூடி மூன்று நிமிடங்கள் வரை சூடாக்கவும். (விசில் பயன்படுத்த வேண்டாம். குக்கர் வெடித்து விடும்).

பிறகு ஆறு இன்ச் அளவு கேக் தட்டில் சிறிதளவு பட்டர் தடவி, மைதா மாவைத் தூவவும்.

இத் தட்டில் கேக் மாவை முக்கால் அளவு வரை ஊற்றி, லேசாகத் தட்டி கலவையை சமன் செய்யவும்.

இந்தப் பாத்திரத்தை குக்கருக்குள் வைத்து மூடி, சிறு தீயில் முப்பது நிமிடங்கள் வரை வேக வைத்து எடுக்கவும்.

தேவையானால் மீண்டும் பத்து நிமிடங்கள் வேகவிட்டு, கேக் தட்டை வெளியே எடுத்து ஆறவிடவும்.






# அழகு குறிப்புகள்

## எழுமிச்சை நீராவி



எழுமிச்சைப் பழத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டி நீரில் கொதிக்க விடவும். இந்த எழுமிச்சை நீராவியை முகத்திற்கு பிடித்தால் முகம் சுத்தமாகும். அத்துடன் முகப்பருக்களை குறைக்கும். பளபளப்பான நிறத்தை தருகிறது.

## பிளக்ஹெட்ஸுக்கு பற்பசை



பற்பசையுடன் 2 தே.கரண்டி கோதுமை மாவை கலந்து மூக்கின் மேல் தடவி 2 நிமிடம் மெதுவாக மசாஜ் செய்த பின் கழுவவும், இது பிளக்ஹெட்ஸ் மற்றும் வைட்ஹெட்ஸ்களை எளிதில் அகற்ற உதவும்.

## அரிசி தண்ணீர்



2 தே.கரண்டி அரிசியை 1 கப் தண்ணீரில் 30 – 45 நிமிடங்கள் ஊற வைக்கவும். பின்பு ஸ்பிரே போத்தலில் அரிசி தண்ணீரை ஊற்றி குளிர்சாதன பெட்டியில் வைக்கவும். ஒரு நாளைக்கு 3 முறை அரிசி நீரை உங்கள் முகத்தில் ஸ்பிரே செய்யவும். உங்கள் முகம் கண்ணாடி போல ஜொலிக்கும்.

## பீட்ரூட் லிப் மாஸ்க்



1 தே. கரண்டி தேன் மற்றும் பீட்ரூட் சாற்றை நன்றாக கலந்து உதடுகளில் தடவவும். அதை 10 நிமிடங்கள் அப்படியே வைக்கவும். உங்கள் கருமையான உதடுகள் சிவப்பாக மாறுவது மட்டுமல்லாமல் மென்மையான உதடுகளைப் பெறலாம்.

# பழைய வளையல்களை தூக்கி எறியாதீர்கள்





பெண்களுக்குப் பெரும்பாலும் வளையல்கள் மீது தனிப் பிரியம் இருக்கும். அதனாலேயே ஒவ்வொரு ஆடைக்கும் ஏற்றவாறு வளையல்களை வாங்க விரும்புவார்கள்.

இவ்வாறு, பயன்படுத்தி பழையதாகிப்போன வளையல்களை தூக்கி எறியாமல், அவற்றைக் கொண்டு வீட்டை அழகுபடுத்தும் கைவினைப் பொருட்களை எளிமையாகச் செய்து கொள்ளலாம்.

கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் என நாம் பயன்படுத்தும் பல்வேறு வகையான வளையல்களை அப்படியே சேகரித்து வைத்து, நம்முடைய கற்பனைத் திறனைப் பயன்படுத்தி அவற்றை வீட்டை அலங்கரிக்கும் அலங்காரப் பொருட்களாக மாற்றலாம். பழைய மணி, பிளாஸ்டிக் பொருட்கள், உல்லன் நூல், சில்க் நூல் போன்ற பழைய பொருட்களைக் கொண்டே வளையல்களைப் பயன்படுத்தி பல்வேறு விதமான அலங்காரப் பொருட்களைச் செய்யலாம்.



இன்றைக்குப் பலருடைய கவனம் நூல் வளையல்களின் மீது திரும்பியுள்ளது. புதிய வளையல்களைப் பயன்படுத்தாமல், நாம் பயன்படுத்திய ஒரே அளவிலான பழைய வளையல்களையே பயன்படுத்தி இவற்றைத் தயாரித்துக் கொள்ளலாம்.

போத்தல்களைக் கொண்டு கைவினைப் பொருட்கள் செய்யும் பொழுது, உடைந்த கண்ணாடி வளையல்களை ஒட்டி அழகுபடுத்தலாம்.

வீட்டு நிலைப்படி, கதவு மற்றும் ஜன்னலில் தொங்க விடுவதற்கான 'வோல்ஹெங்கிங்' போன்றவற்றை வளையல்களைக் கொண்டு செய்யலாம். பூஜை அறைகளின் நுழைவில் கூட தோரணம் போன்று அமைக்கலாம்.

முழு வளையலைப் பயன்படுத்தி போட்டோ பிரேம் செய்யலாம்.

படம் வரையும் பொழுது உடைந்த கண்ணாடி வளையல்களைக் கொண்டு, நமக்கு பிடித்தமான உருவங்களை அமைத்து, நமது கற்பனைத் திறனைக் காண்பிக்கலாம்.

வளையலை ஒன்றன்மீது ஒன்று அடுக்கி, அவற்றின் நடுவில் மெழுகுவர்த்தி ஏற்றி வைத்துப் பண்டிகை கால அலங்கார விளக்குகள் செய்யலாம். கண்ணாடி வளையல்களின் ஒளி பிரதிபலிப்பு அறையை அழகாக்கும்.

பழைய வளையல்களையும் உல்லன் நூலையும் பயன்படுத்தி, கூடை போன்று செய்யலாம். இவற்றை வீட்டின் வரவேற்பறை அலுமாரிகளில் வைக்கும் பொழுது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.



மேலும், வீட்டில் சிறிய சிறிய பொருட்களை (ஊக்கு,ஹெயார்பின்) வைப்பதற்கான ஸ்டாண்ட் செய்யலாம். சின்னச் சின்ன காதணிகள் வைப்பதற்கான நகை பெட்டிகளையும் வளையல்களைக் கொண்டு செய்யலாம்.

# இடுப்புச் சதையை இப்படியும் குறைக்கலாம்



★ காலையில் சரியான நேரத்திற்குச் சாப்பிடுவது அவசியம். இதனால் உடலில் இன்சுலின் சீராகச் சுரக்கும். கெட்ட கொழுப்பின் அளவு குறையும். நார்ச்சத்து நிறைந்த உணவுகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கலோரி நிறைந்த உணவைத் தவிர்க்க வேண்டும்.

★ தினமும் 10,000 அடிகள் நடக்க வேண்டும். லிஃப்டைத் தவிர்த்து விட்டு படிகட்டுகளைப் பயன்படுத்துங்கள். வேலைக்கு நடுவே, ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கு ஒருமுறை எழுந்து 30 அடி தூரம் நடக்க வேண்டும்.

★ தினமும் குறைந்தபட்சம் 8 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். அடர் மஞ்சள நிறத்தில் சிறுநீர் வெளியேறுவது உடலுக்குப் போதுமான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை என்பதற்கான அறிகுறி.

★ அடிவயிறு மற்றும் தசைகளைப் பலப்படுத்துவதற்கு 'பிளாங்க்' (Plank), ஸ்குவாட்ஸ் '(Squats), 'சைட் ஸ்ட்ரெச்சஸ்' (Side Streches) பயிற்சிகளைச் செய்யலாம்.

★ எரோபிக் பயிற்சிகளை செய்யலாம். அவை இதயச் செயற்பாடுகளை அதிகரிப்பது போல் உடலிலுள்ள கொழுப்பைக் கரைக்கவும் உதவும். முதன்முதலாக எரோபிக் பயிற்சி மேற்கொள்பவர்கள், வாரத்தில் மூன்று முறை மட்டும் செய்வது நல்லது.



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 4

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றிய முதலாவது வரலாற்று நூலினைத் தந்த கனக செந்திநாதன்

கனக செந்திநாதன் எழுதிய ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற நூல் 1946ஆம் ஆண்டு வெளிவந்தது. இந்நூலே ஈழத்து இலக்கியம் பற்றிப் பேசிய முதலாவது வரலாற்று நூலாகும். இந்நூலுக்கு முன்னுரை எழுதிய ஈழகேசரி பத்திரிகை ஆசிரியர் . இராஜ அரியத்தினம் தனது முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்

'. கனக செந்திநாதன் ஆறுமுக நாவலர் தொடக்கம் இன்றைய இளம் கவிஞர்கள்வரை ஆராய்ந்து பழமையையும் புதுமையையும் நமக்கு இந்நூலில் காட்டியுள்ளார். தமிழ்ச்சுடர் மணிகளையும், ஈழத்து ஒளி விளக்குகளையும், பேனா மன்னர்களையும், இளம் எழுத்தாளர்களையும் காலத்தை வைத்துப் பிரித்து ஆராய்ந்திருப்பது மிக நன்று. ஒவ்வொரு பத்தாண்டு காலத்தைப் பற்றி முகவுரையாக விஷயங்களையும் சரித்திர நிகழ்ச்சிகளின் எழுச்சிகள் ஆகியவற்றையும் கூறிவிட்டு அப்பத்தாண்டு காலத்தில் எழுதிய எழுத்தாளர்களையும் அவர்தம் படைப்புகளையும் அறிமுகம் செய்துள்ளார். பின் முடிவுரையாக பத்தாண்டு காலத்தில் இலக்கிய உலகம் என்ன சாதித்தது என்பதைத் தொகுத்துக் கூறியுள்ளார்'.

இரசிகமணியின் இயற்பெயர் திருச்செவ்வேழ். குரும்பசிட்டி கனகசபை பொன்னம்மா தம்பதிக்கு 05.11. 1916இல் மகனாகப் பிறந்த இவர், குரும்பசிட்டி மகாதேவ வித்தியாலயம், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை ஆகியவற்றில் கல்வி கற்றவர்.

மெலிந்த உயரிய உடல்வாகு கொண்டவர் செந்திநாதன். 1937/1938 காலப்பகுதியில் திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மாணவனாகப் படித்து வெளியேறி ஆசிரியராகப் பணியாற்றியவர்.

இவர், சிறுகதை நாவல், கவிஅரங்கு, கட்டுரை, கவிதை, மேடை நாடகம், வானொலி நாடகம், விமர்சனம், வாழ்க்கை வரலாறு, சிறுவர்பாடல் எனப் பல்துறைகளில் இயங்கியவர்.

இவரது வீட்டின் முன்பகுதியில் ஒரு தென்னோலைக் கொட்டில் அமைந்திருந்தது. அதுவே இவரது நூல்நிலயம். ஏராளமான நூல்கள் அவரது சேகரிப்பில் இருந்தன. அந்த நூல்நிலையத்தை மற்றவர்களும் பயன்படுத்துவதற்கு அவர் அனுமதிப்பார். இதன் காரணமாக இலக்கிய கர்த்தாக்கள் கூடும் இடமாகவும் அவரது இல்லம் விளங்கியது. இலக்கியவாதிகள் யார் சென்றாலும் தனது மனைவி நாகம்மாவை அழைத்து அவர்









களை அறிமுகம் செய்வார்.

அவரிடம் நெருங்கிப்பழகினால், 'அட.. சொக்கா..' என்று செல்லமாக அழைத்து உரையாடத் தொடங்கிவிடுவார்.

கனக செந்திநாதன் ஈழத்து நவீன இலக்கியக் கணக்கெடுப்பை அதன் ஆரம்ப காலத்திலிருந்தே மேற்கொண்டவர். எந்தவொரு ஈழத்துப் படைப்பு பத்திரிகையிலோ, சஞ்சிகையிலோ வெளிவந்தாலும் அதனைத் தேடிப்பெற்று அந்தப் படைப்பினை கவனமாக வெட்டியெடுத்து சீ.ஆர். கொப்பிகளில் ஒட்டி வைத்துக்கொள்வார்.

பிற்பட்ட காலத்தில் ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற பயன்மிக்க ஆய்வுநூலை எழுதுவதற்கு அவர் சேகரித்து வைத்திருந்த ஒட்டுக்கொப்பிகள் உதவியிருக்கின்றன.

அந்தக் காலத்தில் ஈழத்துப் பேனா மன்னர்கள் என்ற எழுத்தாளர்கள் பற்றிய அறிமுகத்தொடரை ஈழகேசரியில், கரவைக்கவி கந்தப்பனார் என்ற புனைபெயரில் எழுதினார். அந்தத் தொடரில் நாற்பது எழுத்தாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். அவரது இத்தகைய இலக்கியச் செயற்பாடுகள் காரணமாக அவர் நடமாடும் நூல்நிலையம் என்று இலக்கிய உலகில் பேசப்பட்டார்.

அவரது கிராமமாகிய குரும்பசிட்டியில் சன்மார்க்கசபை என்ற இலக்கிய அமைப்பு இயங்கிவந்தது. அங்கு அடிக்கடி இலக்கிய நிகழ்வுகள் இடம்பெறும். அந்நிகழ்வுகளில் அவரும் ஒரு சிறப்புப் பேச்சாளராக இருப்பார். அவரது சொற்பொழிவுகள் கருத்தாழம் மிக்கதாகவும் சுவாரஸ்யமானதாகவும் அமைந்திருக்கும். தனது பேச்சின் நடுவே அனேகமான சந்தர்ப்பங்களில் தான் வாசித்த சிறுகதையொன்றையும் விமர்சனப் பாங்கில் விபரித்து அக்கதையை எழுதிய எழுத்தாளர் பற்றிய குறிப்பையும் கூறுவார். கேட்போர் இலக்கியச் சுவையில் திளைப்பர்.

எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை ஞானம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் கனக செந்திநாதனின் நூல் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'ஈழத்து இலக்கிய முயற்சிகளின் தற்கால இலக்கியப் படைப்பு முயற்சிகளின் உத்தியோக பூர்வமான முதலாவது உண்மையான வரலாற்று ஆவணம் ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் வரலாற்று நூல். கனக செந்திநாதனை முதலில் நான் சந்தித்தபொழுது எனக்கு ஏற்பட்ட பிரமிப்பு என்னவென்றால் அவர் ஒரு யுகசங்கமத்தின் தலைவனாத் திகழ்ந்தார். பழைய பண்டித வர்க்கத்தினரதும் படித்த இலக்கியச் சுவைஞர்களினதும் பரம்பரையாக வந்து புதிய இலக்கிய மாற்றங்களை வரவேற்கக் கூடிய ஒரு படைப்பாளியாக கனக செந்திநாதன் வாழ்ந்து கொண்டிருந்தார். அதுமட்டுமன்றி தமிழ் ஆசிரியரான அவர், மிகச்சிறந்த படைப்புகள் அனைத்தையும் வருத்தம் கருதாது ஒட்டுப்புத்தகங்களாகத் தயாரித்து அவற்றையே அவர் ஒரு நூல் நிலையம் போல வைத்திருந்து இவற்றைச் சாதித்தார். இந்தச் சாதனையை இலங்கை இலக்கிய வரலாற்றில் வேறு யாருமே சாதித்ததில்லை. இந்தச் சாதனையை அவர் செய்வதற்கு தூண்டுகோலாக இருந்தது இரண்டு விஷயங்கள் என நான் நம்புகிறேன். ஒன்று பண்டிதமணியின் பரம்பரையில் அவர் ஒரு கல்விமானாகவும் ஆசிரியராகவும் வாழ்க்கையை அமைத்துக் கொண்டது. இரண்டாவதாக யாழ்ப்பாண மண்ணில் பண்டைய தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை மட்டுமன்றிப் புதிய அரசியல் மாற்றங்களையும் பிரசித்தப்படுத்துவதற்காகத் தொடக்கப்பட்ட ஈழகேசரி பத்திரிகையை நடத்திய பொன்னையா பிறந்த குரும்பசிட்டியிலே வாழ்ந்தது. இவற்றின் காரணமாகத்தான் இந்தத் தற்கால இலக்கிய வரலாற்றை எழுதக்கூடிய ஒரு மாமுனி கனக செந்திநாதன் என்பதை அறிந்து, கைலாசபதி ஊக்குவித்து ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற தொடர் தினகரனில் வந்தது...' (ஞானம் 2005 டிசம்பர் இதழ் 67. பக் 38)

1964இல் கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம் கனகசெந்திநாதனுக்கு இரசிகமணி என்ற பட்டத்தை வழங்கியது. அவரது மிகநெருங்கிய நண்பராக விளங்கியவர் எஸ்.பொ. அவரே இவரது சிறுகதைத் தொகுதியான 'வெண்சங்கு சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதியிருக்கிறார்.

காலதரிசனம் என்ற எனது முதலாவது சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா 1973ஆம் ஆண்டில் எனது கிராமமாகிய புன்னாலைக்கட்டுவனில் இடம் பெற்றது. அந்த விழாவில் வெளியீட்டுரை வழங்கிய இரசிகமணி கனக செந்திநாதன், காலதரிசனம் என்ற இந்தச் சிறுகதைத் தொகுதி ஈழத்தின் 66ஆவது சிறுகதைத் தொகுதியாக வெளிவருகிறது என்று கூறி விழாவில் கலந்து கொண்ட அத்தனைபேரையும் வியப்பில் ஆழ்த்தினார். அப்படித் துல்லியமாகக் கணிப்பிட்டுக் கூறக்கூடியவராக அவர் விளங்கினார்.



'ஈழத்து இரசனைமுறை விமர்சன வளர்ச்சியிலே திருப்பத்தை ஏற்படுத்தியவர் கனக செந்திநாதன். இத்தகைய இரசனைமுறை முன்னோடிகளில் முக்கியமானவர் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. அவரது அம்மரபிலே பழந்தமிழ் இலக்கியங்கள் முதன்மைபெற்றன. மாறாக, அவரது மாணவரான கனக செந்திநாதன் அவ்வழியிலே நவீன இலக்கியங்களை அணுக முற்பட்டார்.

முதன்முதலாக தனிப்பட்ட ஆளுமைகளை அத்தகு விமர்சன நோக்கில் அணுகி தனி நூல்களாக வெளிப்படுத்தியவரும் கனக செந்திநாதனே. சோமசுந்தரப்புலவர், அல்வாயூர் மு.செல்லையா, பண்டிதமணி பற்றிய நூல்கள் அத்தகையனவேயாகும்.

இளம் எழுத்தாளர்களையும் விமர்சகர்களையும் இனங்கண்டு கவனத்திற்குரிய விமர்சனத் தொடர் குறிப்புகளை முதன் முதலில் எழுதியவரும் அவரே.

இவ்வழி இத்தகைய தமிழ் விமர்சனப் பாரம்பரிய வழிநின்று நவீன இலக்கியங்களை அணுகமுற்பட்ட ஈழத்து முன்னோடியாக கனசெந்திநாதன் காணப்படுகிறார்.

நமது இலக்கிய இரசனையும் அதன் மதிப்பீடும் நமது மண்ணிலேயும் தமிழ் நெஞ்சங்களிலேயும் வேரூன்றிய மரபிலே நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்று ஆணித்தரமாகக்குறிப்பிட்டு (ஈழத்து இலக்கிய வளர்ச்சி பக்:123) அதனை இனங்காண முற்பட்டவர் கனகசெந்திநாதன். இலக்கிய விமர்சனம் என்பது வேறு. இரசனை என்பது வேறு என்ற தெளிவு கனக செந்திநாதனிடம் காணப்பட்டது என்பதும் விதந்துரைக்கப்படவேண்டியதே.' எனக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் செ. யோகராசா ( ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இரசிகமணி கனக செந்திநாதன் சிலகுறிப்புகள் ஞானம் ஜுலை 2018 பக்:9)

இரசிகமணி கனக செந்திநாதன் 25 சிறுகதைகளையும் நான்கு புதினங்களையும் பன்னிரண்டு நாடகங்களையும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது 'ஒரு பிடி சோறு‖ என்ற சிறுகதை ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

பிற்பட்ட காலத்தில் அவர் நீரிழிவு நோயால் பாதிக்கட்டு சத்திர சிகிச்சைமூலம் அவரது கைவிரல்களும் கால்விரல்களும் அகற்றப்பட்டன. ஷநடமாடும் நூல் நிலையம்‖ என அழைக்கப்பட்ட அந்தப் பெருமகன் நடமாடமுடியாத நிலையில் வீட்டில் முடங்கிப்போனார். அவருக்கு எழுத்தாளர் டானியல் ஒரு சக்கர நாற்காலியைச் செய்துகொடுத்தார்.

கனக செந்திநாதன் 16.11.1977இல் தனது அறுபத்தோராவது வயதில் அமரரானார்.




# கதைக்குள் புதிதாகப் புகுந்துவிட்டாளே பிரசாந்தினி கொலையில் அவள் பெயரும் அடிபடுமே இனி!

27

தீபனின் நட்பு வட்டாரத்தில் இன்னும் ஒரு பெண் இருந்தாள் என்று சொன்னதும்,

மூன்று பெண் பொலிஸ் அதிகாரிகளும்,

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்!

"அவள் பெயர் என்ன?"

"பிரசாந்தினி!"

"அவள் எத்தனையாவது வருடம்?"

"இரண்டாவது வருடம்!"

"நட்பு என்றால் என்ன மாதிரியான நட்பு?" "தீபன் பொதுவாகவே எல்லோருடனும் அன்பாகவே பழகுவான். அதே போல் உதவியும் செய்வான். பிரசாந்தன் பொருளாதார ரீதியில் பின் தங்கிய நிலையிலேயே இருந்தான். அதனால் அவளுடைய தேவையான சில உதவிகளை தீபன் அவ்வப்போது செய்து வந்தான்!"

"வெறும் நட்பு மட்டும் தானா அல்லது காதல் தொடர்பு ஏதாவது இருந்ததா?"

"எங்களுக்குத் தெரிந்த வரை தீபிகாவுடன் மட்டும் தான் தீபன் அந்த மாதிரி பழகி வந்தான். மற்றபடி பிரசாந்தினியுடன் பழகியதெல்லாம் அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கில் தான்!" "இந்த பிரசாந்தி என்பவள் அழகானவளா?"

"ஆமாம் மிஸ் தீபிகாவை விட அழகாக இருப்பாள்!"

"அவள் அவ்வளவு அழகான பெண்ணா இருந்தால், அவளுக்கு ஏன் போய் பிரெண்டுகள் யாரும் இருக்கவில்லை?"

"பிரசாந்தினி ரொம்பவும் அழகானவளாக இருந்தாலும் கண்ட கண்ட பையன்களுடன் எல்லாம் அவள் பேசுவதில்லை! அவள் ஏழைப் பெண்ணாக இருந்தாலும் ரொம்பவும் கட்டுப்பாடுகளுடன் வளர்ந்தவள். அதனால் அவளுக்கு போய்பிரெண்டுகள் யாரும் இருக்கவில்லை!"

"நீங்கள் இப்படி சொன்னாலும் பிரசாந்தினி ஏதோ ஒரு எதிர்பார்ப்புடன் பழகியவளாக ஏன் இருக்கக் கூடாது?"

"அதைப்பற்றி உறுதியாக எதையும் எங்களால் செல்ல முடியாது மிஸ்!"

"சரி இந்த பிரசாந்தினியின் ஊர் எது?"

"அவள் நாவலப்பிட்டியில் இருந்து வந்தவள்!"

"இங்கே ஹொஸ்டலிலா அவள் தங்கி இருக்கிறாள்!"

"இல்லை.... கடுவெலயில் அவள் உறவுகாரப் பெண் இருக்கிறாள். அங்கிருந்துதான் வருவாள்!"

"நீங்கள் எல்லோரும் வன்டே டிரிப் போவதாகச் சொன்னீர்கள் அல்லவா... அப்படிப் போகும் போது பிரசாந்தினியும் உங்களுடன் வருவாளா?"

"இல்லை... அந்த டிரிப்பின்போது அவள் எங்கள் கூட வந்ததில்லை!"

"கடுவலயில் அவள் எங்கே தங்கி இருக்கிறாள் என்று உங்களில் யாருக்காவது தெரியுமா?"

"எனக்கென்றால் தெரியாது மிஸ்!" என்றான் பிரதீப்.

"நான் ஒருநாள் புஸ்தகங்களை கொடுப்பதற்காக தீபனுடன் அங்கே போனேன் மிஸ்!" என்றான் சஞ்சய்!"

"ஓ அப்படியானால் உங்களுக்கு அவள் வீடு தெரியும் தானே சஞ்சய்"

"நாங்களும் அன்று கேட்டுக் கொண்டுதான் போனோம். ஆனாலும் எனக்கு ஞாபகம் இருக்கிறது... கடுவல ஜெயசிங்க மாவத்தையும் 500/ 1 இலக்க வீடும்!"

"அதெப்படி அந்த முகவரி உங்களுக்கு அவ்வளவு ஞாபகத்தில் இருக்கிறது சஞ்சய்?"

"தீபனும் தீபிகாவும் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்புதான் நாங்கள் அங்கே போனோம். அதுதான் அந்த முகவரி என் நினைவில் நிற்கிறது..!" "சரி... இந்தத் தகவல்களை கொடுத்தற்காக உங்கள் மூவருக்கும் எங்கள் நன்றிகள்!"

"நாங்கள் தான் இந்தத் தகவல்களை எல்லாம் கொடுத்தோம் என்ற விபரம் வெளியில் தெரியவேண்டாம் மிஸ்! தெரிந்தால் எங்களுக்கு சில பிரச்சினைகள் வரவும் வாய்ப்பிருக்கிறது!"

"அதைப்பற்றியெல்லாம் நீங்கள் பயப்பட வேண்டாம். அந்த ரகசியங்களை பாதுகாப்பது பொலிஸாராகிய எங்கள் கடமை!"

"ஆகட்டும் மிஸ்... அதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்!"

அங்கிருந்து விடைபெற்றுச் சென்ற பொலிஸ் அதிகாரிகளில், சரண்யா என்ற பொலிஸ் உத்தியோகஸ்தர், இந்த மூவரிடமும் பெற்றுக் கொண்ட தகவல்களை, துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன் பராஜுக்கு, செல்போன் மூலம் அறிவித்தார்.

அடுத்து,

அவர் என்ன செய்யவேண்டும் என்றும் சரண்யாவிடம் சொன்னார்!

பிரசாந்தினியின் வீட்டிற்குச் சென்று அங்கு தங்கியிருந்தாவது அவளைப்பற்றிய தகவல்களை விசாரித்து வரும்படி சொன்னார்.

"ஆகட்டும் சோ், நான் பிரசாந்தினியின் வீட்டுக்குச் சொல்கிறேன். அங்கு போய் விசாரித்து. உடனே அந்த ரிபோட்டை உங்களுக்கு அனுப்புகிறேன்!" என்றாள்.

இன்ஸ்பெக்டர் சொன்னது போல் சாதாரண உடையிலேயே மறுநாள்,

பிரசாந்தினியின் வீட்டுக்குச் சென்றார் சரண்யா. அவர் அங்கே சென்றபோது,

அந்த வீட்டில், சாதாரண வயதை உடைய ஓர் ஆணும்,

அவனது மனைவி என்று மதிக்கக் கூடிய இருவரும் தான் இருந்தார்கள்!

சேலையைக் கட்டிக் கொண்டு,

ஒரு பெரிய இடத்துப் பெண்ணின் தோற்றத்தில்தான் அவர் அங்கு சென்றிருந்தார்.!

வீட்டில் வாசலில் வந்து நின்ற அவரைப்பார்த்து,

"யார் நீங்க...? யாரைப் பார்க்கணும்?"

"இந்த வீட்டுக் காரைப் பார்த்து கொஞ்சம் பேச வேண்டுமென்று தான் நான் வந்தேன்" பணக்காரத் தோரணையில் பேசினார் சரண்யா?

"ம்... நான் இந்த வீட்டுச் சொந்தக் காரன்... குடும்பத்தலைவன், உங்களுக்கு என்ன தெரிந்து கொள்ள வேண்டும்... ம்... முதலில் உட்காருங்களேன்!" "ஓ... ரொம்ப நன்றி. எனது பெயர் ஊர்வசி. பாதுகாப்பு அமைச்சில் தான் வேலை செய்கிறேன். எனது ஊர் பண்டாரவெல. எனக்கு அம்மா, அப்பா ரெண்டுபேரும் இருக்கிறாங்க. ஒரு வருடத்துக்கு இங்கே வாடகைக்கு தங்க முடியுமா என்று கேட்டுப் போகத் தான் வந்தேன்!" "இங்கே வாடகைக்கு எவரையும் நாங்க தங்க வைப்பதில்லை மேடம்... இங்கே ஒரு பொண்ணு இருக்கிறாள். இங்கிருந்ததுதான் அவ கெம்பசுக்குப் போறா... ஆனா அவ எங்கட சொந்தக்காரப் பொண்ணு!"

(இளமை வளரும்)



## கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.

ஆமாம்,

இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:

**கொல்லுவதோ இளமை**
தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்
கொழும்பு10.

# படித்ததும் பகர்வதும் 95





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### அசாதாரண சூழ்நிலையில் பிள்ளைகளது கல்வி

நாட்டிலும், தம் பிரதேசங்களிலும், சுற்றுப்புற சூழலிலும், தம் வீடுகளிலும் எத்தகைய மாற்றமான, மோசமான, பாதகமான நிகழ்வுகள் இடம் பெற்றாலும் அவை தமது பிள்ளைகளின் கல்வியையும், கல்வி நடவடிக்கைகளையும் பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டியது பெற்றோர் மீதுள்ள பாரிய பொறுப்பாக உள்ளது.



கொரோனா போன்ற நோய்கள், அது தொடர்பான ஊரடங்கு, வீட்டை விட்டு வெளியேறுவதற்கான கட்டுப்பாடுகள், பொருளாதார பிரச்சினைகள், அரசியல் குழப்பங்கள், அதிக பாடசாலை விடுமுறை நாட்கள் போன்ற பல காரணங்கள் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துவதற்கு காரணங்களாக உள்ளன.

இத்தகைய அசாதாரண நிலைமைகளிலிருந்து மீள்வதற்கும், தமது பிள்ளைகளின் கல்வி விடயங்களில் பாதிப்புக்களின் தாக்கங்களை குறைத்துக்கொள்வதற்கும் அல்லது தடுத்துக்கொள்வதற்கும் பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். கற்றறிந்த பெற்றோர் தம் பிள்ளைகளுக்கும், சகோதர சகோதரிகள், தமது தம்பி தங்கைகளுக்கும் நேரமொதுக்கி கற்றல் நடவடிக்கைகளில் உதவி செய்தல் வேண்டும். பரிவோடு அவர்களை வழி நடாத்த வேண்டும். இயலுமான சந்தர்பங்களில் மேலதிக வகுப்புக்களை வீடுகளிலேயே நடாத்துவதற்கு ஆசிரியர்களை ஏற்பாடு செய்யவும் முடியும்.

இவற்றுக்கு மேலதிகமாக, தமது வசதிக்கும் வாய்ப்புக்கும் ஏற்றவாறு 'சூம்' போன்ற இணையவழி வகுப்புக்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் பிள்ளைகளின் கல்விக்கு பேருதவியாக அமையும். இவற்றோடு தமது பிள்ளைகள் அமைதியான சூழலில் சாந்தமான, அமைதியான மனோ நிலையில் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சூழலை அமைத்துக்கொடுத்தல் வேண்டும்.

குறிப்பாக, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை அடுத்த வாரம் நடைபெறவுள்ளது. இலங்கையில் இப்பொதுப் பரீட்சை ஒவ்வொரு மாணவரதும் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமையும் மிக முக்கிய பரீட்சையாகும். இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இவ் இக்கட்டான சூழலில் சீரான, வெற்றியான, தைரியமான மனோநிலையுடன் இப்பரீட்சையை எழுதிட வழி செய்தல் வேண்டும்.

இத்தகைய, அமுல் நடத்தக்கூடிய செயற்பாடுகள் மூலம் மாணவர்களான தமது பிள்ளைகளது கல்வி நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளாகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதோடு ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையுமாகும்.


## நெஞ்சுக்கு நீதி

கல்வியே கருந்தனம் கருத்ததனில் கொள்வீர்
கல்வியால் உயர்வுதான் கனவிலும் மறவாதீர்
அல்லல்கள் அளவின்றி எங்கிருந்து வந்தாலும்
நல்லதாய் கற்றிடணும் கடுகளவும் தவறாதீர்

## பிரிந்தார் பெருமை

### பேராசிரியர் தேசமான்ய எம்.ரி.ஏ. ஃபுர்கான்

இலங்கையின் பிரபல வர்த்தகரும், சுற்றுலாத் துறையின் முன்னோடிகளில் ஒருவரும், கொழும்பு சாஹிராக் கல்லூரி முன்னாள் அதிபரும், அதன் ஆளுநர் சபையின் முன்னாள் தலைவருமான புரவலர், பேராசிரியர் , தேசமான்ய எம். ரி.ஏ. ஃபுர்கான் கடந்த வாரம் (09.05.2022) காலமானார்.



1965ல் முகாமைத்துவக் கணக்கியல் தொழிலின் அடிப்படையை இலங்கையில் தோற்றுவிப்பதில் முதன்மையானவர்களில் ஒருவராக இருந்த இவர் 1970ல், செலவு மற்றும் பணி கணக்காளர்கள் சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்; 1972ல், செலவு மற்றும் வேலை கணக்காளர்கள் நிறுவனம் (இப்போது CIMA) இலங்கைக்கு முதன்முதலாக கிளை அந்தஸ்தை வழங்கிய போது, அதன் முதல் தலைவராக தெரிவானார்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரபலமான பல வர்த்தக நிறுவனங்களில் இயக்குநராக பணியாற்றியுள்ள பேராசிரியர் ஃபுர்கான், கொன்பிபி ஹோட்டல் கம்பனிகள் குழுமத்தின் (Confifi Group of Hotel Companies) ஸ்தாபகராவார். 1974 முதல் 1976 வரை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மேலாண்மை கணக்கியல் பேராசிரியராகவும் செயல்பட்டுள்ளார்.

வணிகத்துறையில் பல்வேறு விருதுகளையும், கௌரவங்களையும், பதவிகளையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ள பேராசிரியர் ஃபுர்கான், தணிக்கை மற்றும் மேலாண்மை சேவைகளின் அரசாங்க பணியகத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினர், வருமான வரி செலுத்துவோர் சங்கத்தலைவர், தேசிய தொழில் சபை உறுப்பினர், இலங்கைப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் பீடத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினர், இலங்கை வர்த்தக அபிவிருத்தி நிலையத்தின் ஆளுநர், மத்திய போக்குவரத்து வாரிய நிதி இயக்குனர், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகக் கவுன்சில் உறுப்பினர் போன்ற பல்வேறு பதவிகளை அலங்கரித்துள்ளார்.

கொழும்பு வடக்கு ரோட்டரி கழகம், முகாமைத்துவ சேவைகள் நிறுவகம், இலங்கை சுற்றுலா ஹோட்டல் சங்கம், கொழும்பு ஸாஹிரா கல்லூரி ஆளுநர் சபை, அதன் பழைய மாணவர் சங்கம் என்பவற்றின் தலைவராக இருந்து அரும் பணியாறியுள்ளார். இவரது சேவைகளுக்காக இலங்கை அரசாங்கம் இவருக்கு 1987ல் தேசபந்து, 2005ல் தேசமான்ய பட்டங்களை வழங்கி கௌரவமளித்தது.

கொழும்பு ஸாஹிராக் கல்லூரி ஆரம்பப் பிரிவுக்காக 26 வகுப்பறைகள், நூலகக் கூடம் உள்ளடங்கிய பல மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான நவீன கட்டிடத்தை தனது சொந்த செலவில் நிர்மாணித்துக் கொடுத்ததோடு, பல்வேறு தரப்பினர்களிடமிருந்து பல மில்லியன் ரூபாய்களை கல்லூரியின் வளர்ச்சிக்காக பெற்றுக் கொடுத்துள்ளார்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டு விடயங்களுக்காக இவரை நான் நேரில் சந்தித்த சந்தர்ப்பங்களிலெல்லாம் இவரது ஆளுமையையும், தாராள மனப்பான்மையையும் என்னால் அறிய முடிந்தது. எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது மறுமை வாழ்வை சிறப்பாக்கி அருள்புரிவானாக!

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### தமிழ் அறிவோம்

தமிழ்நாடு, ஈரோடு, சி. இராஜேந்திரன் 'தமிழ் அறிவோம்' எனும் தலைப்பில் தருகின்ற தமிழ்ச் சொற்களுக்கான அழகிய விளக்கங்கள் சில:

ஒன்றில் பாதியாய் இருப்பது அரை
ஒரு வீட்டின் பகுதியாய் இருப்பது அறை
பறவைகள் நாளெல்லாம் தேடுவது இரை
பேரியற்கையாய் பாரினில் இருப்பது இறை

செய்யுளுக்கு பொருள் தருவது உரை
செய்திடும் நற்செயலால் பெறுவது உறை
ஆற்றின் இருபுறமும் இருப்பது கரை
அறநெறி பிறழ்வதால் வருவது கறை

அகவை கூடினால் வருவது சரை
ஆக்கம் குறைவதால் வருவது சறை
முதிர்ந்த பருவத்தில் வருவது நரை
மனம்மயங்க வைத்துக் கொடுப்பது நறை

ஐந்து மரக்கால் அளவெனஆவது பரை
அகமகிழ தமிழன் இசைத்தது பறை
பெரும்மலையெனசொல்லப்படுவது வரை
பொரிக்கறி என உண்ணப்படுவது வறை

{உறை – பெருமை, சரை – கிழத்தன்மை,
சறை – தாழ்வு, நறை – மது}

## நொறுக்குத் தீனி

### பெரியவரும் ஃபெராரிகாரும்!

நியூயார்க் நகரில் இருந்த அந்த புகழ் பெற்ற வங்கிக்குள் நுழைந்தார் ஒரு பெரிய மனிதர். அங்கிருந்த அதிகாரியிடம்சென்ற அவர், தனக்கு 5000 டாலர்கள் கடன் வேண்டும் என்றும் தான் வெளிநாட்டுக்கு இரண்டு வாரப் பயணம் செல்வதாகவும் திரும்பிவந்து கடன் பணத்தையும், வட்டியையும் செலுத்தி விடுவதாகவும் சொன்னார்.



அதற்கு அந்த அதிகாரி, "உங்களுக்கு கடன் கொடுக்கவேண்டுமெனில் நீங்கள் அதற்காக ஏதாவது உத்தரவாதம் கொடுக்கவேண்டுமே" என்றார்.

இதைக் கேட்ட அந்தப் பெரியவர், அந்த வங்கிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது புத்தம்புதிய, ஆடம்பர ஃபெராரி கார் சாவியை அந்த அதிகாரியிடம் கொடுத்தார். கூடவே காரின் உரிமைப் பத்திரங்களையும், அவசியமான ஏனைய ஆவணங்களையும் கொடுத்தார்.

வங்கி அதிகாரி அவற்றைப் பரிசீலித்த பின்னர், திருப்தியுடன் அந்த பெரியவருக்கு அவர் கேட்ட கடன் தொகையான 5000 டாலரை கொடுத்தார்.

250,000 டாலர் மதிப்புள்ள ஃபெராரி காரை வெறும் 5000 டாலர் கடன் வாங்க அடமானம் வைத்த அந்த பெரியவரை நினைத்து வங்கியின் தலைவரும் மற்ற அதிகாரிகளும் தங்களுக்குள் ஏளனமாகப் பேசிச் சிரித்தனர். பிறகு வங்கியின் ஊழியர் ஒருவர் அந்தக் காரை வங்கியின் கீழ்தளத்தில் உள்ள பாதுகாப்பான கார்கள் நிறுத்துமிடத்திற்கு கொண்டு சென்று நிறுத்தினார்.

இரண்டு வாரங்கள் கழித்தது. திரும்பி வந்த அந்தப் பெரியவர், அந்த வங்கியில் தான் வாங்கிய 5000 டாலரையும் அதற்கான வட்டியாக 5.41 டாலரையும் கொடுத்தார். அதனைப் பெற்றுக்கொண்ட, கடன் கொடுத்த அந்த வங்கி அதிகாரி, "சார், உங்களுடன் வியாபாரம் செய்ததில் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி. நமது பரிவர்த்தனை மிக நல்ல முறையில் நடந்தது. நீங்கள் தொடர்ந்து எங்கள் வாடிக்கையாளராக இருக்க வேண்டும்" என்றார்.

"அதற்கென்ன! அப்படியே ஆகட்டும்" என்று பதிலளித்தார். அதற்கு அந்த அதிகாரி, "ஆனா சார். ஒரே ஒரு விசயம்தான் எங்களுக்கு இன்னும் புரியல, நீங்க போன பிறகு உங்களைப் பத்தி நாங்க விசாரிச்சோம். நீங்க ஒரு பெரிய கோடீஸ்வரர் என்று தெரிந்தது. இவ்வளவும் பெரிய பணக்காரர். கேவலம் 5000 டாலர் கடன் வாங்குகிறாரே என்று எங்களுக்கு ஒரே குழப்பம்" என்றார்.

அதற்கு அந்தப் பெரியவர்," எனக்கு நியூயார்க் நகரத்தில் கார் நிறுத்தும் வசதி இல்லை.

இரண்டு வாரம் வெளிநாடு போகும் நான் எங்கு கொண்டுப்போய் எனது காரை பாதுகாப்பாக நிறுத்துவது? இவ்வளவு குறைந்த 5.41 டாலர் கட்டணத்திற்கு அதுவும் நான் திரும்பி வரும் வரை யாரும் திருடிக்கொண்டுப் போகாமல் மிகவும் பாதுகாப்பாக வேறு எங்குதான் காரை நிறுத்த முடியும்" என்றார் வெகு சாவகாசமாக! அந்தப் பதிலைக் கேட்ட வங்கி அதிகாரியின் விழிகள் வியப்பால் விரிந்தன.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

# திருவள்ளுவம் வழங்கும் முகாமைத்துவ வரைவிலக்கணம்



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 07

கே. பத்மானந்தன்



**தமிழில் 'திரு' என்றால் செல்வம் அல்லது வெற்றி என்றும் குறள் என்றால் சுருக்க உரையென்றும் பொருள் கொள்ளலாம். எனவே திருக்குறள் என்றால் செல்வம் அல்லது வெற்றி பற்றிய சுருக்கம் என்றும் பொருள் கொள்ளலாம் .ஒருவர் தனக்கு வேண்டிய செல்வம் பெற வேண்டுமாயின் அல்லது பொருள் ஈட்ட வேண்டுமாயின் அல்லது தனது கருமத்தில் வெற்றி பெறவேண்டுமாயின் அல்லது தனது தனி, பொது, குடும்ப ,தொழில் வாழக்கையில் வெற்றிபெற வேண்டுமாயின் சிறந்த முகாமையாளராக இருக்க வேண்டும் அல்லது அவர் சிறந்த முகாமைத்துவ சிந்தனைகளின் வழியில் செயற்பட வேண்டும் என்ற கருத்தை திருக்குறள் அங்கங்கே வலியுறுத்துவதைக் காணலாம் .**

தமிழ் மொழியின் தனித்துவத்தையும் செழுமையையும் வளப்பத்தையும் துணையாகக் கொண்டு பல அர்த்தங்கள், பல பொருள்கள் பொதிந்த சொற்களை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்தி திருவள்ளுவர் முகாமைத்துவம் பற்றியா மிகவும் விரிவான தந்து யோசனைகளை எண்ணங்களை கருத்துக்களை சிந்தனைகளை எல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளிற்கு முன்பே மிகச் சிறப்பாக உலகத்திற்குக் கொடுத்திருக்கிறார்.

இவ்வாறு திருவள்ளுவர் திருக்குறளில் முன்வைத்த யோசனைகள் இன்றைய பல்வேறு நவீன முகாமைத்துவ கருத்துக்கள் அல்லது சிந்தனைக ளுடன் மிகவும் ஒத்துப் போவதைக் காணலாம் .முன்னர் குறிப்பிட்டது போல் முகாமைத்துவத்திற்கான முதலாவது வரைவிலக்கணத்தை முன்வைத்த மேரி போலேற்றின் கருத்தின்படி முகாமைத்துவம் என்பது ஊழியர்க ளைக் கொண்டு கருமங்களை ஆற்று விக்கும் ஒரு செயற்பாடாகும். மேரி போலேற்றின் இந்த வரைவிலக்கணத்தை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் குறிப் பிட்டுள்ளார்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல். ( குறள் 517)

ஒருவர் தான் பொறுப்பெடுத்த ஒரு காரியத்தை எவ்வாறு எதனை எல்லாம் பயன்படுத்தி வெற்றிகரமாக செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து அறிந்த பின் அவரிடம் அந்தக் காரியத்தை முகாமையாளர் ஒப்படைக்க வேண்டும் என்பது இக்குறளின் பொருளாகும் . அதாவது முகாமையாளர் ஒரு காரியத்தை வெற்றிகரமாகச செய்யக் கூடியவரை இனம் கண்டு அவரிடம் மட்டுமே அக்காரியத்தை ஒப்படைத்து அவரைக் கொண்டு அக்காரியத்தை ஒப்பேற்ற வேண்டும் . அதாவது அடுத்தவர்களை/ ஊழியர்களைக் கொண்டு வேலைகளைச் செய்விக்க வேண்டும் என்ற கருத்தை திருவள்ளுவர் இங்கு சொல்கிறார்.



"இதனால்" என்பதற்கு உரையாசிரியர்கள் கூறுவது போல் கருவியை மட்டுமே பொருளாகக் கொள்ளாமல் இன்ன காரணத்தினால் அல்லது இன்ன தகு தியினால் அல்லது இன்ன அனுபவத்தினால் என்றும் பொருள் கொள்ள முடியும். எனவே ஒரு செயலை ஒருவரிடம் ஒப்படைக்க கருவி மட்டுமே முடிவெடுக்கும் அளவு கோலாக அமைய முடியாது. மாறாக அவருடைய தகுதியும் அவருடைய அனுபவமும், அறிவும் , ஆற்றலும் , திறனும் அவர் சார்ந்த சூழலும் கூட அளவு கோல்களாக அமைய முடியும் . எனவே ஒரு செயலை செயல்படுத்தச் சரியான நபரை அவரின் தகுதியறிந்து அனு பவமறிந்து, அறிவாற்றலை அறிந்து , திறனை அறிந்து அல்லது சூழலறிந்து அவரிடம் முகாமையாளர் அப்பணியை ஒப்படைக்க வேண்டும் என்பதை திருவள்ளுவர் இங்கு வலியுறுத்துகின்றார் .

முகாமைத்துவம் என்பது ஏனையவர்களைக் கொண்டு காரியங்களை செய்து முடித்தலாகும் என்ற தனது கருத்தை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியிலும் சிறப்பாக விளக்குகின்றார் .

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.(குறள் 678)

ஒருவர் ஒரு செயலில் அல்லது வேலையில் ஈ.டுபடும்போது, அச்செயல் மூலமாக மற்றொரு செயலையும் அல்லது வேலையையும் முடித்துக் கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் . அதாவது ஒரு யானையைப் பிடித்துப் பழக்கிப் பின்பு அந்த யானையைப்(கும்கி யானை) பயன்படுத்தி மற்றொரு யானையைப் (காட்டு யானை) பிடித்து பழக்குவது போன்றதாகும் இச்செயல் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார் .எவ்வாறு பழக்கப்பட்ட ஒரு யானையால் மற்றொரு யானை பிடிக்கப்படுகின்றதோ எவ்வாறு அதேபழக்கப்பட்ட யானையைப் பயன்படுத்தி புதிய யானை பயிற்றுவிக்கப் படுகிறதோ அதே போன்று முகாமைத்துவம்என்பது பழகியவர்களைக் கொண்டு ஏனையவர்களைப் பழக்கி எடுத்து அவர்களைக் கொண்டு வேலை செய்வித்தலாகும் என்பதை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார் .

திருவள்ளுவரின் இக்கூற்றினையே பீற்றர் ட்ரக்கர் (Peter Drucker ) என்பவர் ஒருகுறிக்கோளை நோக்கி பலரை உழைக்கும் ஆற்றல் உள்ளவர்களாக மாற்றுதல் முகாமைத்துவம் (it is important to align employee team members to focus on the mission)என்று குறிப்பிடுகிறார் .ஆகவே முகாமையாளர் என்பவர் தான் வேலை செய்வதை விட்டுவிட்டு ஏனையவர்களைக் கொண்டு வேலையை செய்விக்க வேண்டும் என்று திருவள்ளுவர் விளக்குகின்றார். திருவள்ளுவரின் இக் கருத்துக்கள் லோறன்ஸ் அப்லீயின் (LawrenceAppley) முகாமைத்துவம் என்பது ஏனையவர்களைக் கொண்டு வேலை செய்வித்தலாகும் (Accomplishment of results through the efforts of other people)என்ற முகாமைத்துவ வரைவிலக்கணத்துடன் ஒத்துப் போவதைக் காணலாம்.

இன்னொரு வகையில் கூறுவதாயின் ஒரு நிறுவனம் தனது வளங்களைக் கொண்டு முறையான திட்டமிடல், ஒழுங்கமைப்பு, கட்டுப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளின் மூலம் தனது நோக்கத்தினை அடைந்து கொள்ள உதவும் ஒரு செயல்முறையே முகாமைத்துவம் எனலாம். இதனை இன்னும் சுருக்கமாகச் சொல்வதாயின் பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு தனது நோக்கினை அடையும் ஒரு பொறிமுறை முகாமைத்துவம்எனலாம்.

இதனை வள்ளுவரும் கீழ்வரும் ஈரடியில் சொல்லியுள்ளார்.

"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்". (குறள் 479)

அதாவது தன்னிடம் இருக்கின்ற பொருளின் அளவு அறிந்து வாழாதவனுடைய வாழ்க்கை பல வளமும் இருப்பது போல் தோன்றி கடைசியில் இல்லாமல் மறைந்து கெட்டு விடும் என்பது இக்குறளின் பொருளாகும். இதன்மூலம் ஒரு நிறுவனத்தில் இருக்கின்ற வளங்களை இனங்கண்டு அவற்றைச் செம்மையாகப் பயன்படுத்தி அந்த நிறுவனத்தின் இலக்குகளை அடைதலே முகாமைத்துவம் என்ற செய்தியினைத் திருவள்ளுவர் சொல்லி உள்ளார்

(தொடரும் )

# இலங்கையை மீளக்கட்டியெழுப்ப இளம் தொழில் முனைவோர் முன்வைத்துள்ள 10 அம்சத்திட்டம்



இலங்கை அதன் வரலாற்றில் மிகமோசமான சமூக, பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. தவறான நிர்வாகத்தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. கொவிட்19 தொற்றுநோய் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச்சரிவு போன்ற பேரண்ட பொருளாதாரக் காரணிகளாலும் இந்தச்சிக்கல்கள் மேலும் தீவிரமடைந்துள்ளன. தற்போதைய இந்நெருக்கடியை சமாளிக்க 10 அம்ச செயலாக்க திட்டத்தை, இலங்கையின் இளம் தொழில்முனைவோர் சம்மேளனம் (COYLE) உள்ளிட்ட தொழில் சார் நிறுவனங்களின் குழு முன்வைத்துள்ளது. குறித்த குழுவில், Chamber of Commerce and Industries of Yarlpanam, Nugegoda Entrepreneurs and Professionals Alliance, Minuwangoda Trade Association, Lanka Business Ring, Nawalapitiya Traders Association, Entrepreneurs Lanka, Mahanuwara Sinhala WelandaPeramuna, Kiribathgoda Sinhala Merchant Association, Galle District Chamber Of Commerce & Industries, Event Management AssociationSri Lanka, Lanka Confectionary Manufactures Association, Kurunagala Sinhala WeladaPeramuna, All Ceylon Bakery Owners Association, Association of container transport, Association of clearing and forwarding and the Federation of Chambers of Commerce and Industry of Sri Lanka ஆகிய அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன. அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இக்குழுவானது இத்திட்டத்தை முன்வைத்திருந்தது.

இதன்முதலாவது அம்சமாக, அரசியல் மற்றும் நிர்வாக ஸ்திரத்தன்மை உடனடியாக அவசியம் என்பது முன்வைக்கப்பட்டுள்ளது. இது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் குறைப்பதுடன் அமைச்சரவை மற்றும் ஏனைய முக்கிய பதவிகளில், பொருத்தமான, நிபுணத்துவம் மற்றும் அனுபவமுள்ள நிபுணர்களை நியமிப்பதை குறிக்கின்றது.

# மக்களின் இறையாண்மைக்கு செவிசாய்க்க வேண்டும்

நீண்டகால பணி பகிஷ்கரிப்பு செய்வதன் மூலம் தற்போதைய பொருளாதார நெருக்கடி இன்னும் மோசமாகும் என கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் அறிவுறுத்தியுள்ளது

உலகை வியப்பில் ஆழ்த்திய படைப்புக்களை நிர்மாணித்த இலங்கைக்கு, அந்த பெருமை மிகுபயணத்தின் 2500 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையானது உண்மையிலேயே மனம் வருந்தத்தக்கது. பொருளாதார நெருக்கடியாக ஆரம்பித்து, இன்று அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளதுடன் ஒட்டுமொத்த இலங்கையர்களும் தமது எதிர்காலம் தொடர்பாக இப்போது நம்பிக்கையற்றுள்ளனர். நாட்டின் சட்டங்களை இயக்கும் பிரதான சட்டவாக்க நிறுவனமான நாடாளுமன்றமோ அல்லது உலகின் எந்தவொரு ஜனநாயக நாட்டின் ஜனாதிபதிக்கும் இல்லாத அளவு முழுமையான நிறைவேற்று அதிகாரங்களை தன்வசம் கொண்டுள்ள ஜனாதிபதியிடமோ அதற்குசாதகமான செயற்திட்டமொன்றை காணமுடியாதுள்ளது. ஆகையால் நெருக்கடி மத்தியில் வாழ்ந்து போராட்டத்தில் ஈடுபடும் இலட்சக்கணக்கான இலங்கையர்களின் குரல்களுக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கொள்கைவகுப்பாளர்கள் செவிசாய்க்க வேண்டுமே தவிர அவர்களுக்கு மாற்று வழி இல்லை என்பதை கூட்டுஆடை சங்கங்களின் மன்றமான நாம் தெரிவிக்கின்றோம்.

அத்துடன் நீண்டகால பகிஷ்கரிப்பிற்கு நாட்டை தள்ளுவதன் ஊடாக நாடு என்ற வகையில் எமது அழிவு துரிதப்படுமே தவிர நெருக்கடியை தீர்ப்பதற்கு அது எவ்விதத்திலும் உதவாது என்பதை நாம் மீளவும் வலியுறுத்துகிறோம்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்ப இளம் தொழில் முனைவோர்

# 2021இல் சிறந்த நிதி வளர்ச்சியை பதிவு செய்துள்ள SDB வங்கி




2021ஆம் ஆண்டில் SDB வங்கி சிறந்த நிதிப்பெறுபேறுகளை பதிவுசெய்திருந்தது. சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலில் இந்த உறுதியான நிதிப்பெறுபேறுகளை வங்கி எய்தியிருந்தது. 2021 டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டில் மொத்த இலாபம் ரூ. 909 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீத வளர்ச்சியாகும். நான்காம் காலாண்டில் வங்கியின் இலாபம் ரூ. 159 மில்லியனாக பதிவாகியிருந்தது. தேறிய வட்டி வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11 சதவீதம் வளர்ச்சியடைந்து ரூ 6.774 பில்லியனாக பதிவாகியிருந்ததுடன், மொத்த தொழிற்படு வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 7.4 பில்லியனாக பதிவாகியிருந்தது. SDB வங்கியின் கடன்புத்தகப் பெறுமதியும் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை பதிவுசெய்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9 சதவீதம் உயர்ந்து ரூ. 111.89 பில்லியனாக பதிவாகியிருந்தது.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் 98,185 கணக்குகளினூடாக ரூ. 65 பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. தேறிய தொழிற்படா இலாபம் (NPL) விகிதத்திலும் நேர்த்தியான மாற்றம் அவதானிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் 1.49 சதவீதத்துக்கு உயர்ந்திருந்தது. இந்தப் பெறுமதி 2020ஆம் ஆண்டில் 1.79 சதவீதமாக பதிவாகியிருந்தது. மேம்படுத்தப்பட்ட ஒதுக்கீடுகளின் காரணமாக இந்த வளர்ச்சி அவதானிக்கப்பட்டிருந்தது. வங்கியின் மொத்த சொத்துக்களின் பெறுமதியும் 15 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 147.8 பில்லியனாக பதிவாகியிருந்தது. வைப்பு இலாகா முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் 1 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

உயர்ந்த நிதிப்பெறுபேறுகள் தொடர்பில் SDB வங்கியின் இடைக்கால பிரதம நிறைவேற்று அதிகாரி நிரஞ்ஜன் தியாகராஜா கருத்துத் தெரிவிக்கையில், “எமது பிரதான சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மை மற்றும் நுண் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மை வாடிக்கையாளர்கள் தொடர்பில் நாம் அதிகளவு கவனம் செலுத்தியிருந் தோம். குறிப்பாக பெண்கள் தலைமைத்துவத்தில் இயங்கும் வியாபாரங்களில் அதிக அக்கறைகொண்டிருந்தோம். எமது விரிவாக்கமடைந்து செல்லும் கடன் பிரிவுகளில் இது பிரதிபலிக்கப்பட்டிருந்ததுடன், நலிவடைந்திருந்த தொழிற்படா கடன்களினூடாகவும் அவதானிக்க முடிந்தது. 2022 ஆம்ஆண்டில், கடந்த ஆண்டில் நாம் பெற்றுக்கொண்ட சாதனைகளை மேலும் கட்டியெழுப்ப எதிர்பார்க்கின்றோம். எமது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளர் தொடர்ச்சியாக வழங்கும் ஆதரவுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.” என்றார்.

# 2022 இன் பெறுமதி வாய்ந்த சிறந்த 100 வர்த்தக நாமங்களில் லங்கா டைல்ஸ்



இலங்கைக்கான தரை மற்றும் சுவர்களுக்கான டைல் சந்தையில் முன்னணியாளரான லங்கா டைல்ஸ் கடந்த வருடத்திலிருந்து 10 இடங்கள் முன்னேறி பிராண்ட் ஃபைனான்ஸின் 'மிகவும் பெறுமதியான நுகர்வோர் வர்த்தகநாமச் சுட்டி' 2022இல் மீண்டும் இடம் பிடித்துள்ளது. வர்த்தக நாமத்தின் பெறுமதியில் 48மூ வளர்ச்சியை அடைந்துள்ளதானது, நாட்டில் தற்பொழுது காணப்படும் பொருளாதார சூழ்நிலையில் ஈர்க்கக் கூடிய சாதனையாகும். 'டைல்' பிரிவில் மிகவும் பெறுமதி வாய்ந்த வர்த்தக நாமமாக வளர்ச்சி கண்டுள்ள லங்காடைல்ஸ், சந்தையின் முன்னணியாளர் என்ற தனது ஸ்தானத்தை உறுதிப்படுத்தியுள்ளது. சந்தைப்படுத்தலுக்கும், நிதித்துறைக்கும் இடையில் காணப்படும் இடைவெளியைக் குறைக்கும் உலகின் முன்னணி வர்த்தகநாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமே பிராண்ட் ஃபைனான்ஸ் ஆகும். வர்த்தக சூழலின் வெளியக மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் மிகவும் பெறுமதி மிக்க வர்த்தகநாமச் சுட்டியும் காலத்துக்குக் காலம் மாற்றமடையும்.

இந்தச் சாதனை தொடர்பில் கருத்துத் தெரிவித்த லங்கா வோல் டைல்ஸ் பிஎல்சி மற்றும் லங்கா டைல்ஸ் பிஎல்சி இன் முகாமைத்துவப் பணிப்பாளர் மகேந்திர ஜயசேகர, 'இந்த அங்கீகாரத்தின் மூலம் நாம் கௌரவிக்கப்பட்டிருப்பதுடன், தற்போதைய சூழ்நிலையில் இந்த வெற்றி குறிப்பிடத்தக்கதொன்றாகும்.' என்றார்.

Chas P Hayley நிறுவனத்துக்கு

# சிறந்த கைத்தொழில் முயற்சியாளருக்கான தங்கவிருது



தும்புசார்ந்த பெறுமதி சேர்த்த உற்பத்தித் துறையில் சிறந்து விளங்கும் Chas P Hayley நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) ஏற்பாடு செய்த சிறந்த கைத்தொழில் முயற்சியாளருக்கான விருது விழாவில் தும்பு மற்றும் அதுசார்ந்த உற்பத்திதுறையின் பாரியளவிலான பிரிவின் தங்கவிருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் வோட்டர்ஸ் ஏஜ் ஹோட்டலில் நடைபெற்ற விருது விழாவில் நிறுவனத்தின் கைத்தொழில் முகாமையாளர் பிரதீப் அமரதாச இவ்விருதை பெற்றுக்கொண்டார்.

ஆங்கிலேய தொழில் முயற்சியாளரான சார்ள்ஸ் பீ. ஹேர்லியினால் 1876 ஆம் ஆண்டு வாசனைத் திரவிய பொருள் ஏற்றுமதியில் தொடங்கப்பட்ட இத் தொழில் முயற்சியானது, பிற்காலத்தில் தும்பு மற்றும் அதுசார்ந்த உற்பத்தித் துறைக்கு காலடியெடுத்து வைத்தது. தற்பொழுது 100%ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட Chas P Hayley நிறுவனம் அமெரிக்கா, தென்கொரியா, இங்கிலாந்து, போலந்து, ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளுக்கு தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்கின்றது.

Chas P Hayley நிறுவனம் அடிப்படையில் தும்புக்கயிறு, சுருள் கயிறு உள்ளிட்ட தும்புசார்ந்த ஏராளமான உற்பத்திகளை உயர் தரத்துடன் உற்பத்தி செய்கின்றது. உலகின் முன்னணி சொகுசு வாகனங்கள் பலவற்றுக்கு ஆசன வடிவமைப்புக்கு Chas P Hayl நல உற்பத்திகளே பயன்படுத்தப்படுகின்றன. 250 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகின்ற Chas P Hayley நிறுவனம் இலங்கையின் முன்னணி தொழில் முயற்சி நிறுவன குழுமமான ஹேலீஸ் நிறுவனத்தின் இணை நிறுவனம் என்பதுடன் அதன் முதலாவது கைத்தொழிற்சாலை காலியில் அமைந்துள்ளது. உள்நாட்டு வளங்களை உற்பத்திதிறனுடன் பயன்படுத்தி இலங்கைக்கு பெருமளவு அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதில் 100 ஆண்டுகளுக்கு மேலாக நாம் முன்னின்று உழைத்து வருகின்றோம்.

எமது வெற்றிக்கு ஏதுவான பிரதான காரணியாக விளங்குவது புத்தாக்க சிந்தனையே ஆகும். ஆகவே,தும்புசார்ந்த பெறுமதிசேர்த்த பல்வேறு உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு கடந்த காலங்களில் எங்களால் முடிந்துள்ளது. இந்த வெற்றிக்கு உறுதுணையாக நின்ற பெறுமதிமிக்க சர்வதேச வாடிக்கையாளர்களுக்கும் பணியாட்டொகுதிஅங்கத்தவர்களுக்கும்நன்றியைதெரிவித்துக் கொள்வதாக முகாமைத்துவப் பணிப்பாளர் ரஜீவ் குணதிலக தெரிவித்தார்.

# Transsion Holdings உடன் Gestetner–Telkom கைகோர்ப்பு



அலுவலக தன்னியக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முன்னோடிகளாகவும், பல தசாப்த கால நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள நிறுவனமுமான Gestetner of Ceylon PLC இன் புதிதாக நிறுவப்பட்ட பிரிவான GestetnerTelkom தொலைத்தொடர்பாடல் உப பிரிவில் பிரவேசித்துள்ளதுடன், உலகின் வேகமாக வளர்ந்து வரும் ஸ்மார்ட்ஃபோன் வர்த்தக நாமங்களில் ஒன்றும், ஆபிரிக்கா மற்றும் தெற்காசிய பிராந்தியங்களில் ஸ்மார்ட்ஃபோன்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் பிரிவில் சந்தை முன்னோடியாக அமைந்திருக்கும்TECNO மொபைல்களை இலங்கையில் விநியோகிக்க Transsion Holdings உடன் கைகோர்த்துள்ளது.

“Stop At Nothing” எனும் உயர்ந்த தொனிப்பொருளைக் கொண்டுள்ள முன்னணி ஸ்மார்ட்ஃபோன் வர்த்தக நாமமும், ஸ்மார்ட் சாதனமுமாகவும் திகழும் TECNO, தமது மதிநுட்பமான மற்றும் நவநாகரீகமான வாழ்க்கை முறைகளை இணைப்பதற்கு உலகுக்கு ஸ்மார்ட் சாதனங்களை வடிவமைத்து வழங்குகின்றது. 70 நாடுகளில் TECNO பிரசன்னத்தை கொண்டுள்ளதுடன், 80,000க்கும் அதிகமான விற்பனை பகுதிகளை கொண்டு இயங்குகின்றது. தரவுகள் அடிப்படையில் இயங்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச R&D புத்தாக்க நிலையங்களினூடாக செயலாற்றுவதுடன், தயாரிப்பு வடிவமைப்பு, கமரா மற்றும் வர்த்தக நாமப் புகழ் போன்றவற்றில் விருது வென்ற தலைமைத்துவத்தைக் கொண்டுள்ளது. மொபைல் தொலைபேசிகள் இறக்குமதியில் TRC இன் அனுமதி பெற்று இயங்கும் GestetnerTelkom, TECNO மொபைல் ஊடாக இளம் நுகர்வோரை சென்றடைய எதிர்பார்ப்பதுடன், அதற்காக நாட்டின் முக்கியமான பகுதிகளில் பிராந்திய விநியோகத்தர்களைக் கொண்டுள்ளது.

GestetnerTelkom இனால் TECNO POP 5 LTE தொலைபேசி ஏப்ரல் மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதில் 6.52" HD+ Dot Notch Screen, large 5000 mAh long பற்றரி ஆயுள், 8MP AI இரட்டை பின்புற கமிரா உடன் Dual Flash, 32GB ROM + 2GB RAM, Fingerprint Unlock போன்ற பல உள்ளம்சங்கள் காணப்படுகின்றன.

# சுற்றுலாத்துறை சிறு வணிகங்களுக்கு மானியமாக ஐரோப்பிய ஒன்றியம் ரூபா 60 மில்லியன் நிதியுதவி



சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு மீண்டும் வருவதற்கு ஆரம்பித்துள்ள நிலையில், சுற்றுலாத்துறையிலுள்ள சிறு வணிகங்கள் கொவிட் தொற்றுநோய்க்குப் பின்னரான மீட்சி மற்றும் வளர்ச்சிக்கான வலுவாக அத்திவாரத்தைக் கட்டியெழுப்புவதை விரைவுபடுத்த உதவும் வகையில், இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவும், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையும் தலா ரூபா 1 மில்லியன் பெறுமதியான முதல் மூன்று மானியங்களை வழங்கியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் கூடிய ‘சுற்றுலாத்துறை மீள் எழுச்சித்திட்டம்’ என்பதன்கீழ் அடுத்த இரண்டு மாதங்களில் 60 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப்படவுள்ளன.

நிதிப் பற்றாக்குறையால் பல சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் தங்கள் வணிகத்தை மீண்டும் ஆரம்பிப்பதில் தாமதம் காட்டுகின்றன. இந்த மானியங்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் தங்கள் செயல்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கவும், சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியை சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்வதற்கும், எதிர்காலத்தில் மேலும் மீள்எழுச்சியுடன் செயல்படுவதற்கும் சிறந்த ஸ்தானத்தில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சாய்பி முதல் மானியங்களை வழங்கும் இந்நிகழ்வில் உரையாற்றுகையில், “சுற்றுலாத்துறையில் உள்ள சிறு வணிக நிறுவனங்கள் தொற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மானிய நிதி உட்பட பல முனைகளில் அவற்றுக்கு ஆதரவு தேவைப்படுகிறது.

# மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸ் தற்போது காலி நகரில்

மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸ், கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புற நுகர்வோரை மையமாகக் கொண்டு இயங்குவதுடன், அதன் நாடுதழுவிய வலையமைப்பு விஸ்தரிப்பின் கீழ் புதிய கிளையை அண்மையில் சேர்த்துள்ளது.

தெற்கின் பாரிய வர்த்தக மையமான காலியில் அமைந்துள்ள இந்த புதிய கிளையானது, நாடு முழுவதும் மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸின் வளர்ந்து வரும் பிரசன்னத்தை விரிவுபடுத்தும் அதேநேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் சௌகரியத்தையும், பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

தெரிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர்கள், பல்வேறு பிரமுகர்கள் மற்றும் மஹிந்திரா ஐடியல் ஃபினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ அணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இவ்விழாவில் கலந்து சிறப்பித்தனர். இலக்கம் 18, பள்ளிவாசல்வீதி, பிரதான வீதி, காலி என்ற முகவரியில் இப்புதிய கிளை அமைந்துள்ளது.

மஹிந்திரா ஐடியல் ஃபினான் ஸின் தங்கக் கடன்களுக்கான உதவிப் பொது முகாமையாளரான பிரதீப் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “எங்கள் வாடிக்கையாளர்களுக்கு, குறிப்பாக கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புற சந்தைகளில் பொருத்தமான நிதியியல் தீர்வுகளை வழங்குவதில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.



# வாரபலன்

15.05.2022 - 21.05.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது பொருளாதாரப் பற்றாக்குறை அகலும் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், உடல் ஆரோக்கியம் சீராகும். உங்கள் ராசிக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான சூரியன் என்பதால் தொழில் வெற்றி நடைபோடும். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் அகலும் பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் .

## ரிஷபம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது வசதி வாய்ப்புகள் பெருகும். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இரவு பகலாகப் பாடுபட்டும் இதுவரை பலன் கிடைக்கவில்லையே என்று நினைத்தவர்களுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தை மாற்று மருத்துவத்தால் சீர் செய்து கொள்ளலாம். தாய்வழி ஆதரவு உண்டு தொழில் வளர்ச்சி திருப்தி தரும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும்.

## மிதுனம்

சூரியன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும். வீடு தேடி நல்ல தகவல்கள் வரலாம். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும் உடன்பிறப்புகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். வியாபார போட்டிகளை சமாளிப்பீர்கள். அண்ணன் தம்பிகளின் ஆதரவோடு எண்ணிய காரியத்தை எளிதில் முடிப்பீர்கள். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்குகள் உங்களுக்கு சாதகமாக முடியும். தொழில் வளர்ச்சிக்காக செய்த புது முயற்சிகள் வெற்றி தரும்.

## கடகம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது பணப்பற்றாக்குறை ஏற்படலாம். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். இனத்தார் பகை மாறும் எடுத்த செயல்களில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதோடு கொள்கை பிடிப்போடு செயல்படுவீர்கள். அடுத்தடுத்து பல நல்ல காரியங்கள் நடைபெறும். அதிகார வர்க்கத்தின் ஆதரவும் உண்டு.கொடுத்து வைத்தவர்கள் நீங்கள்தான் என்று இந்த உலகத்தில் உள்ளவர்கள் சொல்வார்கள்.

## சிம்மம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பொன்னான வாய்ப்புகள் வந்து சேரும். அருளாளர்களின் ஆலோசனைகளும் அனுபவம் உள்ளவர்களின் அறிவுரைகளும் அப்போது கைகொடுக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். குடும்பத்தில் நல்ல சம்பவங்கள் நிறைய நடைபெறும். தடைகளைத் தாண்டி முன்னேற்றம் காண்பீர்கள். சொத்துக்கள் வாங்குவதும் விற்பதும் கைவந்த கலையாகும். என்ன இருந்தாலும் ராகு பகை கிரகத்தின் காலில் சஞ்சரிப்பதால் தொழில் ஏற்ற இறக்க நிலை வந்துகொண்டுதான் இருக்கும். திசாபுத்திகு ஏற்ற சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் நிலைமை உடனடியாக மாறலாம்.

## கன்னி

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றம், நாடு மாற்றம், உத்தியோக மாற்றம் விரும்பும் விதத்தில் அமைவது அரிது நட்பு பகையாகலாம். நாணயத்தைக் காப்பாற்ற இயலாது. அவ்வப்போது குணம் மாறி பல காரியங்களை செய்ய இயலாமல் போகலாம். சேமிப்பு கரையும் செலவுகள் அதிகரிக்கும். அதிகார வர்க்கத்தினரின் பகையால் சில காரியங்கள் ஸ்தம்பித்து நிற்கலாம். ஆரோக்கியத்திலும் கவனம் தேவை.

## துலாம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது பொருளாதார நிலை உயரும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டிலிருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வரலாம்.ஆடம்பர செலவு அதிகரிக்கும். முன்கோபத்தை குறைத்துக் கொண்டு செயல்படுங்கள். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவுடன் புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும் .மிதமிஞ்சிய பொருளாதாரமும் தொழிலில் புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும்.

## விருச்சிகம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும்பொழுது தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு அனைத்து காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள். பண வரவு தாராளமாக இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.வெளிவட்டார தொடர்பு விரிவடையும். புதிய வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரும். இல்லத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். இக்காலம் உங்களுக்கு யோகமான காலம் தான்.

## தனுசு

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும்பொழுது தந்தை வழி உறவு பலப்படும். தொழில் முன்னேற்றம் உண்டு. இல்லம் கட்டி குடியேற வேண்டும் அல்லது வீடு வாங்கி குடியேற வேண்டும் என்று நினைத்தவர்களுக்கு அது கைகூடும். புதிய வாகனம் வாங்கி பயணத்தில் ஆர்வம் காட்டுவீர்கள். தனியார் துறையில் பணி புரிபவர்கள் அரச வேலைக்கு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும்.பொதுவாக புதிய முயற்சிகளில் வெற்றியும் ஆதாயமும் கிடைக்கும் நேரம் இது.

## மகரம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த கவனம் தேவை. அளவுக்கு அதிகமான விரயங்கள் ஏற்படலாம். இழப்புக்கள் அதிகம் ஏற்படும். எதையும் நிதானித்து செய்ய இயலாது. உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. ஊர் மாற்றங்கள், இடமாற்றங்கள் இனிமை தருவதாக அமையாது. பகைவர்களின் ஆதிக்கம் மேலோங்கி பல பணிகளை செய்ய இயலாமல் போகலாம்.இக்காலத்தில் சர்ப்ப ப்ரீதிகளை செய்துகொள்வது நல்லது.

## கும்பம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபிட்சமும் நிறைந்திருக்கும். திருமண வயதை அடைந்தவர்களுக்கு நல்ல வரன்கள் கிடைக்கும். பணியில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு மட்டுமல்லாமல் ஊதிய உயர்வும் கிடைக்கும். சப்தமாதிபதியாக சூரியன் இருப்பதால் எதை எந்த நேரத்தில் செய்ய நினைத்தீர்களோ அதை அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். திடீர் தனவரவு உண்டு. ஒரு சிலருக்கு அரசு வழியில் கௌரவப் பதவிகள் கிடைக்கலாம். வெளிநாட்டில் உள்ள தொழில் நிறுவனங்களில் இருந்து ஒருசிலருக்கு அழைப்புகள் வரலாம்.

## மீனம்

சூரியனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு மாற்றங்கள் உருவாகும். அது ஊர் மாற்றமாகவும் இருக்கலாம். அல்லது நாடு மாற்றமாகவும் இருக்கலாம். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும் கடன் சுமை குறையும். உறவினர்களுடன் பகை வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். கட்டிய வீட்டை வாடகைக்கு விட முடியவில்லையே என்ற கவலைப்பட்டவர்களுக்கு நல்ல தகவல் இப்பொழுது வந்து சேரும். மற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும்.

# சிறந்த தலைமைத்துப் பண்புகளைக் கொண்டவர் பேராசிரியர் சோமசுந்தரம் சந்திரசேகரம்

1944 – 2022



பேராசிரியரது மரணச் செய்தி அவரை அறிந்த உறவினர்கள், நண்பர்கள் பல்கலைக்கழக சகாக்கள் உட்பட பல்வேறு தரப்பட்ட சாராருக்கும் பெரும் அதிர்ச்சியை அளித்த சற்றும் எதிர்பாராத ஒரு துயரச் செய்தியாகும். குடும்பத்தவர்களோடு குறுகிய விடுமுறையில் தென்னிலங்கை சுற்றுலா தளமொன்றிற்கு சென்றிருந்த சமயம் சற்றும் எதிர்பாராத வகையில் காலை 6.00 மணியளவில் பேராசிரியர் சந்திரசேகரம் தனது 78 ஆவது வயதில் மாரடைப்பால் காலமானார்.

பேராசிரியர் சந்திரசேகரனது நீண்டகால நண்பனாக இருந்ததன் காரணமாக எனக்கு அவரின் வேறுபட்ட பல பரிமாணங்களைப் பற்றியும் அறிந்திருக்கக் கூடிய வாய்ப்பிருந்தது. 1964 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மாணவனாக பேராதனைப்பல்கலைக்கழகத்தில் நான் இணைந்தகாலம் முதலாக அவருடன் நண்பனாக அறியவந்தபோது அவர் எனக்கு ஒருவருட சிரேஸ்ட மாணவனாக கல்விமாணி துறையில் கற்றுக் கொண்டிருந்தார். நான் அக்பர் மண்டபத்திலும் அவர் மார்ஸ் மண்டபத்திலும் தங்கியிருந்ததனால் ஆரம்பகால பௌதீக தூரத்தின் இடைவெளி காரணமாக எங்களுடைய சிநேகம் ஒரு சில வரையறைகளுக்கு உட்பட்டதாகவே இருந்தது. ஆனால் அது மெதுவாக படிப்படியாக தொடர்ந்து வளர்ந்து கொண்டே வந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களாக இருவரும், அவர் கல்வித் துறையிலும் நான் புவியியல் துறையிலும் இணைந்தகாலம் முதலாக இவ்வருடம் (2022) வரை எமது நட்பு மிகவும் நெருக்கமாக தொடர்ந்து கொண்டிருந்தது. அதாவது ஏறத்தாள 58 வருடங்கள் அல்லது ஆறு தசாப்த உறவாக பல்கலைக்கழக சக ஆசிரியராக, மலையக சமூகத்தைச் சேர்ந்த சமூக ஆர்வலர்களாக, குடும்ப நண்பர்களாக, இலங்கையில் கொழும்பு வாழ் பிரஜைகளாக பல்வேறு மட்டங்களிலும் துறைகளிலும் கல்வியூக்கும் கொண்ட பொதுவான ஆர்வங்களின் அடிப்படையில் எமது நட்பு மெருகேறி வந்தது.

பேராசிரியர் சந்திரசேகரனின் சிறப்பு அவரிடமிருந்த கடின உழைப்பாகும். தனது பேராசிரியர் பதவியில் பெற்ற கல்வித்துறை சார்ந்த அறிவின் வளர்ச்சி, விரிவுரையாளர், பேராசிரியர், துணைத்தலைவர், துறை பீடாதிபதி, ஆகிய பல மட்டங்களிலும் ஆற்றிய பதவிகளின் வாயிலாக பெற்றுக்கொண்ட அனுபவங்கள் யாவற்றையும் முறையாக பயன்படுத்தி சிறந்த ஆசிரியராக கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் வருகை விரிவுரையாளராக ஏனைய பல பல்கலைக்கழகங்களிலும் ஆசிரிய மாணவர்கள் ஏனைய இளம் பட்டதாரி மாணவர்கள் போன்ற பலருக்கும் சிறந்த ஆசிரியராக திகழ்ந்தார். ஓய்வுபெற்ற பின்னர் தனியார் பல்கலைக்கழகங்களிலும் தனது கற்பித்தல் பணியை தொடர்ந்து வந்தார்.

கற்பித்தலில் காட்டிய அதே ஆர்வத்தை ஆராய்ச்சி பணிகளிலும் தொடர்ந்த பேராசிரியர் சந்திரசேகரன் அவர்கள், முப்பதிற்கும் (30) மேற்பட்ட நூல்களை வெளியிட்டதோடு நூற்றுக்கணக்கான கல்வித்துறை சார் கட்டுரைகளையும் எழுதி அவற்றை தினசரி பத்திரிகைகளிலும் வெளியிட்டமை, அவரின் பணிகள் பலவும் இலகுவாக பயனாளர்களை சென்றடையக்கூடியதாக இருந்தது. வானொலி, தொலைக்காட்சிகள் மூலமாக இவர் ஆற்றிய கல்விசார் சமூகப்பணிகள் பெரிதும் நினைவுகூரத்தக்கன. இவருடைய அராய்ச்சிப் பணி ஹிரோசிமா பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவனாக முதுகலை கல்விமாணி பயிற்சியோடு ஆரம்பித்து இதுவரைக்காலம் தொடர்ந்திருந்தது. இவருடைய யப்பானிய உறவு இந்த ஆண்டு வரையிலும் அவருடைய யப்பானிய நண்பர்களுடனான குறிப்பாக உஹெய்ரா என்பவருடனான சிநேகம் குடும்ப சிநேகமாகி இப்போது வரை கடல் கடந்தும் நீடித்து வந்தமை இவருடைய சிநேக பாலத்துடனான சமூகத் தொடர்புகளின் பண்பாக தெரிகிறது. இவருடன் பழகிய 'பேயும்' பின்னர் இவரை விட்டு பிரிந்துவிடாது என்று நண்பர்கள் இவருடைய சிநேகத்தின் இயல்பு பற்றி நகைச்சுவையாக கூறுவார்கள். அது உண்மையேயாகும்.

கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் அங்கு வருகைதரு பேராசிரியராக கற்பித்து வந்தார். இவருடைய இறுதி ஊர்வலத்தில் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் உட்பட பீடாதிபதி வரையான பலரும் வந்து இறுதி அஞ்சலியை செலுத்தியமை தனது சேவைகால பணியின் போது எந்தளவுக்கு தனது கற்பிக்கும் பணியை அர்ப்பணிப்புடன் செய்திருந்தார் என்பதற்கு சிறந்த சான்றாக இருந்தது.

கிழக்குப்பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக நான் பணியாற்றிய காலம் குழப்பமான அரசியல் போராட்டங்கள் நிலவிய காலப்பகுதி. அப்போது தமிழீழ விடுதலைப்புலிகள், அரசபடைகள், அரச நிர்வாகம், பொது மக்கள் என்ற பல்வேறு தரப்பினருடனான பின்னிய செயல் விளைவுகள் நிலவிய குளறுபடியான அரசியல் காலகட்டத்தில் பேராசிரியர் சந்திரசேகரம் கிழக்குபல்கலைக் கழகத்திற்கு நான் பணியாற்றிய நான்கு வருடகாலமும் தொடர்ந்தும் அயராதும் தயங்காதும் வருகை பேராசிரியராக பணிபுரிந்தார்.

இவையெல்லாம் அவருக்கு கற்பித்தலில் இருந்த ஆர்வம் மற்றும் கல்விப்பணிக்கான அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டும் உதாரணங்களாகும்.

காலஞ்சென்ற சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தில் மலையகத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் தேவை என்ற பிரேரணையை வளர்த்தவர்களில் பேராசிரியர் சந்திரசேகரமும் முக்கியமான ஒருவராகும். சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்தோடு மறக்கடிக்கப்பட்ட மலையக பல்கலைக்கழகம் பற்றிய சிந்தனை இப்போது தமிழ் முற்போக்கு கூட்டமைப்பு கட்சியின் தலைமையில் குறிப்பாக முன்னாள் அமைச்சர் மனோகணேசனின் ஊக்குவிப்போடு முறையான ஒரு பிரேரணையை தயார் செய்யும் குழுவில் ஒரு அங்கத்தவராக பணியாற்றினார். அத்துடன் அமைச்சர் மனோகணேசனது மலையக கல்விசார்ந்த ஆலோசகராகவும் சிலவருடங்கள் பணியாற்றியுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக பேரவை குழுவின் அங்கத்தவராகவும் பணியாற்றியவர். கொழும்புத் தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவருமாவார்.

மேற்கூறியுள்ள பல முக்கிய பொறுப்புக்கள் மாத்திரமன்றி வேறான பல கல்விசார் ஆலோசனைக் குழுக்களிலும் குறிப்பாக பல்கலைக்கழக, மற்றும் அமைச்சுக்களிலும் அவ்வப்போது எழும் தேவைகளுக்கு நியமிக்கப்படும் பலகுழுக்களிலும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அக்குழுக்களில் கல்வி ஆணைக் குழு அங்கத்துவம் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறான ஒரு பல்திறன் கொண்ட கல்விமானாக சமூக உணர்வு கொண்ட மலையக சமூக ஆர்வலராக, கலை இலக்கிய ஆர்வம் கொண்டவராக பல்துறை நிபுணத்துவம் கொண்ட ஆளுமையுடன் நீண்டகாலம் நெருங்கிய நண்பனாக இருந்து வந்தமை குறித்து பெருமையடைகின்றேன். ஆனால் இன்று அவரை இழந்து விட்டமை குறித்து துயரத்தோடு நினைவு கூர்கிறேன்.

அவருடைய குடும்ப வாழ்க்கையிலும் அவர் சிறந்த குடும்பத்தலைவனாக இருந்து வந்தார். மனைவி, மகள், மகன்கள், பேரக்குழந்தைகள் என்போடு சகோதரிகள், சகோதரர் என்ற உடன்பிறந்த உறவுகளுடன் ஆலமரமாக வளர்ந்துள்ள குடும்பத்தில் அனைவரையும் அன்போடும் வாஞ்சையோடும் அரவணைத்தே வாழ்ந்து வந்தவராகவும் தனது தொழில் தளம், சமூக தளம் போன்றவற்றில் பெற்றுக்கொண்ட நண்பர்களுடன் நட்புடன் அனைவரையும் மதித்து அவர்களின் நட்பினை சிறந்த முறையில் பேணியவராகவும் ஒரு சிறந்த மனிதனாக தலைமைத்துவ பண்புகளை கொண்டவராக வாழ்ந்து மறைந்தவர் பேராசிரியர் சந்திரசேகரம். அவர் புகழ் மறையாது வாழும்.

பேராசிரியர்
மா.செ.மூக்கையா...✍

# ஓய்வுபெற்றார் ஆசிரிய ஆலோசகர் அப்துல் ஸலாம்



நீர் கொழும்புக் கல்வி வலய சித்திரக்கலைப் பாட ஆசிரிய ஆலோசகர் ஏ.ஏ. அப்துல் ஸலாம் தனது 60ஆவது அகவையில் இன்று ஆசிரிய சேவை I இலிருந்து ஓய்வு பெற்றார்.

தி/ கிண்ணியா அல் ஹிரா முஸ்லிம் ம.வி.யில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக முதல் நியமனம் பெற்ற இவர் 25 வருடங்கள் ஆசிரியராகவும், 5 வருடங்கள் ஆசிரிய ஆலோசகராகவும் கடந்த 34 வருடங்களாக செவ்வையாய்த் தன் கல்விச் சேவையை ஆற்றினார்.

அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் (1990_1991) பயிற்சி பெற்றார்.

தி/ கிண்ணியா அல் ஹிரா முஸ்லிம் ம.வி

தி/ பேராற்று வெளி முஸ்லிம் ம.வி

குரு/ அல் அஷ்ரக் ம.வி. தல்கஸ்பிட்டிய

குரு/ அத்தாரிக் ம.வி தோரயாய.

குரு/ மடிகே முதுநுவ முஸ்லிம் ம.வி. இப்பாகமுவ

குரு / பொத்துஹெர முஸ்லிம் வி.

கம் / அலிகார் ம.வி. கள எலிய

கம் / அல் ஹஸன் வி. வேவல் தெனிய

கம் / அல் பலாஹ் ம.வி கொச்சிக்கடை

கம்/ அல் பத்ரியா ம.வி.

கஹட்டோவிட்ட.

கம் / தாருஸ் ஸலாம் ஆரம்பப் பாடசாலை , திஹாரிய ஆகிய பாடசாலைகளில் சேவையாற்றினார்.

நீர் கொழும்பு, மினுவாங்கொட, களனிய கல்வி வலய சித்திரம் மற்றும் இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகராகவும் இரண்டாம் மொழி தமிழ் ஆலோசகராகவும் நீர் / கட்டான கோட்ட சிங்கள மொழி மூலப் பாடசாலைகளிலும் சிறந்த பணியாற்றினர்.

ஆசிரிய ஆலோசகர் அப்துல் ஸலாம் பிரபலமான கவிஞரும் எழுத்தாளரும் பாடலாசிரியருமாவார்.

சிறுவர் பாடல்கள், சிறுகதைகள் கவிதைகள், நூல் விமர்சனங்கள் என்று நூற்றுக்கணக்கான படைப்புக்களைத் தந்திருக்கின்றார்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, ஊடகங்களில் காத்திரமான கலைப்பங்களிப்பாற்றிய ஓய்வு பெற்ற சித்திரக் கலைப்பாட ஆசிரிய ஆலோசகர் அப்துல் ஸலாம்.

ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் மர்ஹூம். அப்துல் ஸலாம் ஆலிம் அப்துல் அலி ஓய்வு பெற்ற ஆசிரியை மஹ்பூபா தம்பதிகளின் மூத்த புதல்வரும், மூதூர் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் ஏ.ஆர்.ஏ.எம் அபூபக்கரின் மூத்த பேரனுமாவார்.

கிண்ணியா அமீர் அலி ...✍

# கோழிப்பண்ணை

நிலத்தின் இருள் படிப்படியாக அகன்ற வண்ணமிருந்தது. ஓரிரு காகங்கள் ஜோடி ஜோடியாக ஆகாயத்தில் பறக்கத் தொடங்கின. இளம் சூரியன் ஒரேயடியில் நிலத்தில் பதியாது சுற்றாடல் ஓரளவு சாம்பல் நிறத்தில் ஒளி விட்டு பரந்து சென்றது.

மஜிஸ்ரேட் பங்களாவில் அதிகாலையிலேயே திறக்கப்பட்ட ஜன்னல் கதவுகள் மூலம் மென்மையான திரைச்சீலையை அங்குமிங்குமாக்கி குளிர் உள்ளே நுழைந்தது.

நீதவான் தன் படுக்கை அறையில் அங்குமிங்குமாக இரவு ஆடையுடன் சிந்தித்த வண்ணம் இருந்தார்.

அமைதியற்ற மனது அவரை சிக்கலுக்குள்ளாக்கி அதிர்ச்சிக்குள்ளாகியிருந்ததோடு, அதிலிருந்து மீளுவதற்குப் பதிலாக மேலும் அதிலே மூழ்கியிருப்பதற்கான ஆசை மேலோங்கியிருந்தது.

சொற்களால் விபரிக்க முடியாத வகையிலான சோகமும் நிச்சயமற்ற தன்மையும் தனக்குள் உருவாகியிருப்பதனை அவர் உணர்ந்தார்.

இவ்வாறான சிக்கல் மிகு மனதுடன் கடமையைச் சரியாக நிறைவேற்ற முடியாது என்பதனைப் புரிந்து கொண்ட அவர், இன்றைய தினத்தில் நீதிமன்றத்துக்குப் போவதில்லை எனத் தீர்மானித்தார்.

★★★

பதினாறு வயதுக்கு மேற்பட்ட எந்த ஒரு பெண்ணுக்கும் சுயதொழிலில் ஈடுபட்டு, தமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், நிரந்தர வருமான வழிகளை அமைத்துக் கொள்வதற்கும், அதற்குத் தேவையான சகலவற்றையும் (நிதி, மூலப்பொருள், ஆலோசனை போன்றவற்றை) இலவசமாக வழங்கும் செயற்றிட்டமொன்று தொடர்பாக அறிவூட்டுதல் மற்றும் பதிவு செய்வதற்காக 28ஆம் திகதி ஞாயிறு மாலை 2:30 மணிக்கு வட்டப்பளை கிராம எல்லையில் அமைந்துள்ள 'பனை மரங்களின் நிழலில்' நடக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சகல பெண்களிடமும் கோரிக்கை விடுக்கும் அறிவித்தல் வீதி வீதியாக 26ஆம் திகதி ஒட்டப்பட்டிருந்தது. கண்ணகி அம்மன் கோவில் வீதி எங்கும் வட்டப்பளை கிராமம் முழுவதும் துண்டுபிரசுரங்கள் பங்கிடப்பட்டிருந்தன.

28ஆம் திகதி 1:00 மணி முதல் பல வருடங்களாக யுத்தத்தினால் சேதத்திற்குள்ளான வீடுகளுக்குப் பதிலாக பனை ஓலை, பொலித்தீன் மற்றும் தகரத் துண்டுகள் மூலம் பொருத்தப்பட்ட குடிசைகளுக்குள் வெயிலுக்கு வெந்து வரண்டு போன தோலுடனான சரீரத்தை உடைய பெண்களும் சிறுபிள்ளைகளை கக்கத்தில் அல்லது முந்தானையில் தாங்கிக்கொண்டு , ஓரளவு நடக்கும் வயதினையுடைய பிள்ளைகளைகை பிடித்து அழைத்துக் கொண்டு தாய்மாரும் திருமணமான, திருமணமாகாத நடுவயது மற்றும் வயோதிபப் பெண்களும், யுவதிகளும் கூட்டம் கூட்டமாக 'பனைமர நிழலில்' ஒன்று சேரத் தொடங்கினர்.

தம் மனதில் பல்வேறு எண்ணங்களை எண்ணிய பெண்கள் நெருப்பு வெயிலில் பனைமரங்களின் ஓரமாக தாம் விரும்பியவாறு அமர்ந்திருந்தனர். அந்த இடத்தின் ஓர் ஓரத்திற்கு அருகாக மேசை ஒன்றின் மேல் வெள்ளைப் புடவை ஒன்று விரிக்கப்பட்டு, அதன் மேல் பூப்பூச்சு ஒன்றும் மேசைக்குப் பின்னால் சில கதிரைகளும் வைக்கப்பட்டிருந்தன. இரு பனை மரத்துக்கு இடையே கட்டப்பட்டிருந்த கயிறு ஒன்றில் தூக்கப்பட்டிருந்த மாதர் சங்கத்தின் பெயருடனான சிவப்பு நிற பனர் ஒன்று காற்றில் பறந்து கொண்டிருந்தது.

சரியாக பகல் 2:00 மணிக்கு அறிவூட்டும் கூட்டம் ஆரம்பமானது. கொழும்பிலிருந்து வந்த கறுப்பு நிறக் காற்சட்டையும் கடும் சிவப்பு டீ சேர்ட்டும் கடும் வெயிலின் சூட்டிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக கறுப்பு முகக்கண்ணாடி அணிந்திருந்த இரு யுவதிகளும் அவர்களது மொழி பெயர்ப்பாளராக யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த நடு வயதுடைய ஒரு தமிழரும் பாதுகாவலர்கள் எனக் கருதக் கூடிய நன்கு வளர்ந்த இரு இளைஞர்களும் வெள்ளை வேன் ஒன்றில் பிற்பகல்1:50 மணியாகும் போது கூட்ட மைதானத்திற்கு வந்தனர்.

கூடியிருந்த பெண்கள் அமர்ந்திருந்த இடங்களிலிருந்து ஒரே நேரத்தில் எழுந்து நின்றனர். அது எப்படி நடந்தது என்பதனை அவர்கள் அறிந்திருக்கவில்லை எனினும் முன்பு பேசி முடிவு எடுத்திருந்தது போன்று அவர்கள் எழுந்து நின்றனர். அவ்வாறு எழுந்து நின்றது பெரும் அச்சத்துடனாகும்.

யுவதிகள் இருவரும் வெண்மையான தமது பற்களின் அழகை கூடியிருந்த பெண்களுக்குக் காண்பித்தார்கள். அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்கள் இந்த சிரிப்புக்குப் பதிலளிப்பதா? அல்லது கரகோசம் செய்வதா? என்ற தீர்மானத்துக்கு வர முடியாது அமைதியாக அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கூட்டம் பிற்பகல் 5:30 மணி ஆகும் போது



முடிந்து விட்டது.

பார்வதியின் மனது கோழிப்பண்ணையின் பக்கம் திரும்பியிருந்ததனால் அவருக்கு விலங்கு வளர்ப்பு உதவித் திட்டத்தின் கீழ் பிரதிபலன் கிடைத்தது. 50 கோழிக்குஞ்சுகளும் அவை முட்டையிடும் கோழிகளாக மாறும் வரை உணவு, மருந்து, மிருக வைத்திய ஆலோசனை, கோழிப் பண்ணை நிர்வாகம் பற்றிய ஆலோசனை மற்றும் கோழிகள் முட்டை இடுதலை ஆரம்பித்த பின் சந்தை விலையில் சகல முட்டைகளைக் கொள்வனவு செய்தல், முட்டையிடுவது பூரணப்படுத்தப்பட்ட பின் வயதான கோழிகளை இறைச்சிக்காகக் கொள்வனவு செய்வது வரை நிதி வழங்கும் நிதி நிறுவனம் மேற்கொள்ளும் என நிதி நிறுவனத்தினால் அறிவூட்டப்பட்டது.

அதன்படி பார்வதி சகல நிபந்தனைகளுக்கும் இணங்கி உடன்படிக்கைக்கு கையொப்பமிட்ட பின் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்காக அவருக்கு முற்பணம் கிடைத்ததோடு, 50 கோழிக்குஞ்சுகள் இரு வாரத்துக்குள் வீட்டுக்கு கிடைக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டது. வாழ்க்கையில் ஒருபோதும் ஒரே தொகையாக கைக்குக் கிடைக்காத பணத்தொகையுடன் பார்வதி மிக மகிழ்ச்சியுடன் வீட்டுக்குச் சென்றார்.

எனினும், பெண்களிடையே அழகான இரு யுவதிகளும், மொழிபெயர்ப்பாளரும் தெரிவித்த முற்பண அளவே பகிந்தளிக்கப்பட்டதா? என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது. யுவதிகள் சிங்கள மொழியில் தெரிவித்த முற்பணத் தொகையும் மொழிபெயர்ப்பாளர் தமிழில் தெரிவித்த முற்பணத்தொகையும் ஒன்றுதானா? என்பதனை அறிந்து கொள்வதற்கான வழிமுறை ஒன்றும் இருக்கவில்லை. எல்லாவற்றையும் சந்தேகத்தோடு பார்ப்பது தவிர, அவர்களுக்குச் செய்வதற்கு எதுவும் இருக்கவில்லை. இந்தளவு கூட அவர்கள் புரிந்து கொண்டது வரும் வழியிலாகும்.

குத்தினான்...

குத்தினான்...

குடலுக்கே குத்தினான்...

கள்ளு வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் வளைந்த கத்தியை வலது கையால் எடுத்து, அதனை வானத்தை நோக்கி நீட்டி, பெரும் குரலில் சப்தமிட்டவாறு ஓடி வந்த சிவநேசன், ஒற்றைப் பாதை வழியாக கண்ணகி அம்மன் கோவில் வீதிக்கு நுழைந்து, தனது வேகத்தை அதிகரித்து பிரதான வீதிக்குள் பிரவேசித்து, களைப்புடன் இயன்றளவு வேகத்தில் முன்நோக்கி ஓடினான்.

'குத்தினேன்... குத்தினேன்... சாவதற்கே குத்தினேன்...'

'வயிற்றைப் பிளந்தேன்...'

'இரத்த ஆறு...'

'கொன்றேன்...'

முன்னாள் இராணுவ வீதித் தடை தென்பட்டது. அங்கிருந்த படை வீரர்களில் இருவர் முன்னே வந்து கத்தியைக் காட்டிக் கொண்டு ஓடி வரும் சிவநேசனைப் பிடித்துக் கொண்டனர்.

சிவநேசனது வேகம் எந்தளவு என்றால் படை வீரர்களது பிடியிலிருந்து தப்பி 20 அடியளவு முன்னால் போய் தடால் என்று விழுந்தான்.

விழுந்தவுடன் முன்னால் வந்த படை வீரர் ஒருவர் வளைந்த கத்தியைப் பறித்தெடுத்தார்.

இரு கைகளையும் பின்னால் சேர்த்துக் கட்டி சிவநேசனை இராணுவ காவலரணுக்கு எடுத்துச் சென்றனர். காவல் அரணின் தலைவரான இராணுவ சார்ஜன்ட் அவரிடம் விசாரணைகளை ஆரம்பித்தார்.

வெறி காரணமாக கூடுதலான களைப்பு காரணமாகவும் அதிர்ச்சியடைந்திருந்த சிவநேசனுக்கு சொற்களை கோர்வையாகப் பேச முடியவில்லை.

'கொன்றேன்... கொன்றேன்... ஆம் ... குத்தினேன்... செத்துட்டான்'

'யாரை?'

'வயிற்றுக்கே குத்தினேன்... எல்லாம் முடிந்துவிட்டது. செத்துட்டான்.'

சிவநேசனின் கையிலிருந்த கத்தியில் ஒரு சொட்டு இரத்தம் கூட படாமலிருப்பது குறித்து இராணுவப் படையினர் அவதானித்தனர்.

'எங்கிருந்து குத்தினாய் சொல்லுடா?' சார்ஜன்ட் உரத்துக் கேட்டார்.

'வீட்டிலே...'

'ஆம்.. இறந்துவிட்டார்... இறந்துவிட்டார்.'

சிவநேசனுக்கு சீனி கூடுதலாகப் போட்டு ஒரு தேநீர் கோப்பை வழங்குமாறு சார்ஜன்ட் தமது படைவீரர்களுக்கு உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திலிருந்து வந்து சிவநேசனைக் கைது செய்யும் போது ஓரளவு அமைதி அடைந்திருந்ததோடு, சொற்களைப் பேசக்கூடிய நிலைக்கு வந்திருந்ததனை காணமுடிந்தது. மேலாடைகள் அற்றும் கள்ளு வெட்டுவதற்கு வசதியாக மரம் ஏறும் அசுத்தமான சிறிய சாரத்தினால் உடலின் கீழ்ப்பகுதி மூடப்பட்டிருப்பதாலும் கூடுதலாக கள்ளுக் குடித்திருந்ததனால் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் இருந்ததாலும் , தனது உடல் துர்நாற்றம் காரணமாகவும் அதிகாரிகள் முன்னால் சிவநேசன் வெட்கத்திற்கும் அசௌகரியத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருந்தான்.

சிவநேசன் படைவீரர்களுக்குப் பயந்து மிகவும் அப்பாவித்தனமாக நன்றி தெரிவிக்கும் பார்வையுடன் பொலிஸ் ஜீப் வண்டியில் ஏறினான். அவனது இருபுறமாக இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அமர்ந்து கொண்டார்கள். ஆரம்பத்தில் கன்னத்தில் விழுந்த ஓரிரு கண்ணீர் சொட்டு நாடியினூடாக தனது மடி மீது விழுந்தனைக் கண்ட சிவநேசன், சத்தமிட்டு அழத்தொடங்கினான். ஜீப் வண்டியின் வேகம் இரண்டு மூன்று மடங்கானவுடன் சுற்றாடல், மரம், இலைகள், வீடுகள் ஒவ்வொன்றாக கலந்து இழுத்து, இழுத்துச் செல்லப்படும் தெளிவற்ற சித்திரம் போன்று சாம்பல் நிறத்துக்கும் பச்சை நிறத்துக்கும் பின் நிறங்கள் கலப்பதாகத் தென்படுவதனை அவனால் காண முடிந்தது.

★★★

நீதவான், தட்டச்சாளர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தருடன் சிவநேசனின் வீட்டுக்கு மாலை 4 மணிக்கு வந்தார். அப்போதாகும்போது பொலிஸ் உத்தியோகத்தர்கள்,கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராமத்தின் பெண்கள் மற்றும் பிள்ளைகள் உட்பட்ட ஒரு குழுவினர் சிவநேசன் வீட்டுக்கும் அதனை எதிர் நோக்கி அமைந்துள்ள கோழிப் பண்ணைக்குமிடையேயுள்ள பூமியில் கூடியிருந்தனர். பின்புறமாக வெள்ளைப்புடவை ஒன்று போடப்பட்டிருந்த சிறிய மேசைக்குப் பின்னால் இரு கதிரைகளும் போடப்பட்டிருந்தன. மற்ற நாட்களில் சிறிய சத்தத்திற்கும் சத்தமிட்டுக் கூவும் கோழிகள் இவ்வளவு பேர் கூடியிருந்தும் எவ்வித சத்தமும் எழுப்பாது அமைதியாக இருந்தன.

நீதவான் வருவதற்கு சற்று முன் இரு கைகளிலும் விலங்கிடப்பட்டிருந்த சிவநேசனை அழைத்துக்கொண்டு பொலிஸ் வாகனம் வந்தது.

நீதவான் வீட்டுப்பக்கம் ஒரேயடியாக நோட்டமிட்டார். நிலத்தில் இருந்து 8 அடி வரை மேலாக நிலத்துக்கு சமாந்தரமாக அமைந்துள்ள கம்பியில் இருந்து இருபக்கமும் நிலத்தைத் தொடும் வகையில் சாய்ந்ததாக பனை ஓலை வேயப்பட்ட கூரை அங்கு இருந்தது. இரு பக்கத்திலும் சுவர்கள் இருக்கவில்லை. கடும் காற்று மற்றும் மணல் தூசிப் புயல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு இரு பக்கமாகக் கூரையை நிலத்துக்கு தொடர்புபடுத்தி இருப்பதாக அவர் அனுமானித்தார். அருகிலுள்ள வீடுகளும் அவ்வாறே உள்ளே பயன்படுத்தக்கூடிய நில அளவு சதுர அடி 6070க்கும் கூடுதலாக இல்லை.

வீட்டின் முன் பக்கமும் பின் பக்கமும் கதவுகளுக்கு இடம் வைத்து எஞ்சிய பகுதிகள் பனை ஓலை மற்றும் பொலித்தீன் மூலம் மறைக்கப்பட்டிருந்தது. தேவைப்படும்போது மூடி விடுவதற்கு கதவை திறக்கக் கூடிய பனை ஓலைகளால் தயாரிக்கப்பட்ட கதவு மூடி ஒன்று முன்னாலுள்ள பனை ஓலை சுவரிற்குச் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது.

முன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ள கோழிப் பண்ணை முறையாக வளை அடித்து, தகடுகள் கூரைக்குப் போடப்பட்டிருந்தன.

நீதவான் தலையைத் தாழ்த்தி பனை ஓலை கதவு நிலையினூடாக வீட்டுக்குள் பிரவேசித்து மீண்டும் தலையைத் தாழ்த்தி பூதவுடலுக்கு மரியாதை செலுத்தினார். அதன்பின் பொலிஸ் உத்தியோகத்தரும் தலைக்கவசத்தை அகற்றிவிட்டு கௌரவம் தெரிவித்தார்.

பின்பு நீதவான் மேசையின் அருகில் வைத்திருந்த கதிரையில் அமர்ந்தார். தட்டச்சாளர் மேசையின் அகலம் குறைந்த பக்கத்திலிருந்த கதிரையை இழுத்து அமர்ந்து கோவையை மடியில் வைத்துக்கொண்டார். ஊர்வாசிகள் சகலரும் மேசைக்கு 10 அடி தூரமளவில் கூடியிருந்தனர். உயர் பதவி வகிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் மட்டும் நீதிபதிக்கு அருகிலிருந்தார். நீதவான் வீட்டின் பிரதான வாசலுக்கு எதிராகவே அமர்ந்திருந்தார். வீட்டுக்குள்ளான காட்சிகள் தெளிவாகத் தென்பட்டன. சரியாக வீட்டுக்கு நடுவில் மேற்பக்கம் நோக்கி பண்டார வீட்டின் கூரையை நோக்கி சாய்ந்து கிடந்தார்.

வீட்டு நிலத்தில் இருக்கும் மென்மையான மணல் அவரது உடல் முழுவதும் கொட்டிக் கிடந்த போதும் உடலின் மேற்பகுதியில் ஒரு சொட்டு மணல் கூட ஒட்டியிருக்கவில்லை.

வயிற்றின் நடுவில் சரியாகச் சொன்னால் பொக்குளைத் துளைத்துக்கொண்டு சரீரத்துள் புகுந்துள்ள கூர்மையான கிரிஸ் கத்தி போன்ற ஆயுதம் ஒன்றின் பிடியை மட்டும் காணக்கூடியதாக இருக்கின்றது. அதில் ஒருதுளி இரத்தம் கூட வடிந்து சென்று வீட்டின் மணல் நனைந்திருக்கவில்லை.

பண்டார இரு கண்களையும் திறந்த வண்ணம் மேலே நோக்கி நேராக படுத்திருந்தார். பண்டாரவின் உடலுக்கு இரண்டு அடியளவு தூரத்தில் குந்திக்கொண்டு நிலத்தில் இருந்த பார்வதியின் கண் பெரிதாக வீங்கி இருந்தது. எனினும், கண்ணீர் கொட்டவில்லை. அவள் நிலத்தில் விழுந்த மேல் எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருந்தார். அவளது அழுக்கு உள்ளாடை நிலத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. அவளது முகத்தில் ஐயப்பாடோ, கோபமோ, பாசமோ இருக்காத போதும் அந்தத் தெளிவான முகத்தில் அபூர்வமான அழகு பிரகாசித்தது.

நீதவான் அவளைப் பார்த்தார். இரு கண்களும் நேருக்கு நேர் சந்தித்தாலும் பார்வதி அதுபற்றி கவலை கொள்ளவில்லை. அவர் பார்த்த பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள். நீதவான் அவளது கண்களை பார்ப்பதற்கு முயற்சித்தார்.

கூட்டத்துக்கு ஒரு வாரத்துக்கு பின்பு ஒரு நாள் வயதுடைய 50 கோழிக்குஞ்சுகளும் தேவையான உணவு, விட்டமின் வகைகள் மற்றும் மருந்துகளுடன் வந்த ஒரு குழுவினர் பார்வதியின் வீட்டுக்கு முன்னால் அழகான கோழிப் பண்ணை ஒன்றை சில மணித்தியாலங்களுக்குள் நிர்மாணித்தனர்.

போதியளவு இடவசதியுள்ள கோழிப் கோழிப்பண்ணையில் கோழிக்குஞ்சுகள் ஓடியாடி விளையாடுவதனையும், சிறகுகளை அடித்துப் பறக்க முற்படுவதும் உணவு உண்ணும் முறையும், சொண்டை கீழே நீட்டி தண்ணீர்ப் பாத்திரத்தில் தண்ணீர் சொட்டை விழுங்கும்போது நீர்ச் சொட்டு சிறிய தொண்டையினூடாக கீழே போகும் போது தொண்டையில் ஏற்படும் அசைவும் பார்வதியின் மனதை மகிழ்ச்சியுறச் செய்தது.

நாளுக்கு நாள் வளரும் குஞ்சுகளைப் பார்த்து அவர் மிக மகிழ்ச்சியுடன் கோழிக் கூட்டில் வேலை செய்தார்.


காலை நேரத்தில் அரை மணி நேரம் கோழிக்குஞ்சுகளுக்கு வெளியே நடமாடி உணவினைத் தேடிக் கொள்வதற்கும் சுதந்திரமாக ஓடியாடி திரிவதற்கு அனுமதி வழங்கிய பார்வதி, அக்காலத்திற்குள் அவற்றைப் பாதுகாப்பதற்கு பெருமுயற்சி செய்தார். புழு ஒன்றைப் பிடிக்கும் குஞ்சு ஒன்று அதனை உண்ண முன் ஏனைய குஞ்சுகள் அந்தக் குஞ்சினைத் தொடர்ந்து புழுவைப் பறித்துக் கொள்ள முயற்சிக்கிறது.

(தொடரும்)



கமல் மெண்டிஸ்
தமிழில்: என்.எம். அமீன் ...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 23



திரு/திருமதி.செல்வி ........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ........................................
........................................
........................................
.................... ....................
திகதி கைையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 23
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :23

**இடமிருந்து வலம்**

*(01) பழமையானது.*
*(04) விரோதம்.*
*(06) சீனி தயாரிப்புக்குரிய மூலப்பொருள்.*
*(07) ஆகாயக் கப்பலின் சாரதி.*
*(09) சர்க்கரையைப் போன்ற சுவையுள்ளது. (குழம்பியுள்ளது)*
*(12) அம்பு.*
*(14) ஒருவகை மலர்.*
*(16) அகற்று அல்லது விலக்கிவிடு.*
*(18) காலின் கீழ்ப்பகுதி. (குழம்பியுள்ளது)*
*(19) அழுக்கு. (திரும்பியுள்ளது)*
*(20) காய்ந்த இலை.*
*(21) நீர்நிலை. (குழம்பியுள்ளது)*

**இடமிருந்து வலம்**

*(01) குதிரை.*
*(02) துணையற்ற நிலை. (குழம்பியுள்ளது)*
*(03) நாணம் மேலோங்கிவிட்டது.*
*(04) ஆரவாரம்.*
*(05) நெருப்பு இல்லாமல் இது வராது. (தலைகீழ்)*
*(08) இலங்கையில் இது ஒன்பது.*
*(10) ஒரு நிறம். (குழம்பியுள்ளது)*
*(11) மகிழ்ச்சி நிறைந்த ஆட்டம் பாட்டம் குழம்பிவிட்டது.*
*(12) ஒழுக்க நிலையிலிருந்து மாறுபடும் இது. பலராலும் வெறுக்கப் படுகிறது.*
*(13) மங்களகரமான வைபவங்களில் இதனையும் காணலாம். (கீழிருந்து மேல்)*
*(15) புரதம் நிறைந்த திரவப்பொருள். (தலைகீழ்)*
*(17) வேர்க்கொம்பு. (குழம்பியுள்ளது)*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 22

### விடைகள்

**இடமிருந்து வலம்**

*01. காலிமுகம் 05. நிசி 07. நிலையம்*
*08. மாற்றம் 09. மது 10. சிறுவன்*
*11. காயம் 12. கரு 13. வீரர்*
*14. புடவை 16.நித்தம் 18. திரவம்*
*20. இம்சை 21. கைது*

**மேலிருந்து கீழ்**

*01. காடை 02. முயற்சி 03. கலைமான்*
*04. நிறம் 06. சிரமம் 08. வருடம்*
*09. துயரம் 10. கறுப்பு 11.கார்த்திகை*
*13. வீதம் 15. வைரம் 17. நிதி*
*19. வசை*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 21

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
கே. கஸ்தூரி,
2/27A, வெளிக்கந்தை,
கண்டி.

**இரண்டாம் பரிசு**
எஸ். சத்தியவதனி,
பிரதான வீதி,
பாலமுனை, மண்டூர்.

**மூன்றாம் பரிசு**
ஹமீதா பானு லியாவுடீன்,
இல. 12/6, சென் பீற்றர்ஸ் லேன்,
நிந்தனி, புத்தளம்.

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம்.எம். பஸீர்,**
20/2, பாத்திமா மாவத்தை,
மாத்தறை.

**2. உ. திரக்சிகா,**
127 கே. புதிய சோமநாதர் வீதி,
பாண்டிருப்பு,
கல்முனை.

**3. எம்.எஸ்.எம் பாஸிர்,**
21, A, சிப்பிகுலம்,
ஹம்பாந்தோட்டை.

**4. ஆர். ஜயந்திமாலா,**
இல. 610/1/A, கொலனி,
புசல்லாவ.

**5. சி. பவித்ரா யாழினி,**
241/15, லொக்ஹில்,
பதுளை.

**6. இல்யாஸ் தாஸிம்,**
இல. 23A,
இப்றாஹிம் வீதி,
தொட்டவத்தை, பாணந்துறை.

**7. அ. சந்தியாகோ,**
34/12, செமினறிவத்தை வீதி,
கண்டி.

**8. T. சக்கியா நூரி,**
174, அல் முனவ்வறா வீதி,
அக்கரைப்பற்று 04.

★ ★ ★

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | 07 | | 08 | 09 | 10 |
| 11 | | 12 | 13 | 14 | |
| | 15 | 16 | | 17 | |
| 18 | | 19 | 20 | | |
| 21 | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................

.............................. ..........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) உலக நாடுகள் அனைத்திலும் இக்காலத்தில் மிகவும் அவசிய தேவையாக உள்ளது இதுதான். உலகெங்கும் யுத்தமும், போட்டாபோட்டிகளும் நிறைந்துள்ளதால் சமாதானத்தை விரும்புகின்ற மக்கள் இதனையே வேண்டி நிற்கின்றனர்.
(4) பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்ற நிலையத்தை இவ்வாறு குறிப்பிடலாம்.
(6) வானத்தில் இருந்து வருகின்ற இயற்கை அனர்த்தம் மின்னல் ஆகும். மின்னலின் ஒளி புவியை வந்தடைந்த பின்னரே அதன் ஒலியை எங்களால் கேட்க முடியும். அந்த ஓசைக்கு இதுதான் பெயர். (தலைகீழான சொல்)
(8) உணவுக்கு சுவையூட்டியாகப் பயன்படுத்தப்படுகின்ற மிகச்சிறிய வித்து. இது சிறியதென்றாலும் அதன் காரம் பெரியது.
(12) மாணவர்களாகிய உங்களது அறிவுக்கண்ணைத் திறப்பது இது. எனவே இதற்கு முக்கியத்துவம் கொடுப்பது உங்கள் கடமை. (தலைகீழான சொல்)
(15) விழுதுகள் கொண்ட மரத்தின் சுருக்கப் பெயர்.
(19) எமது உடலில் உச்சத்தில் அமைந்துள்ள அவயவம். இங்குதான் மூளை அமைந்துள்ளது.
(21) வளி அதிவேகமாக இடம்பெயர்வதால் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தம். கண்ணால் நாம் இதனைக் காண முடியாது. ஆனால் இந்த இயற்கை அனர்த்தம் ஏற்படுத்துகின்ற சேதங்கள் அதிகம். (தலைகீழான சொல்)
(24) நீரில் வாழ்வதற்கு மிகவும் இசைவாக்கம் அடைந்துள்ள உயிரினம். மனிதனால் உணவாகக் கொள்ளப்படுவது. கடலில் மாத்திரமன்றி நன்னீரிலும் வாழ்கின்ற இனங்கள் உள்ளன.

**மேலிருந்து கீழ்**

(1) சுதந்திரம் மறுக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டுள்ள வரை இவ்வாறு குறிப்பிடலாம்.
(2) எமது கண்களுக்கு எந்நேரமும் பாதுகாப்புத் தருவது. (தலைகீழான சொல்)
(4) குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் நிறுத்தப்பட்டு, வேகமாகப் பயணம் செய்கின்ற பேருந்து, புகையிரதம் ஆகியவற்றை இவ்வாறு கூறலாம்.
(5) மழைக்கும் வெயிலுக்கும் எமக்கு பாதுகாப்புத் தருவது. (தலைகீழான சொல்)
(8) கருங்கல் பாறையை உடைத்து சிறு துண்டங்களாக்கினால் இதுதான் அதன் பெயர். கட்டடம் நிர்மாணிக்க பயன்படுகின்றது.
(12) பெற்றோரின் பிள்ளை இவள். (தலைகீழான சொல்)
(18) இடப்பெயர்ச்சி அங்கம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 10

### விடைகள்

**இடமிருந்து வலம்**
(01) மாதுளை (04) மேசை (07) வாள்
(10) தம்பி (14) களை (16)சீப்பு
(21) காசியப்பன்

**மேலிருந்து கீழ்**
(01) மாத்தளை (03) பிள்ளை (05) தோசை
(11) சிங்கம் (13) பருப்பு

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 09

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**எம்.இசட்.எம். அர்ஸாட்,**
தரம் 07 A, ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரி,
கொழும்பு 12.

**இரண்டாம் பரிசு**
**ஹரிலோஷன் மேகவர்ணன்,**
தரம் 07, ஸாஹிரா ஆண்கள் கல்லூரி,
கட்டுகஸ்தோட்டை.

**மூன்றாம் பரிசு**
**ஸய்த் இப்திகார்**
தரம் 05, கே/மா/சாஹிரா கல்லூரி, மாவனல்ல.

### பாராட்டு பெறுவோர்

1. **தமீம் உஸ்மான் ஹாமித்,**
தரம் 07,
அக்/அல்முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று 04.
2. **க. வினோபா,**
தரம் 06, கமு/கார்மேல் பற்றிமா தே.பா.,
வட்ட விதானை வீதி, கல்முனை.
3. **வி. துவிசாலினி,**
தரம் 05 பி, இராமகிருஷ்ண பெண்கள் பாடசாலை,
திருமால் வீதி, காரைதீவு 07.
4. **ரவீந்திரன் சபரீசன்,**
தரம் 05, மட்/பட்/கனிஷ்ட வித்தியாலயம்,
குருமண்வெளி, களுவாஞ்சிக்குடி.
5. **நுஹா மொஹமட்,**
தரம் 03,
மாறை/வெலிகம முஸ்லிம் ஆரம்பப் பாடசாலை,
வெலிகம.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 10
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

ஆற்றாரும் ஆற்றி அடுப இடன்அறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

***தெளிவுரை :***
*தக்க இடத்தை அறிந்து தம்மைக் காத்துக்கொண்டு பகைவரிடத்திற் சென்று தம் செயலைச் செய்தால், வலிமை இல்லாதவரும் வலிமை உடையவராய் வெல்வர்.*

# பயம்

முன்னொரு காலத்தில் ஒரு காட்டில் முனிவர் ஒருவரின் குடிசை இருந்தது. அருகே ஒரு சிறிய மலை இருந்தது. அந்த மலையருகே உள்ள ஒரு துவாரத்தில் சின்ன சுண்டெலி ஒன்று வாழ்ந்துவந்தது. அந்தக் காட்டில் பூனையின் நடமாட்டம் அதிகம் இருந்தது. ஆகவே, அது மிகவும் பயத்துடன் வாழ்ந்து வந்தது.

ஒருநாள் ஒரு பூனையின் பிடியிலிருந்து தப்பிய சுண்டெலி, ஆஸ்ரமத்தில் உள்ள முனிவரைச் சரண் அடைந்தது. முனிவர் அதை அன்புடன் கவனித்தார்.

"பயப்படாதே!" என்று ஆறுதல் கூறினார்.

"நான் உனக்கு என்ன உதவி செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"சுவாமி நான் பூனைகளைக் கண்டு அதிகமாகப் பயப்படுகிறேன். என்னையும் ஒரு பூனையாக மாற்றி விட்டால், நான் பயப்படவேண்டிய அவசியம் இல்லை அல்லவா?" என்றது சுண்டெலி.

முனிவர் சிற்றெலியைப் பெரும் பூனையாக மாற்றினார்.

ஒரு மாதம் சென்றது. பூனை அவர் முன் வந்து நின்றது.

"சுவாமி, பூனையாக இருப்பதிலும் பிரச்சினை. ஓநாய்கள் என்னை விரட்டுகின்றன" என்றது.

பூனையின் எண்ணத்தை அறிந்து கொண்ட முனிவர் அதை ஓநாயாக மாற்றினார். ஓநாய் சந்தோஷமாகத் திரும்பிச் சென்றது. ஒருமாதம் சென்றவுடன், மீண்டும் ஓநாய் திரும்பி வந்து முனிவரைச் சரணடைந்தது.

"என்ன விஷயம்?" என்றார் முனிவர்.

"கரடிகள் தொல்லை தருகின்றன!" என்றது ஓநாய்.

அதைக் கரடியாக மாற்றி அனுப்பி வைத்தார் முனிவர்.

மீண்டும் ஒரே மாதத்தில் திரும்பியது கரடி.

"இப்போதும் பிரச்னையா?" என்று புன் சிரிப்புடன் கேட்டார் முனிவர்.

"ஆம் சிறுத்தைகள் என்னைக் கடிக்க வருகின்றன" என்றது.

ஓஹோ!என்ற முனிவர் அதை ஒரு சிறுத்தையாக உருமாற்றினார்.

ஒருமாதம் சென்றவுடன் சிறுத்தை திரும்பி வந்தது.

"சிங்கங்கள் என்னைக் காட்டை விட்டு வெளியேறு என்று உத்தர விடுகின்றன" என்றது.

"காரணம் என்ன?" என்று முனிவர் கேட்டார்.

"பலசாலிகள் ஒரே காட்டில் இருக்கக் கூடாது என்பதுதான் அதன் எண்ணம்" என்றது.

முனிவர் அதைச் சிங்கமாக மாற்றினார்.



சிங்கம் ஒரு மாதம் சென்ற பிறகு, "சுவாமி, நகரத்திலிருந்து வந்த அரசன் ஒருவன், சிங்க வேட்டை ஆடினான். தப்பிப் பிழைத்தது நான் மட்டும்தான்" என்றது.

முனிவர் சிங்கத்தை அரசனாக்கினார்.

அதன்பின் இரண்டு மூன்று மாதங்கள் வரை அரசன் முனிவரைப் பார்க்கவில்லை. ஆறு மாதத்துக்குப் பின் அரசன், கிழிந்த துணிமணிகளுடன் வந்து முனிவரைப் பார்த்தான்.

"என்ன ஆயிற்று உனக்கு?" என்றார் முனிவர்.

"எதிரி நாட்டு அரசன் போர் தொடுத்தான். எனக்குப்போர் செய்யவே பயமாக இருந்தது. இருப்பினும் என் சார்பாக எல்லாரும் போர் புரிந்தனர். கடைசியில் எதிரிகள் அரண்மனைக்குள் புகுந்து என்னைக் கைது செய்தனர். பாதாளச் சிறையில் அடைத்தனர். நான் தப்பி வந்து விட்டேன்" என்றான்.

"இப்போது நான் என்ன செய்ய வேண்டும், உனக்காக எதிரியுடன் போராட வேண்டுமா?" என்றார் முனிவர். அந்த அரசன் அமைதியாக இருந்தான்.

முனிவர் சொன்னார்.

"சிற்றெலியாக இருந்த உன்னை அரசர் வரை உயர்த்தினேன். ஆனாலும் உன்னுள் இருந்த எலித்தன்மை மாறவில்லை. பயத்துடனே இருந்தாய்.

"இனி, நான் உனக்கு உதவுவதற்காக எது செய்தாலும், அது உனக்கு உதவவே உதவாது. இதுவரை எலியின் மனதையே பெற்றிருக்கும் நீ, இனியும் எலியாக இருப்பதே நல்லது" என்று கூறி அரசனை எலியாக மாற்றினார் முனிவர்.

**கே. திஷாலினி,**
தலவாக்கலை.

## அம்மா எப்ப வருவீங்க....!

*அம்மா வருவா எனது*
*அம்மா வருவா*
*அரபு நாடு போன ஆசை*
*அம்மா வருவா*
*(அம்மா வருவா....)*
*அழகான சட்டை யெல்லாம்*
*கொண்டு வருவா நான்*
*அதையெல்லாம் போட்டுப் பார்த்து*
*துள்ளி மகிழுவேன்!*
*(அம்மா வருவா...)*
*விதவிதமாய் இனிப்புகளும்*
*எடுத்து வருவா நான்*
*விளையாட பொம்மைகளும்*
*வாங்கி வருவா.*
*(அம்மா வரவா....)*
*எல்லோருக்கும் அதையெல்லாம்*
*காட்டி மகிழுவேன்*
*இனிப்புகளை அனைவருக்கும்*
*கொடுத்துச் சுவைப்பேன்.*
*(அம்மா வருவா..)*
*மூண்டு வயசில் என்னைவிட்டு*
*போன அம்மாவே எனக்கு*
*ஆறுவயசாய் போயும் நீங்கள்*
*ஏன் வரவில்லை..?*
*(அம்மா வருவா...)*
*அலைபேசியில் கதைக்கும் உங்கள்*
*குரலைக் கேட்க நான்*
*ஆறு மாச காலமாக தினம்*
*ஏங்கி அழுகிறேன்.*
*(அம்மா வருவா...)*
*அப்பா கவலை ஏதுமின்றி*
*குடிச்சுத் திரியிறா எனது*
*அன்புப் பாட்டி மௌனமாக*
*கண்ணீர் சிந்திறார்.*
*(அம்மா வருவா...)*
*உடனே வாங்க உடனே வாங்க*
*எனது அம்மாவே எங்கள்*
*அயலில் உள்ளோர் கதையைக்கேக்க*
*பயமாய் இருக்குது.*
*(அம்மா வருவா...)*
*அம்மா நீங்கள் இல்லையென்றால்*
*எனக்கு ஏதுமில்லையே உங்கள்*
*அன்பு முகம் காண தினம்*
*காத்து நிற்கின்றேன்!*
*(அம்மா வருவா...)*

**ஜெஸ்லிதாசன்,**
திருகோணமலை.

# கால்களினால் சுவையை உணரும் பட்டாம் பூச்சி பற்றிய சுவாரஸ்யங்கள்!

பட்டாம்பூச்சியை யாருக்கு தான் பிடிக்காது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இந்த பூச்சியை ரசிப்பது உண்டு. ஏனென்றால் இது பல நிறங்களில் வருகிறது.

இப்படி பலநிறங்களில் வரக்கூடிய இந்த பட்டாம் பூச்சிகள் சுமார் மூவாயிரம் கிலோமீட்டர் தூரம் வரை சுற்றி திரிகின்றன. உலகம் முழுவதும் 17,500க்கும் மேற்பட்ட பட்டாம்பூச்சி இனங்கள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

இந்த பட்டாம்பூச்சிகள் கால்களில் சுவை உணரிகளை கொண்டுள்ளன. இந்த சுவை உணரிகள் கால்களில் இருப்பதினால் அவை கால்களால் தான் சுவையை அறிகின்றன.

அந்த சுவை உணரிகள் மனிதன் சுவையை அறிய எவ்வாறு நாக்கு உதவுகிறதோ அது போலவே இருக்கின்றன. ஆனால் அது மனிதர்களுடைய நாக்கை விட 200 மடங்கு சக்தி கொண்டவை.



பட்டாம்பூச்சிகள், இந்த சுவை உணரிகளை கொண்டு முட்டையிடுவதற்கு முன்பு அவை முட்டையிடும் இடத்தில் ஏதாவது நச்சுகள் அல்லது அவற்றின் சந்ததியினருக்கு தீங்கு விளைவிக்கும் ஏதவாது பொருள்கள் இருக்கிறதா என்பதை சோதிக்க பயன்படுத்துகின்றன.

முழுமையாக வளர்ந்த பட்டாம்பூச்சிகள் சாப்பிடுவதில்லையாம் தெரியுமா உங்களுக்கு? அவை தண்ணீர் மட்டுமே குடித்து வாழ்கின்றன. ஆனால் அவற்றின் கம்பளிப்பூச்சிகள் அதாவது கேட்டர் பில்லர்ஸ் உணவை தொடர்ந்து சாப்பிடுகின்றன.

முட்டைகள் குஞ்சு பொரித்தவுடன், இலைகளை பிறந்த குஞ்சுகளுக்கு உணவளிக்கத் தொடங்குகின்றன. சில தாவரங்கள் நச்சுகளை உருவாக்குவதால், தவறான இலைகளைத் தேர்ந்தெடுப்பது பேரழிவை ஏற்படுத்தி விடும் என்று தாய் பட்டாம்பூச்சி அதனை சோதனை செய்து குஞ்சுகளுக்கு கொடுக்கிறது.

அதுமட்டுமல்லாமல் ஒரு பெண் பட்டாம் பூச்சி அதன் குழந்தைகள் ஒரு இலையை சாப்பிட ஆரம்பிக்கும் முன் அது தனது குழந்தைகளுக்கு பாதுகாப்பானதா என்பதை அறிய அந்த இலையை சுவைத்து சோதனை செய்கிறது.

சோதனை செய்த பிறகு அதனுடைய கால்களுக்கு எந்த சேதமும் ஏற்படாவிட்டால் அந்த இலைகள் மூலம் தனது கம்பளிப்பூச்சிகளைப் பாதுகாப்பாக வளர்க்க முடியும் என்று அவைகளுக்கு கொடுக்க ஆரம்பிக்கிறது.

**ஆர். விஷாலினி,**
திருகோணமலை

## இவ்வார மழலை




**ரஞ்சித்குமார் / திவானி,**
நொத்தாரிஷ்வத்த, பதுளை.

## உயிரினங்கள்

*நெத்திலி, பாறை, திமிங்கிலம்*
*நீரில் வாழும் மீன்கள்!*
*தவளை, முதலை, ஆமைகள்*
*தண்ணீரிலும் தரையிலும் வாழுமாம்!*
*பாம்பு, தேள், பல்லிகள்*
*பைய ஊரும் பிராணிகள்!*
*பருந்து, கொக்கு, நாரைகள்*
*பறந்து செல்லும் பறவைகள்!*
*குதிரை, ஆடு, மாடுகள்*
*குட்டி போடும் விலங்குகள்!*
*சிறுத்தை, புலிகள், சிங்கங்கள்*
*சீறும் காட்டு மிருகங்கள்!*
*ஒட்டகச் சிவிங்கி யானைகள்*
*உயரமான விலங்குகள்!*

**ஸாதிக் பாரிஸ்,** மள்வானை.

## சிறுவர் சித்திரங்கள்



**பி. வினோதினி,**
தரம் 10, இதல்கஸ்கின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.



**கே. டிஷாந்தன்,**
தரம் 10, இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.



**கே. சதுர்ஷினி,**
தரம் 10, இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.



**எஸ். தரணி,**
தரம் 10, இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.

மஞ்சரி

# விளையாட்டு



## இங்கிலாந்து டெஸ்ட் அணியின் பயிற்சியாளராக மெக்கல்லம்

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், அதிரடி ஆட்டக்காரருமான பிரண்டன் மெக்கல்லம் நியமிக்கப்படலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பில் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை பிரண்டன் மெக்கல்லத்துடன் கடந்த சில தினங்களாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்ததாகவும், இறுதிக்கட்ட இணக்கப்பாட்டுக்கு இரு தரப்பினரும் வந்திருப்பதாகவும் Cricbuzz இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியன் பிரீமியர் லீக்கில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளராக செயல்பட்டு வருகின்ற பிரண்டன் மெக்கல்லமை இங்கிலாந்து ஆண்கள் கிரிக்கெட் அணியின் புதிய நிர்வாக இயக்குநரான ரொப் கீ, தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது, இங்கிலாந்து டெஸ்ட் அணியின் பயிற்சியாளராக செயல்படுவதில் பிரண்டன் மெக்கல்லம் ஆர்வமாக இருப்பதாகவும், இதற்கான உத்தியோகப்பூர்வ அறிவிப்பு இந்த வாரம் எதிர்பார்க்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், ”இந்த தருணத்தில் எம்மால் எதுவும் சொல்ல முடியாது. பயிற்சியாளர் தேர்வு செயல்முறை நடந்து கொண்டிருக்கிறது. இந்த வார இறுதிக்குள் முடிவு எடுக்கப்படும்” என்று Cricbuzz இடம் கூறினார்.

இந்த ஆண்டு முற்பகுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரை 40 என இங்கிலாந்து அணி பறிகொடுத்தது. இதனையடுத்து அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வூட் அதிரடியாக பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இதனையடுத்து இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை டெஸ்ட் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் இரண்டிற்கும் தனித்தனியாக பயிற்சியாளர்களுக்கு விண்ணப்பங்களை கோரியது.

40 வயதான பிரண்டன் மெக்கல்லம், நியூசிலாந்து அணிக்காக 101 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 2016 இல் கிறைஸ்ட்சேர்ச்சில் தனது கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தார். டெஸ்ட் அரங்கில் 12 சதங்கள் மற்றும் 31 அரைச்சதங்கள் உட்பட 6,453 ஓட்டங்களை அவர் குவித்துள்ளார்.

பிரண்டன் மெக்கல்லம் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டால், அவரது முதல் தொடராக நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடர் அமையவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் லோர்ட்ஸ், நொட்டிங்ஹாம் மற்றும் லீட்ஸ் ஆகிய மைதானங்களில் எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த மாதம் இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் நியமிக்கப்பட்டார். இவரும் நியூசிலாந்தில் பிறந்தவர் என்பது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

### இலங்கை – பங்களாதேஷ்

## டெஸ்ட் தொடர் இன்று சிட்டகொங்கில் ஆரம்பம்



சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலினால் அறிமுகப்படுத்தப்பட்ட டெஸ்ட் உலகக் கிண்ணத் தொடரின் 2வது அத்தியாயம் தற்போது நடைபெற்று வருகின்றது. இதன் முதல் சம்பியனாக நியூசிலாந்து மகுடம் சூடிக்கொண்டது. முதலாவது உலகக்கிண்ண டெஸ்ட் தொடரில் 7வது இடத்துக்கு தள்ளப்பட்ட இலங்கை அணி இம்முறை இத் தொடரின்கீழ்இதுவரை தாம் சந்தித்த இரு டெஸ்ட் தொடர்களில் ஒன்றில் வெற்றிபெற்று 50 சதவீத வெற்றியுடன் ஐந்தாவது இடத்திலுள்ளது. டெஸ்ட் உலகக் கிண்ண வரிசையில் இலங்கை அணி சந்திக்கும் முன்றாவது தொடராக பங்களாதேசுக்குச் சுற்றுப்பயணம் செய்து இருபோட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி இன்று சிட்டகொங்கில் நடைபெறுகிறது.

டெஸ்ட் உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாவது அத்தியாயம் கடந்த நவம்பர் மாதம் இந்தியஇங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற தொடருடன் ஆரம்பமாகி 2023ம் ஆண்டு நடுப்பகுதி வரை ஆட்டங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற 12 நாடுகளில் ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே, அயர்லாந்து அணிகளைத் தவிர ஏனைய 9 நாடுகளும் இத்தொடரில் பங்குபற்றுகின்றன. ஓர் அணி மற்றைய ஆறு அணிகளுடன் 6 தொடர்களில் விளையாட வேண்டும். இவ்வடிப்டையில் உள்நாட்டில் 3 தொடர்கள், வெளிநாடுகளில் 3 தொடர்களில் பங்குகொண்டு விளையாடி வருகின்றன.

இதுவரை இலங்கை அணி பங்கு கொண்ட இரு தொடர்களில் நடைபெற்ற 4 டெஸ்ட் போட்டிகளில் இலங்கையில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுடன் நடைபெற்ற இரு போட்டிகளில் வெற்றி பெற்றதுடன் கடந்த பெப்ரவரி மார்ச் மாதங்களில் இந்தியாவில் நடைபெற்ற இரு போட்டிகள் கொணட தொடரில் தோல்வியுற்று 50 சதவீத வெற்றியுடன் ஐந்தாவாது இடத்திலுள்ளது. அண்மையில் முடிவுற்ற பாகிஸ்தான் அணியுடனான தொடரை 10 என்ற ரீதியில் வெற்றி பெற்றதன் மூலம் அவுஸ்திரேலியா அணி 75 சதவீத வெற்றியுடன் முதலாவது இடத்திலுள்ளது. தென்னாபிரிக்கா 71.42 சதவீத வெற்றியுடன் இரண்டாவது இடத்திலுமுள்ளது. 3வது இடத்தில் இந்தியாவும், 4வது இடத்தில் பாகிஸ்தானுமுள்ளது.

இம்முறை இலங்கை அணி சந்தித்த முதல் தொடரிலேயே மேற்கிந்தியத் தீவுகள் அணியை 2 0 என்ற ரீதியில் வென்று நல்ல ஆரம்பத்தைப் பெற்றிருந்தாலும் . அடுத்து கடைசியாக நடைபெற்ற இந்தியத் தொடர் இலங்கை அணிக்கு கடினமான தொடராக அமைந்தது. அத்தொடரில் இலங்கை அணி 20 என்ற ரீதியில் தோல்வியுற்றது. 40 வருட கால இலங்கை டெஸ்ட் வரலாற்றில் இதுவரை இந்திய மண்ணில் ஒரு டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணி வெற்றிபெற்றதில்லை என்ற மோசமான சாதனையைத் தொடர்ந்து தக்கவைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணிக்கு பங்களாதேஷுடனான தொடர் முடிவுடன் உலக டெஸ்ட் கிண்ணத் தொடரின் அடிப்படையில் எஞ்சிய மூன்று தொடர்களில் கடினமான இரு தொடர்கள் இலங்கையில் நடைபெறவுள்ளன. இவ்வருட ஜூன் மாதத்தில் அவுஸ்திரேலிய அணியுடனும், ஜுலை மாதத்தில் பாகிஸ்தான் அணியுடன் இரு தொடர்கள் நடைபெறவுள்ளன. இவ்விரு அணிகளும் பிரபல அணிகளானாலும் தொடர் இலங்கையில் நடைபெறுவதால் இலங்கை அணிக்கு அது அனுகூலமாக அமையலாம். டெஸ்ட் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கைக்கான கடைசித் தொடர் அடுத்த வருட ஆரம்பத்தில் நியூசிலாந்தில் நடைபெறவுள்ளது . இதுவரை பங்களாதேஷ் அணி பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளுடன் இரு தொடர்களில் 4 போட்டிகளில் விளையாடியுள்ளதுடன் 1 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளதுடன் 3 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. கடைசியாக தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 2 போட்டிகள் கொண்ட தொடரில் 1 1 என்ற ரீதியல் சமநிலையில் முடிவடைந்துள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் பாகிஸ்தான் அணியுடனான இரு போட்டிகள் கொண்ட தொடரை முழுமையாக இழந்தது அவ்வணி.

இரு அணிகளையும் பொறுத்த வரையில் இலங்கை அணியே முன்னிலையில் உள்ளது. அவ்வணி சுழற்பந்து, வேகப்பந்து என இரு துறைகளிலும் சம பலத்திலுள்ளது. வேகப்பந்து வீச்சாளர்களான அசித்த பெர்னாண்டோ, கசுன் ராஜித்த இங்கு நடந்து முடிந்த மாகாணங்களுக்கிடையிலான போட்டிகளில் திறமையாகவே பந்து வீசியிருந்தனர். இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர்களான பிரவீன் ஜயவிக்ரம, லசித் எபுல்தெனிய சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான பங்களாதேஷ் மண்ணில் அவ்வணிக்கு எதிராக சிறப்பாகப் பந்து வீசுவர் என எதிர்பார்க்கலாம். துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரை அஞ்சலோ மெத்தியூஸ், தலைவர் திமுத் கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா, தினேஷ் சந்திமால் என இலங்கை அணியின் ஆரம்பத்துடுப்பாட்டம் மட்டுமல்லாது நடுவரிசைகூட பலமாகவே உள்ளது. கடந்த இரு வருடங்களாக தலைவர் திமுத் கருணாரத்ன தனி ஒருவராக பிரகாசித்து சதங்கள், அரைச்சதங்கள் எனக்குவித்து இலங்கை அணியின் வெற்றிக்கு பங்களித்து வந்துள்ளார். கடந்த வருடம் ஓட்டங்கள் குவித்தோர் வரிசையில் இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட்டுக்கு அடுத்த இடத்தில் இவரே உள்ளார். இத்தொடரில் அவரின் துடுப்பாட்டத்தை பெரிதும் எதிர்பார்த்துள்ளது இலங்கை அணி.

பங்களாதேஷ் அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்டத்தில் தலைவர் மொமினுல் ஹக்கையே பெரிதும் எதிர்பாத்துள்ளது. மற்றைய வீரர்களான சிரேஷ்ட வீரர் தமீம் இக்பால், நஜ்முல் ஹுசைன் சென்டோ, லிடன் தாஸ் இவர்களுடன் அனுபவ வீரர்களான சகிப் அல் ஹசன், முஸ்பிக்கூர் ரஹீம் போன்ற வீரர்களும் சோபித்தால் சிறந்த போட்டித் தொடராக இது அமையும், பந்து வீச்சைப் பொறுத்த வரை சுழற்பந்து வீச்சாளர்களான மெஹிதி ஹசன் மிராஸ், தாஜில் இஸ்லாம் ஆகியோரையே பங்களாதேஷ் அணி பெரிதும் நம்பியுள்ளது.



இலங்கை பங்களாதேஷ் டெஸ்ட் வரலாற்றில் இதுவரை 22 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் 17 போட்டிகளில் இலங்கை அணியும் 01 போட்டியில் பங்களாதேஷ் அணியும் வெற்றி பெற்றுள்ளதுடன் 04 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றுள்ளது. இரு அணிகளுக்கிடையில் கூடிய ஓட்டங்களாக 2014ம் ஆண்டு பங்களாதேஷ் மிர்பூர் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி பெற்ற 730 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. பங்களாதேஷ் அணி சார்பாக பெற்ற கூடிய ஓட்டங்களாக 2013ம் ஆண்டு காலி சர்வதேச மைதானத்தில் பெற்ற 638 ஓட்டங்களும், குறைந்த ஓட்டங்களாக 2007ம் ஆண்டு ஆர். பிரேமதாச மைதானத்தில் பங்களாதேஷ் அணி பெற்ற 62 ஓட்டங்களுமே பதிவாகியுள்ளன.

ஒரு வீரர் பெற்ற கூடிய ஓட்டங்களாக 2014ம் ஆண்டு பங்களாதேஷ் சிட்டாகோன் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இலங்கை வீரர் குமார் சங்கக்கார பெற்ற 319 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. பங்களாதேஷ் சார்பில் 2013ம் ஆண்டு காலி சர்வசே மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் முஷ்டபிகூர் ரஹீம் பெற்ற 200 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. இதுவரை பெற்ற கூடிய மொத்த ஓட்டங்களாக இலங்கை வீரர் குமார் சங்கக்கார 15 போட்டிகளில் பெற்ற 1816 ஓட்டங்கள் பதிவாகியுள்ளதுடன் பங்களாதேஷ் சார்பாக மொஹம்மட் அஷ்ரபுல் 13 போட்டிகளில் பெற்ற 1090 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. ஒரு வீரர் பெற்ற கூடிய சதங்களாக குமார் சங்கக்கார பெற்ற 7 சதங்கள் பதிவாகியுள்ளதுடன், பங்களாதேஷ் சார்பில் மொஹம்மட் அஷ்ரபுல் 5 சதங்கள் பெற்றுள்ளார். இதுவரை ஒரு வீரர் பெற்ற மொத்த விக்கெட்டாக இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 11 போட்டிகளில் பெற்ற 89 விக்கெட்களே பதிவாகியுள்ளதுடன் பங்களாதேஷ் சார்பில் சகீப் அல் ஹசன் 7 போட்டிகளில் 29 விக்கெட்டுகளைப் பெற்றுள்ளார். ஒரு இன்னிஸ்சில் சிறந்த பந்து வீச்சாக 2013ம் ஆண்டு கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் ரங்கன ஹேரத் 89 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளதுடன், பங்களாதேஷ் சார்பில் சகீப் அல் ஹசன் 2008ம் ஆண்டு மீர்பூர் மைதானத்தில் 70 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைப் பெற்றார்.

எம்.எஸ்.எம்.ஹில்மி...

## காற்பந்து சுற்றுப் போட்டியில் சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணி சம்பியன்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கழகங்களுக்கிடையிலான காற்பந்து சுற்றுப் போட்டியில், அட்டாளைச்சேனை சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டி, சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

அட்டாளைச்சேனை அஷ்ரஃப் ஞாபகார்த்த பொது விளையாட்டு தைமானத்தில் அட்டாளைசசேனை பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற காற்பந்து இறுதிப் போட்டியில், சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழக அணியினரும், எவர்டொப் விளையாட்டுக்கழக அணியினரும் மோதினர். அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் சாபிரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில், விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச். அஷ்வத் காற்பந்து சுற்றுப் போட்டியை ஏற்பாடு செய்திருந்தார்.



இறுதிப் போட்டியில் இரு அணிகளின் வீரர்களும் சிறப்பாக விளையாடி தங்களது திறமையை வெளிக்கொணர்ந்தனர்.

அட்டாளைச்சேனை பிரதேச கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா2022, காற்பந்து சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டியுள்ள சுப்பர்சொனிக் விளையாட்டுக் கழகம் மாவட்ட மட்ட காற்பந்து சுற்றுப் போட்டியில் பங்குபற்றவுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 மே 15 ஞாயிற்றுக்கிழமை

# பெண்குயின்களை காக்கும் கண்ணிவெடிகள்




ஆர்ஜன்டினாவுக்கு கைக்கெட்டிய தூரத்தில் இருக்கும் பொக்லாந்து தீவுகளுக்கு எங்கேயோ உள்ள பிரிட்டன் உரிமை கொண்டாடுகிறது. உண்மையில் இந்த தீவின் உரிமையாளர்கள் காலம் காலமாக அங்கு வாழும் பெண்குயின் பறவைகள். 19ஆம் நூற்றாண்டில் திமிங்கில வேட்டை பிரபலமடைந்தபோது தீ பற்றவைக்க மரக்கட்டைகளுக்கு பதில் தீவில் இருக்கும் பெண்குயின்களை பயன்படுத்தி இருக்கிறார்கள். என்றால் 1982 இல் பொக்லாந்து தீவுக்கு உரிமை கொண்டாட நினைத்த ஆர்ஜன்டீனா பிரிட்டனோடு அங்கு 10 வாரங்கள் யுத்தம் செய்தது. இந்த காலப்பகுதியில் ஆர்ஜடீன இராணுவம் தீவின் கரையோர பகுதிகள் முழுக்க நிலக்கண்ணிவெடிகளை புதைத்துவிட்டுச் சென்றது. பிரிட்டனுக்கு அங்கு கால் வைக்கவும் முடியவில்லை. அவைகளை அகற்றுவது கூட ஆபத்தான வேலை என்பதால் அந்த கண்ணிவெடிகள் அப்படியே வைக்கப்பட்டு சுற்றிவர அபாய எச்சரிக்கை பலகைகள் வைத்தார்கள்.

பென்குயின்களுக்கு அது தெரியாது. அந்த ஆபத்தான பகுதி இன்று பென்குயின்கள் பாதுகாப்பாக வாழும் பிரதேசமாக மாறிவிட்டது. நிலக்கண்ணி வெடியை வெடிக்கச் செய்வதற்கு பென்குயின்களின் எடை போதுமானதாக இல்லை. எனவே அவை அங்கு சுதந்திரமாக நடமாடுகின்றன. இப்போது அங்கே பென்குயின்களின் எண்ணிக்கையும் முன்னரை விட பல மடங்கு அதிகரித்துவிட்டது.


## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



# உலகில் மொழிபெயர்க்க முடியாத சொல்

பரஸ்பரம் இருவர் ஒரு விடயத்தை மற்றவர் ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆனால் இருவரும் தொடங்குவதாக இல்லை என்ற வரி ஒரு கதையின் காட்சியை விளக்குவது போல் இருக்கிறது. என்றாலும் இதனை ஒற்றை வார்த்தையில் கூற முடியுமா? உலகில் ஒரே ஒரு மொழியால் மாத்திரமே அதனை கச்சிதமாக கூற முடியும். பரிதாபம் என்னவென்றால் அந்த மொழியை பேசும் ஒரே ஒருவர் தான் இப்போது உலகில் இருக்கிறார். தென் அமெரிக்காவில் வாழும் யகான் பழங்குடியினர் பேசும் மொழியால் மாத்திரமே மேற்சொன்ன வரியை ஒற்றை வார்த்தையில் கூற முடியும். Mamihlapinatapai என்பதுவே அந்த சொல்லாகும். உலகில் மொழி பெயர்க்க முடியாத மிக கச்சிதமான சொல் என இது கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடித்திருக்கிறது.



ஏர்னஸ்ட் தொம்சன் செடோன் இங்கிலாந்தில் பிறந்த கனேடிய அமெரிக்க எழுத்தாளர், வனவிலங்கு கலைஞருமாவார். தனது தந்தையின் கொடுமைகள் தாங்காமல் சிறு வயதில் பெரும்பாலான நேரங்களை வீட்டுக்கு அருகில் இருக்கும் காடுகளில் கழித்தது தான் அவர் இப்பேர்ப்பட்ட கலைஞராவதற்கு காரணம். அவரது 21 ஆவது வயதில் தந்தை அற்புதமான பரிசு ஒன்றை கொடுத்தார். பிரித்துப் பார்த்தால் பெரிய பட்டியல் ஒன்று இருந்தது. எல்லாவற்றுக்குமே ஒரு விலை. அதாவது செடோன் பிறந்ததில் இருந்து இதுவரை அவருக்காக செலவு செய்த அனைத்து பணத்தையும் கேட்டிருந்தார் தந்தை. அதில் அவரது பிரசவத்துக்கு மருத்துவருக்கு கொடுத்த கட்டணமும் இருந்தது. செடோன் எல்லா பணத்தையும் தந்தைக்கு கொடுத்தார். ஆனால் அதற்குப் பின் தனது தந்தையோடு அவர் பேசவே இல்லை. பெயரைக் கூட மாற்றி ஒட்டுறவை அறுத்துக்கொண்டார்.

# மகனுக்கு தந்தை கொடுத்த விலை !

# ரஷ்யாவின் மூடப்பட்ட நகரங்கள்

ரஷ்யாவில் மூடப்பட்ட நகரங்கள் என்று சில நகரங்கள் இருக்கின்றன. அவை கடும் கட்டுப்பாடுகள் கொண்டு உண்மையிலேயே முடப்பட்ட நகரங்கள் தான். சோவியட் காலத்தில் இருந்து இந்த நகரங்கள் இருந்து வருகின்றன. இவ்வாறு சுமார் 44 நகரங்கள் இருக்கின்றதாம்.

இங்கு குடியிருப்பாளர் அல்லாது வெளியாட்கள் யாராவது செல்வதென்றாலோ அங்கேயே இரவில் தங்குவதாக இருந்தாலோ நிர்வாகத்திடம் அனுமதி பெற வேண்டும். அதிலும் வெளிநாட்டவர்கள் செல்வதற்கு முற்றாகத் தடை.



முக்கிய இராணுவத் தளங்கள் அல்லது மிக இரகசியமான ஆய்வு நிலையங்கள் இந்த நகரங்களில் இருக்கிறது என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால் இவ்வாறான நகரங்களில் இன்றும் கூட 1.5 மில்லியன் மக்கள் வசிக்கிறார்கள்.

# பால் வீதிக்குள் சிக்கிய மனிதன்



பால் வீதி மண்டலத்தின் உண்மையான காட்சியை எம்மால் பெறுவது சாத்தியமில்லாத ஒன்று. ஒட்டுமொத்த பால் வீதி மண்டலத்தை விளக்கும் படம் உண்மையிலேயே பால்வீதி மண்டலத்தினுடையதே அல்ல. அது பூமியில் இருந்து 32 மில்லியன் ஒளியாண்டு தூரத்தில் இருக்கும் மெஸ்ஸியர் 74 எனும் பால் மண்டலத்தினுடையதாகும். இந்த பால் மண்டலமும் எமது பால் வீதி போன்று ஒரு சுழல் பால் மண்டலமாக காணப்படுவதே இதற்கு காரணமாகும். சுமார் 100,000 ஒளியாண்டுகள் தூரம் பரந்த பால் வீதி மண்டலத்திலேயே நாம் இருக்கும் சூரிய மண்டலமும் இருப்பதால் அந்த பால் வீதி மண்டலத்தை முழுமையாக மனிதனால் படம்பிடிக்க முடியாதிருக்கிறது.

# படைப்பிலக்கிய பயணத்தில் நடை பயில களம் தந்தவை ஊடகங்கள்

## விவேகானந்தனூர் சதீஸுடனான நேர்காணல்



● *உங்களைப் பற்றிய அறிமுகத்தை எமது வாசகர்களுக்காக கூறுங்கள்?*

என்னைப் பற்றி கூறுவதானால்; வட மாகாணத்தில் உள்ள விவேகானந்த நகர் என்ற நகர்ப்புறத்தை வாழ்விடமாகக் கொண்டவன். செல்லையா பவளவள்ளி இணையரின் இளைய மகன். மனைவி, மகள் என சிறியதொரு குடும்பத்தின் தலை மகன். கிளிநொச்சி சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் நோயாளர் காவு ஊர்தி ஓட்டுநராகக் கடைமையாற்றி வந்த நான், சுயாதீன ஊடகவியலில் கரிசனை கொண்டவன் என்று சுருக்கமாகக் கூறலாம்.

● *உங்கள் பாடசாலை வாழ்க்கை, இலக்கிய ஆர்வம் பற்றியும் குறிப்பிடுங்கள்?*

'ஆதவன் முன்பள்ளி' தொடங்கி ஆரம்பக் கல்வியூட்டிய அயலகப் பள்ளியாம் கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலையில் இடைநிலை பயின்றேன். கிளி. இந்துக் கல்லூரி, இறுதியாக கிளி. மத்திய கல்லூரி என நான்கு நிலை அறிவுச் சாலைகளையும் நன்றியோடு நினைவில் கொள்கின்றேன். போர் நிலத்தில் வாழ விதிக்கப்பட்டிருந்த எமது மாணவப் பருவங்கள் இயல்பு நிலைக்கு அப்பாற்பட்டிருந்த காலங்கள் அவை. அதற்காக எமது அன்றாடங்களை நாம் அடகு வைத்திருக்கவில்லை. பாடப் புத்தகங்களின்றியும் பதுங்கு குழி வாழ்க்கையுமாக கடந்து கொண்டிருந்த அந்நாட்களிலும் கல்விச்சாலைகள்



தொடர்ந்தன. அநேகமாக நான் பேச்சு, விவாதம், வில்லிசை போன்ற கலை நிகழ்வுகளில் பங்குபற்றுவதுண்டு. தவிர உதைப்பந்தாட்ட விளையாட்டிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தேன்.

● *உங்களை எழுத்தாளராக வளர்த்த பின்னணி என்ன? இத்துறையில் வளர வழிவகுத்தவர்கள் யார்?*

என்னை ஒரு எழுத்தாளன் என்று பறைசாற்றிக் கொள்ளும் அளவுக்கான பக்குவத்தை இன்னும் அடையவில்லை என்றே நினைக்கிறேன். ஆனாலும் என் எழுத்து முயற்சிகளுக்கான பின்னணியை 'காலச் சூழலிடம்' கையளிக்க கடமைப்படுகிறேன். எனதிந்த படைப்பிலக்கியப் பயணத்தில் தொடர்ந்தும் நடை பயில்வதற்கு எனது ஆக்கங்களுக்கு களம் தந்துதவிவரும் அச்சு ஊடகங்களும் சஞ்சிகைகளும் முதன்மைக் காரணமெனக் காண்கிறேன். தவிர எனது படைப்புகளின் முதல் வாசகியாக மட்டுமின்றி உந்துசக்தியாக செயற்பட்டுவரும் எனது அம்மா பவளவள்ளி மிக முக்கியமானவர்.

நீங்கள் எந்தெந்த இலக்கியத் துறைகளில் இயங்கி வருகிறீர்கள்?

'ஆசைக்கு ஒரு கவிதை எழுதிப் பார்ப்போம்' எனத் தொடங்கிய என் எழுத்தார்வம் சிறுகதை, கட்டுரை, பத்தி எழுத்து, விமர்சனம், குறுநாவல் என முன்நகர்ந்து தற்போது நாவலில் காலடி வைத்திருக்கிறது.

● *உங்களது முதலாவது படைப்பை பத்திரிகையில் பார்த்தவுடன் உங்களது மனநிலை எப்படி இருந்தது?*

1999 இல் தினமுரசு பத்திரிகையின் 'கருத்தோவியத்திற்கான நான்கு வரிகள்' பக்கத்திற்காக சிறிய கவிதை ஒன்றை எழுதி அனுப்பியிருந்தேன். அடுத்த வாரம் அது எனது பெயர், முகவரியுடன் பாராட்டுக் கவிதையாக அச்சேறி வந்திருந்தது. அதனைக் கண்டு ஆனந்தமடைந்தது மட்டுமல்ல, ஓடி ஓடி அந்தப் பத்திரிகைப் பக்கத்தை அனைவருக்கும் காண்பித்து பெருமை கொண்டேன் என்ற உண்மையையும் சொல்ல வேண்டும்.

● *நீங்கள் எழுதிய முதலாவது நூலை வெளியிடும் போது உங்களுக்கு ஏற்பட்ட மன உணர்வு எப்படி இருந்தது?*

அந்த மகிழ்ச்சியை மற்றும் மனநிறைவை, கருச்சிதைவுகளை மாத்திரமே கண்டு நொந்திருந்த தாயொருத்தி முதற் குழந்தையை பிரசவித்த போது ஏற்படக்கூடிய ஆனந்தத்திற்கு ஒப்பிடுகிறேன்.

● *'இரும்புக் கதவுக்குள் இருந்து...' என்ற உங்களது முதலாவது கவிதைத் தொகுதியில் உள்ளடங்கியுள்ள கருப்பொருட்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?*

'சிறைக்கூடத்தில் இருந்து, பண்டிட் ஜவகர்லால் நேரு தன்னுடைய மகள் இந்திராவுக்கு 'என் பிரியமான பிரியதர்ஷினிக்கு...' என்று எழுதிய கடிதங்களின் தொகுப்பு பின் நாளில் நூலாக வெளியானது. அது வெறும் கடிதங்களைக் கொண்ட நூல் மாத்திரமல்ல. உணர்வு, ஒழுங்கு, வாழ்வின் இலட்சியம், தூரநோக்கு எனப் பல நல்லவற்றை உள்ளடக்கிய நூல். அதேபோல என்னுடைய கன்னிக் கவிதைகளும் நல்ல பல கருத்துக்களையும் கருப்பொருட்களையும் கொண்டனவாக அமைந்துள்ளன என்று போராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் இந்த நூலுக்கான அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

● *'உங்கள் விடியலைத் தேடும் இரவுகள்...' கவிதை நூலின் வரவு பற்றி என்ன குறிப்பிடுவீர்கள்?*

'தேசத்திற்கு ஒளிகொண்டு பாய்ச்சும் வலிமை நூல்களுக்கே அதிகமாக உள்ளது' என்பதற்கிசைய அடக்குமுறை அக்கினியில் அவித்தெடுக்கப்படுகின்ற சமுதாயத்தின் துன்ப துயரங்களில் சிலவற்றை கிள்ளியெடுத்து கவிதைப் புள்ளியிட்டு வாசகர் தம் கட்புலனில் அனுபவிக்கத் தந்துள்ளேன். இவை சில மனங்களையேனும் தொட்டு, மாற்றங்களை விளைவிக்க வேண்டுமென ஆவல் கொண்டதன் உப விளைவே 'விடியலைத் தேடும் இரவுகள்' என்ற நூல்.

● *உங்கள் சிறுகதை நூலின் தலைப்பு குறித்தும் கருப்பொருட்கள் குறித்தும் என்ன சொல்லப் போகிறீர்கள்?*

போரினால் பாதிக்கப்பட்ட ஏழை மூதாட்டியின் வாழ்வாதாரத்திற்குத் துணையாக இருந்துவந்த பழமையான வேப்ப மரமொன்றை வீதி அகழிப்பு என்ற அபிவிருத்தியின் பெயரால் தறிக்க முற்படுவதும் இறுதியில் அதைத் தடுத்து நிறுத்தப் போராடிய மூதாட்டி, தன் குடும்பத்தை வாழ வைத்த மரத்தோடு சேர்ந்து தானும் மடிவதுமான சிறுகதையின் தலைப்பே நூலின் தலைப்பாகியது. ஷவேப்ப மரமும் பவளம் ஆச்சியும்! என்ற இந்த சிறுகதைத் தொகுதி தாங்கி வந்துள்ள கதைக் கருக்களாக நமது சமுதாயக் குடிகள் சந்தித்து வருகின்ற ஏக்கம், தாக்கம், தவிப்பு, நட்பு பிரிவு, உறவு, விழிப்பு எனப் பல்வேறுபட்ட சங்கதிகளைச் சொல்லி நிற்கிறது.

● *ஒரு நூல் பிரசுரம் என்பது ஒரு பிரசவத்திற்கு ஒப்பானது என்கிறார்களே! இதுபற்றி என்ன சொல்வீர்கள்?*

இது முற்றிலும் மெய்யான கூற்றென்பதை அனுபவ வாயிலாகக் கண்டவன் நான். உழைப்பதைவிட சேமிப்பது கடினம் என்பார்கள். அதேபோன்றுதான் ஒரு படைப்பை ஆக்குவதைவிட அதை செப்பமான நூலாக வெளிக் காணச் செய்வது மிகக் கடினம். எமது தேசத்தில் எழுதுபவர்களுக்கான ஊக்குவிப்பு மந்த கதியிலிருந்து மாறுவதாக இல்லை. ஒரு புத்தகத்தை வெளியிட்டு, அதன் செலவுப் பெறுமதியைத் தன்னும் மீட்டெடுத்துக் கொள்ள முடியாத சூழ்நிலையில்தான் எமது உள்நாட்டு புத்தகங்களின் விற்பனை விகிதம் காணப்படுகிறது. திறன், தொழிநுட்பத்தின் அதிகரித்த ஆக்கிரமிப்பு மற்றும் அநேகமான வாசகர்கள் அயலுறவு தேசத்தின் கவர்ச்சி மிகுந்த (அமைப்பு, தலைப்பு, கரு) நூல்களை வாசிப்பதில் ஆர்வத்தைக் காட்டுவதால் உள்ளூர் படைப்புகள் புறக்கணிப்புக்குள்ளாகின்றன.



● *உங்கள் மனதை வசீகரித்த கவிதைகள் அல்லது கவிதை வரிகள் பற்றிக் கூறுங்கள்?*

இதற்குப் பொதுவாகவே பதிலளிக்கிறேன். மரபென்று பறையொலித்துக் கொண்டு கடைநிலை மாந்தரை சென்றடையாத எந்தப் படைப்புகள் மீதும் எனக்கு நாட்டமில்லை. படைப்புகள் எப்போதும் சமூக நலன் சார்ந்து நிற்க வேண்டுமென நினைக்கிறேன். அந்தவகையில் குரலற்ற மனிதர்களின் குரலாக ஒலிக்கின்ற வரிகள் பொதுவாக என்னை வசீகரிப்பதுண்டு.

● *ஆரம்ப காலங்களில் உங்கள் படைப்புகளுக்கு களம் தந்த ஊடகங்கள் பற்றி?*

வலி சுமக்கும் என் வரிகளுக்கு களம் தருவதில் அநேகமான ஊடகங்கள் பின்நின்றதில்லை. குறிப்பாக தினமுரசு, தினகரன், உதயன், சுடர் ஒளி, தமிழ் தந்தி, வீரகேசரி, தினக்குரல், வலம்புரி, காலைக்கதிர், மலை முரசு போன்ற தேசிய பிராந்திய பத்திரிகைகளை குறிப்பிட முடியும். சஞ்சிகைகள் வரிசையில்; இருக்கிறம், ஞானம், பூங்காவனம், கவிஞன், தளவாசல், ஜீவநதி, எங்கட புத்தகங்கள், கலைமுகம், கரை எழில் போன்றவற்றை குறிப்பிடுவேன். தவிர, சில மின் இதழ்களையும் இந்த வரிசையில் சேர்த்துக்கொள்ளலாம். ஆனாலும் சில முதன்மை சஞ்சிகைகள் தமக்கென்று முகமறிந்த வாடிக்கைப் படைப்பாளிகள் சிலரைத் தொடர்ந்து திருப்திப்படுத்தியாக வேண்டும் என்று கருதுவதால் வளர்ந்து வரும் புதுமுக எழுத்தாளர்கள் ஊக்கப் படுத்தப்படாமல் ஏமாற்றமடைந்து எழுத்துலகிலிருந்து கரைந்து காணாமல் போய்விடுகிறார்கள்.

● *ஏனைய எழுத்தாளர்களின் நூல்களையும் நீங்கள் வாசிப்பதுண்டா? யாருடைய எழுத்துகள் உங்களை அதிகமாகக் கவர்ந்ததாக நினைக்கிறீர்கள்?*

ஆரம்ப நாட்களில் அனைத்தையும் வாசித்தேன். பின் நாட்களில் தேர்ந்தெடுத்து வாசிக்கிறேன். கைதேர்ந்த எழுத்தாளர்களின் படைப்புகளை கோடிட்டுக் காட்டுவதால் புதுமுக எழுத்தாளர்கள் கண்டு கொள்ளப்படாமல் போய்விடுவார்களோ என அஞ்சுகிறேன். எனவே பெயர்ப் பட்டியலைக் கூற விரும்பவில்லை. ஆதலால் வாசகர் தாமே வாசித்து தீர்மானித்துக் கொள்வார்களாக. இன்னுமொன்றைச் சொல்ல வேண்டும்,

நேர்கண்டவர்:
**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**

தொடர்ச்சி 10 பக்கம்

# வாப்பா ஒரு வேலைகாரன் தடி

உடல் மெழுகை உழைப்புத் தீ உருக்கியெடுக்க உருக்குலைந்த உடல்களோ ஊதிவிட விழும்.

தொழிலாளர் படையின் வியர்வை போர் மீதான பற்றுதல் சின்ன வயசிலிருந்து எனக்குள் முளைகொண்டது.

தொழிலாளர்கள் மானுடவியலின் முதுகெலும்புகள், வளைந்த முதுகில் பூமிப்பந்தை சுமந்து நிற்கும் தியாகிகள், வியர்வையும், இரத்தமும், கஷ்டமுமான தம் வாழ்வை இருளுக்குள்ளிருந்து வெளிச்சத்துக்கு இழுத்துவர முயன்று முயன்று தோற்றுப் போகிறவர்கள். 'சுரண்டல்' பேய் நகக் கீறல்களால் மனசும் ஜீவிதமும் நொந்து போன பரிதாபத்துக்குரியவர்கள் அத்தகையவர்கள் மீதான இரங்குதலும், காருண்யமும் எனக்குள் என்றைக்குமாகப் படிந்துள்ளது.

உழைப்பின் மேன்மையைப் போற்றம் இஸ்லாம் அதன் முக்கியத்துவத்தை குர்ஆனிய மொழியில் பேசுகிறது. 'அவன் (அல்லாஹ்) தான் உங்களுக்கு பூமியை விரிப்பாக ஆக்கிவைத்துள்ளான், எனவே, அதனது பல கோணங்களிலும் சென்று அவன் அளித்திருப்பவைகளைப் புசிப்பீராக' (67: 15)

நேர்வழிகாட்டிகளான நபிமார்கள் தொழிலாளர்களாக வியர்வை சி;ந்தியவர்கள். ஆதிபிதா ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) விவசாயி, தாவூத் (அலைஹிஸ்ஸலாம்) இரும்புத் தொழிலாளி, நூஹ் (அலைஹிஸ்ஸலாம்) தச்சர், இத்ரீஸ் (அலைஹிஸ்ஸலாம்) தையல்காரர், மூஸா (அலைஹிஸ்ஸலாம்) இடையர் என நபிமார்களின் தொழில் பட்டியல் நீள்கிறது.

பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லாம்) அவர்கள் ஆடு மேப்பவராக வாழ்வைத் தொடங்கி வியாபாரியாகி அதனூடாக இஸ்லாமியத் தொழில் மகத்துவத்தைச் செயலில் காட்டியவர். அவர் ஒரு சமூக மேய்ப்பர், 'ஒருவன் தன் கையால் உழைத்து உண்பதை விட வேறு எந்த சிறந்த உணவையும் எவரும் உட்கொள்வதில்லை' (அல்புகாரி) என நபிகளார் உழைப்பின் கையை உயர்த்தினார்.

இஸ்லாம் உழைத்து வாழ்வதை இறை வணக்கமாக்கியுள்ளது. மட்டுமன்றி உழைப்பாளர் மீதான உருமைகள், கடமைகள், பண்;புகள் பற்றியும் விபரித்துள்ளது.

மே ஒன்று தொழிலாளார் ஒன்று திரளும் தினம்! தொழிலாளர் தினம். அது தொழிற் புரட்சியின் அறுவடை, நான்கு திசையும் சேரும் தொழிலாளர்களின் அணிநடை, இன்றைய தினத்திலும் என் வாப்பாவின் வியர்வை வேர் படந்த மேனி என்றும் அழியாத ஓவியமாய் என் மனசின் வரைபடத்தில் வியர்வை பூக்குறது.

நான் பிறக்கும் காலத்தில் வாப்பாவிடம் கார் இருந்ததாம், புடவைக் கடை இருந்ததாம், பிறகு அவை தேயத் தொடங்கி இருக்க வேண்டும். நினைக்கு தோறும் வாப்பாவின் தொழில் முகங்கம் வியர்வை தோய்ந்த மனசுடன் எனக்குள் தோற்றம் காட்டும்.

வாப்பாவிடம் கார் இருந்த காலம் போய் வாப்பா கார் டிரைவராக இருந்த காலத்தில் நான் தவழும் காலத்திலிருந்தேன்;. வாப்பா கூலிக்குக் கார் ஓட்டினார். வாப்பாவின் கறுப்பு நிற யு40 சோமசேற் கார் தண்ணீரூற்று சந்தியில் நிற்கும். ஹயர் வந்தால் போவார். வாப்பா 'எக்ஸ்பேட் டிரைவர்' முன்னாள் வன்னி எம்.பி.சிவசிதம்பரத்தின் கார் ஓட்டுனராக இருந்தவர். தேர்தல் காலத்தில் வன்னிப் பகுதி முழுவதும் கார் பறந்து திரியும். அதனால் வாப்ப நல்ல டிரைவர் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

வாப்பாவின் தொழில் முகங்களில் விவசாய முகமும் மண்ணில் படிந்தேயுள்ளது. தண்ணிமுறிப்பிலும், புண்ணியாரங் குளத்திலும் எங்களுக்கு வயல் நிலம் இருக்கிறது. வாப்பா வயல் செய்வார். லீவு காலத்தில் நானும் வயலுக்குச் செல்வேன். வாப்பா வரம்பு செருக்குவார். உழுது பதனிடுவார். விதைப்பார். காளை அறுப்பார். காவல் செய்வார். நீர் பாய்சுவார். அரிவும் வெட்டுவார். சின்ன வயசிலேயே அவர் அரிவு வெட்டும் லாவண்யத்தை ரசித்திருக்கிறேன். வாப்பா ஒரு வேலைகாரன் தடி. சூட்டுக் களத்தில் உற்சகமாய் நிற்பார்.

**(நன்றி: என் மனசின் வரைபடம்)**



# மனம் ததும்பும் ஹைக்கூ 8

அனுபவத்தையும், உணர்வையும் பிறருக்குத் தர முயல்வது ஹைக்கூ. பிரபஞ்சத்தின் அந்தரங்கங்களைக் காட்சிப்படுத்தும் தத்துவப் பார்வை கொண்ட ஹைக்கூவின் வரலாறு நீட்சியானது.

வரலாற்றாசிரியர்கள் ஆட்சியாளர்களின் நாம வரிசையில்தான் இலக்கிய வரலாற்றுக் காலகட்டங்களை விமர்சிக்கின்றனர். தொல்காலம் எனப்படும் யாமட்டோ நாரா காலம் முதல் தொடரும் இலக்கியக் காலகட்டத்தில் தோகுகலா காலம்தான் (1600 – 1868) ஹைக்கூவின் காலமாகும். உண்மையில் ஹைக்கூ பிரோபிச்சி காலத்தில் பதினான்காம் நூற்றாண்டில் தோற்றம் கண்டது. மோரிடாகே, சோகன் இருவருமே ஹைக்கூவின் முன்னோடிகளாவர். எனினும் பாஷோ (1644 – 1694) தான் மிகப் பெரும் ஹைக்கூக் கவிஞராகப் போற்றப்பட்டவர். ஹைக்கூவுக்கு முழு வடிவம் கொடுத்து அதில் செழுமையைப் பாய்ச்சியவர் பாஷோ. கற்பனை வாதத்தில் மிதந்த ஹைக்கூவை அன்றாட வாழ்வின் யதார்த்த நிலைமைக்கு இட்டுச் சென்றவரும் பாஷோதான். ஹைக்கூவில் புதிய பாணியை உருவாக்கிய நவீன ஹைக்கூக்காரர் இவர். நகைச்சுவை, மனிதநேயம், ஆழ்ந்த ஆன்மீகம் என்பன இவரது ஹைக்கூக்களில் வெளிப்பட்டன.

இவருக்குப் பின்னர் யூஜிமா ஒனிட்சுரா (16611738) குறிப்பிடும் படியானவர். மஹோாட்டோ அல்லது உண்மை என்கிற கருத்துருவாக்கத்தை ஜப்பானிய கவிதையில் நிறுவியவர் ஒனிட்சுரா. கோனிஷி, ரைஸான், இக்கெனிஷி, கோன்சூயி, யமகுச்சி சோடா ஆகியோரும் இக்காலகட்டத்தில் முக்கிய கவிசொல்லிகளாவர்.

பாஷோவுக்குப் பிறகு 'பத்துத் தத்துவவாதிகள்'' குறிப்பிடும் படியானவர்கள். பாஷோவுக்குப் பிறகு யோசாபூசன் (1716 – 1783) ஹைக்கூவுக்குப் புலனுணர்வு வண்ணத்தை ஊட்டியவராவார். 'பாஷோவுக்குத் திரும்புதலின்'' தொடக்கமாக இவர் திகழ்ந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலாமா ஓட்சுனி (1756 – 1823), கோபயாஷி இஸ்ஸா (1763-827) ஆகியோர் நிலைத்து நிற்கத்தக்க ஹைக்கூக்களை வரைந்தனர். இஸ்ஸா தனித்துவமான, எளிமையான ஹைக்கூக்களை தந்ததவர். இதனோடு ஹைக்கூவைச் சாமானியர்களின் கைகளுக்கும் பரிசளித்தார்.

ஷிகி (1867– 1902) சீர்திருத்தக் கவி தந்தவர். நவீன ஹைக்கூவின் ஆரம்பக்காரரும் இவர்தான். பரீட்சார்த்தம், இயற்பண்பியல், புனைவியல், குறியீட்டியல் ஆகிய போக்குகளின் சங்கமமாகத் திகழ்ந்தவர் ஷிகி. ஹைக்கூவில் இயற்கையான உண்மைபூர்வமான சித்திரங்களே வரையப்படுதல் வேண்டும் என வலியுறுத்தினார். இவரது வாழ்க்கையிலிருந்ததான சித்திரித்தல் கருத்தாக்கமே ஹைக்கூவின் நவீனத்துவத்துக்கு அடிப்படையானது.

இவ்வாறு இவர்கள் அனைவரும் தான் ஹைக்கூவின் பரிணாம வளர்ச்சியின் பங்குதாரர்களாகப் போற்றப்படுகின்றனர்.

# ஔவன் கவிதை

சூர்யன் நிலத்தில் வீழ்ந்து
துடித்தது

சருகடர்ந்த தருக்கீழ்
தஞ்சமாயிற்றுக் காலம்
ஒற்றைப் பாதச்சுவடு
கொதிப்பில் துடிக்கிறது

சிறு குருவியின் குரலில்
பெருந்தகிப்பு
வண்ணத்துப் பூச்சியின்
சிறகுகளின் வர்ண உதிர்வு
வெளிறிய மஞ்சள் வண்ணம்

குழைந்த பெயரறியா மலரில்
நீள்வாட்டம்
ஆறடர்ந்த சுவட்டில் பெரு
வெடிப்பு
உஷ்ணம் இதயத்தைக்
கவ்விற்று உன் வன்சொல்
முள்ளில்

சூரியனின் இத்தனை கொதிப்பு
என் தலையில் உருகிற்று
நான் பெரும்
மௌனத்திலுறைகிறேன்

ஒரு திடீர்க் கணம்
இரு மேகத்துளி
மெல்லிய காற்றின் குளிர்
தழுவல்

என் குருவி சிறகு மீட்டிற்று
வண்ணத்துப் பூச்சியின்
மேனியில் ஒளியின் வர்ணங்கள்
நெடுவாகை மரநிழலில்
நான்
நீ
மௌனமுடைந்த
பெருஞ்சொல்



# பாணர்



தமிழின் கலை இலக்கிய கலாசாரப் பண்பாட்டு வெளியில் பாணவர்களின் வகிபாகம் மிகப் பழமையானது மட்டுமன்றி காத்திரமானதும்கூட. பாணர் எனப்படுகிற பாடி ஆடி வாழ்வியற்றும் மக்கள் சமூகத்தைச் சங்ககாலத்திலிருந்து தரிசிக்கிறோம்.

பதினெண் மேற்கணக்கில் ஆற்றுப்படையாக வருவனவற்றுள் பெரும்பாணாற்றுப்படையும், சிறுபாணாற்றுப்படையும் பாணர்களை பகைப்புலமாய்க் கொண்டதேயாம். இதனூடு பாணர் வாழ்க்கை முறையைக் காணுகிறோம்.

இசையோடு கூடிய வாழ்வு அவர்களுடையது. வறுமையோடு இயைந்த வாழ்வது. பண்ணிசைத் தொழிலராகிய பாணருடன் பாடினியரின் இசைந்த இசை வாழ்வியல் இலக்கியத்தரமானது.

பண் பாடுதல், இசைக்கருவி; களைக் கையாளுதல், நடனமாடுதல் என்பன இவர் தம் வாழ்க்கைக்கோலமாகும். இவர்தம் புறவாழ்வையே பெரும்பாணாற்றுப்படையும், சிறுபாணாற்றுப்படையும் ஆட்கொண்டன. கூத்தர் விறலியர் மற்றும் பொருநர் என்போரும் சங்கவாழ்வின் அங்கங்களாவர். கூத்தர் பரத்தையின்மாட்டுப் பிரிந்த தலைவனுக்காகத் தலைவியுடன் வாதிடும் பண்பினர். கூத்தராற்றுப்படையில் இவர் தம் வாழ்வியலைக் காணலாம். பொருநர் வீரம் படைத்தோர் படைத்தலைவர்கள் முறைகளை முழங்கிப் பாடி ஆடுவோர். பொருநராற்றுப்படையில் இவர்தம் வாழ்வியலைத் தரிசிக்கலாம்.

இதன் போக்கில் பிற்காலப் பாணர் வாழ்வையும் தரிசிக்கலாம். முஸ்லிம் பாணர் எனப்பட்டோர் இனங்காணத்தக்கவராவர். நாம் குறிப்பிடும் பக்கீர் பாவாக்கள் இசை மரபுப்புலவர்கள் தம் வாழ்வு இதனையொட்டியதே. முஸ்லிம் புலவர்கள் கையாளும் ரபான் கருவியே இந்தப் பாடல்களின் பிரதான கருவியாகும். ஊரூராய்ச் சென்று வீடுவீடாய்ப் படியேறி ரபானிசை வழங்கும் பக்கீர் பாவாக்கள் முஸ்லிம் பாணர்களாவர். பக்கீயில் வைத்தெனப்படும் இஸ்லாமிய மரபுசார் இசைப்பாடல்களின் மூலமாக இருப்பவர்கள் பக்கீர் பாவாக்கள் எனப்படும் முஸ்லிம் பாணர்களே ஆவார்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



**பக்கத்துவீட்டுகாரர் :** ஏன்..சார்...உங்க ...வீட்ல எப்பவும் சிரிப்பு சத்தம் கேக்குதே ? அந்த...ரகசியம்தான் என்ன..??
**ராமு :** ஓ...அதுவா...என்...மனைவி கோபம்..வந்துச் சுன்னா....என் மேல பாத்திரத்த தூக்கி வீசுவா... மேல படலேன்னா நான் சிரிப்பேன், பட்டதுன்னா அவள் சிரிப்பா....



**விஸ்வா :** உங்க மூணாவது பையனுக்கு பொண்ணு பாக்குறிங்களாமே மருமகள் எப்படி இருக்கனும் ?
**சுமன் :** என்னோட கூட்டணி அமைத்து என்னோட மூத்த மருமகள்களை வீட்டை விட்டு ஓரங்கட்டணும்...!



**பார்வையாளன் :** நேத்து நடந்த ஓவியக் கண்காட்சியில உங்க ஓவியம் தான் பாக்குற மாதிரி இருந்துச்சு.
**ஓவியர் :** ரொம்ப நன்றிங்க.
**பார்வையாளன் :** ஆமா.. மத்த ஓவியங்களைச் சுத்தி ஒரே கூட்டம். பாக்கவே முடியல.!!!



**பட்டாஸ் :** மாப்ள ரயில் பயணங்கள் பத்தி எழுதிக்கிட்டு இருந்தானே என்னாச்சி ?

**பாஸ் :** அதெல்லாம் மலையேறி போச்சி !



**ஒருவன் :** மாட்டுக்கு பொங்கல் வைக்கும் போது மாடு ஏன் உன்னை முட்டுச்சு...


**மற்றவன் :** பொங்கலில் இருந்த முந்திரியை எடுத்து திண்ணுட்டேன்.



**டாக்டர் :** 37'ம் நம்பர் படுக்கையில் இருந்த பேஷண்ட் எப்படியிருக்கிறார்?
**நர்ஸ் :** அவருக்கு மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்குது... டாக்டர்..
**டாக்டர் :** ஏன்? என்ன ஆயிற்று அவருக்கு?
**நர்ஸ் :** என்னைப் பிடிக்க ரூம் முழுவதும் சுற்றி ஓடியதால் ஏற்பட்ட களைப்பு!



**ராமன் :** ஆசையே துன்பத்துக்குக்காரணம்னு இப்பதான் நான் தெரிஞ்சுக் கிட்டேன்
**சோமன் :** எப்படி?
**ராமன் :** என் மனைவியை நான் ஆசைப் பட்டுத் தானே... கல்யாணம் பண்ணிக் கிட்டேன்.



**கலா :** ரெண்டு கண்ணிருக்கே அரிசியிலே ஒழுங்கா கல்லைப் பொறுக்க முடியாதா?
**மாலன் :** முப்பத்திரண்டு பல்லு இருக்கே மெல்ல முடியாதா?



**காதலி:** ஷாஜகான் என்ன கட்டினார்?
**காதலன் :** லுங்கி கட்டினார்.
**காதலி:** !!

# இசைத்துறையில் சாதிக்க துடிக்கும் மாத்தளை இளம் பூங்குயில்

## பாடகி ஐஸ்வர்யா யோகராஜா



**"ஊடகத்துறையானது அரசியலும், இன, மத, பிரதேசவாத அடக்குமுறைகளும் நிறைந்தது. முக்கியமாக திறமை நிறைந்த பல பெண்களின் வெற்றிக்கு இவை அதிகமாகவே தடையாக உள்ளன என்றே கூறலாம். இதுபோன்று பல திறமைகளை வைத்துக்கொண்டு இலை மறை காயாக வாழும் பெண்களுக்கு அவர்கள் தடையை உடைத்துக்கொண்டு வெளிவந்து சாதிப்பதற்கு நான் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க விரும்புகிறேன்.**



இவ்வாறு வளர்ந்து வரும் இளம் பாடகி தெரிவித்துள்ளார்.

தமது இனிமையான குரல் வலிமையால் ரசிகர்களை பாடி பரவசப்படுத்தி வருபவர்கள் பாடகர்களும் பாடகிகளும். அவ்வாறு பெரும்பாலான பாடகர்களும் பாடகிகளும் உருவாகி இருந்தாலும், உருவாகி வந்தாலும் எல்லோராலும் தங்களது திறமைகளை வெளிகாட்டி பிரபல்யமாகி விட முடியாது. அதற்கான வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் கிடைத்தால் தான் அவர்களால் தங்களது திறனை வெள ிகாட்டி அத்துறைகளில் வெற்றி பெற முடியும். இலங்கையில் அதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. சவால் மிக்க இசைத்துறைக்குள் எதிர்நீச்சல் போட்டு வெற்றிநடை போட்டு வரும் ஒரு இளம் பாடகியைப் பற்றி இவ்வார செந்தூரம் திலகமிட்டு மணம் பரப்ப விரும்புகிறது.

இவரைப் பொருத்தவரையில் மிகவும் திறமைசாலி மட்டுமல்ல தைரியசாலியும் கூட. அதற்கு இவர் கூறியுள்ள விடயங்களே சிறந்த ஆதாரங்கள்.

**முதலில் உங்களைப்பற்றி சொல்லுங்கள். உங்களது பிறப்பு, தாய், தந்தை, சகோதர சகோதரிகள் ஆகியோரைப் பற்றி சொல்லுங்கள்.**

" நான் இலங்கையில் மாத்தளை மாவட்டத்தில், யோகராஜ் வசந்தகுமாரி தம்பதிகளுக்கு இரண்டாவது செல்ல மகளாக பிறந்தேன். எனக்கு ஒரு தமக்கையும் தம்பியும் உள்ளனர். எனக்கு பதினைந்து வயது இருக்கும்போது எனது தந்தை உடல் நலம் காரணமாக எங்களை விட்டுப் பிரிந்து விட்டார்.

**ஒரு பாடகியாக வர வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்குள் எவ்வாறு துளிர்விட்டது. இது யாராவது தூண்டிவிட்டதன் பலனாக ஏற்பட்டதா அல்லது பாடகியாக வர வேண்டும் என்ற எண்ணம் சிறுவயதில் இருந்து உங்களுக்குள் ஏற்பட்டதா? அல்லது எதிர்பாராதவிதமாக அமைந்ததா?**

எனது தந்தையின் ஆசைப்படி எமது அம்மா எனது அக்காவை ஒரு நடன கலைஞராகவும், என்னை ஒரு பாடகியாகவும் பயிற்சி பெறச் செய்து, பாடசாலை காலத்தில் இருந்தே பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற வைத்தார்.

**இவ்வாறு ஆரம்பித்த இந்த இசைப்பயணம் எவ்வாறு தொடர்ந்தது?**

கண்டி மோப்ரே கல்லூரியில் (Mowbray College ) உயர்தர படிப்பை படித்து முடித்துவிட்டு, கொழும்பில் ஒரு தனியார் இந்துஸ்தானி இசைக்கல்லூரியில் பயின்று வந்தேன். நான் ஒரு பாடகியாக வேண்டும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நான் பாடி புகழ் பெற வேண்டும் என்ற எனது தந்தையின் ஆசை வார்த்தைகள் எனது இதயத்தில் ஜுவாலை விட்டு எரிந்து கொண்டே இருந்தது. அந்த சமயத்தில் தான் எனக்கு சக்தி தொலைக்காட்சியில் சூப்பர் ஸ்டார் நிகழ்ச்சியில் பங்குபெற வாய்ப்புக் கிடைத்தது. அந்நிகழ்ச்சியில் இறுதிவரை பயணிக்க முடியாத போதிலும், பல நல்ல உள்ளங்களின் பாராட்டும் கிடைத்தது.

**தொடர்ந்து வேறு வாய்ப்புகள் ஏதும் கிடைக்கவில்லையா?**

தொடர்ந்து பல தமிழ் மற்றும் சகோதர மொழி ( சிங்கள ) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பல பாடல்கள் பாட வாய்ப்புகள் கிடைத்தன.

தொடர்ந்து பல தனியார் தயாரிப்புப் பாடல்களும் விளம்பர வாய்ப்புக்களும் வந்தன. நிகழ்ச்சி தொகுப்பாளராகவும், குறும்பட, முழுநீள திரைப்பட வாய்ப்புக்களும் கிடைத்தன. பின் இலங்கையில் பிரபல இசையமைப்பாளர் ராஜ் தில்லையம்பலத்தின் இசையில் ஒரு தமிழ்ப் பாடல் பாட வாய்ப்பும் கிடைத்தது.

> **"தமது இனிமையான குரல் வலிமையால் ரசிகர்களை பாடி பரவசப்படுத்தி வருபவர்கள் பாடகர்களும் பாடகிகளும். அவ்வாறு பெரும்பாலான பாடகர்களும் பாடகிகளும் உருவாகி இருந்தாலும், உருவாகி வந்தாலும் எல்லோராலும் தங்களது திறமைகளை வெளி காட்டி பிரபல்யமாகி விட முடியாது. அதற்கான வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் கிடைத்தால் தான் அவர்களால் தங்களது திறனை வெளிகாட்டி அத்துறைகளில் வெற்றி பெற முடியும்."**

தொடர்ச்சி 7ஆம் பக்கம்

6 ஆம் பக்கத் தொடர்

அண்மையில் அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் திரைப்பட இயக்குனர் ஈழன் இளங்கோவின் அறிமுகம் கிடைத்தது. அவரின் மகன் சத்யன் இளங்கோ ஒரு இந்தியப் பின்னணிப் பாடகர். ஈழன் இளங்கோவின் வரிகளில், சத்யன் இளங்கோவுடன் சில கொரோனா விழிப்புணர்வு பாடல்கள் பாடவும் வாய்ப்புகள் கிடைத்தன. இப்பாடல்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



**இப்பொழுது வேறு வாய்ப்புகள் ஏதும் கிடைத்ததா, கிடைத்துள்ளதா?**

இப்பொழுது, ஈழன் இளங்கோ தயாரித்து வரும் "மருந்தோம்பல்" எனும் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் வாய்ப்பு கிடைத்தது. அத்தோடு, அவர் இலங்கையில் தயாரிக்க இருக்கும் இரு திரைப்படங்களில் நடிக்க வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. கிடைத்த தரமான வாய்ப்புக்களை நான் தவறவிடவில்லை.


**பெண்களுக்கான ஊடக பயணம் பற்றி என்ன சொல்ல விரும்புகிறீங்கள்?**

முக்கியமாக பெண்களுக்கான ஊடக பயணம் கரடுமுரடனாது. பல தடைகளை, விமர்சனங்களை, இன்னல்களை சாதுர்யமாக சமாளிக்க வேண்டிய நிலை பெண்களுக்கு உள்ளது. பல பல, வேறுபட்ட முகங்கள், அவை அனைத்தையும் சாமர்த்தியமாக சமாளிக்க பெண்கள் தைரியத்தையும் சாமர்த்தியத்தையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.



**உங்களுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் யார்?**

எனக்கு முழுக்க முழுக்க உறுதுணையாக இருந்தவர் எனது அம்மா. அவருக்கு நான் என்றும் கடமைப் பட்டுஉள்ளேன். கலைத்துறையில் சாதிக்க வேண்டும் என்று நினைக்கும் ஒரு கலைஞருக்கு, அத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற இலக்கு மட்டுமே குறியாக இருக்க வேண்டும். அதில் நானும் எனது குடும்பமும் மிக குறிப்பாக இருக்கிறோம். மேலும் இசைத்துறையில், திரைத்துறையில் சாதித்து, இலைமறை காயாக மறைந்து கிடக்கும் பல பெண் கலைஞர்களுக்கு நான் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க விரும்புகிறேன்.



**கே. ஈஸ்வரலிங்கம்**
easwarantkn@gmail.com
Whatsapp : 077 3124543

# நடிகை நயோமியின் நடிப்பில் உருவான பாடல்

**நடிகை நயோமியின் நடிப்பில் உருவாகியுள்ள, "வாங்கி வந்த ரோஸ்சடி என் கூட பேசடி" என்ற பாடல் மிக விரைவில் வெளியிடப்படவுள்ளது.**

புதிய தொழில்நுட்பங்களின் வரவால் இன்று குறுந்திரைப்படங்கள், திரைப்படப் பாடல்கள் தயாரிக்கும் பணிகளில் நம்மவர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தி இன்று டிக்டொக், குறுந்திரைப்படங்கள், பாடல் காட்சிகள் என்பன தயாரிக்கப்படுகின்றன.

இவ்வாறான பாடலொன்றை மலையக இளைஞர்கள் சிலர் இயற்றி திரைப்படப் பாடலாக தயாரித்துள்ளனர். இந்தத் திரைப்படத்திற்கான காட்சிகள் பண்டாரவளையில் ஒளிப்பதிவு செய்து தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடலை ரஜிபன் எழுதி இயற்ற, மலையக மகன் புரோடக்ஷன் தயாரித்துள்ளது. இந்தப் பாடலுக்குரிய மெலடி ரஜிபனால் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு டிலான் இசையமைத்துள்ளார். நடன இயக்குனர் கிரிஷின் இயக்கத்தில் இந்தப் பாடலுக்கான நடனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒப்பனை பிரஷாந்த், ஒளிப்பதிவு S studio சதிஷ். இயக்குணர் எஸ்.ஆர். சுஜிதரன்

இந்தப் பாடலுக்குரிய கதாநாயகனாக ரஜிபனும் கதாநாயகியாக ஆஷாவும் நடிக்க துணை நடிகர்களாக ரோஜினி, ஜந்தினி, லோஷன், நாதன், அஸ்வின், ராகுல், சின்னவர், குமுதினி, கிரிஷ் ஆகியோர் நடித்துள்ளனர். இந்தப் பாடல் காட்சிகள் யாவும் எழில் கொஞ்சும் மலையகமான பண்டாரவளையில் படமாக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாடலை மலையகத்தில் எடுத்ததற்கான நோக்கம், பொதுவாக மலையகம் இன்னும் பின்னடைந்த நிலையில் தான் காணப்படுகின்றது. அதிலும் மலையகத்தில் நிறைய திறமையான கலைஞர்கள் இருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் சரியான ஒரு வாய்ப்புகளோ, உதவிகளோ கிடைக்காது பின்தங்கியுள்ளனர். மலையக கலைஞர்களாலும் ஒரு தரமான படைப்பை வழங்க முடியும். இனி வரும் காலங்களில் மலையக கலைஞர்களுக்கு ஏற்ற ஒரு அங்கீகாரம் வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்தப் பாடல் உருவாக்கப்பட்டது.

பாடலின் பெயர் : வாங்கி வந்த ரோஸ்சடி என் கூட பேசடி. வாங்கி வந்த ரோஸ்சடி என் கூட பேசடி என்ற பாடலின் முதற் பார்வையும், பாடலும் இந்த மாதம் வெளியிடப்படும்.

என்னுடைய அடுத்த படைப்பு கொழுந்து கூடை காரி ஆகும். இந்தப் பாடலின் தயாரிப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.



Senthooram செந்தூரம்



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**எம்.மாகிரட், எலபடகம.**


**கேள்வி:** நடிகை சிம்ரனின் பெயரில்கூட படம் தயாரிக்கிறார்களாமே... உண்மையா...மொழி சேர்...?

**பதில்:** சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'எந்திரன் 2' படத்தில் நடிகை எமி ஜெர்மன் நுண்ணறிவு கொண்ட ரொபோவாக நடித்திருப்பார். அதேபோன்றதொரு கதாபாத்திரத்தை இளம் நடிகை மேகா ஆகாஷ் ஏற்றிருக்கிறார். அறிமுக இயக்குநர் விக்னேஷ் ஷா இயக்கத்தில் தயாராகி இருக்கும் 'சிங்கிள் சங்கரும் ஸ்மாட்போனும் சிம்ரனும்' என்ற படத்தில் செயற்கை நுண்ணறிவு கொண்ட ரொபோ கதாபாத்திரத்தில் மேகா ஆகாஷ் நடித்திருக்கிறார். இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

**எம்.ஆர். சுதாகர், வத்தளை.**

**கேள்வி:** எனது அபிமான நடிகர் மாதவன் இப்போது ஏதாவது படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறாரா?

**பதில்:** இஸ்ரேலின் முன்னாள் விஞ்ஞானி நம்பி நாராயணனின் வாழ்க்கை வரலாற்றைத் தழுவி நடிகர் மாதவன் எழுதி இயக்கிய கதையின் நாயகனாக நடித்திருக்கும் திரைப்படம் 'தி ரொக்கெட்ரி நம்பி எபெக்ட்'. இந்தத் திரைப்படம் உலகம் முழுவதும் ஜூன் 1ஆம் திகதி வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந் நிலையில் மே 19ஆம் திகதி தேர்வில் நடைபெறும் சர்வதேசத் திரைப்பட விழாவில் இந்தியாவின் 75வது சுதந்திரத் தினத்தைக் கொண்டாடும் வகையில் இந்தப் படம் திரையிடப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தின் மூலம் மாதவன் இயக்குநராக அறிமுகமாகி இருப்பதாலும், இந்தப் படம் ஒரே தருணத்தில் தமிழில் மட்டுமல்லாமல் தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளிலும் வெளியாகிறது என்பதாலும் பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.





**எம்.எம்.முஸ்தபா, மாவனெல்ல.**

**கேள்வி** புதுமை இயக்குநர் பார்த்தீபன் இயக்கி,வெளிவர இருக்கும் அடுத்த படம் எது?

**பதில்** பார்த்தீபனின் இயக்கத்தில் தயாராகி இருக்கும் அடுத்த படம் 'இரவின் நிழல்'. இந்தத் திரைப்படம் நொன்லீனியர் பாணியிலான சிங்கிள் ஷொட் மூவி என படக் குழுவினர் அறிவித்தனர். இப்படத்தின் டீசல் மற்றும் சிங்கிள் டிராக் அண்மையில் வெளியானது. அனைவரும் பார்த்து கேட்டு ரசித்தனர். இந்நிலையில் சமூக வலைதளத்தில் ரசிகர் ஒருவர் "இரவின் நிழல் படத்திற்கு தணிக்கை குழுவினர் வெட்டு வழங்கினால் உங்களின் சாதனை தடைப்பட்டு விடுமே...?இதற்கு ஏதாவது மாற்று உபாயம் வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டார். இதற்கு பதிலளித்த பார்த்தீபன்" இந்தப் படம் தணிக்கை குழுவிற்கு செல்லும் போது காட்சிகள் வெட்டப்பட மாட்டாது... மாறாக வசனங்கள் பல இடங்களில் மௌனிக்கப்படும்" எனத் தெரிவித்தார்.

**எம்.மலர்ராணி கொழும்பு13**

**கேள்வி :**நடிகை திரிஷாவின் படங்கள் இப்போது வருவதில்லையே... அவர் இப்போதும் படங்களில் நடித்துக் கொண்டுதான் இருக்கிறாரா?

**பதில்:** திரை உலகில் சிறிய கதாபாத்திரத்தில் நடிகையாகி அறிமுகமாகி கதாநாயகியாக உயர்ந்து கதையின் நாயகியாக முன்னேற்றம் கொண்டிருப்பவர் நடிகை திரிஷா. இவர் நடித்த படங்கள் வெளியாவதில் இடைவெளிகள் ஏற்பட்டாலும் திரை உலகில் முடி சூடா ராணியாக இளமை குன்றாத இளவரசியாக இன்றும் வலம் வருகிறார்.



இவர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது இயக்குநர்கள் சங்கம் அருண்வசீகரன் இயக்கத்தில் தயாராகி இருக்கும் 'தி ரோட்' படத்தில். இதில் கதையின் நாயகியாக நடித்திருக்கிறார். இதன் ஃபர்ஸ்ட் லுக் இவரது பிறந்தநாளை முன்னிட்டு வெளியிடப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது.

இதனிடையே இவரது நடிப்பில் தயாராகி இருக்கும் 'பொன்னியின் செல்வன்' படத்தில் முதல் பாகத்தில் இவரது பங்களிப்பு குறைவாக இருக்குமா? அதிகமாக இருக்குமா? என்ற விவாதமும் இணையத் தில் தொடர்ந்து நீடித்து வருகிறது.

**எல்.ஏகாம்பரம், மன்னார்**

**கேள்வி:** ரஜினி காந்த, விஜய், அஜித், சூர்யா இவர்கள் நடித்த படங்கள் ஒரே தடவையில் ரீலிசானால் யார் நடித்த படத்திற்கு அதிக வசூலாகும். வரிசைப்படுத்துங்களேன்..?



**பதில்:** உங்கள் வரிசைப்படுத்தலே சரியாகத்தான். இருக்கிறது.



**ஆர் எம்.புஹாரி, கல்முனை.**

**கேள்வி:** நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிக்க விரும்பி முடியாமல் போன அந்த கதாபாத்திரம் எது?

**பதில்:** அது 'பெரியார்' கதாபாத்திரம்.

இதை ஒரு பேட்டியின் போது சிவாஜி கணேசனே சொல்லியிருந்தார்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

# வித்யாவக்கு நடந்த Bad அனுபவங்கள்



திரையுலகில் தனக்கு நடந்த சில மோசமான அனுபவங்கள் பற்றி முன்னணி நடிகை வித்யா பாலன் பேட்டியில் பகிர்ந்துள்ளார்.

இந்தி திரையுலகில் முன்னணி கதாநாயகியாக இருப்பவர் வித்யாபாலன். தமிழில் நேர்கொண்ட பார்வை படத்தில் அஜித்குமார் ஜோடியாக நடித்தார். மறைந்த நடிகை சில்க் சுமிதா வாழ்க்கை கதையான தி டர்ட்டி பிக்சர் என்ற படத்தில் நடித்து சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்றார்.

இந்தியில் வித்யாபாலனை மனதில் வைத்தே கதைகளை உருவாக்குகிறார்கள். ஆனாலும் இதுவரை சல்மான்கான், ஷாருக்கான், ஹிருத்திக் ரோஷன், அக்ஷய்குமார் உள்ளிட்ட முன்னணி கதாநாயகர்களுக்கு ஜோடியாக அவர் நடிக்கவில்லை. ஆரம்பத்தில் தமிழ் படங்களில் வாய்ப்பு தேடியதாகவும், கதாநாயகிக்கு ஏற்ற தோற்றம் இல்லை என்று ஒதுக்கியதால் இந்திக்கு சென்று முன்னணி நடிகையாக உயர்ந்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

தனது சினிமா வாழ்க்கை பற்றி வித்யாபாலன் கூறும்போது, முன்னணி கதாநாயகர்கள் ஜோடியாக நடிக்க வைக்காமல் தன்னை ஒதுக்கியதாக குறை சொல்லி இருக்கிறார்.

**ஒதுக்கிய கதாநாயகர்கள்**

நான் முன்னணி கதாநாயகர்கள் ஜோடியாக நடிக்கவில்லை. அவர்கள் என்னை ஓரம் கட்டுவதாகவும், நிராகரிப்பதாகவும் உணர்ந்தேன். அவர்கள் ஒதுக்கியதற்காக எனக்கு வருத்தம் இல்லை. நல்ல கதைகள் தான் சினிமாவுக்கு ஆன்மாவை போன்று இருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட கதைகளை தேர்வு செய்து நடிக்க ஆரம்பித்தேன். அந்த படங்கள் எனக்கு பெயர் வாங்கி கொடுத்தன. ரசிகர்களும் ஏற்றுக்கொண்டார்கள் என கூறினார்.

திரையுலகில் தனக்கு நடந்த சில மோசமான அனுபவங்களை பேட்டி ஒன்றில் பகிர்ந்துள்ளார். நான் நடிக்க வந்த புதிதில் நடந்த சம்பவங்களை என்னால் மறக்கவே முடியாது. 13 படங்களில் இருந்து நான் நீக்கப்பட்டேன்.

அதில் ஒரு படத்தில் நடிப்பதில் இருந்து தயாரிப்பாளர் என்னை நீக்கி விட்டு, என்னிடம் நடந்து கொண்ட விதம் மறக்க முடியாதது. அவர்கள் என்னிடம் மோசமாக நடந்து கொண்டனர். நான் மிகவும் அசிங்கமாக இருப்பது போன்று உணர வைத்தனர்.

**கண்ணாடியில் பார்க்க பயம்**

அதனால் கண்ணாடியில் என்னை பார்ப்பதற்கான தைரியம் வர எனக்கு 6 மாதங்கள் தேவைப்பட்டது என கூறி அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளார். அன்று என்னை வேண்டாம் என கூறியவர்களிடம் (தயாரிப்பாளர்கள்) இருந்து சமீபத்தில் எனக்கு தொலைபேசி அழைப்புகள் வருகின்றன. எங்களுடைய படத்தில் நடிக்க வாருங்கள். வாய்ப்பு தருகிறோம் என கூறினர். ஆனால், பணிவாக அவர்களது படங்களில் நடிக்காமல் மறுத்து விட்டேன் என நடிகை வித்யா பாலன் கூறியுள்ளார்.

**பாலசந்தர் படம்**

தொடர்ந்து அவர் கூறும்போது, 2004ம் ஆண்டு காலகட்டத்தில், திரைப்பட இயக்குனர் கே. பாலசந்தரின் 2 படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டேன். அப்போது, வேறு பல படங்களில் இருந்து நான் மாற்றப்பட்ட சமயம். எனக்கு பதிலாக வேறு சிலர் நடிக்க வைக்கப்பட்டனர். இதில் பாலசந்தர் படத்திற்காக,

நியூசிலாந்து நாட்டுக்கு படப்பிடிப்புக்காக செல்ல இருந்த நிலையில், படத்தில் இருந்து என்னை நீக்கிய விசயம் பின்னரே தெரிய வந்தது.

என்னிடம் அதுபற்றி எதுவும் கூறவில்லை. எனது தாயார் போன் செய்து விவரம் தெரிந்து எனக்கு கூறினார். ஆத்திரத்தில் மரைன் டிரைவில் இருந்து பந்திரா பகுதி வரை அந்த நாளில் நடந்தே சென்றேன். அனலால் கொதித்திருந்த அந்த தருணத்திலும் மணிக்கணக்கில் வெயிலில் நடந்து சென்றேன். நிறைய அழுதேன். அந்த நினைவுகள் இன்றும் என்னை விட்டு நீங்காமல் உள்ளன. ஆனால், 3 ஆண்டுகள் திரை துறையில் போராடியும் எந்த முன்னேற்றமுமில்லை என வேதனையுடன் கூறுகிறார்.

# நயனுக்கு திருமலையில் திருமணம்



நயன்தாரா, இயக்குநர் விக்னேஷ் சிவன் ஜோடி திருப்பதியில் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும், அதற்கான ஏற்பாடுகளை இருவரும் பார்வையிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

நடிகை நயன்தாரா கேரளாவை சேர்ந்தவர். அவருடைய சொந்த பெயர் டயானா. 'மனசினகரே' என்ற மலையாள படத்தின் மூலம் திரையுலகுக்கு அறிமுகமான அவர், சரத்குமார் நடித்து, ஹரி இயக்கிய 'ஐயா' படத்தின் மூலம் தமிழ்பட உலகுக்கு கதாநாயகியாக அறிமுகமானார்.

ரஜினிகாந்த், விஜய், அஜித்குமார், விக்ரம், சூர்யா, கார்த்தி, விசால், தனுஷ் உள்பட முன்னணி கதாநாயகர்களுக்கு ஜோடியாக நடித்து பிரபலமானார். இதேபோல் சிரஞ்சீவி, பாலகிருஷ்ணா போன்றவர்களுடன் ஜோடி சேர்ந்து தெலுங்கு பட உலகிலும் முன்னணி கதாநாயகி ஆனார்.

இப்போது தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய 3 மொழி படங்களிலும் அதிக சம்பளம் வாங்கி 'நம்பர் 1' கதாநாயகியாக இருந்து வருகிறார். திரையுலகில் அவர் பரபரப்பான கதாநாயகியாக இருப்பதுபோல், சொந்த வாழ்க்கையிலும் அவ்வப்போது பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார். நடிகர்கள் சிம்பு, பிரபுதேவா ஆகிய இருவருடன் இணைத்து பேசப்பட்ட நயன்தாரா, மூன்றாவதாக டைரக்டர் விக்னேஷ் சிவனுடன் இணைத்து பேசப்படுகிறார். இருவரும் திருமணம் செய்துகொள்ளாமலேயே ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். சமீபகாலமாக ஜோடியாக கோவில்களுக்கு சென்று வந்தார்கள். சொந்த பட தயாரிப்பிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் நயன்தாராவின் தந்தை குரியன் உடல்நல குறைவாக இருந்து வருகிறார். அவர் மகளின் திருமணத்தை பார்க்க விரும்புகிறார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற நயன்தாராவும் முன்வந்து இருக்கிறார். அவருடைய காதலர் விக்னேஷ் சிவனும் திருமணத்துக்கு சம்மதித்து விட்டார்.

இதைத்தொடர்ந்து நயன்தாராவிக்னேஷ் சிவன் திருமணம் அடுத்த மாதம் (ஜூன்) 9ந் திகதி திருமலையில் நடக்க இருப்பதாக கூறப்படுகிறது. திருமணம் நடைபெற இருக்கும் மண்டபத்தை முன்பதிவு செய்திருப்பதுடன், மண்டபத்தை இருவரும் நேற்று பார்வையிட்டதாகவும் பேசப்படுகிறது

# ப்ரியா பவானி ஷங்கர் பற்றி காட்டுத்தீயாக பரவிய வதந்தி



செய்தி தொகுப்பாளராக தனது திரை வாழ்க்கையை ஆரம்பித்த பிரியா பவானி சங்கர் அதன்பின்பு சின்னத்திரை தொடர்களில் கதாநாயகியாக நடித்தார். இதைத்தொடர்ந்து வெள்ளித்திரையில் மேயாதமான் படத்தில் வாய்ப்பு கிடைக்க, தனது சிறந்த நடிப்பின் மூலம் அடுத்தடுத்த படங்களில் கமிட்டானார்.

தற்போது பிரியா பவானி சங்கர் பல படங்களில் நடித்து பிசியான நடிகையாக வலம் வருகிறார். இந்நிலையில் தன்னுடைய கல்லூரி காலத்திலிருந்து உடன் படித்த ராஜ்வேல் என்பவரை பிரியா பல வருடமாக காதலித்து வந்தார். இதைப் பலமுறை பிரியா பவானி ஷங்கர் தனது சோசியல் மீடியாவில் உறுதி செய்துள்ளார்.

மேலும் நாங்கள் யாருக்காகவும் எங்கள் காதலை விட்டுக் கொடுக்க மாட்டோம், நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் இருக்கிறோம் என்றும் பலமுறை பிரியா பவானி ஷங்கர் கூறியுள்ளார். இந்நிலையில் இவர்களுடைய காதல் பிரேக் அப் ஆகி விட்டதாக சமூக வலைதளங்களில் ஒரு செய்தி வெளியானது.

பிரியா பவானி சங்கர், ஹரிஷ் கல்யாண் உடன் இணைந்து ஓமன பெண்ணே படத்தில் நடித்திருந்தார். இதனால் இவர்கள் இருவரும் காதலித்து வருவதாகவும் அதனால் பிரியா முன்னாள் காதலர் இவரை விட்டுப் பிரிந்து விட்டதாகவும் சமூக வலைத்தளங்களில் வதந்தி பரவிவந்தது. மேலும் இதைப் பற்றி பிரியா பவானி ஷங்கரும் எந்த பதிவையும் வெளியிடவில்லை.

இந்நிலையில் இந்த வதந்திக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தன் காதலனுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை சமூகவலைதளத்தில் ப்ரியா பவானி ஷங்கர் பதிவிட்டுள்ளார். இதனால் இவர்கள் இருவரும் இன்றுவரை காதல் செய்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது ரசிகர்களுக்கு தெரியவந்துள்ளது.

யாரோ கிளப்பிவிட்ட வதந்தியால் காட்டுத்தீயாக பரவி வந்த இந்த வதந்திக்கு தனது ஒற்றை பதிவு மூலம் பதிலடி கொடுத்துள்ளார் பிரியா பவானி சங்கர். தற்போது பத்து தல, குருதி ஆட்டம், திருச்சிற்றம்பலம், பொம்மை, ருத்ரன் போன்ற படங்களில் பிரியா பவானி சங்கர் நடித்து வருகிறார்.

# இலங்கையின் தேசிய கீதத்தை தமிழில் மொழிபெயர்த்த யாழ். வட்டுக்கோட்டை புலவர்

இலங்கையின் தேசியகீதம் சிங்கள மொழியில் ஆனந்த சமரக்கோன் என்பவரால் 1940 ஆம் ஆண்டளவில் இயற்றப்பட்டது. இதனை பண்டிதர் நல்லதம்பிப் புலவர் சிறீ லங்கா தாயே என்ற தலைப்பில் 1950 ஆம் ஆண்டில் தமிழில் மொழிபெயர்த்தார். அன்றிலிருந்து இன்றுவரை இவர் தமிழில் மொழிபெயர்த்த தேசிய கீதம் இலங்கையில் தமிழ் பேசும் பிரதேசங்களில் பாடப்பட்டு வருகின்றது. கல்விப் பொதுத் தராதர தமிழ் பாடப்புத்தகத்தில் தேசிய கீதம் தமிழில் 1975 இல் பதியப்பட்டுள்ளது. அதே ஆண்டில் கல்விப் பொதுத் தராதர பரீட்சைக்கான கர்நாடக சங்கீத பாடத்தின்படி தேசிய கீதம் தமிழில் கற்பிக்கப்படத் தொடங்கியது.



யாழ்ப்பாண மாவட்டத்தில் வட்டுக்கோட்டையில் சிந்துபுரம் என்ற கிராமத்தில் முருகுப்பிள்ளைக்கும் தங்கம்மையாருக்கும் 1896ம் ஆண்டு மே மாதம் 8ம் திகதி பிறந்தவர்தான் நல்லதம்பி புலவர் ஆவார். இவர் கொழும்பு ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கல்வி கற்றபோது அங்கு தமிழாசிரியராக இருந்த தென்கோவை பண்டிதர் ச. கந்தையாபிள்ளையிடம் இலக்கிய இலக்கணங்களை கற்றார். பின்னர் கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் 28 வருடங்கள் தமிழாசிரியராகப் பணியாற்றினார். அக் காலகட்டத்தில் இலங்கை முஸ்லிம் மக்கள் மத்தியில் தமிழ் ஆர்வத்தை வளர்த்தார். இஸ்லாமிய இலக்கியங்களைப் பற்றியும் அவற்றின் தத்துவங்களைப் பற்றியும் அறிந்த தமிழ் மகன்தான் பண்டிதர் நல்லதம்பிப் புலவர். மேலும் ஆங்கில நாகரிகத்தில் அக்காலத்தில் திளைத்த கொழும்புத் தமிழர்களிடையே தமிழ் உணர்ச்சியை ஊட்டினார். இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் சில ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

இலங்கை சுதந்திரவிழாவை முன்னிட்டு நடைபெற்ற கவிதைப்போட்டி ஒன்றில் பண்டிதர் நல்லதம்பிப் புலவர் அவர்களின் 'மணித்தாய் நாடும் மரதனோட்டமும்" என்ற நூல் முதற்பரிசு பெற்றமை அவரது புகழை உயர்த்தியது.

சிறுவருக்கேற்ற இனிய எளிய பாடல்கள் இயற்றுவதில் ஆற்றல் வாய்ந்தவர் பண்டிதர் நல்லதம்பிப் புலவர். தாகூர் காணும் தோட்டி, ஆய்அரண்டுனும் ஓடைகிழாரும், பாவலன் பாரதி, சீதனச்சிந்து, பொன்பெற்ற துறவி ஆகிய அவரது கவிதைகள் பிரசித்தமானவை. சமுதாய ஊழல்களைக் கண்டித்தும் பல பாடல்களை இவர் பாடியுள்ளார். பண்டிதர் நல்லதம்பிப் புலவர் எழுதிய 'ஈழவாசக" வாசிப்புப் புத்தகங்களும் மொழிப்பயிற்சி நூல்களும் உயர்தரமானவை. இவருடைய ஆற்றலை தென்னிந்தியாவும் இலங்கையும் போற்றிக் கௌரவித்தது. 1940 ஆம் ஆண்டில் தமிழ்நாடு திருநெல்வேலி தமிழ்ச் சங்கத்தால் 'முதுதமிழ்ப் புலவர்" எனும் பட்டம் வழங்கி இவரைக் கௌரவித்தனர்.

முதுதமிழ்ப் புலவர் பண்டிதர் நல்லதம்பிப் புலவர் பரந்த நோக்கமும் உயர்ந்த இலட்சியமும் கொண்டு எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். எல்லோருடனும் இனிமையாகப் பழகக் கூடியவர். நன்றி மறவாத நல்லியல்புடையவர். அடக்கமானவர். முதுதமிழ்ப் புலவர் பண்டிதர் நல்லதம்பிப் புலவர் 1951 ஆம் ஆண்டு இறந்தார். சொற்களைக் கொண்டு இக்காலக் கவிதை உலகைப் பார்க்கும் போது முதுதமிழ்ப் புலவர் பண்டிதர் நல்லதம்பிப் புலவரின் நினைவு தமிழ் பேசும் மக்கள் இதயங்களில் மறக்கமுடியாத ஒருவர்.



கலாபூஷணம்
**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**

3ஆம் பக்கத் தொடர்

## விவேகானந்தனூர்...

எழுத்துக்களின் வாய்மையினை வாழ்க்கையில் கொண்டவர்களாக எல்லா எழுத்தாளர்களும் இருந்துவிடமாட்டார்கள். பலருடைய படைப்புகளுக்கும் அவர்களுடைய நடத்தைகளுக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. பொதுநலன் பற்றி எழுதி விருதுகளை வாங்கி வீட்டில் அடுக்கிக் கொண்டு கழுவித் துடைத்த சுயநலமிகளை நான் சந்தித்திருக்கிறேன்.

● படைப்பைப் போலவே படைப்பாளிகளும் இருப்பார்கள் என்றெண்ணி அது பொய்த்துப்போன சம்பவங்களை நீங்கள் சந்தித்த சந்தர்ப்பம் பற்றி?

நிச்சயமாக. சாகித்திய விருது பெற்ற ஒரு எழுத்தாளரின் நாவலைப் படித்துவிட்டு அவருடன் நேசம் கொண்டிருந்தேன். ஒருநாள் குறித்த நேசரை அணுகி எனது சிறுகதையொன்றைப் பற்றிக் கூறிவிட்டு 'இவ்வாறு சொல்லிச் சென்றால் நன்றாக இருக்குமா?' என்று சிநேக பூர்வமான ஆலோசனையொன்றை கேட்டேன். அதற்கவர் 'நீங்கள் எழுதக் கூடியவர் தானே. எழுதிப் பல பரிசுகள் வென்றிருக்கிறீர்கள். நீங்கள் எழுதினால் அது சரியாகத்தான் இருக்கும்..' என்று முகத்தில் அறைந்தாற்போல் சொல்லிவிட்டார். 'நான் போட்டியில் பங்கு பற்றியிருந்தால் உங்களது சிறுகதைக்கு பரிசு கிடைத்திருக்காது' என்று அந்த 'விருதெழுத்தாளர்' முன்பொருநாள் கூறியது அப்போதுதான் என் ஞாபகத்திற்கு வந்தது. அன்று தொடக்கம் அவரிடம் எந்த ஆலோசனைகளையும் நான் கேட்பதில்லை. ஆனாலும் அவரது படைப்புகளை நான் வளர்வதற்காக இன்னும் அதிகமாக விரும்பி வாசிக்கிறேன்.

● இன்றைய இலத்திரனியல் ஊடகங்களின் வளர்ச்சி பற்றி கூற முடியுமா?

இலத்திரனியல் ஊடகங்களைப் பொறுத்தமட்டில் தகவல்களை மிக வேகமாக மக்களுக்கு கொண்டு போய்ச் சேர்க்கின்றன. ஆனபோதிலும் அவற்றின் நம்பகத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் என்பன கேள்விக்குறியாகவே நோக்கப்படுகிறது.

● உங்களது எழுத்துக்களின் நோக்கம் என்ன? உங்களது படைப்புகளுக்கு அல்லது உங்களுக்கு கிடைத்த ஆதரவுகள், வரவேற்புகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

படைப்பிலக்கியம் என்பது பிரசாரம் அல்ல. வெறும் பொழுது போக்குப் பணியுமல்ல. பெயருக்கும் புகழுக்குமான வேலையும் அல்ல. மனிதர்களின் சிந்தனைகள், செயற்பாடுகள், அதில் உள்ள செருகல்கள், விரிசல்கள், உணர்ச்சிக் கொந்தளிப்புகள், குமுறல்கள், உள் மன ஏக்கங்கள் என அனைத்தையும் ஊடுருவி நோக்கி கலை நயத்துடன் படைப்பதே படைப்பு ஆகும்.

விழிப்புணர்வு மற்றும் ஆவணப்படுத்தலுக்கான படைப்புகளுக்கு அப்பால் சில படைப்பாளிகள் சந்தை நிலவரங்களை அறிந்து சரக்குகளை தேடி எழுதும் விருதுக்கான படைப்பாளிகளாக எழுத்து வியாபாரம் செய்கிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது. என்னைப் பொறுத்தமட்டில் தற்போது வரை விழிப்புணர்வு மற்றும் ஆவணமாக்களை நோக்காகக் கொண்டே எழுதி வருகிறேன். அந்தவகையில் ஆதரவுகளும் வரவேற்புகளும் நிறையவே கிடைக்கின்றன. தவிர இதுவரை சிறுகதைகளுக்காக பல பரிசுகளும் சான்றிதழ்களும் கிடைத்துள்ளன. இவைதவிர எனது நான்கு கவிதைத் தொகுதிகளும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவி ஒருவரால், 2017 ஆம் வருடத்தில் அரங்காற்றுகை ஆய்வு// இற்கு உட்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

● உங்களது படைப்புகளால் சமூகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்துவிடும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

என்னால் நாட்டின் தேசிய பத்திரிகைகளுக்கு எழுதப்பட்ட கட்டுரைப் படைப்புகள் சிலவற்றின் மூலம் சில உடனடி மாற்றங்கள் நிகழ்ந்ததை அவதானித்து ஆச்சரியமடைந்திருக்கிறேன். அந்தவகையில் சில வருடங்களுக்கு முன்பு எவராலுமே கண்டுகொள்ளப்படாதிருந்த யாழ். குடாநாட்டை மையப்படுத்திய அரச சேவை நிறுவனம் ஒன்றின் ஒட்டுமொத்த குறைபாடுகளையும் ஊடுருவி நோக்கி, அவற்றை கோடிட்டுக் காட்டி கட்டுரை ஒன்றை வரைந்து பல பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்தேன். அந்தக் கட்டுரை அடுத்த வாரம் வெளிவந்த ஆறு பத்திரிகைகளிலும் அதுவும் விசேடமாக ஒரே நாளில் முழுப் பக்கக் கட்டுரையாக பிரசுரிக்கப்பட்டது. ஆகையினால், குறித்த நிறுவனம் தாமதிக்காமல் குறிப்பிடத்தக்களவு குறைநிரப்புப் பணிகளை மேற்கொண்டிருந்தமையை ஒரு மாற்றமாகவே பார்க்க முடிகின்றது. இது எனக்கு மிகுந்த மனநிறைவையும் மகிழ்வையும் ஏற்படுத்தியது. இத்தகைய அனுபவங்கள் மறக்கவியலாதவை.

● உங்களது எதிர்கால எழுத்து முயற்சிகள் பற்றி குறிப்பிடுங்கள்?

கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம், குறுநாவல் என்பனவற்றைக் கடந்து எதிர்காலத்தில் காத்திரமான நாவல்களைப் படைத்து எனது ஆவணப்படுத்தலை அகலிக்க வேண்டுமென விருப்பங்கொள்கிறேன்.

● இளம் படைப்பாளிகளுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

இலத்திரனியல் நூல்களை வாசிப்பதிலும் பார்க்க முடிந்தவரை அச்சு நூல்களை வாசிப்போம்;.. சேமிப்போம்;. பகிர்ந்து கொள்வோம். பிரதேசத்தில் இடம்பெறும் நூல் வெளியீடுகளுக்கு அழையா விருந்தாளியாக என்றாலும் சென்று கலந்து கொண்டு, பணம் செலுத்தி புத்தகங்களைப் பெற்றுக் கொள்வோம்.



**பன்னீர்செல்வம் புனிதப்ரியா**
**பி.பவ்யேஷ்**

# விண்வெளியில் இறைச்சி உற்பத்தி வெற்றி பெறுமா புதிய பரிசோதனை



ஜெஃப் பெசோஸ், ஈலோன் மஸ்க் இருவருமே விண்வெளியை காலனித்துவப் படுத்த விரும்புகிறார்கள். நாசாவும் செவ்வாய் கிரகத்தின் தூசு நிறைந்த நிலப்பரப்பில் மக்களைக் குடியமர்த்த முயல்கிறது.

ஆனால், பூமியின் இயற்கைக் கோளான நிலவிலோ அல்லது மற்ற கிரகங்களிலோ மனிதர்கள் குடியேறி சமூகங்களை அமைக்க விரும்பினால், அங்கு எதைச் சாப்பிடுவார்கள்?

விண்வெளியில் தாவரங்கள் செழிக்க முடியுமா என்பது குறித்து ஏராளமான சோதனைகள் நடத்தப் பட்டுள்ளன.

அவற்றோடு, தற்போது கடந்த வாரத்தில் விண்வெளியில் இறைச்சி செல்கள் வளருமா என்ற புதிய சோதனை தொடங்கியுள்ளது.

இதுவொரு சாத்தியமான ஊட்டச் சத்து மூலத்தை பரிசோதனை செய்வதற்கான ஒரு சிறிய முன்னோடி முயற்சியாகும். பின்னாளில் விண்வெளி பயணத்தின் எதிர்காலத் திற்கு, இதுவே பெரிய பாய்ச்சலாகவும் அமையலாம் என்று இந்தப் பரிசோதனைகளைச் செய்பவர்கள் நம்புகின்றனர்.

உயிரணுக்களில் இருந்து இறைச்சியை வளர்ப்பதில் நிபுணத்துவம் பெற்ற இஸ்ரேலிய நிறுவனமான அலெஃப் ஃபார்ம்ஸ் நிறுவனத்தின் கனவு இந்தப் பரிசோதனை. அதோடு, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வருகை தரும் முதல் தனியார் விண்வெளி வீரர்கள் குழுவால் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.35,000 கி.மீ. வேகத்தில் பூமியை நோக்கி வரும் "ராட்சத யானை" வால்நட்சத்திரம்சிறுகோள் மோதிய இடத்தில் டைனோசரின் புதைபடிவம் ஆச்சரிய தகவல்கள்" மொத்தமாக 4,400 கோடி டாலர் தருகிறேன்" விலகி ஓடிய ட்விட்டரை ஈலோன் மஸ்க் கவர்ந்து இழுத்த கதை



விண்வெளி வீரர்களைச் சார்ந்திருக்கும் அளவுக்கு இந்த பரிசோதனை முறை மிகவும் நிலையானதாக இல்லையென்று இதுகுறித்து சந்தேகமுடையவர்கள் கூறுகின்றனர். மேலும், பூமியில் இருந்து இறைச்சியைக் கொண்டு செல்வதைவிட எளிமையான வேலையாக விண்வெளி இறைச்சி வளர்ப்பு இருக்காது என்றும் கருதுகின்றனர்.உயிரணுக்களில் இருந்து இறைச்சியை வளர்ப்பது எப்படி?

உயிரணுக்களில் இருந்து இறைச்சியை வளர்ப்பது, பூமியில் கூட எளிதானதாக இல்லை. அலெஃப் ஃபார்ம்ஸ் "பண்படுத்தப்பட்ட இறைச்சியை" தயாரிக்க முயலும் பல நிறுவனங்களில் ஒன்றாகும். அதோடு, விண்வெளியில் அதைச் செய்ய முயலும் முதல் நிறுவனமாகவும் அது உள்ளது.

இந்த நிறுவனம் "ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட" இறைச்சி என்ற வார்த்தையைப் பயன்படுத்த விரும்பவில்லை. ஆனால், உண்மையில் இந்தச் செயல்முறை ஒரு பாரம்பரிய பண்ணையைப் போலவும் இல்லை.

ஓர் உயிரினத்தின் உயிரணுக்களுக்கு அவை வளரத் தேவையான அமினோ அமிலங்கள், கார்போஹைட்ரேட்டுகள் போன்ற பொருட்கள் அளிக்கப்படுகின்றன. அதன்மூலம், தசை திசுக்கள் உருவாகும் அளவுக்கு அந்த உயிரணுக்கள் பெருகி, இறுதில் சாப்பிடக்கூடிய இறைச்சியாக மாறும். இந்தச் செயல்முறை "சாகுபடி" அல்லது "பெருக்கம்" என அழைக்கப் படுகிறது.

இறைச்சி தொட்டிகளில் வளர்க்கப் படுகிறது. இதுவொரு பண்ணை என்பதைவிட மதுபான ஆலையில் இருப்பதைப் போலவே தோற்றமளிக்கும். இறைச்சிக்காக வளர்க்கப்படும் உயிரினங்களின் வாழ்க்கை சுழற்சியான, பிறப்பு, வாழ்க்கை மற்றும் உணவுக்காக கொலை செய்யப்படுதல் போன்றவை இங்கு இருக்காது.

அலெஃப் ஃபார்ம்ஸில் வளர்க்கப் பட்ட இறைச்சி

இந்தச் செயல்முறை சுற்றுச்சூழலுக்கு சாதகமான தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் மீத்தேன் போன்றவற்றின் உமிழ்வை வெகுவாகக் குறைப்பதாகவும் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.விண்வெளியில் ஏன் இறைச்சியை வளர்க்க வேண்டும்?

அலெஃப் ஃபார்ம்ஸின் விண்வெளித் திட்டத்திற்கான தலைவரான ஸ்விகா தாமரி, பூஜ்ஜிய ஈர்ப்பு விசையில் இந்தச் செயல்முறையை அப்படியே செய்ய முடியுமா என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியாது என்கிறார்.

"பூஜ்ஜிய புவியீர்ப்பு விசை சூழலில் உடலியல் மற்றும் உயிரியல் தன்மைகள் மிகவும் வித்தியாசமாகச் செயல்படுகின்றன என்பதை முந்தைய பல அறிவியல் ஆய்வுகள் மூலம் அறிந்துள்ளோம். எனவே, இறைச்சியை வளர்ப்பதற்கான இந்தச் செயல்முறைகள் உண்மையில் விண்வெளியில் சாத்தியமாகுமா என்பது எங்களுக்குத் தெரியாது. யாருக்குமே தெரியாது," என்று அவர் கூறுகிறார்.

ஏப்ரல் 8ஆம் தேதியன்று ஸ்பேஸ் எக்ஸ் ராக்கெட்டில் நான்கு பேர் விண்வெளிக்குச் சென்றபோது, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கான முதல் தனியார் பயணத்தில், விலங்குகளின் உயிரணுக்களைச் சுமந்து செல்லும் ஒரு சிறிய ஷூ பாக்ஸ் அளவிலான கொள்கலன்களையும் அவை வளர்வதற்குத் தேவையானவற்றையும் கொண்டு சென்றனர்.ஜேம்ஸ் வெப்: உலகின் மிகப்பெரிய விண்வெளி தொலைநோக்கி விண்ணில் ஏவப்பட்டதுசொந்த ராக்கெட்டில் விண்வெளி சென்று திரும்பிய பிரிட்டன் வணிகர் ரிச்சர்ட் பிரான்சன் நாசா வெளியிட்ட படத்தில் இருக்கும் 'கடவுளின் கை' உண்மை என்ன? #factcheck

லேரி கான்னர், எய்டன் ஸ்டிப்பே மற்றும் மார்க் பாத்தி ஆகியோர் முன்னாள் விண்வெளி வீரர் மைக்கேல் லோபஸ்அலெக்ரியாவுடன் இணைந்து ப்ளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து விண்வெளிக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் திரும்பி வந்தபிறகு, உயிரணுக்கள் பகுப்பாய்வு செய்யப்படும்.நடைமுறை சிக்கல்கள்

இந்த பரிசோதனை வெற்றியடைந்தாலும், விண்வெளியில் இறைச்சியை வளர்க்க முடியும் என்று நிரூபிக்கப்

# தமிழ்நாட்டில் தொடரும் முதியோர் கொலைகள்

திருநெல்வேலியில் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இரண்டு பெண்கள் தங்களது பாட்டியை பெட்ரோல் ஊற்றி கொளுத்தியதாக வெளியான செய்தி பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

சேலத்தில் முதிய தம்பதியை அவர்களின் பேரன் கோபத்தில் வீட்டில் வைத்துப் பூட்டி தீ வைத்து கொளுத்தியதாக வெளியான புகார் தொடர்பாகவும், வெளிநாட்டில் இருந்து திரும்பிய முதிய தம்பதியை அவர்களின் கார் ஓட்டுநர் பணம், நகைக்காக திட்டமிட்டு கொலை செய்து புதைத்ததாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாகவும் புலன்விசாரணை நடந்துவருகிறது.

தமிழ்நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்து முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், முதியவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். முதியவர்களின்பாதுகாப்பு விவகாரங்களில் அரசு தீவிரமாக செயல்படவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. முதியோருக்கு சட்டரீதியாக கிடைக்கவேண்டிய நலத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறும் அரசுத் தரப்பு, விரைவில் முதியோர் பாதுகாப்பு கொள்கை இறுதி செய்யப்பட்டு முதியோருக்கான சிறப்புத் திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று கூறுகிறது.

**கௌரவம் பெற்றுத்தந்த முதியோர் உதவித்தொகை**

கடலூரைச் சேர்ந்த 85 வயது கன்னியம்மாள் கடந்த இரண்டு ஆண்டுகளாக முதியோர் உதவித்தொகை பெற்றுவருகிறார். அரசு அளிக்கும் ரூ.1,000 உதவித்தொகை தனக்கு குடும்பத்தில் ஒரு கௌரவத்தை தருவதாக உணர்கிறார்.

''என்னுடைய மருந்துச் செலவை நானே பார்த்துக்கொள்ள முடியும். மகன்களிடம் கேட்கத்தேவையில்லை. என் பேர குழந்தைகளுக்கு தின்பண்டங்கள் வாங்கித் தருவேன். என்னிடம் காசு இருப்பது எனக்கு மரியாதையைத் தருகிறது. உதவித்தொகை கிடைக்காத ஏழை முதியவர்களின் நிலை திண்டாட்டம்தான்.

பல குடும்பங்களில் உதவித்தொகை இருப்பதால்தான் வயதானவர்களை வீட்டில் வைத்திருக்கிறார்கள். படுக்கையில் இருக்கும் முதியவர்களின் நிலை மிகவும் மோசம். ஒரு சமயம் வரை குடும்பத்தினர் கவனிக்கிறார்கள், பின்னர் கவனிக்கமுடியவில்லை என ஒதுக்கிவிடுகிறார்கள், தொலைதூர கோயில்களில் விட்டுவிடுகிறார்கள் அல்லது கொலைகூட செய்கிறார்கள்,'' என்கிறார் கன்னியம்மாள்.

கன்னியம்மாளை போல ஒரு சில முதியவர்களுக்கு கிடைக்கும் உதவித்தொகை அனைத்து முதியவர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்ற கோரிக்கை நெடுநாட்களாக இருந்து வருகிறது. பணம் இல்லாத முதியவர்கள், உடல் நலனும் குன்றிப்போனால் அவர்களின் நிலை மோசமாகிவிடுகிறது. வெளிநாட்டு நிறுவனங்கள் வரும்வரை காத்திருப்போமா?

கிராமம் மற்றும் நகர்ப்புறம் என்ற வேறுபாடில்லாமல், முதியோரை கவனிப்பது என்பது குடும்ப பிரச்சனையாக இல்லாமல் சமூகப் பிரச்சனையாக உருமாறி நெடுநாட்கள் ஆகிவிட்டது என்கிறார் ஹெல்ப் ஏஜ் தொண்டுநிறுவனத்தைச் சேர்ந்த முதியோர் நல ஆர்வலர் இளங்கோ ராஜரத்தினம்.

''பணம் படைத்த குடும்பங்கள் தனியார் நிறுவனங்கள் மூலமாக உதவியாளர்களை வேலைக்கு அமர்த்துகிறார்கள். சில இடங்களில் உதவியாளர்களாக இருப்பவர்களே முதியவர்களை மோசமாக நடத்தும் சம்பவங்களும் நடக்கின்றன. இதைவிட, ஏழை குடும்பங்களில் முதியவர்களை கவனித்துக்கொள்ளும் பொறுப்பு பெரும்பாலும்பெண்கள் தலையில் சுமத்தப்படுகிறது,''என்கிறார்.


**பெண்சிசுவுக்கு கள்ளிப்பால்; பெற்றோருக்கு பஞ்சுப்பால்**


தமிழ்நாடு முழுவதும் நோய்வாய்ப்பட்ட முதியவர்கள் அரசு மருத்துவமனைகளில் வந்து சேர்ந்தால் என்ன ஆகும்? என்று யோசித்துப் பாருங்கள் என்கிறார் இளங்கோ. ''அரசாங்கத்தின் வேலையை ஒவ்வொரு குடும்பங்களும் செய்துவருகிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

வளர்ந்த நாடுகளில் அரசாங்கம் முதியவர்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்கிறது. குறைந்தபட்சம் நம் பகுதிகளில், முதியவர்களைப் பார்த்துக்கொள்ளும் உதவியாளர் அல்லது குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்படும் உளச்சல்களை போக்க முன்னெடுப்புகளை செய்யவேண்டிய நேரத்தில் இருக்கிறோம். இதனைத்தான் இந்த கொலை சம்பவங்கள் உணர்த்துகின்றன. முதியவர்களின் உடல் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் என்பதற்கான எச்சரிக்கை மணிதான் இவை,''என்கிறார் இளங்கோ.


## நிறம் தீட்டுங்கள்







## 08 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



### Did You Know

**Banana**

- I am a Banana
- I am yellow and soft
- I am sweet and healthy
- India is the leading producer of bananas!



# கடற்றொழிலை தனது வாழ்க்கைத் தொழிலாக தெரிவு செய்த முகம்மட்

**தீவுக்குள் தீவாக விளங்கும் ஊரே கிண்ணியாவாகும். நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதால் அது தீவாகவே என்றும் காட்சி தருகிறது.**

அந்த ஊரின் பிரதானம் கடல் தொழிலாகும். அது அங்கு வாழும் மக்களிடையே பெரும் செல்வாக்குச் செழுத்துகின்றது. கடலில் உள்ள மீன்களை நம்பித்தான் பலரது வாழ்வு நகர்கிறது.

மீன் பிடிப்பதில் பழைய முறையும் நவீன முறையும் பயன் படுத்தி வருகின்றனர்.

தோணி வைத்திருப்பவர்கள் பெரும் பாலும் பழைய முறைப்படியே மீன் பிடித்து வருகிறார்கள்.

நவீன மீன் பிடி முறையானது ஆழமான கடலில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு மீன்கள் பிடிக்கப் படுவதாகும் .

கிண்ணியா மண்ணில் இரண்டு வகைகள் பயன்படுத்திய போதும் தோணி,கரைவலை,தூண்டில், வலைவீசி பிடித்தல் மற்றும் அத்தாங்கு என்பன போன்ற பாரம்பரிய முறையில் மீனவர்கள் மீன் பிடித்து வருகிறார்கள்.


அவ்வாறு பிடித்து வரும் மீன்களை வாடிக்கு மொத்தமாக வழங்குவார்கள் சிலர் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வார்கள்.

அவ்வாறான கடல் தொழில் செய்யும் கட்டையாறு கிண்ணியா 02 ஐச் சேர்ந்த ஏ.ஜே. முகம்மட் என்பவரை நான் ரொம்ப பிஸி பகுதிக்காக சந்தித்தபோது

நான் ரொம்ப பிஸி...

**கேள்வி:** கடல் தொழிலை எப்போதிலிருந்து செய்து வருகின்றீர் ?

சிறு வயதிலிருந்து இத்தொழிலை செய்கிறேன். நான் பிறந்து வளர்ந்தது இந்த கடலருகேதான். ஆரம்பத்தில் கடல் மண்ணில் விளையாடியே எனது காலப் பொழுதுகள் கழிந்தன.



**கேள்வி:** இந்த மீன் பிடிக்கும் முறைகளை யாரிடமிருந்து கற்றுக் கொண்டீர்?


தந்தைதான் "எனது குரு" பல விடயங்களை சொல்லித்தந்தார்கள். இன்னும் சிலவற்றை அவரைப் பார்த்துக் கற்றேன். முக்கியமாக கடலில் நீச்சல் பழக்கினார்கள் கடல் தொழில் செய்பவர்கள் நீச்சல் தெரியாமல் இருப்பது உடலுக்கு ஆபத்தானது என்பதால் நீச்சல் பழக்குவதில் அதிகம் கவனம் செலுத்தினார்கள்.





**கேள்வி:** இந்த மீன் பிடி தொழிலால் உங்களது வருமானம் எப்படி?

அன்றன்று மீன் பிடித்து அதை விற்று வரும் வருவாயில் வாழ்வு கழிகிறது. ஐந்நூறு ரூபாவுக்கும் குறைவாகவே வலை வீசி மீன் பிடிப்பேன். சில நேரங்களில் வீட்டு கறிக்கு மாத்திரம் படும். அதுவும் இல்லாத நேரங்களும் உண்டு.





**கேள்வி:** மீன் பிடிக்க முடியாத சந்தர்ப்பங்களில் வருமானத்திற்கு என்ன செய்வீர்கள்?

கற்காய், மட்டி, ஏறல் ஆக்கு போன்ற கடலில் உள்ள உண்ணக் கூடிய உயிரினங்களை எடுத்து விற்றல் இதற்கு மக்களிடையே பெரும் செல்வாக்கு உள்ளது சுவையாக சாப்பிடக் கூடியது கடலில் இருந்து பெறுவதற்கு நீண்ட நேரம் எடுக்கும்.

கிண்ணியாவுக்கு வரும் வெளியூர் மக்கள் இதனை விரும்பி வாங்கிச் செல்வார்கள்.

**கேள்வி:** உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?

எனக்கு ஆறு பிள்ளைகள் உண்டு. நான்கு பெண் பிள்ளைகளும் இரண்டு சிறு ஆண் பிள்ளையுகளும் அதில் ஏற்கனேவ மகனொருவர் சின்ன வயதில் கடலில் தவறி விழுந்து மரணம் எய்தி விட்டார். அது எனக்கு பெரிய இழப்பாகும். கதைக்கும் போதும் அவரை நினைக்கும் போதும் எனக்குள் அழுகை வரும்.

**கேள்வி:** நான்கு பேரும் படிக்கின்றனரா?

நான்கு பேரும் படிக்கின்றனர். அவர்களின் படிப்புச் செலவுக்கு எனது வருவாய் காணாமல் உள்ளது.

அண்மையில் எனது மனைவியையும் இழந்து விட்டேன். இப்போது மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து வருகிறேன் பெண் பிள்ளைகள் என்ற படியால் அவர்களுக்கு பல்வேறு தேவைகள் இருக்கின்றன அவைகளை நிறைவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளேன்.

**கேள்வி:** வேறு உதவிகள் உங்களுக்கு கிடைப்பதுண்டா?

சமூர்த்தியால் ஒவ்வொரு மாதமும் தரப்படுகின்ற இரண்டாயிரம் ரூபாய் மாத்திரம் கிடைக்கும் வேறு உதவிகள் ஒன்றுமில்லை.

**கேள்வி:** வேறேதும் தொழில் செய்ய முயற்சி செய்யலாமே?

வேறு தொழில் செய்ய முதலீடு வேண்டும். என்னிடம் அந்தளவிற்கு பணமுமில்லை சேமிப்பும் இல்லை. கிடைக்கும் வருமானம் அன்றைய சாப்பாட்டுக்கே ஓரளவு போதுமானதாக உள்ளது. எனவேதான் வேறொரு தொழிலை நினைத்தும் பார்க்க முடியல.

**கேள்வி:** இன்றைய காலத்தில் குறைந்த வருமானத்தில் வாழ்வை நடத்துவது கஷ்டமாக தெரியலையா?

ஆம்! பெரும் கஷ்டத்தில் உள்ளேன். நாளுக்கு நாள் புதிய விலைகள் பொருட்களை வாங்கிட முடியல சில விடயங்களை சுருக்கிக் கொள்ளும் நிலைக்கு ஆளாகியுள்ளேன். நாட்டின் நிலை சீராக வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

பிள்ளைகளை வாழவைப்பதற்கு உதவியாக அமையும் அப்படி உதவும் உள்ளங்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக! அவரது தொலைபேசி இல : ஏ.ஜே.முகமட் 0773751330

**நேர்காணல்**
**ஏ எம் கஸ்புள்ளா**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shamsfahim@gmail.com

# எத்தனை சவால்களை எதிர்கொண்டாலும் என்னுடைய முயற்சியும் பயிற்சியும் ஒருபோதும் ஓயாது






**நான் மொஹமட் சியாம். நான் கல்வி கற்றது அல் அஸார் முஸ்லிம் வித்தியாலயத்தில். என்னுடைய வீட்டில் மொத்தம் ஆறு பேர். நான் தற்போது இலங்கை பொலிஸ் பிரிவில் வேலை செய்கின்றேன்.**

அதுமட்டுமல்லாது இலங்கை பொலிஸ் அணியின் கிரிகெட் வீரராகவும் இருக்கின்றேன்.

என்னுடைய கிரிகெட் ஊடரடி ST.Anthony's Cricket ஊடரடி. நான் வலது கை வேக பந்து வீச்சாளர். துடுப்பாட்ட வரிசையில் 5 வா னழறபெ டியவளஅயபெ ஆக விளையாடுகின்றேன்.

● **உங்களுக்கு கிரிகெட் விளையாட்டில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

என்னுடைய குடும்பத்தில் எல்லோரும் கிரிகெட் விளையாடுவது வழக்கம். நான் வீட்டில் நான்காவது பையன். என்னுடைய சகோதரர்கள் மூவரும் சிறு வயதிலிருந்தே கிரிகெட் விளையாடுவது வழக்கம். கிரிகெட் மட்டுமல்ல வொலிபோல் காற்பந்து என விளையாடுவதுதான். காலம் செல்ல செல்ல எனக்கு கிரிகெட் மீது தீவிர ஆசை ஏற்பட்டு விட்டது. அதுமட்டுமல்லாமல் நானும் இலங்கை

அணி கிரிகெட் வீரனாக வர வேண்டும் என்ற விதை விருட்சமாக வளர்ந்து விட்டது. எனக்குள் இவ்வாறான ஆர்வத்தை தூண்டியவர் என்னுடைய அண்ணா என்ற தான் கூற வேண்டும்.

● **கிரிகெட் மைதானத்தில் முதல் அனுபவம் எவ்வாறு இருந்தது?**

பாடசாலையில் தான் முதல் அனுபவம் கிடைத்தது. நான் பாடசாலையில் இல்ல

விளையாட்டு போட்டி மற்றும் வலய மட்டப் போட்டிகளில் அதிகமாக நான் பங்கேற்பது கிரிகெட் போட்டிகளில்தான் என்று தான் சொல்ல வேண்டும். ஆரம்பத்தில் நான் மென் பந்து கிரிகெட் தான் பெரும்பாலும் விளையாடினேன். நிறைய பயிற்சிகளை எடுத்தேன். ஆரம்பத்தில் ஒழுங்கான மட்டை மற்றும் பந்துகள் கூட இருக்கவில்லை. நான் என்னுடைய கிரிகெட் வாழ்க்கையை ஆரம்பித்தது தென்னை மட்டையுடனும் பலகைத் துண்டுகளையும் வைத்தும் தான். டெனிஸ் பந்து இல்லாமல் பிளாஸ்டிக்

பந்துகளை வைத்து ஆரம்பத்தில் பயிற்சிகளை பெற்றேன். என்னுடைய கிரிகெட் வாழ்க்கையில் முதல் அனுபவம் என்று சொல்லுவதை விட நான் விளையாடும் அனைத்து போட்டிகளும் எனக்கு நிறைய விடயங்களை கற்றுக் கொடுத்து கொண்டு இருக்கின்றது என்றே தான் சொல்ல வேண்டும். ஆகவே ஆரம்பம் முதல் தற்போது வரை கிரிகெட் மைதானத்தில் கிடைப்பது அனைத்துமே எனக்கு வித்தியாசமான அனுபவங்களாகவே இருக்கின்றன.

● **கிரிகெட் வீரராக வர வேண்டும் என்ற கனவோடு பயணிக்கும் இளம் வீரர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

இப்போதிலிருந்தே பயற்சியும் முயற்சியும் எடுக்க வேண்டும். ஆரம்ப காலங்களில் அதிகமான போட்டிகள் இருக்கவில்லை. அப்படி இருந்தும் கூட தேசிய கிரிக்கெட் அணியில் நுழைவதற்கான வாய்ப்புக்கள் இன்றும் கூட எங்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால் தற்போது கிரிகெட் போட்டிக்கு போட்டிகள் அதிகம்.

நான் இன்னும் 15 வருடங்களில் கிரிகெட் வீரரான வர வேண்டும் என்றால் இப்போதிலிருந்தே பயற்சிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். நாங்கள் எங்களுடைய தனிப்பட்ட முயற்சியில் தான் இவ்வளவு தூரம் பயணித்து கொண்டிருக்கின்றோம். தற்போது இருக்கும் இளம் வீரர்களுக்கு அவ்வாறான




வாய்ப்புக்கள் இல்லை. பெற்றோ ர்களின் ஒத்துழைப்பு நிறைய இருக்கின்றது. மைதான வசதிகள் மற்றும் பயிற்றுவிப்பளர்கள் என எல்லா வசதிகளும் இருக்கின்றன. அனைத்துமே அவவரவர் முயற்சியிலே தான் இருகின்றது.

● **கிரிகெட் வீரர் ஒருவருக்கு எவ்வாறான தகைமைகள் இருக்க வேண்டும்?**

தகைமைகளை விட முதலில் ஆர்வம் தான் இருக்க வேண்டும். உறுதியான மனநிலை இருக்க வேண்டும். வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மன பக்கும் இருக்க வேண்டும். இவை கிரிகெட் வீரர்களுக்கு மட்டுமல்ல அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் இருக்க வேண்டிய தகைமைகள் என்று தான் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல் எல்லா நேரத்திலும் எல்லா சந்தரப்பங்களும் கிடைக்காது ஆகவே பொறுமையும் அவசியம். ஏற்றதாழ்வு இன்றி வாழ்த்தும் மனமும் உற்சாகப்படுத்தும் மனமும் இருப்பது கட்டாயம். அத்தோடு தலைமைத்துவம் மற்றும் குழு ஒற்றமை இருப்பது அவசியம்.

● **கிரிகெட் உலகில் உங்களுக்கு முன்மாதிரி யார்?**

குமார் சங்ககார. அவரின் துடுப்பாட்ட திறன் எனக்குள் இருந்த கிரிகெட் ஆர்வத்தை மேலும் தூண்டியது.

● **இதுவரை கிரிகெட் வீரராக நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் பற்றி?**

என்னை அடையாளப்படுத்திக் கொள்ள ஒழுங்கான இடமோ வாய்ப்புக்களோ கிடைக்கவில்லை. கொழும்பை தவிர வெளி மாவட்ட வீரர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதே பெரும் சவாலான விடயம் தான். நான் நிறைய சிரமங்களை கடந்தே இவ்வாறான இடத்திற்கு வந்துள்ளேன்.

எவ்வாறிருப்பினும் என்னுடைய முயற்சியையும் பயிற்சியையும் நான் கைவிடப் போவதில்லை. இலங்கை கிரிகெட் அணியில் விளையாடுவதற்கு எனக்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமாயின் என்னுடைய வாழ்வின் மிகப்பெரிய சவாலாக ஏற்றுக் கொண்டு என்னுடைய முழுத் திறமையையும் நான் வெளிக் காட்டுவேன்.



**யதுஷா ரவித்தியாகராஜா**



# தமிழ் திரையின் முதல் கனவுக்கன்னி
# முத்துச்சிரிப்பழகி டி. ஆர். ராஜகுமாரி

தமிழ் திரையின் முதல் கனவுக்கன்னி அமரர் டி. ஆர் ராஜகுமாரி, இவரின் 100 ஆம் ஆண்டு ஜனன தினம் கடந்த 5ஆம் திகதியாகும். (05.05.1922 05.05.2022)

மறைவு: 1999 செப்டம்பர் 20).

ஆரம்ப கால தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகையாக இருந்தவரும், நடிப்பு, நடனம், பாடல் என அனைத்திலும் பெயர் பெற்றவரும், நீண்ட காலமாக இந்திய திரைவானில் கனவுக்கன்னியாக மிளிர்ந்த நட்சத்திரமான டி. ஆர். ராஜகுமாரியின் நூறாவது அகவை கடந்த 5ஆம் திகதியாகும்.

இவரின் இயற்பெயர் தஞ்சாவூர் ராதாகிருஷ்ணன் ராஜாயி . இவர் 05.05.1922 அன்று தஞ்சாவூரில் பிறந்தார்.

திரைப்பட நடிகையாக 1939 முதல் 1963 வரை பணியாற்றிவர். கடைசி வரை திருமணம் செய்யாமல் பட்டத்திற்கேற்றால் போல் கன்னியாகவே வாழ்ந்தார். இவரின் உறவினர்

எஸ். பி. எல். தனலட்சுமி (சித்தி). ராஜாயி என்னும் இயற்பெயரைக் கொண்ட டி. ஆர். ராஜகுமாரி தஞ்சாவூரில் இராதாகிருஷ்ணன் ரெங்கநாயகி தம்பதியருக்கு முதல் மகளாக பிறந்தார். இவர் தாயார் ரெங்கநாயகி தஞ்சை குசலாம்பாளின் புகழ் பெற்ற இசை மேதை குடும்பத்தைச் சேர்ந்தவர். ராஜகுமாரி பிறந்த சில நாட்களிலே தகப்பனரான ராதாகிருஷ்ணன் இறந்துவிட்டார். இவர் திருமணம் செய்து கொள்ளாமல் தனது இளைய சகோதரரான டி. ஆர். ராமண்ணா குடும்பத்துக்கு ஆதரவாக வாழ்ந்தார்.1939 ஆம் ஆண்டு டெக்கான் சினிடோனின் "குமார குலோத்துங்கன்" படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார். அதைத் தொடர்ந்து மந்தாரவதி, சூர்யபுத்ரி படங்களில் கதாநாயகியாக நடித்தார். இவையனைத்தும் படுதோல்விப் படங்களாயிருந்தும் அதைத் தொடர்ந்து கே.சுப்பிரமணியத்தின் தயாரிப்பில் வெளிவந்த "கச்ச தேவயானி" படம் பெரும் வெற்றி பெற்றது. எம். கே. தியாகராஜ பாகவதர், பி. யு. சின்னப்பா, எம். கே. ராதா,



டி. ஆர். மகாலிங்கம் என அன்றைய முன்னணிக் கதாநாயகர்களுடன் நடித்துப் புகழ் பெற்றவர் ராஜகுமாரி.

பி.யு.சின்னப்பாவுடன் மனோன்மணி படத்திலும், பாகவதருடன் சிவகவி, ஹரிதாஸ் படங்களிலும் நடித்தார். ஹரிதாஸ் 1945 தீபாவளியன்று வெளியாகி 1946 தீபாவளி முடிய, தொடர்ந்து 110 வாரங்கள் ஒரே திரையரங்கில் ஓடி சாதனை படைத்தது. ஜெமினியின் சந்திரலேகா படம் இவருக்கு பேரும் புகழும் தேடிக் கொடுத்தது. இதில்

எம். கே. ராதாவுக்கு சோடியாக நடித்தார். அதில் இவர் ஆடிய ஜிப்சி நடனம், திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் இடம்பெற்ற டிரம்ஸ் நடனம் இவருக்கு இந்திய அளவில் பாராட்டுகளைக் குவித்தது. இந்தி சந்திரலேகாவிலும்

நடித்தார். கலைஞர் மு. கருணாநிதியின் வசனத்தில் உருவான மனோகரா படத்தில் வசந்தசேனையாக இவர் நடித்திருந்தார். வானம்பாடி படத்தில்

எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு அக்காவாக நடித்திருந்தார். சிவாஜியுடன் அன்பு திரைப்படத்திலும், தனது 37ஆவது வயதில் தங்கப்பதுமை திரைப்படத்திலும் நடித்திருந்தார். எம்.ஜி.ஆருடன் பணக்காரி திரைப்படத்தில் இணையாகவும், பெரிய இடத்துப் பெண் திரைப்படத்தில் சகோதரியாகவும் நடித்திருந்தார்.

சென்னையில் முதன் முதலாக தன்னுடைய பெயரிலேயே ( "ராஜகுமாரி" )சொந்தமாக திரையரங்கினைக் கட்டிய முதல் நடிகை இவராவார். தற்போது இவ்விடம் ஷொப்பிங் கொம்ப்லெக்ஸாக உள்ளது.

இவர் நடித்த திரைப்படங்கள் சில:

குமார குலோத்துங்கன் (1939), மந்தாரவதி (1941), சூர்யபுத்ரி (1941), மனோன்மணி (1942), சதி சுகன்யா (1942), பிரபாவதி (1942), சிவகவி (1943), குபேர குசேலா (1943), ஹரிதாஸ் (1944), சாலிவாகனன் (1945), வால்மீகி (1946), விகடயோகி (1946), பங்கஜவல்லி, சந்திரலேகா (1948), சந்திரலேகா (1948), ஹிந்தி

பிரம்மரிஷி விஷ்வாமித்திரா (1948), கிருஷ்ணபக்தி (1949),

பவளக்கொடி (1949), இதய கீதம் (1950), விஜயகுமாரி (1950), வனசுந்தரி (1951), அமரகவி (1952),



**திரைப்பட நடிகையாக 1939 முதல் 1963 வரை பணியாற்றிவர். கடைசி வரை திருமணம் செய்யாமல் பட்டத்திற்கேற்றால் போல் கன்னியாகவே வாழ்ந்தார்.**

பணக்காரி (1953), என் வீடு (1953), அன்பு (1953), வாழப்பிறந்தவள் (1953), மனோகரா (1954),

நல்ல தங்கை (1955), குலேபகாவலி (1955), புதுமைப்பித்தன் (1957), மல்லிகா (1957), தங்கமலை ரகசியம் (1957), தங்கப்பதுமை (1959), பெரிய இடத்துப்பெண்(1963)

இதய கீதம் திரைப்படத்தில் வானுலாவும் தாரை நீ என் இதய கீதமே, ஓடி வா வெண்முகில் போலே ஆகிய இரண்டு பாடல்களை டி. ஆர். மகாலிங்கத்துடன் இணைந்து பாடியிருந்தார்.



ஆக்கம்:எஸ். கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

# வாழ்ந்திட ஒரு வழி வேண்டும்

உண்மை சொல்ல
அனுபவம் வேண்டும்.
அள்ளிக் கொள்ள
ஆசை வேண்டும்.

அழகைக் காண
இரசிக்க வேண்டும்.
ஆர்வம் கொள்ள
இலக்கு வேண்டும்.

வெற்றிக்கு நல்ல
வழிகள் வேண்டும்.
வென்றிடும் தந்திரம்
கொண்டிட வேண்டும்.

நடந்திட நமக்கிங்கே
பாதைகள் வேண்டும்.
அதற்கேற்ப நாமே
அமைத்திட வேண்டும்.

தடை உடைத்திடும்
மன உறுதி வேண்டும்.
நாலு பேர் நலம் நம்மால்;
வாழ்ந்திட வேண்டும்.

மகிழ்ச்சி ஒன்றே
என்றும் வேண்டும்.
மகிழ்ந்திடும் நிலை
ஆக்கிட வேண்டும்.

விலகிடும் உறவை
தொலைத்திட வேண்டும்.
விரும்பிடும் உறவை
ஏற்றிட வேண்டும்.

விலங்கிட எண்ணல்
தடுத்திட வேண்டும்.
தடங்கிட முன்னே
முடித்திட வேண்டும்.

தோன்றிடும் போது
தேற்றிட வேண்டும்.
தோற்கும் முன்
காத்திட வேண்டும்.

கனவு போல நாம்
வாழ்ந்திட வேண்டும்.
கனவு காணும்
நிலையும் வேண்டும்.

தூரத்தே போன உறவு
திரும்பிட வேண்டும்.
ஏங்கிடும் வண்ணம்
வாழ்ந்திட வேண்டும்.

**........ அன்புடன் நதுநசி.**



மட்டக்களப்பில் இயங்கும் Batti FM இணைய வானொலி நடாத்திய அணிக்கு 7 பேர் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிகள் கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு சிவானந்த மைதானத்தில் நடைபெற்றன . இப்போட்டியில் முதலாமிடத்தை ஏசியன் விளையாட்டு கழகத்தினரும், இரண்டாம் இடத்தை எவகிறீன் விளையாட்டு கழகத்தினரும், மூன்றாம் இடத்தை கல்லடி க்லேடியேற்றஸ் விளையாட்டு கழகத்தினரும், நான்காம் இடத்தை ஈகில் கோல்ட் விளையாட்டுக் கழகத்தினரும் பெற்றுக்கொண்டனர் . இப்போட்டி நிகழ்வில் அதிதிகளாக லவன் நற்பணி மன்றத்தின் தலைவர் லவக்குமார், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதி செயலாளர் ஜெயராஜ், வணக்கம் வாழ்க தமிழ் அமைப்பின் செயலாளர் பிரவீன் மற்றும் Batti FM குழுவினர் என பலரும் கலந்து கொண்டனர் .

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.